# ஈழநாட்டுத்
# தமிழ்ப்புலவர் சரிதம்

Office of the
Director of Archaeology
Madras

— வித்துவான், சி. கணேசையர்

# எமது பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| தண்டியலங்காரம் | 1 - 75 |
| யாப்பருங்கலக் காரிகை | 1 - [illegible]0 |
| நம்பியகப்பொருள் விளக்கம் | 1 - 50 |
| யாப்பிலக்கண வினாவிடை | 35 |
| அணியிலக்கண வசனம் | 35 |
| சீகாளத்திப் புராணம் | |
| கண்ணப்பச் சருக்கம் நக்கீரச் சருக்கம் | 1 - 00 |
| மகாபாரதம் | |
| பழம்பொருந்து சருக்கம் நச்சுப்பொய்கைச் சருக்கம் நாடுகரந்துறைச் சருக்கம் | 75 |
| வாரணாவதச் சருக்கம் | 60 |
| சூதுபோர்ச் சருக்கம் | 1 - 25 |
| கிருஷ்ணன் தூதுச் சருக்கம் உரையுடன் (அச்சில்) | |
| கம்பராமாயணம் | |
| அகலிகைப் படலம் | 60 |
| சடாயுகாண் படலம் | 40 |
| குசேலோபாக்கியானச்சுருக்கம் (அச்சில்) | |
| மேகதூதக்காரிகை உரை | 60 |
| இராமோதந்தம் உரை | 50 |
| ,, ஆங்கில மொழிபெயர்ப்பு | 30 |
| நாவலர் நினைவுமலர் | 1 - 00 |
| வாழ்க்கை நூல் | 75 |
| கந்தபுராண விளக்கம் | 40 |
| சாணக்கிய நீதி வெண்பா | 20 |
| கலைசைச் சிலேடைவெண்பா | 25 |
| நவராத்திரிப் பாக்கள் | 20 |
| பாலர் பாமணிமாலை | 15 |
| கண்ணகி கதை | 10 |
| மங்கைக்கோர் மதியுரை | 15 |
| ஈழமண்டல தேவாரமும் திருப்புகழும் | 05 |

**தனலக்குமி புத்தகசாலை**
**சுன்னாகம்**

உ

கணபதி துணை

ஈழநாட்டுத்

# தமிழ்ப்புலவர் சரிதம்

இது

புன்னாலைக்கட்டுவன்

வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களால்

எழுதப்பட்டு

'ஈழகேசரி' அதிபர்

நா. பொன்னையா அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

Copy-right] 1939 [விலை ரூபா 2/8

894.811092
குணே

திருமகள் அழுத்தகம்
சுன்னாகம்

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | vii |
| | பிழைதிருத்தம் | xiii |
| 1. | ஈழத்துப் பூதந்தேவனார் | 2 |
| | **ஆரியச் சக்கிரவர்த்திகள்** | |
| 2. | பரராசசேகரன் | 7 |
| 3. | செகராசசேகரன் | 9 |
| 4. | அரசகேசரி | 11 |
| | **அரசரல்லாத புலவர்கள்** | |
| 5. | பண்டிதராசர் | 17 |
| 6. | கவிராஜர் | 18 |
| 7. | வரதபண்டிதர் | 19 |
| 8. | சிற்றம்பலப்புலவர் | 21 |
| 9. | சின்னத்தம்பிப்புலவர் | 22 |
| 10. | மயில்வாகனப்புலவர் ... ... | 25 |
| 11. | இணுவைச் சின்னத்தம்பிப்புலவர் | 27 |
| 12. | நெல்லைநாத முதலியார் | 29 |
| 13. | சேனாதிராய முதலியார் | 31 |
| 14. | சந்திரசேகர பண்டிதர் | 35 |
| 15. | சுவாமிநாதர் .... | 37 |
| 16. | சரவணமுத்துப்புலவர் | 38 |
| 17. | ஏகாம்பரப்புலவர் | 40 |
| 18. | கார்த்திகேயஐயர் | 40 |
| 19. | சம்பந்தப்புலவர் | 40 |
| 20. | கார்த்திகேயப்புலவர் | 41 |

| | | பக்கம் |
|---|---|---|
| 21. | முத்துக்குமார கவிராயர் .... | 44 |
| 22. | சிதம்பரப்பிள்ளை (உவில்லியம் நெவின்ஸ்) | 46 |
| 23. | அம்பலவாண பண்டிதர் | 48 |
| 24. | பீதாம்பரப்புலவர் | 49 |
| 25. | ஆறுமுகநாவலர் | 51 |
| 26. | நாகநாதபண்டிதர் | 58 |
| 27. | சங்கரபண்டிதர் | 59 |
| 28. | கனகசபைப்புலவர் .... | 61 |
| 29. | குமாரசுவாமி முதலியார் | 66 |
| 30. | தாமோதரம்பிள்ளை | 68 |
| 31. | பொன்னம்பலப்பிள்ளை | 71 |
| 32 | முருகேசபண்டிதர் ... | 76 |
| 33. | வல்லை வைத்தியலிங்கம் | 80 |
| 34. | கணேசபண்டிதர் ... | 83 |
| 35. | திருஞானசம்பந்த உபாத்தியாயர் | 83 |
| 36. | கணபதிப்பிள்ளை | 84 |
| 37. | கதிரைவேற்பிள்ளை | 87 |
| 38. | வேற்பிள்ளை | 90 |
| 39. | சபாபதிநாவலர் | 95 |
| 40. | கதிரைவேற்பிள்ளை | 101 |
| 41. | அம்பிகைபாகர் | 102 |
| 42. | கதிர்காமையர் | 103 |
| 43. | நடராசையர் .... | 104 |
| 44. | திருஞானசம்பந்தப்பிள்ளை | 105 |
| 45. | சிவசம்புப்புலவர் | 106 |
| 46. | வேன்மயில்வாகனப்புலவர் | 111 |
| 47 | நமச்சிவாயப்புலவர் | 113 |
| 48. | கந்தப்பிள்ளை | 116 |
| 49. | ஏரம்பையர் | 118 |

| | | பக்கம் |
|---|---|---|
| 50. | சிவப்பிரகாச பண்டிதர் | 123 |
| 51. | சரவணமுத்துப்பிள்ளை | 123 |
| 52. | சிற். கைலாசபிள்ளை | 127 |
| 53. | வித்துவான் சிவானந்தையர் | 136 |
| 54. | குமாரசுவாமிப்புலவர் | 139 |
| 55. | சபாரத்தின முதலியார் | 157 |
| 56. | தி. த. கனகசுந்தரம்பிள்ளை | 159 |
| 57. | காசிவாசி செந்திநாதையர் | 164 |
| 58. | வ. குமாரசுவாமிப்புலவர் | 176 |
| 59. | அம்பலவாண நாவலர் | 178 |
| 60. | பேரம்பலப்புலவர் ... | 185 |
| 61. | முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் | 188 |
| 62. | சுவாமிநாத பண்டிதர் .... | 194 |
| 63. | செவ்வந்திநாததேசிகர் | 197 |
| 64 | த. கைலாசபிள்ளை | 200 |


## அனுபந்தம்


| | | |
|---|---|---|
| 65. | ஞானப்பிரகாசர் | 205 |
| 66. | விசுவநாதசாஸ்திரியார் | 206 |
| 67. | கந்தப்பிள்ளை | 208 |
| 68. | அப்புக்குட்டிஐயர் | 210 |
| 69. | அருணாசலப்பிள்ளை | 211 |
| 70. | இராமசாமிஐயர் | 211 |
| 71. | இராமலிங்கையர் | 211 |
| 72. | இராமலிங்கப்பிள்ளை | 212 |
| 73. | க. ஏகாம்பரம் | 212 |
| 74. | நா. ஏகாம்பரம் | 213 |
| 75. | கணபதிஐயர் | 214 |
| 76. | சின்னத்தம்பி | 215 |
| 77. | சந்திரசேகர பண்டிதர் | 216 |

| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 78. | சின்னக்குட்டிப்புலவர் ... | | .... | 217 |
| 79. | சண்முகச்சட்டம்பியார் | | ... | 218 |
| 80. | தொம்பிலிப்பு | ... | ... | 218 |
| 81. | நமச்சிவாயப்புலவர் | ... | .... | 219 |
| 82. | நாகேசஐயர் | ... | .... | 220 |
| 83. | பிரான்சீஸ்பிள்ளை | ... | ... | 221 |
| 84. | பூலோகசிங்க முதலியார் | | .... | 222 |
| 85. | மாப்பாண முதலியார் .... | | ... | 223 |
| 86. | முத்துக்குமாரர் | ... | ... | 223 |
| 87. | முருகேசையர் | ... | .... | 224 |
| 88. | வெற்றிவேலர் | .... | .... | 224 |
| 89. | வைத்தியநாதச் செட்டியார் | | .... | 225 |
| 90. | வைத்தியநாததம்பிரான் | | .... | 226 |
| 91. | சுப்பையர் | ... | ... | 226 |
| 92. | சதாசிவம்பிள்ளை | ... | .... | 227 |
| 93. | பூபாலபிள்ளை | ... | .... | 227 |
| 94. | ஆறுமுகத்தம்பிரான் | ... | .... | 228 |
| 95. | அருணசலஐயர் | ... | ... | 229 |
| 96. | தாமோதரம்பிள்ளை | ... | ... | 229 |
| 97. | பொன்னுத்துரைஐயர் | | ... | 230 |
| 98. | சதாசிவ பண்டிதர் | ... | .... | 230 |
| 99. | சோமாஸ்கந்த பண்டிதர் | | ... | 231 |
| 100. | நாகமணிப்புலவர் | .... | ... | 232 |
| 101. | மயில்வாகனப்புலவர் | ... | .... | 233 |

# முகவுரை

இந்நூலின் பெயர் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் என்பதாகும். ஈழநாடு எனினும் இலங்கைத்தீவு எனினுமொக்கும். இதன் பெருமையைப்பற்றி நூலின் தொடக்கத்திலேயே கூறியுள்ளாம்.

தமிழ் என்பது, வடக்கின்கண் வேங்கடமும் தெற்கின்கண் குமரியும் எல்லையாகவுடைய நிலத்து வழங்கும் மொழியாகும். ( தமிழ்மொழியே எந்நிலத்து மொழியினும் முற்பிறந்த மொழியென்றும், தமிழ்மொழியைப் பேசுமக்களே எந்நிலத்து மக்களினும் முற்றோன்றினரென்றும், தமிழ்மக்களே முற்றோன்றினரென்று கோடற்குக் காரணம் அவர் தோன்றுதற்குக் காரணமாகிய நிலம் உஷ்ணபாகத்துட்பட்டதும் உயர்ந்த மலைப்பிரதேசங்களு ளொன்றாகிய பொதியமலைப் பிரதேசத்தைத் தன்கட் கொண்டிருத்தலுமே யென்றும், தமிழ்மொழி இனியதொரு மொழியாய் இருத்தற்குக் காரணம் உஷ்ணமான நிலத்து வாழும் மக்களிடத்துப் பிறந்தமையேயென்றும், தமிழ்மொழி முற்காலத்து எந்நிலத்துஞ் சென்று பரவி வழங்கியதென்றுஞ் சரித்திர ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர்.) தமிழ்மொழி முற்காலத்து எங்குஞ் சென்று பரவி வழங்கியதாயினும் தொல்காப்பியர் காலத்துக்கு எத்துணையோ காலத்திற்கு முன்னேயே மேற்கூறிய எல்லையுட்பட்டு வழங்கியதென்றும், அது தொல்காப்பியப் பாயிரத்துள் "வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறுநல் லுலகத்து" என்று பனம்பாரனார் கூறியதானும், "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக" என்று

சிறுகாக்கைபாடினியார் கூறியதானும் அறியப்படு மென்றும் ஆராய்ச்சி வல்லுநரும், பெரும் புலவருமாகிய ஸ்ரீமாந் மு. இராகவையங்கார் அவர்கள், "தமிழரும் ஆந்திரரும்" என்ற ஆராய்ச்சி விஷயத்துட் கூறியுள்ளார்கள். ஆண்டுக் காண்க. அஃது எங்ஙனமாயினும் தமிழ்மொழி மிகப் பழையதொரு மொழியென்பதிற் றடையேயில்லை.

தமிழ் என்னும் மொழிப்பொருட்குக் காரணம் இன்னதென்பது, "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்ற" என்று தொல்காப்பியர் கூறியவாறு, தம்மாற் றுணிந்து கூறமுடியாதாகவும், எவ்வாறேனும் அதற்கொரு காரணங் கூறிவிடவேண்டுமென்றுகருதித் தமிழ்ப் புலவருட் சிலர், திராவிடம் என்பதன் திரிபென்றும், இனிமையுடையதென்றும், தனித்ததென்றும், ஒப்பற்றதென்றும், தனித்த ழகரமுடையதென்றும், தம்மொழி என்பதன் றிரிபென்றும் தம் மனம் போனவாறெல்லாங் கற்பித்துக் கூறினர். கூறியுமென்? அஃது அவர்கள் கற்பனையுளெல்லா மடங்காது, கற்பனை கடந்த கடவுள் போலவே நின்று விளங்குகின்றது. தமிழ்மொழிக்கு இனிமை என்று பொருள்கூறிய நிகண்டுநூலார், அம்மொழியின் இனிமையை அம்மொழிக்குங் காரணமாக்கிக் கூறினாரோ? உண்மையிற் காரணமாதல் உணர்ந்து கூறினாரோ? என்பது மாராயத்தக்கது.

தமிழ் இயற்கையி லொன்றாயினும் செயற்கையான் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்திறப் படும். இயற்றமிழ் - இலக்கணத்தோடு கூடிய தமிழ். இசைத்தமிழ் - பண்ணோடு கூடிய தமிழ். நாடகத்தமிழ் - கூத்தோடு கூடிய தமிழ். இம் முத்தமிழிலும் வல்லவரே தமிழ்ப் புலவரெனப்படுவார். தமிழ்ப் புலவராவார் முத்தமிழும் முறையே பயின்று ஐந்திணை நெறிகளையுங்

தழுவிக் கவிபாடும் வலியமைந்தவரென நிகண்டுநூலார் கூறுவர். புலவர் - அறிவுடையோர். புலம் - அறிவு. அர் - பலர்பால் விகுதி.

இச் சரிதத்தின்கண்ணே, இலக்கணங்களில் நன்கு பயின்று கவிபாடுந் திறமுடைய புலவர்களுடைய சரிதம் மாத்திரம் கூறினேமல்லேம். இயற்கையிற் கவிபாடுந் திறனமையாதவராயினும் இலக்கண இலக்கியங்களில் அதி திறமைவாய்ந்த புலவர்கள் சரிதமுங் கூறியுள்ளாம். அதற்குக் காரணம், கவிபாடுந் திறமுடையார் காலஞ் செல்லச்செல்ல அருகினமையே. நம் ஈழநாட்டுக்கு மட்டு மன்றித் தமிழ்நாடு முழுமைக்கும் பெரும் பயனளித்துப் பெரும்புகழ் படைத்த புலவரும் இவருட் சிலருளர்.

இந்நூலின்கண் வரும் புலவர்களின் சரித வைப்பு முறை, அவர்களுடைய இறந்தகாலத்தின் முறையே முறையாகப் பெரிதுங்கொண்டு வைக்கப்பட்டுள்ளது. மறந்து விடப்பட்ட புலவர்கள் சிலர் சரிதங்களையும், பலர்க்குந் தெரியாது மறைந்துபோன புலவர்கள் சிலர் சரிதங்களையும், இயற்கையிற் கவிபாடுந் திறமாத்திர மமைந்த புலவர்கள் சிலர் சரிதங்களையும் அநுபந்தமாகச் சேர்த்துக் கூறியுள்ளாம்.

இதன்கண் வரும் புலவர் சரிதங்களுள், இருபாலை ஏகசந்தக்கிராகி எனப் போற்றப்படும் நெல்லைநாதமுதலி யார், சேனாதிராயமுதலியார், நல்லூர், சிற். கைலாய பிள்ளை, ஊரெழு, சு. சரவணமுத்துப்புலவர் முதலிய பலர் சரிதக் குறிப்புக்கள், தென்கோவைப் பண்டிதர் ஸ்ரீமாந் ச. கந்தையபிள்ளை அவர்களால் எமக்கு உதவப் பட்டன. அவர்களுள் சிற். கைலாசபிள்ளைசரிதமுழுதும் அப் பண்டிதர்களாலேயே எழுதி உதவப்பட்டது. அத னுடன் யாமுஞ் சில சேர்த்து அச்சிட்டுள்ளாம். மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளை சரிதக்குறிப்பும், வ. குமார

சுவாமிப்புலவர் சரிதக்குறிப்பும், நா. கதிரைவேற்பிள்ளை சரிதக்குறிப்பும், பண்டிதர் ஸ்ரீமாந் வே. மகாலிங்கசிவம் அவர்களால் எழுதி உதவப்பட்டன. புலோலி, ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் சரிதக்குறிப்பை, அவர்கள் மருகரும், மாணுக்கருமாகிய பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள் எழுதியுதவினுர்கள். அம்பலவாணநாவலர் சரிதக்குறிப்பை அவர்களது தமையனர் புதல்வரும், றிஜிஸ்ருர் உத்தியோகத்தரும், பண்டிதருமாகிய ஸ்ரீமாந் ச. சங்கரப்பிள்ளையவர்கள் எழுதி உதவினுர்கள். வேன்மயில்வாகனப்புலவர் சரிதக்குறிப்பை அவர் மாணுக்கரும், கந்தவனக்கடவைக் கந்தசுவாமி கோயி லாதீன கர்த்தருமாகிய ஸ்ரீமாந் செல்லையாபிள்ளை அவர்கள் எழுதியுதவினுர்கள். வல்வை, இயற்றமிழ்ப் போதகாசிரியர் வயித்தியலிங்கம் என்பவர் சரிதக் குறிப்பை அவ்வூரிலுள்ள நம் அன்பரொருவர் எழுதியுதவினுர். செந்திநாதையர் சரிதக்குறிப்பை, அவரோடுடன் வசித்தவரும், அவர்தம்பியாரும், வடமொழி தென்மொழி ஆங்கிலம் என்னும் மும்மொழிப் பயிற்சியுடையவருமாகிய ஸ்ரீமாந் சிவசம்புநாதையரவர்கள் எழுதி யுதவினுர்கள். இவர்களுக்கெல்லாம் எமது பெரிய வணக்கமுரியதாகுக. ஏனைய புலவர் சரிதங்களுள் பெரும்பாலன அவர்கள் முற்சரிதங்களை நோக்கிச் சுருக்கி எழுதப்பட்டன. சில சரிதம் எமக்குத் தெரிந்தவாறே எழுதப்பட்டன. இச் சரிதங்களெல்லாம் புனைந்துரையின்றி உண்மையாகவே எழுதப்பட்டனவாகும். எம் காலத்திலிருந்து இறந்த புலவர்களுடைய சரிதங்களுள் எமக்கு உண்மையென்று காணப்படாத சில சரிதங்களை நீக்கியுள்ளாம். அவர்கள் சரிதங்களை யறிந்தவர்களாய் இந் நாட்டிலும் பிறநாட்டிலுமுள்ளவர்கள் எம்பாற் குறை கூறுதபடியே அங்ஙனம் செய்தேமன்றிப் பொருமையாற் செய்தேமல்லேம். இச்சரிதங்களுட் சில எமக்கு இடையே

வந்த தேக அசௌக்கியங் காரணமாக எமது மாணவர்களால் எழுதப்பட்டு எம்மாற் றிருத்தப்பட்டனவாகும்.

இச் சரிதங்களுள் நீண்டகாலத்துக்கு முன்னும் அதன் பிற்காலத்தும் இறந்தவர்களுடைய சரிதங்களே யன்றி, சமீபகாலத்திலே இறந்தவர்களுடைய சரிதங்களைத்தாமும் பெற்றுக்கொள்ளுதல் மிக அருமையாயிருந்தது. அவர்கள்காலத்தைப் பெறுதல் அதனினுமரிதாயிருந்தது. புலவர்களுடைய சரிதங்களை, அவர்கள் சுற்றமித்திரர்கள் வாயிலாகவே பெறுதல் அரிதாயிருந்ததெனின், ஏனையோர் வாயிலாகப் பெறுதலைப்பற்றி யாம் இங்கே எடுத்துக்கூறன் மிகையாகும். சில புலவர்களுடைய காலத்தை அவர்களோடு ஒரேகாலத்திருந்த புலவர்களுடைய காலங்களைக்கொண்டு ஒருவாறு நிச்சயித்தெழுதியுள்ளேம். இற்றைக்குச் சில மாசங்களின்முன் இறந்த புலவரொருவருடைய பிறந்த ஆண்டை அறிதற்கு யாம் பெரிது முயற்சித்தும் பெற்றிலேமெனின், அதற்குமுன் இறந்தவர்களுடைய காலங்களைச் சரியாக அறிவதெப்படி என்பதை அறிஞர்கள் சிந்திப்பார்களாக. ஆதலாற் காலவரையறையின்கண்வரும் பிழைகளை அறிஞர்கள் பொறுத்துக்கொள்வார்களென எண்ணுகின்றேம்.

இச் சரிதத்தை யான் ஐந்து வருடங்களுக்கு முன்பேயே எழுதத்தொடங்கினேன். தொடங்கியபோது ஒவ்வொரு சரிதமாக எழுதிப் பத்திரிகை ஒன்றில் வெளிப்படுத்திப் பின் சேர்த்து அச்சிட்டு வெளிப்படுத்தலாமென்று கருதி அவ்வாறே எழுதித், தென்கோவை பண்டிதர் ச. கந்தையபிள்ளையை ஆசிரியராகக்கொண்டதும், புதுவை, ஸ்ரீமாந் நாகரத்தினம்பிள்ளையால் தமது அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளிப்படுத்தியதுமாகிய 'வித்தகம்' என்னும் பத்திரிகையில் "ஈழநாடுந் தமிழும்" என்னுந் தலைப்பெயரோடு வெளிப்படுத்திவந்தேன். சில

வாண்டில் அப் பத்திரிகை நிறுத்திவைக்கப்பட்டபடி யாலும் வேறு காரணங்களாலும் அச்சரித மெழுது முயற்சியை யானுமொழிந்தேன். இப்போது 'ஈழகேசரி' ப் பத்திராதிபர் ஸ்ரீமாந் நா. பொன்னையபிள்ளையவர்கள் வந்து பலமுறை என்னை ஊக்கப்படுத்தியதால் முன்பு எழுதி 'வித்தக' ப் பத்திரிகையில் வெளிப்படுத்திய புலவர்கள் சரிதமொழிய, ஏனைப் புலவர்கள் சரிதங்களையெல்லா மெழுதி அவற்றோடு சேர்த்து மேற்குறித்த பத்திராதிபரிடமே அச்சிட்டு வெளிப்படுத்தும்படி கொடுத்துவிட்டேன். இச் சரிதங்களிலுள்ள வாக்கியங்களுள் வருந் தொடர்மொழிகளுட் பெரும்பாலன படிப்போர் எளிதுணரற்பொருட்டுச் சந்திநோக்காது பிரித்தெழுதப்பட்டும், புலவர்களுடைய இயற்பெயர்களுட் சில இலக்கணவிதி நோக்காது வழங்கிவந்தபடியே எழுதப்பட்டும் உள்ளன. அவற்றையும் மற்றும் வரும் பிழைகளையுமெல்லாம் பொறுக்குமாறு அறிஞர்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இச் சரிதங்களைப் படிப்போர் பண்டைக்காலப் புலவர்களது கல்வியறிவின் பெருமையையும், அவர்களியற்றிய கவிகளின் அருமையையும், அக்கவிகளால் அரசரிடத்தும் பிரபுக்களிடத்தும் அவர்கள் பெற்ற மதிப்பையும் பரிசிலையும் அறிந்து தாமும் கற்றற்கண் ஊக்கமுடையவராகிக் கற்றுப் பெரும் புலவர்களாய் மதிப்பும் பரிசிலும் பெறுவார்கள். ஆதலால் இச் சரிதம் மிக்க பயனுடையதேயாம்.

இச்சரிதத்தை அச்சிடுவதற்கேற்றவாறு நன்கிதாக எழுதியுதவியும், அச்சிடும்போது பிழையற நோக்கித் திருத்தியும் உதவிய எமது மாணவர்களுக்கும், இதனை அச்சிட்டு வெளிப்படுத்திய 'ஈழகேசரி'ப் பத்திராதிபர் ஸ்ரீமாந் நா. பொன்னையபிள்ளைக்கும் எம் நன்றி யுரியதாகுக.

**சி. கணேசையர்.**

# பிழை திருத்தம்

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | | முகவுரை | |
| ௩ | ௨௧ ௨௨ | இருபாலை...போற்றப்படும் | போற்றப்படும் இருபாலை |
| | | நூல் | |
| ௩ | ௧௯ | இராக்கதற்குரிய | இராக்கதர்க்குரிய |
| ௧௨ | ௧௧ | கூறப்பட்டது | கூறப்பட்டது. |
| ௧௨ | ௧௮ | மாலிகையும் | மாலிகையு |
| ௧௩ | ௧௮ | மொழிபெயர்க்கப்பட்டது | பெயர்க்கப்பட்டது |
| ௧௪ | ௧௬ | அதிகப்பயிற்சி | அதிகபயிற்சி |
| ௧௫ | ௨௧ | வே | வேய் |
| ௧௬ | ௨ | கணிமல | கணிமலர் |
| ௧௯ | ௧௯ | இருநூறு | இருநூற்றுமுப்பது |
| ௨௧ | ௨௨ | பிறந்தவர் | இருந்தவர் |
| ௨௨ | ௩ | நூற்றெண்பது | இருநூற்றுப்பத்து |
| ௨௫ | ௧௫ | நூற்றறுபது | இருநூறு |
| ௨௫ | ௧௭ | பிறந்தவர் | இருந்தவர் |
| ௨௭ | ,, | நூற்றறுபது | இருநூறு |
| ௨௮ | ௯ | அவற்றுள்ளும் | அதனுள் |
| ௨௯ | ௬ | வேளாண்குடி | வேளாண் |
| ௨௯ | ௨௧ | சன்மானித்தார் | உபசரித்தார் |
| ௨௯ | ௨௨ | சன்மானம் | உபசாரம் |
| ௩௨ | ௬ | அவர் | இவர் |
| ௩௨ | ௨௮ | கந்துமுகந், | கந்துமுகந் |
| ,, | ௨௯ | ,, | ,, |
| ,, | ,, | திக்களிகூர், | திக்களிகூர் |
| ௩௩ | ௧௧ | திருத்தணி | திருத்தணிகை |
| ,, | ௧௨ | ,, | ,, |
| ௩௬ | ௨௪ | வேங்குழலையுடைய | வேய்ங்குழலையுடைய |
| ௩௯ | ௪ | நெல்லை | நல்லை |
| ,, | ௧௪ | பூதம் | பூதப் |
| ௪0 | ௧௬ | சமஸ்கிருத | சம்ஸ்கிருத |
| ௪௨ | ௨௧ | துண்மதி | துன்மதி |
| ௪௩ | ௯ | மெய்ஞ்ஞான | விஞ்ஞான |
| ௪௩ | ௨௩ | என்பது | |
| ௪௬ | ௨0 | ஆண்டுவரையில் | வரையில் |
| ௪௬ | ௨௭ | தாதைதன்றுறை | மாதாமகன் |

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௪௬ | ௨௭ | யாவர் | ஆவர் |
| ௪௮ | ௨௦ | லக்கண | விலக்கண |
| ௫௬ | ௧௭ | குணத்தினாய் | குணத்தினாய்ச் |
| ௬௦ | ௨௭ | சிவதூஷ | சிவதூஷண |
| ௬௨ | ௨ | சுப்பிரமணியதம்பிரான் | சுப்பிரமணியத் தம்பிரான் |
| ௬௪ | ௨௯ | மெய்த்த | மொய்த்த |
| ௬௭ | ௨ | இவருடைய | இவர் |
| ௭௦ | ௬ | வேதமுத் | வேதமுங் |
| ,, | ௧௮ | கொழந்தை | கொழுந்தை |
| ௭௪ | ௩ | ஆறுமுகங்களு | ஆறுமுகங்களுக்கு |
| ,, | ௧௦ | பொருள்கூறினார் | பிரமாணங்காட்டினார் |
| ,, | ௨௫ | திருவாரூர்ச்சோமசுந்தர தேசிகர் | நாகை நீலலோசனிப் பத்திராதிபர் சதாசிவம்பிள்ளை |
| ௭௫ | ௧௭ | மருகனா | மருகரா |
| ௭௬ | ௧௪ | முகப்பில் எழுதப்பட்டுள்ளன | முகவுரைகாரர் எழுதினர் |
| ௭௯ | ௨௪ | அவற்றுள் | அதனுள் |
| ௮௭ | ௨௧ | பிள்ளையிடத்தும் | பிள்ளையிடத்துத் |
| ௯௩ | ௨௪ | மின்னிலங் | மின்னித் |
| ௯௪ | ௪ | கொழுத்த | கொளுத்த |
| ௧௦௧ | ௮ | சொற்ற | சொற்றான் |
| ௧௦௫ | ௧௬ | வசிக்கையி | வசிக்கையினீ |
| ௧௦௭ | ௧௭ | வயித்திலிங்கச் | வைத்தியலிங்கச் |
| ௧௧௦ | ௧௪ | புகழ்ந்துபாடிய | பாடிய |
| ௧௧௩ | ௨௧ | வாவென் | வாவென |
| ௧௧௪ | ௧௯ | என்பன | |
| ௧௧௮ | ௬ | சோழ | பாண்டி |
| ௧௨௦ | ௨௦ | மண்டபம் | மண்டபத் |
| ௧௨௩ | ௨௩ | சைவசமய | சைவாசார |
| ௧௨௫ | ௧௮ | பிரசங்கம்குறிப்புரை | பிரசங்கமுங் குறிப்புரையும் |
| ,, | ௨௦ | சபைகளிலும் | சபைகளில் |
| ,, | ,, | பிரசங்க | பிரசங்கமு |
| ,, | ௨௧ | சேர்வரென | சார்வரென |

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| கஉ௫ | உஎ | வித்தியாதரிசியுமாக | வித்தியாதரிசியாக இருந்தவருமாகிய |
| கஉஅ | க | 1857 | 1856 |
| ,, | கூ | தந்தைமரபு | தந்தைமரபினரும் |
| ,, | கூ, க0 | தாய்மரபு | தாய்மரபினருமாகிய |
| ,, | க0 | கல்விச் | கல்வி |
| ,, | க௫ | சிறிது தமிழ் | தமிழ் சிலகாலம் |
| ,, | உகூ | மிக்க | மிகப் |
| க௬க | க௫ | உச்சாகரணத்தொனி | உச்சாரணத்தொனி |
| க௬௬ | ச | மாசிவரிறுமதி | மாசுதவிர்சிறுமதி |
| ,, | எ | ராணீன் | ராணீன் |
| க௬௫ | சச | நீடுபெலங் | நீடுபராங் |
| ,, | ௬0, ௬க | நிலையிப்– | நிலைஇப்-பெறுமா பெற்று மருமால் கழீஇப் |
| ,, | ௬௬ | நாமெலா | யாமெலா |
| கசக | கூ | என்பது | ——— |
| கச௫ | ௫ | தென்கோவை | சாவகச்சேரி |
| ,, | கூ | தேசிகர் | பிள்ளை |
| க௫0 | ௬க | 1931 | 1913 |
| க௫கூ | உஅ | சென்னப் | சென்ன |
| ககூ0 | உ௫ | இராராசன் | இராசராசன் |
| ககூஉ | ,, | முதலான | முதலாக |
| கஎஉ | க௫ | கதிர | கதிரை |
| கஎ௬ | உகூ | வருமாறு | வருமாறு அவை |
| கஎச | உச | விளங்குஞ் | விலங்குஞ் |
| கஎ௫ | உகூ | தாந்திக | தாந்திரிக |
| கஅ0 | உஅ | அவற்றுள் | அதனுள் |
| கஅ௫ | ககூ | அமெரிக்கன்மிஷன் | அமெரிக்கமிஷன் |
| கஅகூ | கஅ | விகிதர்த் | விசிதத் |
| ககூக | உ0 | அதுவருமாறு | அது |
| ககூ௫ | ௫ | அப்பொழுது | படிக்கும்பொழுது |
| ,, | உஅ | சிதம்பரந், | சிதம்பரம், |
| உ00 | கஎ | கன்றறிந்தவர் | கற்றறிந்தவர் |
| உஉச | கூ | பாடங் | பொருள் |

# ஈழநாட்டுத்
# தமிழ்ப் புலவர் சரிதம்

ஈழநாடு எனினும் இலங்கையெனினும் ஒக்கும். இவ்விலங்கை தென்னிந்தியாவின் தென்கீழ்த்திசையி லுளதாகிய ஒரு தீவு. (இது, சங்க நூல்களுள் ஒன்றாகிய பத்துப்பாட்டினுள் சிறுபாணாற்றுப்படையிலே, "தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய நன்மா விலங்கை" என்னும் (119-120) அடியுள் "தொன்மா விலங்கை" யென்று கூறப்படலானும், மணிமேகலை யுள், "இலங்காதீவகத்துச் சமனொளி யென்னும் சிலம்பினை யெய்தி வலங்கொண்டு மீளும்" என உ-அ-ம் காதை 107-ம், 108-ம் அடிகளிற் கூறும் "சமனொளி" என்னு மலை இதன்கணுள்ளதாதலானும் இதன் பழமையும் பெருமையும் அறியப்படத்தக்கன.) அகத்திய முனிவர் கந்தருவத்தா லிராவணனைப் பிணித்துத் தென்னாட்டி லியங்காதபடி செய்தாரென்று தொல்காப்பிய உரையுட் கூறப்படுதலின் இது முதற்சங்க காலத்திற்கு முன்னும் தமிழ்நாட்டோடு சம்பந்தமுற்று இருந்தது என்பதூஉம், இது சிங்களருக்குரிய நாடாகுமுன் இராக்கதற்குரிய நாடாய் இருந்ததென்பதூஉம், இராக்கதர் பாஷை தமிழா மென்பதூஉம் ஊகிக்கப்படத்தக்கன என்பர் சிலர்.) அவர் கருத்துப் பொருந்துமென்பது, சிங்கள நாடாகிய காலத்தும் இதன் வடபாகமும் கீழ்பாகமும் தமிழ்நாடாயே யிருத்தலால் அறியப்படும். (எவ்வாறாயினும் இதன் வட

கீழ் பாகங்கள் செந்தமிழ் நாடென்பது அங்கு வழங்குஞ் செந்தமிழ்ச் சொற்களா லறியப்படும். (சங்க காலத்துப் பழந் தமிழ்ச் சொற்கள் அங்கங்கே இன்றும் பெரு வழக்காய் இதன் வடபாகங்களிலும் கீழ்பாகங்களிலும் வழங்குகின்றன.) அவை பின் சமயம் வாய்த்துழிக் காட்டப்படும். நாகர் என்னும் ஓர் சாதியும் வசித்தமையால் முரஞ்சியூர் முடிநாகராயர் இவ் வீழநாட்டினரோ வென்று சிலரபிப்பிராயப்படுவர். அஃது எங்ஙனமாயினும் கடைச்சங்கப் புலவருள் ஒருவராய மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்பார் இவ்வீழத்து மரபினரே என்பது துணிபு. ஆதலினிவ்வீழநாடு பண்டுதொட்டு முத்தமிழுக்குறைவிடமா யுள்ளதென்பது எவரானுமொப்புக்கொள்ளப்படத் தக்கதேயாம். ஆகலின் அவ்வீழநாட்டின் பெருமைக்குக் காரணர்களாயிருந்த தமிழ்ப் புலவர்களின் சரிதத்தையும் ஒருவாறு ஆராய்ந்து அவ்வவரிருந்த கால முறைப்படி இங்கே தருதும்:—

## ஈழத்துப் பூதந்தேவனார்

இவர் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் எனவும் படுவர். இவர் மதுரையில் வந்து தங்கிய ஈழத்துப் பூதனது மகன் தேவன் எனப்படுவார். இவர் நாடு ஈழநாடு எனப்படினும் அங்நாட்டில் எவ்வூர் என்பது தெரிந்திலது. இவர் ஏதோ காரணமாக இங் நாட்டை விட்டு மதுரையி லிருந்தவராகத் தெரிகின்றது. மதுரையிலேயே இவர் பிறந்து படித்துச் சங்கத்திலொருவராகச் சேர்ந்தாரெனக் கருதற்கு மிடமுண்டு. (இவர் பாலையையுங் குறிஞ்சியையும் பாராட்டியுள்ளார்.) இவரது பாடல்கள் நற்றிணையிலொன்றும் குறுந்தொகையில் மூன்றும் அகத்தில் (நெடுந்தொகையுள்) மூன்றுமாக எழுபாடல்கள் காணப்படுகின்றன. நற்றிணைப் பாடலிலே வாடை

வீசுங் குளிர்ந்த காலத்தே தலைவியைப் பிரிந்தோர் மடைமையரென்று பாடுவர். அப்பாடலை இங்கே தருதும்.

பாலை

இஃது உலகியல் கூறிப் பொருள்வயிற் பிரிய வலித்த நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

அரவுக் கிளர்ந்தன்ன விரவுறு பல்காழ்
வீடுறு நுண்டுகி லூடுவந் திமைக்குந்
திருந்திழை யல்குற் பெருந்தோட் குறுமகண்
மணியே ரைம்பான் மாசறக் கழீஇக்
கூதிர் முல்லைக் குறுங்கா லலரி
மாதர் வண்டொடு சுரும்புபட முடித்த
விரும்பன் மெல்லணை யொழியக் கரும்பின்
வேல்போல் வெண்முகை பிரியத் தீண்டி
முதுக்குறை குரீஇ முயன்றுசெய் குடம்பை
மூங்கி லங்கழை தூங்க வொற்றும்
வடபுல வாடைக்குப் பிரிவோர்
மடவர் வாழியிவ் வுலகத் தானே. (நற்.—366)

இச் செய்யுளில் அரவுக் கிளர்ந்தன்ன – அல்குல் என்றதனால் காமஞ்சான்ற இளமகள் என்பதையும், காழ்–நுண்டுகி லூடுவந் திமைக்கும் அல்குலென்றதனால் துகிலின் நுண்மையையும், மணியேரைம்பாலென்றதனால் ஐம்பாலினழகையும், முதுக்குறை குரீஇ என்றதனால் குடம்பை செய்யுங் குரீஇயின் நுண்மதியையும் புலப்படுத்தியிருத்தல் மிகவும் பாராட்டத்தக்கது. இன்னும், குறுந்தொகையில் வரும் மூன்று செய்யுட்களும் மிகவுஞ் சிறந்த பொருளமைவுடையன. அவற்றுளொன்று காட்டுதும்:—

## குறிஞ்சி

இது தலைமகன் சிறைப்புறத்தானாக வெறியஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

வெறியென வுணர்ந்த வேல னோய்மருந்
தறியா னாகுத லன்னை காணிய
வரும்பட ரெவ்வ மின்றுநா முழப்பினும்
வாரற்க தில்ல தோழி சாரற்
பிடிக்கை யன்ன பெருங்குர லேனல்
லுண்கிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பிற் சிலம்புஞ் சோலை
யிலங்குமலை நாட னிரவி னானே. (360)

இதில் வெறியென வுணர்ந்த வேலனென்றதனால் அவன் பேதைமையையும், கொடிச்சிகைக்குளிர் சிலம்பிற் சிலம்பு மென்றதனால் அக் குளிரினொலியின் பெருமையை யும் உணர்த்துதல் மிகவுஞ் சிறப்புடைத்து. (தினைக் குர லின் வளைவிற்கு பிடிக்கையை யுவமை கூறுதலும் வியக் கத்தக்கது.)

இன்னும் நெடுந்தொகையுள் வரும் மூன்றுள் ஒன்று காட்டுதும் :—

## குறிஞ்சி

முதைச்சுவற் கலித்த மூரிச் செந்தினை
யோங்குவணர்ப் பெருங்குர லுணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி வருதிற நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்க நோக்கி வந்துநம்
நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோ தானே குன்றத்
திரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்

கவுண்மலி பிழிதருங் காமர் கடாஅ
மிருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்
திருங்கல் விடரளை யசுண மோர்க்குங்
காம்பம விறும்பிற் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிர லுளியங் கெண்டும்
வடுவாழ் புற்றின் வழக்கரு நெறியே. (88)

இச் செய்யுளில் பன்றி செந்திணைக்குரலை யுண்ணும் படி பல்லிப்பாடோர்த்துக் குறுகும் என்றதும், அப் பல்லி யின் நிமித்தம் அதற்குப் பிழைத்தமையைக் குறிப்பிட்டு,

"கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
செஞ்சுடர் விளக்கம்"

என்றதூஉம் மிகவும் பாராட்டப்படத்தக்கன. இன்னும் அசுணம் யாழோசையில் விருப்புடையதென்பதைக் குறிப்பிட்டு "யாழ்செத்தசுணமோர்க்கும்" என்றும், கரடி குரும்பிதேரும் இயல்பைக் குறிப்பிட்டுக், "கொடு விர லுளியங் கெண்டும் வடுவாழ் புற்றின்" என்றும் கூறுதலும் பொருள்களி னியற்கையைப் புலப்படுத்தலின் மிகவும் மகிழத்தக்கன.

# ஆரியச் சக்கிரவர்த்திகள்

ஈழநாட்டின் வடபாகத்துள்ள நாடு யாழ்ப்பாணம். இதற்கு "மணற்றி" என்பது முற்பெயர். (தொண்டை நாட்டினின்றும் ஈழநாடு வந்த யாழ்ப்பாணனொருவன், அப்போது அதன் தலைநகராயிருந்த அநுராசபுரம் சென்று, அரசனாகிய எலேலசிங்கனைக் கண்டு, தன் யாழ்ப்பாடலின் திறமையைக் காட்டி, அவனிடம் பரிசிலாக "மணற்றி" என்னும் இந்நாட்டைப் பெற்று, காடு கெடுத்து நாடாக்கி, தன் பெயரானே இதற்கு "யாழ்ப் பாணம்" என்னும் பெயரை இட்டு, தானே அரசு செய்திருந்தான். அவனிறந்தபின், சோழராஜனால் அனுப் பப்பட்ட அவன் (அச் சோழன்) புதல்வன் ஒருவன் சிங்கையாரியச் சக்கிரவர்த்தி என்னும் பெயரோடு முடி சூட்டப்பெற்று அரசாண்டான். அவன் தன் இராஜ தானியாகிய நல்லூரிலே, தன்னாட்டினும் பிறநாட்டினு மிருந்து பண்டிதர்கள் சிலரை அழைத்து ஒரு தமிழ்ச் சங்கம் தாபித்து, அதற்குச் சர்வமானியமாக ஒரு கிரா மத்து வயனிலங்களையும் விடுத்தான். அக் கிராமம் இப் பொழுது சங்கவேலி (சங்குவேலி) என்னும் பெய ரொடு விளங்குகின்றது. அச் சங்கப் புலவர்கள் செய்த நூல்கள் யாவும் இவனால் அமைக்கப்பட்ட "சரசுவதி மகாலயம்" எனப் பெயரமைந்த புத்தகாலயத்தில் வைக் கப்பட்டிருந்தன என்றும், அது சிங்கள அரசன் ஒரு வனால் தீக்கொளுவப்பட்டு அழிந்ததென்றும் சரிதநூல் கூறும். அதனாற்போலும் அவர்கள் செய்த நூல்க ளாயினும் தனிச் செய்யுட்களாயினும் எமக்குக் கிடைத் தில.) இவனுக்குப்பின் இவன் மரபில் வந்த குணபூஷண சிங்கையாரியச் சக்கிரவர்த்தியும் தமிழை நன்கு பரிபா லித்தனன். இவன், "அடியார்க்கு நல்லார்" என்னும் பண்டிதமணியை இந்திய தேசத்தினின்றும் அழைப்பித்

துத் தனக்கு முதன்மந்திரியாக வைத்து, அப்பண்டித மணி வாயிலாகக் கல்வியை விருத்தி செய்தான். அன்றியும் அப்பண்டிதமணியால் அறுபத்துமூன்று நாயன்மார்க்கு ஒரு மடாலயமும், தன்பெயராலும் அப்பண்டிதமணி பெயராலும் இரு குளங்களும் அமைப்பித்தான். மடாலயம் அமைந்த இடம் "நாயன்மார்கட்டு" என்றும், குளங்கள் முறையே "ஆரியகுளம்" என்றும், "அடியார்க்கு நல்லார் குளம்" என்றும் வழங்குவன வாயின. "அடியார்க்கு நல்லார் குளம்" இக்காலத்துக் "கன்னாதிட்டிக் குளம்" என வழங்கலாயிற்று. இப்பண்டிதமணியே சிலப்பதிகாரத்துக்கு உரைசெய்த "அடியார்க்கு நல்லார்" என்பர் சிலர். அது பொருந்துமோ என ஆராயத்தக்கது. இக் குணபூஷணசிங்கையாரியன் மகன் வீரோதயசிங்கையாரியன் காலத்திலேயே கண்ணகி கோயில்கள் யாழ்ப்பாணத்தில் உண்டாயின என்று சரிதம் கூறலின், ஒருகால் அவன் காலத்து இப்பண்டித மணி இருந்து உரைசெய்திருக்கலாம் என்பது ஊகிக்கத் தக்கது. வீரோதயனுக்குப் பின்னுள்ள ஆரியச் சக்கிரவர்த்திகள் காலத்திலே சிலப்பதிகாரம் என்னும் நூல் இங்கே பெரிதும் வழங்கியுள்ளது என்பதற்குப் பல சான்றுகள் உளவாதலின் ஒருபோது சிலப்பதிகார உரையை இவ் அடியார்க்கு நல்லாரே செய்திருக்கலாம். சரிதகாலங்கள் முன்பின்னாக மாறியும் இருக்கலாம் என்பதும் இங்கே நோக்கத்தக்கது.

## பரராசசேகரன்

இவன் கி. பி. 1410-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்தரசாண்ட குணவீரசிங்கையாரியன் மகனாகிய கனகசூரியசிங்கையாரியனுடைய புதல்வன். இவனுடைய தந்தையாகிய கனகசூரியசிங்கையாரியன் பகை

வருக்கஞ்சி இந்திய தேயத்துக்குச் சென்றபோது அங்குத் தொண்டைமண்டலத்துள்ள திருக்கோவலூரிலே இவனையும் இவன் தம்பியாகிய செகராசசேகரனையும் ஒரு ஆசிரியனிடம் கல்வி பயிலும்படி விடுத்திருந்தான் என்றும், பின்னர்ப் பதினான்கு வருஷங் கழித்து இவனையும் இவன் தம்பியையும் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்து பரராசசேகரனாகிய இவனுடைய உதவியாற் பகையரசனை வென்று இவனை இளவரசனாக்கித் தான் அரசனாகவிருந்து யாழ்ப்பாணத்தை யாண்டான் என்றும், தந்தைக்குப் பின் இவனே அரசாண்டானென்றும் யாழ்ப்பாணச் சரித்திரங் கூறும். ( இவன் அரசனாயிருந்த காலத்தே இவனிடந் தொண்டைமண்டலத்துள்ள பூதூரைப் பிறப்பிடமாகவும் பொற்களந்தைப் பதியை வாசத்தானமாகவுங் கொண்ட 'அந்தகக் கவி வீரராகவ முதலியார்' என்னும் புலவர் வந்து, தாம் பாடிய வண்ணக் கவியை இவன் முன்னிலையில் அரங்கேற்றி அக் கவிக்குப் பரிசிலாக இவனிடம் பொன்னின் பந்தமும், மத்தயானையும், பிறவும் பெற்றார். அவர் இவன் பொற்பந்தமளித்தபோது இவனை வியந்து பாடிய செய்யுளை இங்கே காட்டுதும். அது :—

## வெண்பா

"பொங்குமிடி யின்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது.

இவனுங் கவிபாடுவதில் அதிசாமார்த்தியமுடையவனாயிருந்தான் என்பது அக் கவி வீரராகவரைப் புகழ்ந்து பாடிய சில செய்யுட்களா லறியக்கிடக்கின்றது. அக் கவிகள் வருமாறு :—

## கட்டளைக் கலித்துறை

"புவியே பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெலாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே."

இது அவர் பாடிய திருவாரூருலாவைக் கேட்ட போது மன்னன் பாடியது.

## கட்டளைக் கலித்துறை

இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப்பா ளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றான் கனமுத் தமிழையுமே.

இது அவர் கல்வித்திறமை நோக்கி மன்னன் பாடியது.

## விருத்தம்

விரகனு முத்தமிழ் வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனு மொப்பத் தோன்றினற்
சிரகா கம்பிதஞ் செய்ய லாகுமே.

இது அவர் வண்ணக்கவியை அரங்கேற்றியபோது மன்னன் பாடியது.

# செகராசசேகரன்

இவன் முன்னர்க் கூறிய பரராசசேகரனுடைய தம்பி. பரராசசேகரன், தந்தைக்குப்பின் அரசனாகி நல்லூரிலிருந்து யாழ்ப்பாணநாட்டை ஆளுங் காலத்தில், இவன் அவன் கருத்தோடு ஊர்கடோறும் தமிழ்ப் பாடசாலைகள் தாபித்தும், தமிழ்ச்சங்கமொன்று தாபித்தும்

தமிழை வளர்த்தான். புலவர்களைக்கொண்டு பலவகை நூல்களையுஞ் செய்வித்தான். அழிந்துபோன "சரசுவதி மகாலய" மென்னும் பெயர் படைத்த புத்தகசாலையைப் புதுக்குவித்து அதில், இந்தியா தேசத்தினின்றும் வடமொழி தென்மொழி நூல்களை வருவித்து வைத்துப் பலரும் படிக்குமாறு உதவினன். புலவர்களாற் புதுப்புது நூல்களையுஞ் செய்வித்தான். புலவர்களுக்குப் பரிசிலுமீந்தான். அதுபற்றி அவர்களால்,

"ஐந்தருவும் நவநிதியுங் குலமணியும் ஆவுமொன்ருய்
வந்தனைய கொடைக் குரிசில்"

எனப் புகழப்பட்டான். இவனாற் செய்விக்கப்பட்ட நூல்களுள் இப்போது வழங்குவது 'செகராசசேகர மாலை' யென்னுஞ் சோதிட நூல். அது சோமஐயர் என்பவரால் ஆக்கப்பட்டது. அதனை அந்நூற் பாயிரத்து வரும் "ஐந்தருவு நவநிதியு" மென்னு முதலையுடைய செய்யுளில் வரும்,

"கந்தமலை யாரியர்கோன் செகராச சேகரமன்
கங்கை நாடன்."

என்னு மடியானும்,

"தன்கடவுட் சுருதிகளின் மனமெனுஞ்சோ
திடமதனைத் தலத்தின்மீது
மின்குலவு தென்கலையாற் றருகவென
வருள்புரிய விருத்தப் பாவாற்
பொன்குலவு செகராச சேகரமா
லையைச்செய்தான் பொருந்து மேன்மைத்
தொன்குலவு மிராசவிரா மேசனருள்
சோமனெனுஞ் சுருதி யோனே"

என்னுஞ் செய்யுளானும் அறியப்படும்.

இவன் காலத்திலேயே பண்டிதராசரென்னும் புலவரால் "ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம்" இயற்றப்பட்டதாகும். அதனை, கவிவீரராகவரென்னும் புலவராலியற்றப்பட்ட அந்நூற் பாயிரத்துள் வரும்,

"அந்நாட் டரச னாரியர் கோமான்
பொன்னாட் டைந்தரு பொருவரு காதலன்
மறுநில நிருபரை வானிலத் திருத்தி
யுறுநில முழுவது மொருதனி புரப்போன்
றென்னிலங் காபுரித் திசைதொறு மருவும்
மின்னிலங் கியவேல் மேவலர் புயத்துப்
படவரா முடித்தலைப் பார்முழு தாண்ட
இடப வான்கொடி யெழுதிய பெருமான்
சிங்கை யாதிபன் சேது காவலன்
கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பன்
பௌவ மேற்றுயில் பராபரன் சூட்டிய
தெய்வ மாமுடிச் செகராச சேகரன்
அவனது காலத் தத்திரி கோனைச்
சிவனது கோயிற் சிவமறை முதலோன்
அருமறை யுபநிட மாகமஞ் சோதிடம்
விரிதமிழ் வரையற விளங்கிய சூரவோன்
சேயினுந் திறலான் றயாநிதி யனையான்
முப்புரி நூற்புயன் முளரியந் தாமன்
செப்பரு பண்டித ராச சிகாமணி
என்னு நாமத் தெங்குரு பெருமான்
மன்னுநாற் கவியும் வல்லநா வலனே"

என்னுஞ் செய்யுளடிகளா னறிக.

## அரசகேசரி

அரசகேசரி என்பவர் ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து அரசாண்ட பரராசசேகர மகாராசாவின் மருக

ராவர். திருநெல்வேலியில் வசித்த பாண்டிமழவன் மரபிற் பிறந்தவளும் பரராசசேகர மகாராசாவின் இரண்டாம் மனைவியுமாகிய வள்ளியம்மையின் மகளை விவாகஞ் செய்தவர். இம்முறையினுற்றுன் மருகர் போலும். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தை நோக்கும்போது பரராசசேகரன் கி. பி. 1260-ல் பாண்டியன் மரபில் வந்தவனும், ஜயவீரசிங்கையாரியப் பட்டம் பெற்றவனுமுள்ள ஒருவன் வழித்தோன்றலாகக் காணப்படுகிறுன். ஆனுல் செகராசசேகரமாலை என்னுஞ் சோதிட நூலின் சிறப்புப்பாயிரம் அதற்கு மாருகக் கூறுகின்றது. சிறப்புப்பாயிரத்திலே, இராமபிரான் தான் தாபித்த இராமேசுரரைப் பூசிக்கும்படி பாசுபதர்களாகிய பஞ்சக் கிராமவேதியர் ஐஞ்ஞூற்றுப் பன்னிருவரை அழைத்து,

"பூசனை செய்மி னீரெனக் கருணை
புரிந்தவர் தங்களி லிருவர்
காசினி தாங்கும் படிவரங் கொடுத்துக்
கமழ்செழுந் துளபமா லிகையும்
மாசறு சுருதி யாரிய வேந்தென்
றணிமணிப் பட்டமுங் கொடுத்து
தேசுறு குடையு மொற்றையும் வெற்றித்
திகழ்விடைத் துவசமு நல்க"

அன்றுமுதல் சதுர்யுக நாலாறிற் புவிபுரந்த வரசர் குலத்தில் வந்தவனுகக் கூறப்பட்டுள்ளது. செகராசசேகரமாலை செய்தவர் சோம ஐயர். ஆதலின் பரராசசேகரன் மரபு நன்கு ஆராயத்தக்கது. நிற்க,

அரசகேசரி என்னுமிவர் வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிகளிலும் வல்லவர். இவர் செய்த நூல் தமிழ் இரகுவமிசம். அந்நூலை இவர் வடமொழி

இரகுவமிசத்தினின்றும், அதன் ஆசிரியரான காளிதாச மகாகவியின் மொழிவழிச் சென்று "உரைவழி நன்னெடுங் குன்றிசைப்பது" போலத் தமிழில் மொழி பெயர்த்துச் செய்தது மிகவும் புகழத்தக்கது. இவரின் மொழிபெயர்ப்புச் சாதுரியத்தை, மேற்காட்டிய இரு மொழியினும் வல்ல புலவர்கள் நன்கு பாராட்டுவார்கள். அதற்குச் சான்றாக ஒன்று காட்டுதும்:

"ஸராஜ்யம் குருணுதத்தம் பிரதிபத்யாதிகம் பபௌ
திநாந்தே நிஹிதம் தேஜஸ் சவித்திறே வஹூ
தாச ந : ||

என்னும் வடமொழி இரகுவமிச சுலோகம், தமிழ் இரகுவமிசத்தில்,—

"கனைகழல் வீரனுங் காவ லான்றரு
புனைமணி முடியொடும் பொலிந்து தோன்றினன்
றினகரன் றிவாந்தகா லத்திற் சேர்த்திய
வினவொளி கொடுகன லிலங்கிற் றென்னவே"

என, இவரால் மொழிபெயர்க்கப்பட்டது. இதனால் இவரது மொழிபெயர்ப்பு வன்மையை அறிந்துகொள்க.

இவர் இரகுவமிசத்தைப் பாடுங்காலத்தே நல்லூரின் கீழ்ப்பாகத்திற் பொருந்திய நாயன்மார்கட்டிலுள்ள தாமரைக் குளத்தருகே இருந்து பாடினரென்றும், அதற்குச் சான்றாக நாட்டுப் படலத்திலே முதலில் குளங்களின் வருணனையே கூறப்படுகின்றது என்றும் ஆன்றோர் கூறுவர்.

அன்றியும், வயன் முதலியவற்றை வருணிக்குங்காலும் அக்குளத்தருகே உள்ள வயல்களையும் பக்கங்களில் நடப்பட்ட கமுகு, வாழை, கரும்பு முதலியவற்றையும் பார்த்தே வருணித்தார் என்பர். அங்ஙனமாதல்,

"கூறு வேழத்தி னரம்பையின் வளைந்தன கதிர்க
ளூறு செய்திடத் தொடுத்தகூன் குயமொத்த வேனும்
பாறு நெட்டிலைப் பூகமேல் வீழ்ந்தன பழுக்காய்த்
தாறு வேறிடக் கொளீஇயன தோட்டியிற் றங்கும்"

என்பதனுன் நன்கு அறியப்படும். இவர் இருந்த இடம் இப்பொழுதும் 'அரசகேசரி' வளவு என்னும் பெயரோடு நல்லூரிலுள்ள யமுனரி என்னும் ஏரியின் பக்கத்துள்ளது.

இன்னும், அந்நூல் கம்பருடைய இராமாவதாரமென்னும் நூலைப் பின்றொடர்ந்தே பாடப்பட்டுள்ளது. ஆயினும் கடினமான சொற்பிரயோகங்களை யுடைமையானும் வடமொழி நூலைப் பெயர்த்துப் பாடினமையானும் கற்றோர்க்கன்றி மற்றோர்க்குணர்ந்து சுவைத்தல் கூடாதாயிற்று.

இவர் சிலப்பதிகாரமென்னும் நூலில் அதிகப் பயிற்சி யுள்ளவரென்பது அந்நூற் பிரயோகங்களை இதனுளமைத்துக் கூறுமாற்று னறியப்படும். சிலப்பதிகாரத்தில்,

"பரிமுக வம்பியும் கரிமுக வம்பியும்
அரிமுக வம்பியு மருந்துறை யியக்கும்
பெருந்துறை மருங்கில்"

என்னு மடியில் வரும் அம்பி விசேடங்களை (அம்பி—தோணி),

அரிமுக மடுத்து வீழு மான்மத வளறு நாறக்
கரிமுக வோட மூர்ந்து சிலதியர் மருங்கு காப்பச்
சுரிமுக நெற்றி துற்றச் சுடர்மணி வர்க்கந் தொக்க
பரிமுக வோட மூர்ந்து சிலதியர் மருங்கு போனர்.

என்னுஞ் செய்யுளி லமைத்தும்,

" கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி "
என்றும்,

" பாம்பு கயிறாகக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயின்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி "
என்றும்,

" கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி "

என்றும் வருவனவற்றுள், " கொன்றையந் தீங்குழல் ", " ஆம்பலந் தீங்குழல் ", " முல்லையந் தீங்குழல் " என்பனவற்றை,

" நீக்குமா னழைக்கு மாயர் நீடிசை நிறைய வூது
மூக்கமேன் றளவே யாலை யோதைய தளவே யுந்த
வாக்குதீங் கொன்றை மீன்பா டரவத்தீங் கொன்றை மாற்றத்
தேக்குவே யேனற் காப்பின் றிறத்தவே யகற்று மன்றே "

என்னுஞ் செய்யுளி லமைத்தும், (தளவு-முல்லைக்குழல், கொன்றை-கொன்றைக்குழல், வே-வேய்ங்குழல், ஆம்பலும் வேயு மொன்று.) இன்னுஞ் சிலப்பதிகாரத்திற் கூறிய மதிற் பொறிகளிற் சிலவற்றை இதனுளமைத்தும் பாடியிருத்தல் காண்க. அன்றியும், அகநானூற்றில்,

" வலந்த வள்ளி மரனோங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள்
இன்னா விசைய வோசை பயிற்றலின்
எக லடுக்கத் திருளளைச் சிலம்பின்
ஆகொள் வயப்புலி யாகு மஃதென "

என்று வருமடிகளின் கருத்தை,

"கான்குழற் குறத்தி நல்லார் கணிமலர் கொள்ளு மோதைக்
கான்கிளைக் காப்புச் செய்தங் கண்டர்நின் றார்ற்று மோதை"

என அமைத்தும் பாடியுள்ளார். இதனால் இவர் சங்க நூல்களிலும் பயிற்சியுள்ளவர் என்பது பெறப்படும்.

# அரசரல்லாத புலவர்கள்

## பண்டிதராசர்

இவர் ஏறக்குறைய இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னே திரிகோணமலையிலே கோணேசுராலயத்து அருச்சகராயிருந்தவர். வடமொழியிலும் தென்மொழியிலும் அதி சாமர்த்தியம் வாய்ந்தவர். கவி பாடுவதிலும் மிகச் சிறந்தவர். [தக்கிண கைலாசபுராணமெனப்படும் கோணசைலபுராணம் இவர் இயற்றியதாகும்.] அப் புராணத்துள்ள சிறப்புப்பாயிரக் கவியொன்றினால் இவர் செகராஜசேகர மன்னன் காலத்திருந்தவரென்பது தெரிகிறது. அக்கவி,

"மணிநிறக் கண்டன் வடபெருங் கயிலையில்
அணிநிறக் கொடுமுடி யாயிரத் தொருமுடி
படவரா வொதுக்கப் பறித்தினி திலங்கை
வடகட னடுவண் மாருதம் பதிப்ப
வருமுக் கோண மலைதென் கயிலைப்
பரமர்க் குருத்திரர் பதினொரு பேரும்
ஒருபது முகுந்தரு மொன்பது விரிஞ்சரும்
வருகடற் கமடம் வழங்கிய மீனமும்
திருமலை தழுவிய தெசமுக நிருதனும்
பொருமலை மதகரிப் பூவலர் பலரும்
பூசையொ டிறைஞ்சிய புராண நூற் கதையைத்
தேசிகன் சொற்படி தென்கலைப் படுத்தி
யந்தா தித்தொடை யடைவொடு தொடுத்து
நந்தா விருத்த நவையறக் கூறினன்
அந்நாட் டரசன் ஆரியர் கோமான்
பொன்னாட் டைந்தரு பொருவரு கரதலன்
மறுநில நிருபரை வானிலத் திருத்தி
யுறுநில முழுவது மொருதனி புரப்போன்

தென்னிலங் காபுரித் திசைதொறு மருவும்
மின்னிலங் கியவேல் மேவலர் புயத்தப்
படவரா முடித்தலைப் பார்முழு தாண்ட
இடப வான்கொடி யெழுதிய பெருமான்
சிங்கை யாதிபன் சேது காவலன்
கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பன்
பௌவ மேற்றுயில் பராபரன் சூட்டிய
தெய்வ மாமுடிச் செகராச சேகரன்
அவனது காலத் தத்திரி கோணைச்
சிவனது கோயிற் சிவமறை முதலோன்
அருமறை யுபநிட மாகமஞ் சோதிடம்
விரிதமிழ் வரையற விளங்கிய குரவோன்
சேயினுந் திறலான் றயாநிதி யனையான்
முப்புரி நூற்புயன் முளரியந் தாமன்
செப்பரும் பண்டித ராச சிகாமணி
என்னு நாமத் தெங்குரு பெருமான்
மன்னுநாற் கவியும் வல்ல நாவலனே.''

என்பது.

கவிச்சுவை யுணர்தற்காக இவர் இயற்றிய கோணுசல புராணத்துள் ஒரு கவி ஈண்டுத் தருதும்.

''பூவெலாந் துய்ய வாசம் புனமெலா முனிவர் வாசம்
மாவெலாங் குயிலி னோசை மலையெலாந் துயிலி னோசை
காவெலா முயர்ந்த தாழை கரையெலாங் கமழுந் தாழை
பாவெலா மரனுர் தஞ்சீர் பகர்வரி தன்னோர் தஞ்சீர்.''

## கவிராஜர்

இவர் ஊருந் திரிகோணமலையாகும். இவரும் முற்கூறிய பண்டிதராசரும் ஒரு காலத்தவரே. அஃது அவர் இயற்றிய கோணுசலபுராணத்திற்கு இவரளித்த சிறப்புப் பாயிரக் கவியினுல் அறியக்கிடக்கின்றது. இவர் கோணேசர் கல்வெட்டெனை வழங்கும் கோணேச சாசனத்தைப் பாட்டானும் உரையானும் இயற்றியுள்ளார். அதனுள் ஒரு பாட்டு ஈண்டுக் காட்டுதும்.

"திருந்துகலி பிறந்தைஞ்ஞூற் றொருபது
னிரண்டாண்டு சென்ற பின்னர்
புரிந்திடப மாதமதி வீரைந்தாந்
தேதிதிங்கள் புணர்ந்த நாளிற்
றெரிந்தபுக ழாலயமாஞ் சினகரமுங்
கோபுரமும் தேரூர் வீதி
பரிந்துரத்ன மணிமதிலும் பாவநா
சகச்சுனையும் பகுத்தான் மேலோன்."

(இவர் இயற்றிய கோணேசர் கல்வெட்டையும் பண்டிதராசர் இயற்றிய திரிகோணசல புராணத்தையும் பல ஏட்டுப் பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிற் பதிப்பித்துதவியவர், புலோலி ஸ்ரீமான் பொ. வைத்தியலிங்க தேசிகர்.) அவர் செய்த உதவி ஈழநாட்டாரால் என்றும் மறக்கற்பாலதன்றாம்.

## வரதபண்டிதர்

இவர் காசியிலிருந்து வந்து யாழ்ப்பாண நாட்டிலே சுன்னாகம் என்னும் ஊரில் வசித்த வேதியர் குலத்தில் பிறந்தவர். ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்குமுன் இருந்தவர். தமிழில் இலக்கிய இலக்கணங்களும் சோதிடமும் வைத்தியமுங் கற்றுப் பாண்டித்தியமும் பெற்றவர். வேதாந்த சித்தாந்த நூல்களும் நன்கு கற்றவர். அவற்றில் அநுபவமும் பெற்றவர். பாடுதலில் மிகு சாமர்த்தியம் வாய்ந்தவர். வாழவுங் கெடவும் பாட வல்லுநர். அதனால் இவரை வரகவி என்றுங் கூறுவர். இவரது தந்தையார் பெயர் அரங்கநாதையர் என்பது:—

செந்தமிழ் முனிவன் செப்பிய கதையும்
கந்த புராணக் கதையினுள் ளதுவும்
இலிங்க புராணத் திருந்தநற் கதையும்
உபதேச காண்டத் துரைத்தநற் கதையும்
தேர்ந்தெடுத் தொன்றாய்த் திரட்டியைங் கரற்கு

வாய்ந்தநல் விரத மான்மிய முரைத்தான்
கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்குந்
துன்னிய வளவயற் சுன்ஞகத்தோன்
அரங்க நாத னளித்தருள் புதல்வன்
திரம்பெறு முருகனைத் தினந்தொறும்
வரம்பெற வணங்கும் வரதபண் டிதனே.

என்னும் பிள்ளையார் கதைச் சிறப்புப்பாயிரச் செய்யுளானே அறியக்கிடக்கின்றது. இவரியற்றிய நூல்கள் :— சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், கிள்ளைவிடு தூது, அமுதாகரம், பிள்ளையார் கதை முதலியன. இவற்றுள் :—

சிவராத்திரி புராணம் சிவராத்திரி விரத மகிமை கூறுவது. ஏகாதசிப் புராணம் ஏகாதசி விரத மகிமை கூறுவது. கிள்ளைவிடுதூது காங்கேயன்றுறைக்குத் தென்பாகத்திலே கண்ணியவளை என்னுந் தலத்தில் வீற்றிருக்கும் குருநாதசுவாமி (கந்தசுவாமி) மேல் இயற்றியது. இதன்கண் சிவபிரான் சுந்தரருக்காகப் பரவையார்பாற் றூதுபோன கதையும், அனுமான் இராமபிரானுக்காகச் சீதைபாற் றூதுபோன கதையும், கண்ணபிரான் பஞ்சவர்க்காகத் துரியோதனன்பாற் றூதுபோன கதையும், நளன் றூது முதலியவும், பீதாம்பரங் கிழித்துக் காலிற் சிலந்தியைச் சோழராஜனுக்குச் சடைடப்பவள்ளல் காட்டிய கதை முதலியவும், மாவிட்டபுர முதலிய ஊர்களில் வசித்த வேளாளர்களின் மரபு முதலியவுங் கூறியுள்ளார். இந்நூல் இவர் வழித்தோன்றலும், இந்தியா தேச வாசருமாகிய பண்டிதர் இரத்தினேசுவர ஐயரவர்களால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவரது கவிச்சுவை புணர்தற்காகச் சிவராத்திரி புராணத்துள் ஒரு செய்யுள் காட்டுதும் :—

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காச் சென்றமர்செய்காமனுமைம்
பூவரசு படவிழித்துப் புனவேங்கை யத்தியதள் புனைந்துபோர்த்த
தேவரசு மனமகிழத் திருப்பதிக மிசைத்தமிழிற் சிறக்கப் பாடும்
நாவரசு பதம்பரசு நமக்குயர்பொன் னாட்டரசு நல்கு மன்றே.

இவரது குலம் முதலியன இவரியற்றிய அமுதாகரம் என்னும் வைத்திய நூலில் உள்ள சிறப்புப் பாயிரச் செய்யுளா னறியப்படுகின்றன. அதனையு மிங்கே காட்டுதும். அது,

ஐயமின் முன்னூற் றையிரு விருத்தம்
செய்யசெந் தமிழாற் றெரித்துரை செய்தனன்
கங்கைமா நதிசூழ் காசிமா நகரும்
பங்கமில் பங்கயப் பைந்துணர் மாலையும்
ஆதிநான் மறைசே ரந்தண ராணையும்
கோதக லோதிமக் கொடியுமிங் குடையோன்
கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்கும்
துன்னிய வளவயற் சுன்னைநன் னாடன்.

என்பது.

## சிற்றம்பலப் புலவர்

இவர் ஏறக்குறைய இருநூறு வருஷங்களுக்கு முன்னே மாதகல் என்னு மூரிலே வேளாண் குலத்திலே பிறந்தவர். வேதாரணியஞ்சென்று பஞ்சலக்கணக் கணபதி ஐயரென்னும் பெயருடைய சைவ குருவினிடம் இலக்கண இலக்கியங்கற்று மீளத் தம்மூரில் வந்திருந்தவர். இவரிடங் கற்றவர்கள் இருபாலைச்சேனாதிராய முதலியார், அராலி அருணாசலம்பிள்ளை முதலியோர் என்பர். இவர் கண்டியரசன்மேல், கிள்ளைவிடு தூது என்று ஒரு பிரபந்தம்பாடி அதை அரங்கேற்றற்காகச் சென்ற பொழுது வழியில் அவ்வரசன் ஆங்கிலேயரால் அகப்படுத்தப்பட்டான் என்ற சொற்கேட்டுத் தம்மூர்க்குத் திரும்பினர் என்பர்.

# சின்னத்தம்பிப் புலவர்

இப்புலவர் பெருந்தகையார் ஏறக்குறைய நூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன்னரே நல்லூரிலிருந்தவரும், ஒல்லாந்த அரசினரால் தேசவளமை என்னும் நூலைத் திருத்தி அமைக்கும் வண்ணம் நியமிக்கப்பட்ட அறிஞர்களுள் ஒருவராய் விளங்கியவரும், பெரும் பிரபுவுமாகிய வில்லவராய முதலியாருடைய அருந்தவப் புதல்வர். இவர் யாரிடத்தில் கல்வி கற்றனர் என்பது தெரியவில்லை. இவர் இளமையிலேயே பாடும் சாமர்த்தியமுடையவரென்றும், மாடுமேய்க்கும் பிள்ளைகளுடன் இவர் விளையாடிக்கொண்டு நிற்கும்போது, அவ்வழியாக வந்த புலவர் ஒருவர் இவரை நோக்கி வில்லவராய முதலியார் வீடு எது? என்று வினவியபோது, இவர் உடனே வாயிலிற் கொன்றைமரம் நிற்கும் வீடே அவர் வீடு என்பதைக் குறிப்பிட்டுப்,

> பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
> நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை
> வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
> வாசலிடைக் கொன்றை மரம்.

என்று ஒரு கவியினால் அப்புலவர் ஆச்சரியமுறுமாறு விடையிறுத்தாரென்றும் முதியோர் சிலர் கூறுவர். அன்றியும் ஒருநாள் இவர் தமது தந்தையார் ஒரு செய்யுளின் முதலடிகளிரண்டையும் பாடி, ஒரு ஏட்டிலெழுதி, ஏனையீற்றடியிரண்டையும் செவ்வனே பாடி நிரப்பமுடியாது வைத்துவிட்டு அயலூர்க்குச் செல்ல, இவர் அவ்விரண்டடியையும் செவ்வனே பாடி நிரப்பி வைத்தாரென்றும், பின் தந்தையார் வந்து அவ்வேட்டையெடுத்துப் பார்த்தபோது தான் பாடிய செய்யுளின் ஈற்றடியிரண்டும் நிரப்பப்பட்டிருத்தல் கண்டு மகிழ்ந்து,

அதனை நிரப்பி வைத்தவர் தம் புதல்வரே யென்றறிந்து, தம் சொற்படி பாடசாலைக்குச் செல்லாது விளையாட்டிற்குச் செல்லுதல் காரணமாக முன் இவர்பால் வைத்திருந்த வெறுப்பை நீக்கி, அன்றுதொட்டு இவரிடம் பேரன்புடையராயினரென்றும், இங்ஙனம் இவர் இளமையிலே பாடத் தொடங்கியதற்குக் காரணம் இவர் பெற்றுக்கொண்ட சரஸ்வதி கடாட்சமே யென்றுங் கூறுவர். இவர் புலமைக்குக் காரணம் யாதாயினும் ஆகுக. இவர் பாடுதலின்மேல் மிகுந்த சாமர்த்திய முடையரென்பதில் தடையேயில்லை. இவர் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றவரென்பது இவர் பாடிய பிரபந்தங்களால் நன்கு புலப்படுகின்றது. இவர் பாடிய பிரபந்தங்கள், மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பருளைப் பள்ளு என்பன.

**மறைசையந்தாதி:** இது வேதாரணியேசுரர்மேற் பாடப்பெற்றது. இதற்கு யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி திரு. அ. சிவசம்புப் புலவரவர்களும், மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியாரவர்களு முரையெழுதியுள்ளார்கள்.

**கல்வளையந்தாதி:** இது யாழ்ப்பாணத்துச் சண்டிருப்பாயிலுள்ள கல்வளையென்னும் பதியில் எழுந்தருளியிருக்கும் விநாயகக் கடவுள்மீது பாடப்பெற்றது. இதற்கு யாழ்ப்பாணத்து வல்லுவெட்டித்துறை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ஸ்ரீ வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள் உரையெழுதியுள்ளார்கள்.

**கரவை வேலன் கோவை:** இது யாழ்ப்பாணத்துக் கரவெட்டியிலிருந்த பிரபு திலகராகிய வேலாயுதம் பிள்ளைமேற் பாடப்பெற்றது. இக்கோவையை அரங்கேற்றியபோது ஒவ்வொரு செய்யுட்கும் ஒவ்வொரு பொற்றேங்காய் பரிசிலாக அளிக்கப்பட்டது என்பர். இதனுள் பல செய்யுட்கள் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்

பிள்ளையவர்களால் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளி யிடப்பட்டுள்ளன. அவற்றுள் சில காட்டுதும்.

மாசால மோமணி வாய்நோகு மோநும் மரபியலின்
ஆசார மோவிர தத்தடை வோதிரை யாடைசுற்றுந்
தேசா திபர்மெச்சும் வேலன் கரவைச் சிலம்பனையீர்
பேசா திருக்கும் வகையின்ன வாறென்று பேசிடுமே.

பூவென்ற மாலிலங் கேசனை நாளைக்குப் போர்புரிய
வாவென்ற வீரன் கரவையில் வேல மகிபதிமேற்
பாவென்ற வாணிப் பவளச்செவ் வாய்மடப் பாவையிவள்
ஏவென்ற காதள வோடிய பார்வை யிமைக்கின்றதே.

இக்கரவை வேலன் கோவை சிறந்த அரும்பத வுரையோடு, திரிபாஷா விற்பன்னரும், ஆரிய திரா விட சங்க ஸ்தாபகரும், வித்தியாதரிசியுமாகிய ஸ்ரீமாந். தி. சதாசிவ ஐயரவர்களால் இப்போது அச்சிட்டு வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

**பறளைப்பள்ளு:** இது யாழ்ப்பாணத்துப் பறளாய் என்னுமிடத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகக் கடவுள் மீது பாடப்பெற்றது. இதன் கவிகள் மிகவுஞ் சுவை யுள்ளன. சுவையுணரும்படி சில காட்டுதும்.

பகுத்த வந்தணர் சாலைக டோறும்
பயிலும் வேதத் தொலிபண்ணை மீதிற்
றொகுத்த மள்ளர் குரவையை மாற்றிடு
சோழமண்டல நாடெங்க ளூடே.
பண்ணிற் றோயப் பொருண்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
யெண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடு
மீழமண்டல நாடெங்க ளூடே.

இப்பள்ளு, சென்னை ஸ்ரீமாந் செ. வே. ஜம்புலிங்கம் பிள்ளையால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்னும் இவர் சிறப்புப்பாயிரக் கவிகளும் பாடி யுள்ளாரென்பது வரதபண்டிதர் பாடிய சிவராத்திரி புரா ணத்துக்கு அளித்த சிறப்புக்கவியால் அறியக்கிடக்கின்

றது. அதனால் இருவரும் ஒரேகாலத் திருந்திருக்கிறார்கள் என்பதும் பெறப்படும்.

சிவராத்திரி புராணச் சிறப்புப்பாயிரக்கவி வருமாறு :—

மைத்தவிடப் பணிப்பணியான் வராசனமுஞ்
சராசனமு மலையாக் கொண்ட
சித்தனுயர் சிவநிசிமான் மியமதனைச்
செந்தமிழாற் றெரித்தல் செய்தா
னத்தகைய பாரத்து வாசகோத்
திரனரங்க னருளு மைந்தன்
சத்தபுரி களிற்காசி நகர்வாத
பண்டிதன்முத் தமிழ்வல் லோனே.

வர ஆசனம் – மேலான ஆசனம். சராசனம் – வில்.

## மயில்வாகனப் புலவர்

இப்புலவர் ஏறக்குறைய நூற்றறுபது வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்து மாதகல் என்னுமூரிலே பிறந்தவர். வேளாண் குலத்தவர். இவ்வூர்ப்பிறந்த சிற்றம்பலப் புலவரது சகோதரி புதல்வர். வையா என்னும் புலவரது மாபில் உதித்தவர். அது,

நெய்யார்ந்த வாட்கைப் பரராச சேகரன் பேர்நிருவி
மெய்யாக நல்ல கலைத்தமிழ் நூல்கள் விரித்துரைத்த
வையாவின் கோத்திரத் தான்மயில் வாகனன் மாதவங்கள்
பொய்யாத வாய்மைப் புலியூரந் தாதி புகன்றனனே.

என்னுஞ் செய்யுளானறியப்படும்.

இவர் இந்தியாவினின்றும் யாழ்ப்பாணத்தில் வந்திருந்த கூழங்கைத் தம்பிரானிடம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலைக் புதிதாகக் கட்டுவித்த வைத்தியலிங்கச் செட்டியாரோடு ஒருங்கு கற்றவர். கூழங்கைத் தம்பிரான்

மாணுக்கர்களுக்கு ஒரு பாடத்தை ஒரு முறையன்றி இரண்டாமுறை சொல்லிக் கொடாரென்றும், வைத்திய லிங்கச் செட்டியார் ஒரு முறையிற் கிரகிக்கத் தக்கவரல்ல ரென்றும், இவர் ஒரே முறையிற் கிரகிக்கும் ஞாபக சக்தி உடையவரென்றும், அதனல் தம்பிரான் சொல்பவற்றை ஒரே முறையிற் கிரகித்து வைத்தியலிங்கச் செட்டியா ருக்கு மீளச் சொல்லிக் கொடுப்பாரென்றும் சரிதாசிரியர் கள் சிலர் கூறுவார்கள். இவரியற்றிய நூல்கள்: புலியூர் யமக வந்தாதி, யாழ்ப்பாண வைபவம் முதலியன. (புலியூர் யமகவந்தாதி, உரையாசிரியர் எனச் சிறப்புப்பெயர்வாய்ந்த ம. க. வேற்பிள்ளை என்பவரால் இயற்றப்பட்ட உரை யுடையது.) யாழ்ப்பாண வைபவமாலை யாழ்ப்பாண நாட் டின் சில வைபவங்களைக் கூறும் ஒரு வசன நூல். இவரது செய்புட்டிற முணரும் பொருட்டு புலியூர் யமகவந்தாதியுள் ஒரு செய்யுள் காட்டுதும் :—

பாயசங் கண்டு பரியாக்கி யாதபத் தர்க்கினிய
பாயசங் கண்டு நிகர்புலி யூர பகையை வெல்லு
பாயசங் கண்டு கரத்தாற் கரிய பழவினைக்குப்
பாயசங் கண்டொட ராதெனை யாள்க பராபரமே.

பாய் அசம்—பாய்கின்ற ஆடு, பரி—வாகனம், பாயசம்—பாற்சோறு. கண்டு—கற்கண்டு. வெல்உபாய—வெல்லும் உபாயமுடையவரே. சங்கு அண்டு கரத்தாற்கு—விட்டுணு வுக்கு. குப்பாயம்—சட்டை. சம்—பிறப்பு.

இன்னும் மேற்கூறிய நூல்களன்றி, ஞானலங்கார நாடகம், காசியாத்திரை விளக்கம் என்னும் நூல்களும் இவரியற்றியன என்பர். அந்நூல்கள் இப்போது கிடைக் கப் பெற்றில. இவர் வரதபண்டிதர் செய்த சிவராத்திரி புராணத்துக்கும் சிறப்புப்பாயிரக் கவி ஒன்று அளித் துள்ளார். அது வருமாறு:—

பரத ராசனுய ரசல ராசன்மகள்
பங்க னன்புதரு பண்புசேர்
விரத ராசசிவ நிசியி னீள்சரித
மிகவி ளங்கிட விளம்பினுன்
கரத ராசனை மொழிய ரங்கனருள்
கருணை மாரிநிகர் பருணிதன்
வரத ராசன்மறை வாண ராசன்மிகு
மதுர வாசுகவி ராசனே.

அசலராசன் – இமயம். சிவநிசி – சிவராத்திரி கரதராசு அனைய மொழி எனப் பிரிக்க.

இவரோடு இருபாலைச் சேனுதிராய முதலியாரும் உடன் கற்றவர் என்பர். சிலர் அவர் தந்தையாரென்பர்.

## இணுவைச் சின்னத்தம்பிப் புலவர்

இவர் இணுவில் என்னுமூரிலே வேளாளர் மரபிலே ஏறக்குறைய நூற்றறுபது வருடங்களுக்கு முன் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் சிதம்பரநாதர். இளமையிலேயே பாடுஞ் சாமர்த்தியம் வாய்ந்தவர். இவர் ஒல்லாந்த அரசினரிடம் சாதனம் எழுதும் உத்தியோகத்திலிருந்தவரென்றும், அவ்வுத்தியோகத்தில் நேர்ந்த யாதோ ஒரு பிழை காரணமாகச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டனரென்றும், அப்போது இவர் அச்சிறைச்சாலையில் கதவு திறக்க தன் வழிபடு தெய்வமாகிய இணுவைச் சிவகாமி சுந்தரியம்மை பேரில் ஒரு பதிகம் பாடினரென்றும் கூறுவர். அப்பதிகத்துள் ஒரு செய்யுள் தருதும்.

### தரவுகொச்சகம்

பெற்றவணீ யானுனது பிள்ளையுல கோரறிய
அற்றமிலாச் செல்வ மருளிவளர்த் தன்புதந்தாய்
இற்றைவரை யுந்தனியே யான்வருந்த வெங்கொளித்தாய்
சிற்றிடைமின் னன்னை சிவகாம சுந்தரியே.

இன்னும் இவர், கலிங்கராயன் என்னும் ஒல்லாந்த அரசமந்திரியின் மகனாகிய கயிலாயநாதன் பேரில் பஞ்சவர்ணத்தூது என்னும் ஒரு பிரபந்தம் பாடியுள்ளார். அவற்றுள்ளும் ஒரு செய்யுள் காட்டுதும் :—

### விநாயகர் துதி

திங்கண்முக நங்கையுமை திருத்தாட் கன்பு
சேர்ந்தநதி குலக்காலிங் கேந்த்ரன் சேயாந்
துங்கமிகு கயிலாய நாதன் சீர்த்தி
துலங்கு செஞ்சொற் பஞ்சவன்னத் தூதுபாட
வெங்கயசே கரனையொரு கோட்டாற் கீன்ற
விண்ணவர்சே கரனைமலை வேந்தன் மாது
பங்கில்வைத்த சந்திரசே கரன்று னீன்ற
பராசா சேகரனைப் பணிகு வோமே.

இச் செய்யுளில் கயசேகரன் என்றது யானைத் தலையையுடைய கயமுகனை. பரராசசேகரன் என்றது பரராச சேகரப் பிள்ளையாரென்னும் பெயரைக் குறித்து நின்றது.

இவர் செய்யுட்களை நோக்கும்போது இவரொரு இலக்கணப் புலவரல்லரென்பது புலப்படுகின்றது.

# நெல்லைநாத முதலியார்

இவர் ஏறக்குறைய நூற்றறுபது வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்திலே தென்கோவையைச் சார்ந்த இருபாலை என்னும் ஊரிலே இருந்தவர். உயர்ந்த வேளாண்குடி மரபிற் பிறந்தவர். ஞாபக சக்தியில் இணையற்றவர். இவர் ஞாபக சக்தியைக் குறித்து முன்னோர் ஒரு கதை கூறுவர். அக்கதை: வணிகர்குலப் பெரும் பிரபுவும் வள்ளலுமாய் விளங்கிய வண்ணை வைத்திய லிங்கச்செட்டியார் மீது ஒரு பிரபந்தம் பாடிக்கொண்டு வந்த செந்திக்கவி என்னும் வடதேயப் புலவர் ஒருவர் செட்டியாரைக்கண்டு தமது கருத்தைத் தெரிவிக்க, செட்டியார் தம்மாற் கட்டுவிக்கப்பட்ட வண்ணை வைத்தீஸ்வர ஆலய மண்டபமே அக்கவியை அரங்கேற்றுதற்குரிய இடமாக நியமித்து, யாழ்ப்பாணத்துள்ள பல வித்துவான்களுக்கும் திருமுகம் அனுப்பினர். அத்திருமுகத்தை நோக்கிய வித்துவான்கள் பலரும் அம்மண்டபத்தில் வந்து கூடினர். அப்போது நெல்லைநாத முதலியாரும் அங்கு வந்தனர். வந்தபோது அங்கிருந்த வித்துவான்களும், பிரபுக்களும், செட்டியாரும் எழுந்து இவரைச் சன்மானித்தனர். வடதேயப் புலவர் மாத்திரம் எழுந்து இவருக்குச் சன்மானம் செய்யாது இறுமாந்திருந்தனர். பின் செட்டியார் ஆஞ்ஞைப்படி அவ் வடதேயப் புலவர் பிரபந்தத்தைப் படித்தனர். அப்போது செட்டியார் அங்கிருந்த வித்துவான்களுள் சிரேட்டராய் விளங்கிய இவரை நோக்கிப் பிரபந்தம் எப்படி என்று கேட்டனர். இவர் வடதேயப் புலவரின் இறுமாப்பை அடக்க நினைந்து புலவர் பாடியது பழையபாடலே, எனக்கும் ஞாபகமே என்று அப் பிரபந்தச்செய்யுளை அப்படியே ஒப்பித்து விட்டனர். உடனே வடதேயப் புலவர் திகைத்து நாணி

எழுந்து இவரை நமஸ்கரித்துத் தாஞ்செய்த குற்றத்தைப் பொறுக்குமாறு வேண்டிக்கொண்டனர். பின் இவர் செட்டியாருக்கு உண்மைகூறி, அப்புலவருக்கேற்ற சன்மானஞ் செய்யும்படி கூறினர். செட்டியார் வடதேயப் புலவரை நோக்கி, யான் உமக்குச் சன்மானமாக வழங்கும் இப்பணத்தில் பாதி உமது பிரபந்தத்திற்காகவும், பாதி, இப்பிரபந்தத்தைப் படிக்கும்போது ஒரே முறையில் அவதானித்து, மீள அப்படியே ஒப்பித்துப் பழம் பாட்டெனக் கூறி உம்மை அவமானஞ்செய்த முதலியார் அவ் வவமானத்தை நீக்கும்பொருட்டு உமக்குத் தந்த தாகவும் தருகிறேன் என்று இரண்டாயிரம் ரூபா பரிசில் அளித்தனர் என்பது.

இதனுல் இவருடைய ஞாபகசக்தி எத்துணைய தென்பது நாம் அறியக் கிடக்கின்றது. இவர் எவரிடம் கற்றனர் என்பது தெரியவில்லை. (சிலர் கூழங்கைத் தம்பிரானிடம் கற்றனர் என்ப.) இவர் காலத்திலே இருபாலையே ஒரு வித்தியாபீடமாயிருந்தது. கற்போர் பலரும் அங்கேயே போய்க் கற்பர். கவியரங்கேற்றுவோரும் அங்கேபோய் இவர் முன்னிலையிலேயே அரங்கேற்றுவர். இவர் காலத்திலே இருந்த யாழ்ப்பாணக் கச்சேரி முதலியார்மீது "இன்பகவி" என்னும் ஒரு புலவர் பிரபந்தம் பாடிவந்த போதும் இருபாலையிற் சென்று இவர் முன்னிலையில் அரங்கேற்றினர் என்ப. இவர் இலக்கண இலக்கியங்களில் வல்லவராய் இருந்த தன்றி, பாடுவதிலும் வல்லவராய் இருந்தனர். இவர் இயற்றிய நூல்களாயினும், தனிச் செய்யுள்களாயினும், இப்போது கிடைத்த லரிதாயின. (இவரும் இவர் புதல்வர் சேனாதிராய முதலியாரும் வறிய மாணவர்களுக்கு அன்னமளித்துக் கற்பித்தனர் என்றும் கூறுப.)

# சேனாதிராய முதலியார்

இவர் மேற்கூறிய நெல்லைநாத முதலியாருடைய அருந்தவப் புதல்வர். இவர் தமது தந்தையாரிடத்தும் கூழங்கைத் தம்பிரானிடத்தும் மாதகல் சிற்றம்பலப் புலவரிடத்தும் இலக்கிய இலக்கணங்கள் கற்றவர். (கூழங்கைத் தம்பிரானிடம் பெருந்தொகைப் பொருள் கொடுத்து நாற்பது நாளையில் நன்னூல் கற்றுணர்ந்தவர்.) தந்தையார்போல ஞாபகத்திற் சிறந்தவர். ஆங்கில பாஷையும் போத்துக்கேய பாஷையுங் கற்றுணர்ந்தவர். நியாயஸ்தலத்திலே நியாய துரந்தரராகியும் துவிபாஷக ராயுமிருந்து உத்தியோகம் நடாத்தியவர். சிலகாலம் கோவைக் கோவிற்பற்றுக்கு மணியகார தாசில்தார் உத்தியோகம் வகித்தும் இருந்தவர். (அக்காலத்திலே கல்வியினன்றி, செல்வம், அதிகாரம், குலம், குணம், ஒழுக்கம், சைவசீலம் முதலியவற்றிலுஞ் சிறந்தவரெனப் போற்றப்பட்டவரும் இவரே. அன்றியும், இவர் தங் காலத்துள்ள வித்துவான்களுக்கெல்லாம் ஒரு சிரோமணி யாயும் விளங்கினர்.) இவரிடம் நெடுங்காலம் கல்விகற்றுத் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் பலர். அவருள் சிறந்த வித்துவான்களாய் விளங்கினோர், நல்லூர் சரவணமுத் துப்புலவர், தென்கோவை அம்பலவாண பண்டிதர், நீர் வேலி பீதாம்பரப் புலவர் முதலாயினோர். (யாழ்ப்பாணத் திலே தமிழ்க் கல்வியையும் சைவ சமயத்தையும் நிலை நாட்டிவைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும் இவ ரிடங் கற்றவரேயாவர்.) இவர், அரச உத்தியோகத்தி லிருக்கும்போது ஐரோப்பிய உத்தியோகத்தர்கள் பலர் இவர்பால் தமிழ்க்கல்வி பயின்றுள்ளார்களென அறி கின்றோம். அக்காலத்திருந்த புலவர்களுள் இவரிடம் கல்வி கல்லாதவரும் சந்தேகம் கேட்டுத் தெளியாத

வரும் இலர். (பொதுப்படக் கூறுகில் அக்காலத்தில் இவராலே யாழ்ப்பாணத்தில் தமிழ் விருத்தி அடைந்த தெனலாம்.) (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் முதலிற் புராணப் பிரசங்கஞ் செய்தவரிவரே. இவருக்குப்பின் அப்பிரசங்கத்தை; அவர் மாணவர் சரவணமுத்துப் புலவரும், இவர்பின், இவர்க்கும் அவர்க்கும் மாணவராய ஆறுமுகநாவலரும், நாவலர்க்குப்பின் அவர் மாணவர் பொன்னம்பலபிள்ளையும் நடாத்தி வந்தனரென்ப.) இவர் நல்லூர்க் கந்தசுவாமியார்மீது மிகு பக்தி வாய்ந்தவர். அதனால் அவர்மீது நல்லைவெண்பா, நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி முதலிய பிரபந்தங்களும், நீராவிப்பிள்ளையார்மீது ஓர் கலிவெண்பாவும் பல தனிக் கவிகளும் செய்துள்ளார். தனிக்கவிகள் நல்லூரிலிருந்த தமது ஆபீசிலிருந்து கந்தசுவாமியைத் தரிசனஞ் செய்யச் செல்லும் அவ்வப்பொழுது வழியிலே பாடியன என்பர். மாவிட்டபுரம் சுப்பிரமணியக் கடவுண்மீதும் ஊஞ்சல் பதிகம் முதலியனவும், வேறும் பல தலங்கண்மேல் ஊஞ்சல் பதிகங்களும் பாடினரென்ப. (அவற்றுள் நல்லைவெண்பா, பாடங் கேட்டுப் படிப்போரால் பலவாகத் திரித்து எழுதப்பட்டு தன் சொரூபம் பலவாகத் திரிவுபட்டது எனினும், அவர் மாணவர் அம்பலவாணபண்டிதரால் பின்னளில் அது ஒருவாறு திருத்தி அச்சிடப்பட்டுள்ளது.) ஏனைய நூல்கள் இப்போது அகப்படமாட்டா.

இவருடைய பாடலின் சிறப்பு உணர்தற்காகச் சில காட்டுதும்:—

## நல்லை வெண்பா

கந்துகமுந், தானைவேற் காளையருங் கன்னியரும்
கந்துகமுந், திக்களிகூர், நல்லூரே—சந்திரமா
மாவைப் பிழந்தார் மகிழ்பூப்ப வீரையிலோர்
மாவைப் பிழந்தார் மனை.

கந்துகமுந்து ஆனைவேல் காளையர் – கட்டுத்தறி முரியும்படி மதத்தால் முற்பட்டுச் செல்லும் யானைப் படையையுடைய வேல்வீரர். உந்து - (காலால்) தள்ளுகின்ற எனினுமாம். கந்துகம்– குதிரையும் பந்தும். சந்திரமாம் மாவைப்பு–பெரிய பொன்னுலகம். சந்திரம்–பொன். வீரை–கடல். பிழத்தல்–பிளத்தல். ழகர ளகர ஒற்றுமை பற்றிப் பிழத்தல் என்றார்.

நத்தமூ ருங்கயத்தால் நன்கிளைகொள் பாடலத்தால்
சித்தச வேள்போலுந் திருநல்லை—முத்தின்
திருத்தணி மாமலையுந் திண்கோட்டிற் காட்டும்
திருத்தணிமா மலையான் சேர்வு.

நத்தம் – இருள் ; சங்கு. கயம் – யானை ; குளம். கிளை – கிள்ளை ; கொம்பு. பாடலம்–குதிரை ; பாதிரி மரம். முத்தின் திருந்தணி கைம்மா – முத்தினாற் செய்த திருந்திய அணியாகிய கிம்புரியை யுடைய யானை. கோடு–உச்சி. தணிகைமலை – செருத்தணிகைமலை. இவர் பாடிய நல்லைக் குறவஞ்சியிலும் ஒன்று காட்டுதும்:—

திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார்
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ரம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ராமாயின்
சருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க வம்மானை
தருவார்காண் சட்டிகுடம் சாறுவைக்க வம்மானை.

இருவாலைக் குயத்தியர்–இரண்டு வாலைப்பருவமுடைய மகளிர். குயம்–ஸ்தனம். சட்டி – ஒரு திதி. குடம் – கும்பமாதம். சாறு–திருவிழா. இங்கே இருவாலை என்னும் ஊரிலுள்ள குயத்தியரும், சட்டியும், குடமும், சாறும் தொனித்தல் காண்க. இவர் பாடிய தனிச்செய்யுளுள்ளும் ஒன்று காட்டுதும்:—

கொடிவளரு மணிமாடக் கோபுரஞ்சூழ் நல்லூரிற் குமர மூர்த்தி
அடியருளத் திருளகல அமரர்முக மலரவா அணிமா னீன்ற
கொடியினெடும் பிடியினெடும் குலவுமுடம் பிடியொடுங்கோ
[தண்ட மேந்தி
மிடியகல மயிலேறி விடியவந்த தினகரன்போல் மேவி னனே.

இச்செய்யுள் மிகவுஞ் சொற்சுவை பொருட்சுவை நிறைந்ததாய் விளங்குதல் காண்க. இவர் பாடிய ஊஞ்சலி லும் ஒருசெய்யுள் காட்டுதும்:—

கனகநவ ரத்நமணி மவுலி மின்னக்
கவின்கொணெற்றிச் சுட்டியிளங் கதிர்கள் காலப்
பனகமணிக் குண்டலங்கள் பகலை வெல்லப்
பணித்தரளத் தொடைநிலவின் பரப்பை யெள்ள
அனகவிடைக் கிரக்கியமே கலைக ளார்ப்ப
அடியவரை யஞ்சலெனச் சிலம்பு மார்ப்பத்
தினகரமண்டலமளவு மதில்சூழ் கோவைத்
தேவிதிருக் கண்ணகையே யாடி ரூஞ்சல்.

இன்னும் மானிப்பாயில் அச்சிடப்பட்ட தமிழ் அக ராதி தொகுத்தபோது இவரேமுதல்வராயிருந்து தொகுத் தனர் என்ப. இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உண்டு என்பர். மகன் பெயர் இராமலிங்கமுதலியார். இவர் தமிழ் நன்கு கற்றவர் என்றும் பிரபுத்துவமுடையவர் என்றும் ஆறுமுக நாவலருடைய முதற்பிரசங்கத்தில்அக்கிராசனாதி பதியாய் இருந்தவர் என்றும் கூறுவர். மகளுடைய மகன் கந்தப்பிள்ளை என்பவர். இவர் தமது மாதாமஹராகிய சேனாதிராயரிடம் இலக்கண இலக்கியமும் சமய சாஸ்திரங் களும் கற்றவர்; சிவநேசர்; தருமவான்; பிரபு; சாந்தகுண முடையவர் எனவும், தாமாகவும் சுன்னாகம் முருகேச பண் டிதர் வாயிலாகவும் தம் ஊரிலும் அயலூரிலும் உள்ள

மாணவர் பலர்க்குத் தமிழ் கற்பித்தவர் எனவும் முதியோர் சிலர் கூறுவர். [உடலுயிர் அமலமடைந்து அருள்வடிவாய் ஞானகாசத்திலமறைந்து சிவாங்கமாதலே உண்மைச் சைவமுத்தி என நிலைநாட்டிய "வித்தகம்" என்னும் பத்திரிகையின் ஆசிரியரும், கொழும்பு அரசினர் ஆசிரிய கல்லூரியிலும் வித்தியாநிலையத்திலும் தமிழ்ப் பண்டிதராயிருந்தவரும், கவித்துவம் வாய்ந்தவருமாகிய தென்கோவை ச. கந்தையபிள்ளையவர்கள் ஷை கந்தப்பிள்ளையவர்களுக்குத் தௌஹித்திரராவர்.] (தௌஹித்திரன்—மகளுக்கு மகன்.) இச் சேனாதிராய முதலியார் சிலகாலம் யாழ்ப்பாணம் பெரிய கோட்டில் நீதிபதியாயு மிருந்தன ரென்றுங் கூறுப. இவர்காலம் ஏறக்குறைய நூற்று முப்பது வருடங்களுக்கு முன்னும்.

## சந்திரசேகர பண்டிதர்

இவர் ஏறக்குறைய நூற்றைம்பத்துநான்கு வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்த ஆதிசைவப் பிராமண குலத்தவராகிய நாராயணபட்டர் என்பவருக்குப் புத்திரராகப் பிறந்தவர். இலக்கிய இலக்கணங்களிற் சிறந்த பண்டிதர். (பழையகவிகள்போலப் பாடுவதிற் சாமர்த்தியம் வாய்ந்தவர்.) (நல்லூர்க்கந்தசுவாமிமீது ஒரு கிள்ளைவிடுதூது பாடியிருக்கின்றார்.) அது, கருணைவாய் என்னுமூரில் இருந்தவரும் வடமொழி தென்மொழி என்னும் இருமொழியினும் புலமை படைத்தவருமாகிய ஸ்ரீ. கை. நமச்சிவாயதேசிகர் என்பவரால் சென்ற இரத்தாட்சி வருடத்து ஆனிமாதத்திலே அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அந்நூலின் சிறப்புப்பாயிரத்தினாலே அந்நூ லியற்றப்பட்ட ஆண்டு முதலியன அறியலாகும். ஆதலின் அதனை இங்கே தருகின்றாம்.

## சிறப்புப்பாயிரம்

### ஆசிரிய விருத்தம்

சீர்செறி சகவாண் டாயிரத் தெழுநூற்
றெட்டெனச் செறிந்திட விரவும்
பேர்பெற மருவும் பராபவ வருடம்
பிறங்குதை மதியிரு பத்தோ
டேர்தரு மொன்பான் றிகதிபொன் வார
மிசைத்திடுஞ் சோதிநா ளிதனிற்
சார்தரு நல்லூர் முருகவே ளருளாற்
றருங்கிளித் தூதுசொன் னதுவே.

### கட்டளைக் கலித்துறை

செந்நெற் பழனத் திருநல்லை வேன்முரு கேசருக்கு
வன்னப் பசுங்கிளித் தூதுரைத் தான்சது மாமறைதே
ரன்னத் தவனிகர் நாரா யணனரு ளாலுதித்தோன்
பன்னத் தருபுகழ்ச் சந்திர சேகர பண்டிதனே.

இனி, இவரது கவித்திறமுணர்தற்காக அந்நூலின் காப்புச் செய்யுளை இங்கே தருதும்:—

### வெண்பா

விந்தைசெறி நல்லூர் விரும்பியுறுங் கந்தன்பாற்
சுந்தரஞ்சேர் கிள்ளைவிடு தூதுக்குத் – தந்தவிசைச்
சீராம்ப லானனத்தான் சிந்திக்கு மோர்கோட்டுக்
காராம்ப லானனத்தான் காப்பு.

ஆம்பலான் – வேய்ங்குழலையுடைய விஷ்ணு. கார் ஆம்பல் - கரிய யானை.

# சுவாமிநாதர்

இவர் ஏறக்குறைய நூற்றிருபது வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்து மானிப்பாயிலே செல்வப் பெருமையோடு வாழ்ந்த வேளாண் குடியிலே அருணசலம்பிள்ளை யென்பவருக்குப் புத்திரராகப் பிறந்தவர். கொழும்பிலே வாழ்ந்து சலாபத்துறையிற் குளிக்கும் முத்துக்கள் முழுவதையும் தாமே யொருங்கு விலைக்கு வாங்கி வாணிகஞ் செய்தமையினாலே பிறதேயங்களினும் தம் பெயர் சென்ற முத்துச்சாமிப்பிள்ளை என்பவர் இவருக்குத் தம்பியாராவர். இலங்கைச் சட்ட நிரூபண சபையிலே அனேக ஆண்டுகளாகப் பிரதிநிதியாக இருந்த ஏலேலுசிங்க முதலியார் இவர்புத்திரர். இவர் இளம்பிராயத்திலே மானிப்பாய் வேரகப் பிள்ளையார் கோவிலிலே கந்தபுராணம் படித்துக்கொண்டிருந்த பொழுது இராகம் தவறுறப் படித்தமையினாலே அர்த்தம் சொல்லிக்கொண்டிருந்தவர் இவரைப் பழிக்க, அதனால் இவர் இந்தியாவிற்குப் போய் பல ஆண்டுகளாக சங்கீதம் பயின்று வந்தனரென்றும், இவர் காலத்திலே மானிப்பாயே சங்கீத வித்தையிற் சிறந்து விளங்கிய தென்றும், பெயர் படைத்த வாச்சியகாரரும் இவர் முன்னிலையில் வாச்சியங்களை இயம்புதற்கு அஞ்சுவரென்றும் முன்னோர் கூறுவர். சங்கீதம் பாடுவதிலன்றி, நாடகம் பாடுவதிலும் இவர் பெயர் படைத்து விளங்கினர். இவர் பாடிய நாடகங்கள் இராம நாடகம், தருமபுத்திர நாடகம் முதலியன. இவர் காலத்திலும் பிற்காலத்திலும் இவர் பாடிய நாடகங்களே நடிகர்களாற் படிக்கப்பட்டு வந்தன. இவர் குரல் கோகிலத்தின் குரல் போல மிக இனியது என்றும், அதனால் இவர் பாடுவதைக் கேட்கும்படி முதியோரும் சிறுவரும் விரும்பி வருவர் என்றும் சிலர் கூறுப. இவர் பாட்டின் திறமையறிதற்காக ஒரு செய்யுள் ஈண்டுத் தருதும் :—

ஆண்டுகொண் டவனிமுத லன்றிலங் கையிலுறையும்
அரியரா வணநிசிசரன்
அழகுசெறி சீதையைச் சிறைவைக்க ராமனு
யவதரித் திடுமாயவன்
தாண்டவனு மான்சென் றறிந்துவர் தேசொலத்
தொடுகடலை யணைகட்டியே
சுக்கிரிப ளெடுசேனை சூழ்ந்திட விலங்கையிற்
ரெருகுதியொடு போயடைந்து
வேண்டியம ருக்குவரு தம்பியும் பிள்ளைகளும்
வெகுமூல பலமுமழிய
விறலிரா வணன்மடிய நொடியிலே சிறைமீட்ட
வீரரா கவன்மருகனே
நீண்டவன் பிலையெனினு மாண்டுகொண் டிடுமடிமை
நீயருளெ னக்குதவுவாய்
நிகரில்தொண் டமனுற்றில் நிலவுசந் நிதிமேவும்
நிமலகுரு பரமுருகனே.

# சரவணமுத்துப் புலவர்

இவர் ஏறக்குறையத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னே நல்லூரி லிருந்த மனப்புலி முதலியாருக்கு இரண்டாம் புத்திரராவர். (வித்துவ சிரோமணியாகிய இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் பலகாலம் இலக்கிய இலக்கணங் கற்று வித்துவ சிரேட்டராய் விளங்கியவர்.) வேதாந்த சித்தாந்த நூல்களினுந் தெளிந்த அறிவுடையவர். தேசமெங்குங் கீர்த்திபெற்று விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்கள் இவரிடம் பலகாலங் கற்றவர். சம்பந்தப் புலவர், கார்த்திகேய உபாத்தியாயர், சிவசம்புப் புலவர் முதலியோரும் இவரிடங் கற்றவர்கள். இவர் வேதாந்த சுயஞ்சோதி, ஆத்துமபோதப் பிரகாசிகை என்னு நூல்களை இயற்றியுள்ளார். நீண்ட ஆயுளோடும் இன்றும் நின்று நிலவுகின்ற உதயதாரகைப் பத்திரிகை

யிலே களத்தூர் வேதகிரி முதலியாரோடும் வேறு புலவர்களோடும் வாதித்து, இலக்கிய இலக்கண சம்பந்தமாகப் பற்பல விஷயங்கள் எழுதியவர். அரசினர்பால் உத்தியோகம் பெற்றிருந்தவர். நெல்லை வேலவருலா என ஒரு பிரபந்தம் இயற்றியதன்றிப் பல தனிக் கவிகளுமியற்றினவர். இவரியற்றிய தனிக் கவிகளிலொன்றை ஈண்டுத் தருதும்:—

## ஆசிரிய விருத்தம்

சுத்திபெற லாம்புத்தி முத்திபெற லாம்பவுத்ர
சுகபுத்தி ராதி பெறலாம்
தொலையாத குன்மகய ரோகமுத லேய்களொரு
சொல்லிலே சுத்தி பெறலாம்
பத்திபெற லாங்குருடு கூன்செவிடு சப்பாணி
பரிசுத்த மாகை பெறலாம்
பயமேறு பூதம் பிரேதப் பசாசுகள்
பறந்தோட வெற்றி பெறலாம்
சித்திபெற லாஞ்சுத்த வித்தைபெற லாஞ்செயச்
சிற்சொருப மகிமை பெறலாம்
சிவயோக மாதிபல வகையோக சாதனச்
சிவபோக திர்ப்தி பெறலாம்
சத்திபெற லாஞ்சைவ தர்மலிங் கச்சாமி
சந்நிதி யடைந்து பணிமின்
சற்சங்க சகலசன சமயபரி பாலர்காள்
சத்தியஞ் சத்திய மிதே.

இது வேதாரணியத்துத் தருமலிங்க சுவாமிபேரிற் பாடியது.

## ஏகாம்பரப் புலவர்

இவர் யாழ்ப்பாணத்து உடுப்பிட்டியைச் சார்ந்த வல்லிபட்டித்துறையிலே பாதவ குலத்திற் பிறந்தவர். இவர் தந்தை தாய் பெயர் தெரியவில்லை. அக்காலத்திலே தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்கிய சேனாதிராய முதலியாரிடத்தும், திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரிடத்தும் இவர் பாடங் கேட்டவர் என்பர். (இவர் கந்தரந்தாதிக்கு ஒருரை எழுதியுள்ளார்.) பற்பல தனிக் கவிகளும் பாடினவர் என்ப. கவிகள் கிடைத்தில. சேனாதிராயர் காலமே இவர் காலம்.

## கார்த்திகேய ஐயர்

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்த வேங்கடாசல ஐயருக்குப் புத்திரர். இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் இலக்கியஇலக்கணங்கள்நன்குகற்றவர். தமிழிலுஞ் சமஸ்கிருதத்திலுமன்றி ஆங்கிலத்திலுஞ் சிறந்த அறிவு படைத்தவர். வேதாந்த சித்தாந்த நூல்களுந் தேர்ந்தவர். இவர் வண்ணார்பண்ணையிலே வயித்தீஸ்வர ஆலயத்திலும் பிறவிடங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரோடு பற்பல பிரசங்கங்கள் செய்தவர். இவர் காலமும் நாவலர் காலமும் ஒன்றாகும்.

## சம்பந்தப் புலவர்

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்த வேலாயுத முதலியாருக்குப் புத்திரர். ஆறுமுகநாவலருக்கு நண்பர். இவர் முன் சேனாதிராய முதலியாரிடத்தும் பின் சரவணமுத்துப் புலவரிடத்தும் இலக்கிய இலக்கணங்கள் கற்றவர். சமய நூல்களுந் தேர்ந்தவர். உடுப்பிட்டிச்

சிவசம்புப்புலவரும் புன்னாலைக்கட்டுவன் செந்திநாதை யர் முதலியோரும் இவர்க்கு மாணவர்கள். இவர் கதிர் காமசுவாமி பேரிற் பல கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

## கார்த்திகேயப்புலவர்

இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த காரைதீவிலே இருந்த முருகேசையர் என்பவருக்குப் புத்திரர். இவர் தமது தந்தையாரிடம் தமிழும் அவ்வூரிலிருந்த சுவாமி நாத தேசிகர் என்பவரிடம் சம்ஸ்கிருதமும் கற்றுவந்த னர். பின் அவ்வூரிலிருந்த சண்முக ஆசிரியரிடம் சென்று இலக்கிய இலக்கணங்கள் கற்றுவந்தனர். இவருக்கு இள மையிலேயே பாடும் வல்லமையுமுளதாயிற்று. தமது தந்தையார் பாடிய தன்னை யமகவந்தாதியின் குறையை இவரே பாடி நிரப்பினர். தந்தையார் பாடியன எழுபது செய்யுட்கள். ஒழிந்த முப்பதும் இவர் பாடியன. இவர் பாடிய செய்யுட்களுள் முதற் செய்யுளை ஈண்டுத் தரு தும்:—

"மணிக்கோ கனகத் தருநிதி யாரும் வணங்கிடமா
மணிக்கோ கனகத் தருமாக வன்பர்க்கு வைப்பவனீ
மணிக்கோ கனகத் தருவகை யோடருண் மைந்தநன்கார்
மணிக்கோ கனகத் தரும்புகழ்த் தென்றன்னை மன்னவனே.

அக்காலத்திலே நெல் மதிப்பின் பொருட்டும் வேறு முயற்சிகளின் பொருட்டும் இருபாலைச் சேனாதிராயமுத லியார் காரைதீவுக்குச் செல்வது வழக்கம். சென்றால் இவர் வீட்டிலே பதினைந்துநாள் வரையில் விடுதி விடு வதும் வழக்கம். அப்பொழுது இராக் காலங்களிலே தமக்குச் சந்தேகமானவற்றை முதலியாரிடம் கேட்டு இவர் தெளிந்துகொள்வர். இவரது கல்வி விருப்பத்தை யும் கூரிய புத்தியையும் கண்ட முதலியாரவர்கள் இவ ரைத் தம்மூருக் கழைத்துக்கொண்டுபோய் அங்கே பல

காலம் இருந்தி அரும்பெரும் இலக்கண இலக்கியங் களைக் கற்பித்து வைத்தனர். அதனால் இவரும் பெரும் புலவராய்விளங்கினர். பின் இவர் தம்மூரிலே ஒருவித்தியா சாலை தாபித்துத் தாமே ஆசிரியராகவிருந்து கற்பித்துப் பலரைத் தமிழிற் றேர்ச்சி பெறச் செய்தனர். இவருடைய புதல்வர்களும் இவரிடமே கற்றார்கள். (இவர்களுள் சிவ சிதம்பரஐயர் கந்தபுராணத்து மகேந்திர காண்டத்துக் குச் சிறப்பு வாய்ந்த ஒருரை எழுதியுள்ளார்.)

இன்னும் இவர் சண்டிலிப்பாயிலிருந்த கார்த்திகே யக் குருக்களிடம் சுத்தவாதுளம் மிருகேந்திரம் முதலிய ஆகமங்களைக் கேட்டு அவ்வாகம நூலறிவினுஞ் சிறந்த வராய் விளங்கினர்.

மேலும் இவர் சிதம்பர தலஞ் சென்று அங்கே சில காலம் வசித்தபொழுது திருத்தில்லைப் பல்சந்தமாலை என்று ஒரு பிரபந்தம் பாடினார். அன்றியும் யாழ்ப்பா ணத்திலே நடந்த 'இலங்கை நேசன்', 'உதயபானு', 'விஞ் ஞானவர்த்தனி' என்னும் பத்திரிகைகண்மீது தனித் தனி சிறப்புக் கவிகளும் பாடியுள்ளார். அவற்றுள், 'உதயபானு'ப் பத்திரிகை மேற் பாடிய சிறப்புக் கவியை ஈண்டுத் தருதும் :—

தாரகைகண் மறையத்துண் மதிசாய்ந் தோடத்
தடுத்தெதிர்வஞ் சரையழித்துத் தங்கு மந்த
காரவிரு ளினையோட்டி வெளிய தாக்கிச்
சந்தேக மின்றியுறு பொருளை யாரு
மோரவே தெரிந்துண்மை யினையு ணர்த்தி
யுலகமெங்குஞ் சென்றெவரு முவந்து போற்றச்
சேருதய பானுவினை யவனி மீதிற்
றிகழுதய பானுவெனச் செப்ப லாமே.

'விஞ்ஞானவர்த்தனி' என்னும் பத்திரிகைமேற் பாடிய சிறப்புக் கவியையும் ஈண்டுத் தருதும் :—

மயக்கந்தீ ராகமநூல் யாவும் பார்த்து
மனமதனைப் புலன்வழிசெல் லாமற் பேர்த்துத்
தயக்கரிய மார்க்கவிரு டன்னைத் தீர்த்துச்
சற்சனருக் கிடுக்கணுறு தருளைக் கூர்த்துப்
பயக்கவரு மரன்புகழைச் சொல்லி யார்த்துப்
பாங்கான முத்திவழி யதனிற் சேர்த்து
வியக்கவுறு மெய்ஞ்ஞானி தனைப்போற் பாரின்
மெய்ஞ்ஞான வர்த்தினியு மேவிற் றன்றே.

ஒருமுறை இவரும் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுது பிள்ளையவர்கள் இவரின் கவிபாடும் வன்மையைச் சோதிக்க விரும்பிப்போலும், 'கற்றைச் சடையுடைத் தேவே கயிலைக் கறைக் கண்டனே' என்னும் இறுதியடியைக் கொடுத்து முன் மூன்றடியையும் பாடி நிரப்புமாறு சொற்றனர். இவரும் அதற்குடன்பட்டு, முன் மூன்றடிகளையும் இயற்றி அக் கலித்துறையை நிரப்பினர். அக் கலித்துறைச் செய்யுள் வருமாறு :—

"எற்றைக்கு முன்னடி பேணும் வரமே யெனக்கருள்வை
பற்றைக் களைந்திடு ஞானிகள் போற்றும் பழம்பொருளே
பெற்ற முகைத்திடு மங்கையொர் பங்க பிறையுலவுங்
கற்றைச் சடையுடைத் தேவே கயிலைக் கறைக்கண்டனே."

என்பது.

இத்தகைய புலவர் தேகவியோகமடைந்தபோது இவர் தேகவியோகத்தைக் குறித்துச் சி. வை. தாமோதரம்பிள்ளையும் திருமயிலை வித்துவான், சண்முகம்பிள்ளை முதலாயினோரும் பல கவிகள் பாடியுள்ளார்கள்.

# முத்துக்குமார கவிராசர்

இவர் ஏறக்குறைய நூற்றுமுப்பது ஆண்டுகளுக்கு முன் உடுவிற்பதியிலே, வேளாளர் குலத்திலே சந்திர சேகர மாப்பாணர் மரபிலே அம்பலவாணபிள்ளை என்ப வருக்குப் புதல்வராகப் பிறந்தார். சுன்னுகம் அ. குமார சுவாமிப் புலவர் இவருக்குப் பௌத்திரர்.

இவர் கவிபாடும் வன்மையில் மிகச் சிறந்தவர். இவர் கவிகளைக் கேட்டுணர்ந்த கற்ருேர் பலரும் இவ ரைக் கவிராசர் என்று வழங்கி வந்தார்கள். அங்கில திரா விட பண்டிதராய், அதிகார புருடராய்ப் பிரசித்திபெற்று விளங்கிய, சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்குத் தமிழாசிரிய ரிவரே. பிள்ளையவர்கள் தமது நூற்பதிப் புரைகள் எல்லாவற்றிலும் குருவணக்கமாக இவருக்குக் கூறியிருக்குந் துதியே அதற்குச் சான்ருகும். அவற்று ளொரு துதிச் செய்யுளை ஈண்டுத் தருதும்:—

## இலக்கண விளக்கப் பதிப்புரை

"திங்கள் தங்கிய செஞ்சடை முடியினன் றிருத்தாட்
பங்கயங் கயிலாய நாதனை முனிப் பழிச்சிச்
சங்க மங்களத் தமிழ்முத்துக் குமாரன்றன் மலர்ப்பா
தங்கள் வங்கமாத் தமிழ்க் கடலிடைப் படிகுவனே."

இவராற் செய்யுள் வடிவாகச் செய்யப்பட்ட நூல் களும் பலவுள. அவற்றுள் யேசுமதபரிகாரம், ஞானக் கும்மி யென்னு மிரண்டுமச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள் ஞானக்கும்மியைக் கண்டித்து அஞ்ஞானக் கும்மியென வொன்றைப் பிற்காலக் கிறிஸ்தவரொருவரியற்றி வெளி யிட்டனர். அதைக் கண்டித்துச் சிலம்புநாதபிள்ளை யென் பவர் 'அஞ்ஞானக் கும்மி மறுப்பு' என ஒரு நூலியற்றி வெளியிட்டனர்.

கவிராசர் அவர்களாற் பாடப்பட்ட தனிப் பாடல்கள் எண்ணிறந்தவென்றும், யாவரும் விரும்பிக் கேட்டுக் கேட்டுப் பாடம்பண்ணிக்கொள்வர் என்றும் முதியோர் சிலர் கூறுவர். ஒன்றேனுமேட்டிலெழுதப்படவில்லை. அக் கவிகளை இவரிடங் கேட்டுப் பாடஞ் செய்திருந்த முதியோர் சிலர்பாற் கேட்டுச் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரவர்கள் எழுதி, 'முத்தக பஞ்ச விஞ்சதி' என்னும் பேரோடு புத்தக ரூபமாக அச்சிட்டனர். அப்புத்தகம் இருபத்தைந்து செய்யுள்களையுடையது. செய்யுளிற் சில தில்லை நடராசமூர்த்திமேற் பாடப்பட்டன. சில மாவிட்டபுரம் சுப்பிரமணியசுவாமி மேலன. சில நல்லூர்ச் சுப்பிரமணியசுவாமி மேலன. விநோதமான அச் செய்யுள்களுள் ஒன்றைத் தருதும்:—

"மல்லாக மாதகலான் மருகன்சுன் னாகத்தான்
மகன்பா வாணர்
சொல்லாச்சீ ரீவினையான் துன்னாலை யானத்தான்
சுரும்ப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தானைச்
சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத் திடைப்பவனி
வரக்கண் டேனே."

இது மாவிட்டபுரக் கந்தசுவாமி பவனி வருதலைக் கண்ணுற்றபோது கூறிய ஆசிரிய விருத்தம். இதன்கண் நாமாந்தரிதையென்னும் பிரகேளிகை அமைக்கப்பட்டிருக்கிறது. (பிரகேளிகையாவது, கருதிய பொருளை ஆழ்ந்து கிடக்குமாறு மறைத்துவைத்து வெளிப்படையிலே வேறொன்றாகத் தோன்றும்படி விநோதமுறச் செய்யப்படுஞ் செய்யுள்.) (நாமாந்தரிதையாவது கருதிய பொருளை வேறு நாமங்களிலே மறைத்துவைப்பது.) மல்லாகம், மாதகல், சுன்னாகம், ஈவினை, துன்னாலை, சில்லாலை, கொடிகாமம் என்னும் ஊர்ப்பெயர்கள் ஏழும்

கருதிய பொருளை மறைத்திருக்கும் நாமாந்தரங்கள். இங்கே மறைத்துவைக்கப்பட்ட பொருளையுங் கூறுதும் :-

மல்லாக மாதகலான் மருகன் – வலிய மார்பிலே ஸ்ரீ தேவியகலாதிருத்தலையுடைய நாராயணக் கடவுளுக்கு மருகன். சுன்னாகத்தான்–கைலைமலைவாசராகிய சிவன். சுல் – வெள்ளி, நாகம் – மலை. சீரீவிளையான் – செல்வங்கொடுக்குஞ் செயலுடையவன், துன்னாலையானத்தான் – மன்மதன் மைத்துனன், சில்லால் ஐ இருள்வென்ற – தகட்டணியால் வியக்கப்படுமிருளையும் வென்ற, குறக்கொடிகாமத்தான் – வள்ளி நாயகியின்மேல் விருப்புடையவன்.

சேதுபுராணக் கதையொன்று கொண்டு சகத்திராவீக நாடகம் என்னும் ஒரு நாடகத்தையும் இக் கவிராசர் பாடினரென அறிகின்றேம்.

## சிதம்பரப்பிள்ளை

### ( உவில்லியம் நெவின்ஸ் )

இவர் யாழ்ப்பாணத்திலே சங்குவேலி யென்னும் ஊரிலே வேளாண் குலத்திலே முத்துக்குமாரபிள்ளை என்பவருக்குப் புத்திரராகப் பிறந்தவர். இவர் சாலிவாகன சகாப்தம் ௲அ௱௯௰-ம் ஆண்டுவரையில் இருந்தவர். இவர் இந்துக்கல்லூரியிற் பல காலம் பிரதமாசிரியராயிருந்தவரும், இலங்கை அரசாங்கசபை அங்கத்தினரில் ஒருவராயிருந்தவருமாகிய ஸ்ரீமான் நெவின்ஸ் செல்வத்துரைப்பிள்ளை அவர்களுக்குத் தந்தையார். வடமாகாண வித்தியாதரிசியாயிருந்தவரும், கொழும்பு வித்தியாகந்தோரில் இப்பொழுது உபவித்தியாதிகாரியாயிருப்பவருமாகிய ஸ்ரீமான் உவாட்சன்துரை அவர்களுக்குத் தாதைதன்றாதை ( பாட்டன் ) யாவர். இவர் இளமையிலே ஆங்கிலங் கற்று, அதிலுள்ள தர்க்கநூலிலும்,

கணித நூலிலும் சிறந்த அறிவுபடைத்தவராய் விளங்கினர். தமிழிலும் இலக்கணஇலக்கியங்கள் கற்றுச் சிறந்த புலமையடைந்தவர். (இயற்கையிலேயே குசையினுங் கூரிய நுண்மதி படைத்தவர்.) யாழ்ப்பாணக் கல்லூரி முதலிய சில வித்தியாசாலைகளில் ஆசிரியராகவிருந்து கற்பித்தவர். ஆங்கிலத்திலும், வடமொழி தென்மொழிகளிலும் அரிதுணர் சொற்கள் பல அறிந்தவர். ஆங்கிலமொழியைத் தமிழிற் பெயர்க்குங்கால், அவற்றிற்குப் பொருளாலே நன்கியையும் தமிழ்ச்சொற்களையும், வடசொற்களையுந் தெரிந்தெடுத்துச் சேர்த்து வாக்கியங்களைத் தொடுக்கும் வன்மையுடையவர். ஆங்கில மொழிகளுக்குச் சமமான தமிழ்மொழிகளை ஆராய்ந்தெடுத்துக் கற்பவர் நன்குணருமாறு ஆங்கிலமுந் தமிழுமாக அகராதியும் ஒன்று செய்தவர். வின்சிலோ அகராதி எழுதுங்கால், அதற்குந் துணைசெய்தவர். 'இலங்கை நேசன்' முதலிய பத்திரிகைகளில் பல அரிய விஷயங்கள் எழுதினவர்.

பாடசாலைக் கணிதம் என்னும் விஷயத்திலே ஒன்பது என்னும் சொல் சங்கியான முறைக்கு மாறாய் நிற்றலால், ஒன்பது என்பதற்குச் சமமான பொருளுடைய தொண்டு என்பதை ஒன்பது நின்ற இடத்திலே வைத்தும், பின்னும் ஒன்பது என்பது வரும் பத்தொன்பது, இருபத்தொன்பது முதலியவைகளைப் பதின்தொண்டு, இருபதின்தொண்டு, முதலியனவாகக் கொண்டும், தொண்ணூறு என்பது நிற்குமிடத்திலே, எழுபது எண்பது என்பனபோலப் பத்து என்பதன் விகாரமாகிய பது என்பது பின்னே தோன்ற தொண்பது என்பதை வைத்தும், தொள்ளாயிரம் என்பது நிற்குமிடத்திலே எழுநூறு எண்ணூறு போல, நூறு என்பது பின்னே தோன்ற தொண்ணூறு என்பதை வைத்தும் முடித்தலே பொருத்தமெனவும் எழுதினவர்.

கற்பவர் பொருட்டுப், பாரதம் இராமாயணம் முதலிய இலக்கியங்களிலிருந்து சிறந்த சில கவிகளைத் திரட்டி இலக்கிய சங்கிரகம் என ஒரு நூலையும், ஆங்கிலத்திலுள்ள தர்க்கவிதிகள் சிலவற்றைத் தமிழிற் பெயர்த்துப் பாட்டும் உரையுமாக நியாய இலக்கணம் என ஒரு நூலும் இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்தினவர். நியாய இலக்கண நூலின் இறுதியிலே சித்தியார் கூறும் அளவைகளையும் சேர்த்து விளக்கினவர். இவையன்றி இலக்கணவிதிகள் சிலவற்றைத் திரட்டித் தமிழ் வியாகரணம் என ஒரு நூலும் எழுதினவர். இந் நூலின் மூன்றும் பருவமாகிய வசன இலக்கணம் வாக்கியங்களை எழுதுவோர்க்குப் பெரிதும் பயன் தருவதாகும். இதில், முடிப்பு என்னும் பகுதியில் சில பதங்களைப் பிரித்துக் கூறிய தாதுக்களை நோக்குமிடத்து, இவருக்குப் பிற்காலத்திலுள்ளவர் சில பதங்களைப் பிரித்துத் தாதுகாட்டி, நூல்கள் எழுதுவதற்கு வழிகாட்டினவர் இவரே என்று சொல்லலாம். இவர் கவியியற்றும் சாமார்த்தியமுமுள்ளவர். அதனை உணரும் பொருட்டு அவரியற்றிய நியாய இலக்கண நூலிலுள்ள கவிகளுள் ஒன்றை இங்கே தருதும்:—

"உலகம் புகழு நியாய லக்கணம் யுத்தியதன்
கலைவித்தை யென்ப நியாய நடையினுக் காதாரமாய்
உலவுமி லக்கண மேதெளி யுங்கலை வித்தையென்ப
தலமின்று புந்தி யனுமிக்க வேவிதி யாய்ந்திடுமே."

இவர் பல தனி நிலைக் கவிகளுஞ் செய்தவர்.

## அம்பலவாணபண்டிதர்

இவர் ஏறக்குறைய கஉ௫-வருடங்களுக்கு முன்னே கோப்பாய் என்னும் ஊரிலே அருளம்பலமுதலியாருக்குப் புதல்வராகப் பிறந்தவர். சேனாதிராசமுதலியாரிடம் தமிழிற் பல நூலுங் கற்றவர். பாரதம், இராமாயணம்,

இரகுவம்சம் முதலிய பெருங் காப்பியங்களிலும் கோவை அந்தாதி உலா முதலிய பலவகைச் சிறு காப்பியங்களி லும் பயிற்சியுடையவர். காவிய சாத்திர விநோதத்தாற் பெரிதுங் காலங் கழித்தவர். சேனாதிராசமுதலியார் பாடிய நல்லைவெண்பா, நீராவிக்கலிவெண்பா என்பவைகளைப் பரி சோதித்து அச்சிட்டவர். இவருடைய கல்விப்பெருமை, செல்வப்பெருமை, வாக்குவன்மை முதலியவைகளை இவர் மீது சி. வை. தாமோதரம்பிள்ளை பாடிய சரமகவிகள் விளக்கும். அவற்றுள் ஒரு செய்யுளைத் தருதும்:—

தெல்லி நகரந் திருவிழந்த தோதமிழ்மா
தில்லந் தனையின் றிழந்தனளோ—சொல்லரிய
வித்தார வாய்மை விறலம் பலவாணன்
செத்தானென் றூரோ சிவா.

இவருடைய மரபில் வந்தவர்கள் இன்றும் சைவ சமய ஒழுக்கமும் தெய்வபக்தியு முடையராய் வாழு கின்றனர்.

## பீதாம்பரப் புலவர்

இவர் ஏறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன்னே நீர்வேலியிலே வேளாண்குலத்திற் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் சண்முகம்பிள்ளை. அவர் ஊர் மானிப்பாய். இவர் தாயார் ஊரே நீர்வேலி. இவர் தெல்லிப்பழையிலே அமெரிக்க மிஷனால் தாபிக்கப்பட்ட ஆங்கில வித்தியாசாலையிலே சிறிது காலம் ஆங்கிலம் கற்றனர். பின் அதனை விடுத்து இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் சென்று தமிழ் இலக்கண இலக்கியங் களைக் கற்றனர். கற்று அவற்றில் மிகச் சாமர்த்திய முடையராயினமையன்றிப் பாடுதலிலும் மிகச் சாமர்த்திய

முடையராயினர். இவர் பாடிய பிரபந்தங்கள் மறைசைக் கலம்பகம், மறைசைத் திருப்புகழ், நீர்வை வெண்பா, வல்லிபுரநாதர் பதிகம் முதலியனவாம். இவர் பாடற் றிறமறிய மறைசைக் கலம்பகத்திலும், வல்லிபுரநாதர் பதிகத்திலும் ஒவ்வோர் செய்யுள் முறையே தருதும் :—

## மறைசைக் கலம்பகம்

மேவுமலை மானை விழைவோ டிடம்வைத்து
வாவுமலை மானைமுடி வைத்தவா—காவகமேல்
வந்துவழங் கும்மறைசை வானவா வாழ்த்தெனக்கு
வந்துவழங் குன்றூண் மலர்.

மலைமான் – உமாதேவி, வாவும் அலைமான் – கங்கை. வந்து – காற்று. மறைசை – வேதாரணியம்.

## வல்லிபுரநாதர் பதிகம்

தேமேவு மாலயன் றேடியுங் காணாத
சிற்பரற் குரியமலையைத்
தேரா தகந்தைகொடு பாரோ டெடுத்திடுஞ்
செப்பரிய திறனிருதனைப்
பூமேவு சுராசுரர் பொற்பொடு துதிக்கவே
பூவைகுல திலகனாகிப்
போரகத் திருபது சிரங்களு முருண்டிடப்
பொருதபுய பலராமனே
கார்மே வரங்கம் பொருந்துகா குத்தனே
காமனைப் பெற்றகண்ணா
காசினி விசும்பங்கி கமலமா லானவா
கம்பேறு கையினானே
மாமேவு முல்லைசெறி மார்பனே மாயனே
மகிழ்வினுட னென்னையாள்வாய்
வல்லிபுர நகர்வாச வல்லிநிக ரிடைவனச
வல்லிமகிழ் நேயமாலே.

# ஆறுமுக நாவலர்

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே கார்காத்த வேளாள வருணத்திலே பாண்டி மழவர் குடியிலே ஞானப்பிரகாசசுவாமி மரபிலே சாலிவாகன சகாப்தம் கஎசரு-க்குச் சமமான சித்திரபானு வருஷம் மார்கழி மாதம் ரு-ந் திகதி புதன்கிழமை இரவு சிங்க லக்கினத்திலே பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை. தாயார் பெயர் சிவகாமிஅம்மை. இவர் தொடக்கத்திலே நல்லூரிலிருந்த சுப்பிரமணியபிள்ளை என்பவரிடத்திலே தமிழ் நெடுங்கணக்குப் பயின்று பின் அவரிடத்தில் மூதுரை முதலிய நீதி நூல்களும் நிகண்டு முதலிய கருவி நூல்களும் கற்றுவந்தனர். கற்றுவருங் காலத்தில் இவரது ஞாபக சக்தியையும் கல்வித்திறமையையுங் கண்ட இவருடைய தமையன்மார், இவரை அக்காலத்து வித்துவ சிரோமணியாய் விளங்கிய இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் இலக்கிய இலக்கணங்களைக் கற்கும்படி அனுப்பினார்கள். இவர் அவரிடம் சென்று இலக்கிய இலக்கணங்களை முறையாகக் கற்று வந்தனர். அவருக்குப் பின் அவர் மாணவர் நல்லூர் சரவணமுத்துப் புலவரிடம் கற்றனர். இவருடைய தமிழ்ப் புலமையைக் கண்டு மகிழ்ந்த தமையன்மார் இவருக்கு ஆங்கிலப் புலமையையும் அடைவிக்கும்படி கருதி இவரைப் "பீற்றர் பார்சிவல்" என்னும் பாதிரியாருடைய ஆங்கில வித்தியாசாலைக்கு அனுப்பினார்கள். இவர் அங்கே போய் ஆங்கிலங் கற்று அதினுஞ் சிறந்த புலமை அடைந்தனர். இவருடைய இருபாஷைப் புலமையையுங் கண்ட பாதிரியார் இவரை அவ்வித்தியாசாலையிலே இருமொழியையுங் கற்பித்தற்குரிய ஓர் ஆசிரியராக்கினர். ஆசிரியராகிய இவரும் அங்கே பாதிரியார்

விரும்பியவாறு இருமொழியையும் கற்பித்து வந்தனர். வரும்போது இவர் ஆங்கிலத்திலுள்ள விஷயங்களை மொழிபெயர்த்துத் தமிழில் உரைநடையாக எழுதுவதில் வல்லவரென்பதையறிந்த பாதிரியார் இவரை ஆங்கிலத்திலுள்ள 'பைபிளைத்' தமிழில் மொழிபெயர்த்துத் தரும்படி வேண்டினர். இவரும் அதற்கு உடன்பட்டு அதனை மொழிபெயர்த்து நன்றான செந்தமிழில் உரை நடையில் எழுதிக் கொடுத்தனர். இவர் பைபிளை மொழிபெயர்த்த காலத்திலே சென்னையிலும் சிலர் அதனை மொழிபெயர்த்தனர். அவற்றினும் இவர் மொழிபெயர்ப்பே சிறந்ததென்று மதிக்கப்பட்டது. பாதிரியாரும் இவர் மொழிபெயர்ப்பையே அச்சிட்டு எங்கும் பரப்பினர். அக்காலந் தொடங்கி உரைநடை எழுதுவதில் இவருக்கு ஒப்பவர் இல்லை என்னும் பெயர் எங்கும் பரவலாயிற்று. இவர் பைபிளை மொழிபெயர்த்த காலத்தில் அதில் நன்கு பயின்றிருந்த உணர்ச்சியே, பின்னர் இவர் கிறீஸ்துமத கண்டனஞ் செய்வதற்கும் எழுதுவதற்கும் உதவியாயிற்றுப்போலும். தமிழிலும் ஆங்கிலத்திலுமன்றி சமஸ்கிருதத்திலும் இவருக்கு அதிகம் பயிற்சி உண்டு.

இவர் பீற்றர் பார்சிவல் பாதிரியாருடைய ஆங்கில வித்தியாசாலையிலே படிப்பித்து வருங் காலத்திலே தமிழ் மொழியையும் சைவசமயத்தையும் வளர்க்க விரும்பிச் சில பிள்ளைகளைச் சேர்த்து அவர்களுக்குக் கருவி நூல்களையும் சமய நூல்களையும் பிற்பகலிலும் இரவிலும் கிரமமாகக் கற்பித்து வந்தனர். அப்போது இவரிடம் படித்தவர்கள் சதாசிவப்பிள்ளை, நடராசையர், விசுவநாதையர், சுவாமிநாதையர், ஆறுமுகப்பிள்ளை, கந்தசுவாமிப்பிள்ளை, ஆறுமுகச்செட்டியார் முதலாயினோர். இவர்களுள் சதாசிவப்பிள்ளை, நடராசையர், ஆறுமுகப்பிள்ளை யென்

பவர்கள் சிறந்த வித்வத்தன்மை அடைந்தவர்களாய் விளங்கினர். இவர்களுள்ளும் சதாசிவப்பிள்ளையே இவருடைய தருமங்களைப் பரிபாலித்து வந்தவர்.

இவர்களுக்குப் பின் இவரிடம் கற்றவர்கள் வித்துவ சிரோமணி ச. பொன்னம்பலபிள்ளையும், மா. வைத்திய லிங்கபிள்ளையும் முதலாயினோர். இவர்களுள் ச. பொன்னம்பலபிள்ளை இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள அறிஞர்களால் மதிக்கப்பட்ட பிரபல வித்துவானாய் விளங்கினர். மற்றை வைத்தியலிங்கபிள்ளை என்பவர் இவராற் ருபிக்கப்பட்ட வண்ணார்பண்ணை வித்தியாசாலையிலே தலைமை உபாத்தியாயராய் நீண்டகாலமாக இருந்து படிப்பித்து வந்தனர்.

இவர்களுக்குப் பின் இவரிடம் கற்றவர்கள் தர்க்க குடாரதாலுதாரி வை. திருஞானசம்பந்தபிள்ளையும், சிதம்பரத்திலுள்ள இவருடைய சைவப்பிரகாச வித்தியாசாலையிலே உபாத்தியாயராயிருந்த ச. பொன்னம்பலபிள்ளையும், வை. விசுவநாதபிள்ளையும், வண்ணார்பண்ணையிலுள்ள இவருடைய சைவப்பிரகாச வித்தியாசாலைக் கதிபராயிருந்து இற்றைக்குச்சிலமாதங்களுக்குமுன் தேகவியோகமடைந்த, த. கைலாசபிள்ளையும் முதலாயினோர். இவர்களும் இவரிடம் படித்துச் சிறந்த வித்துவான்களாயினர். இவர் கற்பிக்கத் தொடங்கிய காலத்திலேயே, பாதிரிமாருடைய முயற்சியினாலே யாழ்ப்பாணத்திலே கிறீஸ்து மதம் வளர்ச்சி அடைவதையும் சைவமதம் குன்றுவதையும் கண்டு பொறாதவராய் சைவ மதத்தை விருத்திசெய்ய விரும்பிச் சைவ சாஸ்திரங்களைத் தேடிக் கற்றுச் சைவப் பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினர். இவர் முதலிற் பிரசங்கஞ் செய்யத் தொடங்கியது வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் வசந்த மண்டபத்திலேயாகும். அங்கே

பிரசங்கஞ் செய்து வருவதற்கு நல்லூர் வேங்கடாசல ஐயர் குமாரர் கார்த்திகேச ஐயரையும் ஒருவராக நிய மித்துத் தாமொருமுறையும் அவரொருமுறையுமாகப் பிரசங்கஞ் செய்துவந்தனர். இவர் பிரசங்கத்தைக் கேட்க விரும்பி யாழ்ப்பாணத்திலுள்ள பற்பல ஊர்களினின்றும் அறிஞர்கள் வருவார்கள். அவர்களுட் சிலர் இவரை அழைத்துக்கொண்டுபோய் தம்மூர்களிலும் சைவ மத விருத்தியின்பொருட்டுப் பிரசங்கஞ் செய்வித்தார்கள். அப் பிரசங்கங்களாலும் வண்ணார்பண்ணையிற் செய்துவந்த பிர சங்கங்களாலும் சைவமதம் மேலோங்கி வளர்வதாயிற்று. அதனால் இவர் புகழும் எங்கும் பரவலாயிற்று. கிறீஸ்து மதப் பிரவேசஞ் செய்ய விரும்பிய அநேகர் இவர் பிரசங் கங்களைக் கேட்டு அதனை ஒழித்தனரென்றால், இவர் பிரசங்க வன்மையும் நன்மையும் எத்துணையவென்பதை நாம் சொல்லவும் வேண்டுமா? யாழ்ப்பாணத்திலே பாதிரி மாரால் சைவத்துக்கு நேர்ந்த கேடுகள் பலவற்றையும் நீக்கிச் சைவத்தை யாழ்ப்பாணத்தில் நிலைபெறச்செய்தவர் இவரென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இவர் பிறந் திலரேல் யாழ்ப்பாண முழுவதும் கிறீஸ்துமதமே பரவு மென்பது நிச்சயம்.

இவர் தமது பிரசங்கத்தால் சைவ சமயத்தை விருத்தி செய்துவரும்போது, தமிழ்க் கல்வியையும் விருத்திசெய்ய விரும்பி, வண்ணார்பண்ணையிலே கலி யப்தம் சகூ௫௦-க்குச் சமானமான கீலக வருஷம் ஆவணி மாதம் ௫-ந் திகதியில் சைவப்பிரகாச வித்தியா சாலை என்னும் பெயரோடு ஒரு வித்தியாசாலையைத் தாபித்துத் தாமும் அதில் ஓர் ஆசிரியராகவிருந்து இலக் கிய இலக்கணங்களையும் சமய நூல்களையும் கற்பித்து வந்தனர். அக்காலத்து இவரிடம் படித்தவர்கள் மேற் காட்டியவர்களுள் :— திருஞானசம்பந்தபிள்ளை, கைலாச

பிள்ளை முதலாயினோராவர். இவ் வித்தியாசாலையைத் தாபித்த பின்பு சிதம்பரத்திலும் ஓர் வித்தியாசாலையைத் தாபித்தனர். இவ்விரண்டும் இப்போதும் நன்கு நடை பெற்று வருகின்றன.

வண்ணார்பண்ணையிலே வித்தியாசாலையைத் தாபித்த பின்னர்த் தம்மால் புதிதாக இயற்றப்படுவனவும் திருத் தப்படுவனவுமாகிய புஸ்தகங்களையும் தம்மால் எழுதப் படும் துண்டுப் பத்திரிகைகளையும் அச்சிட்டு வெளிப் படுத்தும்படி ஓர் அச்சியந்திரசாலையையும் தாபித்தனர். அவ் வச்சியந்திரம் தமது வேலைக்குப் போதாமையினாலே சிலவாண்டுகளின்பின் அதனை விற்றுவிட்டுச் சென்னை யிலே இப்போதும் நடந்துவருகின்ற அச்சியந்திரசாலை யைத் தாபித்தனர்.

இவரால் புதிதாக இயற்றப்பட்ட நூல்களாவன :— முதற் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம், முதற் சைவ வினுவிடை, இரண்டாம் சைவ வினுவிடை, இலக்கண வினுவிடை, இலக்கணச் சுருக்கம், பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சிதம்பர மான்மியம், கோயிற்புராணவுரை, சைவசமய நெறியுரை, நன்னூற் காண்டிகையுரை முதலாயின.

இவரால் திருத்தப்பட்ட நூல்களாவன :- கந்தபுரா ணம், பெரியபுராணம், சேதுபுராணம், திருக்குறள் பரி மேலழகருரை, திருக்கோவையுரை, தொல்காப்பியம் சேனு வரையருரை, இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, பிரயோகவிவேகம், தருக்கசங்கிரகவுரை, நன்னூல் விருத்தியுரை முதலாயின. இன்னும் கிறிஸ்து மத கண்டனங்களும் பிறவும் இவரால் எழுதப்பட் டுள்ளன.

இவற்றுள் திருக்குறள் பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக்கோவையுரை, தருக்கசங்கிரகவுரை முதலாயின இராமநாதபுரம் ஸ்ரீமாந். பொன்னுசாமித் தேவரவர்கள் விரும்பியவாறு அவர் உதவிய பொருள் கொண்டு இவராற் பதிப்பிக்கப்பட்டன. இந்நூல்களுக்கு இவர் நண்பராய் விளங்கிய திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையும் பிறரும் சிறப்புக் கவிகள் அளித்துள்ளார்கள். அக்கவிகளுள் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இவரைப் புகழ்ந்து மிகப் பாராட்டிக் கூறிய சில கவிகளை இங்கே காட்டுதும்:—

" மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமு மிலக்கியமும்
வரம்பு கண்டோன்
பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன் சிவாகமநூற்
பரவை மூழ்கி
உன்னுமனு பூதியெனும் விலைவரம்பி லாமணிகை
யுறக்கொண் டுள்ளான்
இன்னுநய குணத்தினுய் சைவமெனும் பயிர்வளர்க்கு
மெழிலி போல்வான்."

" நீடுபுகழ்த் திருக்கேதீச் சரந்திருக்கோ ணுசலமிந்
நிலவா நின்ற
நாடுபுகழ்த் தலம்பொலியாழ்ப் பாணத்து நல்லூர்வாழ்
நகராக் கொண்டோன்
தேடுபுக ழுருவமைந்த கந்தவே டவத்துதித்த
செல்வன் யாரும்
பாடுபுக ழாறுமுக நாவலனவ் வாறச்சிற்
பதிப்பித் தானே"

இவராற் பரிசோதிக்கப்பட்ட சேனுவரையருரை சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி முதலாயின அக்காலத்துத் திருவாவடுதுறை யாதீனத்துச் சந்நிதானமாயிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் விரும்பியவாறு இவராற் பதிப்பிக்கப் பட்டன.

பெரும்பாலும் பிழையின்றிப் புத்தகங்களை அச்சிடு வதில் இவர்க்கு நிகராவார் பிறரிலர்.

இவர் யாழ்ப்பாணத்திலன்றி இந்தியாவிலும் ஆங்காங் குள்ள ஆலயங்களிலும் ஆதீனங்களிலும் பற்பல பிரசங் கங்கள் செய்துள்ளார். ஆங்கும் இவர் பிரசங்கத்தைப் புகழாதாரிலர். இவர் திருவாவடுதுறை ஆதீனத்திலே பிரசங்கஞ் செய்தபோது அங்கு அதனைக் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர், ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரென்னும் உபய சந்நிதானங்களாலும், மற்றை வித் துவான்களாலுமே "நாவலர்" என்னும் சிறப்புப் பெயர் இவருக்கு அளிக்கப்பட்டதென்றால், இவர் பிர சங்கத்தின் அருமை பெருமைகள் இத்துணைய என எம்மால் அளவிட முடியுமா?

இராமநாதபுரம் பொன்னுச்சாமிதேவரவர்களும் இவரை விரும்பி அழைத்துத் தமது சபையிலே பிர சங்கஞ் செய்வித்து, அதனைக் கேட்டு மகிழ்ந்து இவ ருக்குப் பல விருதுகள் அளித்தனர்.

இத் தகைமை வாய்ந்த நாவலரவர்கள் சாலிவாகன சகாப்தம் ௧அ௦௨-க்குச் சமானமான பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் ௨-ம் திகதி சுக்கிரவாரத்திலே இவ் வுலக வாழ்வை ஒருவினர்.

வாக்கிய நடை எழுதுவதில் இவருக்குச் சமமானவ ரில்லை. தமிழ் வாக்கியங்களுக்குக் குறியீடுகள் இட்டு

எழுதத் தொடங்கியவரும் இவரென்றே சொல்லலாம். செய்யுள் நூல்களை இவரியற்றுவிட்டாலும் செய்யுளியற்றுவதிலும் இவர் மிகு சாமர்த்திய முடையவர். அதனை யுணரும் பொருட்டு இவரியற்றிய செய்யுளொன்றை யீண்டுத் தருதும்:—

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்கணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேதும்
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

இவருடைய விரிந்த சரிதத்தை நல்லூர் ஸ்ரீமாந். த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய “ஆறுமுக நாவலர் சரித்திரம்” என்னும் நூலாலும், அருணசலக் கவிராயர் பாடிய “ஆறுமுகநாவலர் புராணத்தாலும்” அறிந்து கொள்க.

## நாகநாதபண்டிதர்

இவர் ஏறக்குறைய நூற்றுப்பத்து வருடங்களுக்கு முன் சுன்னுகமென்னுமூரிலே வேளாளர்குலத்திலே சிங்கமாப்பாண முதலியார் கோத்திரத்திலே அம்பலவாண பிள்ளைக்குப் புதல்வராகப் பிறந்தவர். பிரசித்திபெற்ற வைத்தியர் வல்லிபுரநாதருக்கு மாதுலர். வட்டுக்கோட்டையிலுள்ள சாஸ்திர கலாசாலையிற் கற்றவர். தமிழ் சம்ஸ்கிருதம் அங்கிலம் சிங்களம் என்னும் நான்கு பாஷையிற் பாண்டித்தியமுடையவர். முல்லைத்தீவு நியாயசாலையிலும் கற்பிட்டி நியாயசாலையிலும் துவிபாஷாவாதி (முதலியார்) என்னும் உத்தியோகத்திலிருந்தவர்.

அங்கில மொழிபெயர்ப்போடிருந்த மானவ தரும சாத்திரம், பகவத்கீதை, மேகதூதம் முதலிய சம்ஸ்கிருத நூல்களைத் தமிழிற் பெயர்த்துச் சங்கரபண்டிதர் படித்துக்கொள்ளக் கொடுத்தவர். இதோபதேசம், சிசுபாலவதம் முதலிய சில காவியங்களையும் சில வியாகரணங்களையும் தமிழில் விளக்கிச் சுன்னுகம், அ. குமாரசுவாமிப் புலவருக்குப் படிக்கக் கொடுத்தவர். அவருக்குச் சில சம்ஸ்கிருத நூல்களுக்குப் பாடஞ் சொன்னவர். சாங்தோக்கியம் முதலிய சில உபநிடதங்களையும் சாங்கியத்தையும் மொழிபெயர்த்தவர். இவர் மொழிபெயர்த்த இதோபதேசத்தைச் சுன்னுகம், அ. குமாரசுவாமிப்புலவர் அச்சிட்டுள்ளனர். "இலங்காபிமானி" முதலிய பஞ்சிகைகளிலும் பல விஷயங்களெழுதினவர். கவிபாடுஞ் செயலுமுடையவர். இவர் செய்யுட்டிறத்தை உணரும்பொருட்டு ஒரு கவியை இங்கே தருதும்:—

நீதி நெறிவிளக்க நேர்முறை யாராய்ந்து
போதவுரை செய்யப் புலவோர்க்கு—மேதினியில்
ஆமோ வயிரவ நாதரு ளாசிரியன்
தாமோ தரற்கன்றித் தான்.

இவர் பாடிய தனிக்கவிகள் சில "உதயதாரகை"யில் வெளிவந்தன என்பர்.

## சங்கரபண்டிதர்

இவர் யாழ்ப்பாணத்துச் சுன்னுகத்திலே வேளாளர் மரபிலே கலியப்தம் சகூஙக-க்குச்சமமான விரோதிகிருது வருடம் சித்திரை மாதம் உக-ந் தேதியில் பிறந்தவர். நீர்வேலியில் வசித்தவர். இவர் தந்தையார் பெயர் சிவகுருநாதர். இவர் வேதாரணியத்திலே சுவாமிநாத தேசிகரிடம் சம்ஸ்கிருதத்தில் வியாகரணம், தருக்கம், காவிய முதலி

யனவும், யாழ்ப்பாணத்துக் கந்தரோடையிலிருந்தவரும், வித்துவசிரோமணியாய் விளங்கிய சேனாதிராய முதலியாருடைய மாணாக்கருமாகிய அப்பாப்பிள்ளை என்பவரிடம் தமிழில் இலக்கண இலக்கியங்களும் கற்றவர். (யாழ்ப்பாணத்திலிருந்த சம்ஸ்கிருதபண்டிதர்களுள் இவரே சிரேட்டரெனலாம்.) இவர் சம்ஸ்கிருதத்திலுள்ள ஆகம சாஸ்திரங்களிலும் வல்லவர். தமிழிலுள்ள சித்தாந்த நூல்களிலும் வல்லவர்.) சைவநெறி யொழுக்கத்திலுஞ் சிறந்தவர். இவரிடம் கற்றவர்கள் கீரிமலைச் சபாபதிக்குருக்கள், சுன்னாகத்து முருகேச பண்டிதர் முதலாயினோர். இவருடைய புத்திரர் சிவப்பிரகாச பண்டிதரும் இவரிடங் கற்றவரே.

இவர் மாணவர்களுக்குக் கற்பித்தும் பற்பல நூல்களியற்றியும் சம்ஸ்கிருதம், தமிழ் என்னும் இருமொழிகளையும் வளர்த்தமையோடு, பிரசங்கங்கள் செய்து சைவ சமயத்தையும் வளர்த்து வந்தவர்.

இவர் செய்த சைவப் பிரசங்கத்தைப் புகழ்ந்து இவர் மாணாக்கர் முருகேச பண்டிதரியற்றிய கட்டளைக் கலித்துறையையும் இங்கே காட்டுதும்:—

"சைவத்தை நாட்டிப் பரமத மோட்டத் தயங்குமொரு
தெய்வத்தைப் போல்வரு சங்கர பண்டித தேசிகர்தாம்
மெய்வைத்த கண்டிகை வெண்ணீற்றி னோடு விளங்கிடச்செய்
சைவப் பிரசங்கத் தெள்ளமு தென்றினிச் சார்குவமே."

இவரியற்றிய நூல்கள் சைவப்பிரகாசனம், சத்த சங்கிரகம், அகநிர்ணயத் தமிழுரை, சிவபூசையந்தாதியுரை, கிறிஸ்துமத கண்டனம், சிவதூஷ கண்டனம், அநுட்டானவிதி முதலியனவாகும். சைவப்பிரகாசனத்திலே தர்க்கப்பிரமாண இயல்புகள், சுருதியிலக்கணம், சமயவிலக்கணம், சைவசமய நிரூபணம்,

முப்பொருளிலக்கணம் முதலிய விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. இவரெழுதிய கிறிஸ்துமதகண்டனம் உண்மையும் தருக்கமுறையும் அமைந்து மற்றைய கிறிஸ்துமத கண்டனங்கள் எவற்றினுஞ் சிறந்து விளங்குகின்றது.

இவரும் ஆறுமுகநாவலரு மொரேகாலத்தவ ரென்பது, இவர் பெரியபுராணவசனத்திற்கு அளித்த சிறப்புப் பாயிரத்தா னறியப்படும். அப் பாயிரச் செய்யுள் பரப்புடைமையின் அதனுட் சிலவடிகளை ஈண்டுக் காட்டுதும் :-

"உலக மனைத்தினு முலப்பிலா தோங்கி
யிலகுபே ரொளியா யேகனுச் சிவனு
யனுதி முத்தனு யதிபர மார்த்தனுய்த்
தனுது சத்தியாந் தனிவடி வினனுய்த்
திருவளர் தில்லைச் சிற்றம் பலத்தினுட்
பொருவிலா நிருத்தம் புரிந்துநின் ஞெளிரும்
உயர்சபா நாயக னுலகெலா மென்றெடுத்(து)
.......................................
.......................................
மறைதிகழ் பிரணவ மன்ன
முறைதிக ழாறு முகநா வலனே."

இத்தகைய இவர், கலியப்தம் சகூ௯௱ா-க்குச் சமமான பிரமோதூத வருடம் புரட்டாசி மாதம் கஉ-ந் தேதியில் இவ்வுலக வாழ்வைத் துறந்தனர்.

## கனகசபைப்புலவர்

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள அளவெட்டி என்னுமூரிலே வேளாண் குலத்திலே வைத்தியநாத தம்பிரானுடைய வழியிலே ஏறக்குறைய நூற்றுப்பத்து வருடங்களுக்கு முன்னே பிறந்தவர். இவர் தந்தை பெயர் வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணத்திலிருந்து போய்ச் சிதம்பரத்தில்

வசித்த சுப்பிரமணிய தம்பிரான் இவருக்குத் தாய் மாமன். இலக்கிய இலக்கணங்கள் நன்கு கற்றவர். சிறுபிராயத்திலே பாடுஞ் சாமர்த்தியம் வாய்ந்தவர். பெற்றூர் சைவசமயத்தவ ராயினும் இவர் கிறீஸ்து மதத்தைச் சார்ந்தவர். இவர் வட்டுக்கோட்டையிலிருந்த பழைய சாஸ்திர சாலையிலே ஆங்கிலமுந் தமிழுங் கற்றுத் தேர்ச்சி பெற்றதேயன்றி, அங்கிருந்த உவாட் வைத்தியரிடம் ஆங்கில வைத்தியமுங் கற்றுத் தேர்ச்சி பெற்றவர். ஆங்கிலவைத்தியமுந் தெரிந் தவராயினும் தமது தந்தையார் தமிழ் வைத்தியராயிருந் தமையினாலே தாமும் அவ்வைத்தியத்தையே செய்ய வேண்டுமென விரும்பி, அதனைத் தந்தையாரிடத்தேயே கற்றுத் தாமும் அதனையே செய்து தந்தையாரினும் பன் மடங்கு சிறந்து விளங்கினவர். பாடுந்திறமை நோக்கி இவரைப் 'புலவன்' என்றும், 'புலவன் கனகசபை' என்றும் ஊரிலுள்ளார் பேசுவர். இவர் பாக்கள் பழையபாக்கள் போன்று மிகவும் சொற்சுவை பொருட்சுவை அமைந்தன வாகும். பல தனிப்பாக்களன்றித் திருவாக்குப் புராணம் என ஒருபுராணமும்பாடியுள்ளார். இதனைக் கிறிஸ்தவர்கள் மிகக் கொண்டாடுவர். இதில் 'களநிக' விருத்தப்பாக்கள் அமைந்துள்ளன. இதுவன்றி ஒரு சொற் பலபொருட் டொகுதியாக ஒரு நிகண்டும் பாடியுள்ளார்.

உடுவிலிலிருந்த சந்திரசேகர பண்டிதர் செய்த அக ராதிக்கும் வேறும் பலநூல்களுக்கும் இவர் சிறப்புக்கவி கள் அளித்துள்ளார். சமயோசிதமாகத் தோன்றும் விவேக சாதுரியப் பேச்சுகளும் இவருக்கு உண்டென்றும் அதற்குச் சான்றாக இவர் ஒருநாள் வேறொருவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் இவருக்குக் கோப மூளத்தக்கதாக யாதோ வார்த்தையாடினமையால் இவர் அவரிற் கோபங்கொண்டு "பேய்க்கூதிமகனே" என்று அவரை ஏசினர் என்றும், அப்போது இவர்மேல் அவருக்

குப் பெருஞ்சினமுண்டாக, அது கண்ட இவர் அவரை நோக்கி, " நீர் என்மேல் ஏன் கோபிக்கின்றீர்? உமது தந்தையார் பேய்க்கு ஊதிப் பார்க்கின்றவர் அல்லவா? அவருடைய மகனென்றல்லவா உம்மை யான் சொன்னேன்" என்று கூறிச் சமயோசிதமாக எழுந்த விவேக சாதுரியப் பேச்சினாலே அவரை மகிழ்வித்தார் என்றும் சிலர் கூறுப. இவர் தாயாரும் கல்வியிற் சிறந்தவர் என்றும், மிஷனரிமாருடைய பெண்பாடசாலைகள் வருதற்குமுன் கல்வியிற் சிறந்து விளங்கிய பெண்களுள் அவ்வம்மையாரும் ஒருவர் என்றும் அறிகின்றோம்.

இத்தகைய புலவர்திலகர் யாவருந் துன்புறுமாறு கிறீஸ்து வருடம் ௧௮௭௩-ல் தை மதியில் ௬-ந் தேதியன்று தேகவியோகமாயினர்.

இவர் ஓர் உலாவும் பாடினார் என அறிகின்றோம். இவர் பாடிய திருவாக்குப் புராணத்திலுள்ள காப்புச் செய்யுள் ஒன்றை அதன் சுவையுணர ஈண்டுத்தருகின்றாம்.

## திருவாக்குப் புராணம்

அனைத்துலகுந் திருவாக்கா லளித்தகில சராசரமு
மருட்சித் தத்தே
நினைத்துளவப் படியமைத்துக் காத்தளிக்குந் தனிமுதலா
நிகரி லாதான்
தனைத்துதிசெய் தெண்ணுகின்ற தகுங்கருமஞ் சித்திபெறத்
தருக வென்றே
இனைத்தெனவொப் போதரிய விணைமலர்த்தாள் சிரத்தேந்தி
யிறைஞ்சு வாமே.

இவர் சென்னை பட்டணத்திலே வசித்தபோது, தாம் கண்டி ராசாவின் புதல்வரான அழகர்சாமி பேரில் பாடிய மடற் பிரபந்தத்தை அரங்கேற்ற விரும்பி அவரிருந்த வேலூருக்கு ஒரு சீட்டுக்கவி எழுதி அனுப்பினர். அக்கவி வருமாறு :—

நிறைநிலவு பொழியமுத கிரணசந் திரனென்ன
நின்றிலகு கின்ற தொடையாய்
நேரலர் படைக்கடலை வீரவே கங்கொண்டு
நிருமூல மாக்கு படையாய்
நெடியதரு வைந்துமெழு முகிலுமிணை யல்லவென
நித்தமருள் கின்ற கொடையாய்
நிலவலைய மெங்கணுங் கல்விநிலை பெற்றிலகு
நிகரற்ற கீர்த்தி யுடையாய்
திறைநிலவு தவழுமுயர் பொறைபலவு மெனவெளவு
செங்கையுத் தண்ட தீரா
செயமாது குடிகொண்ட திண்புயா சலவுளந்
திருமா துவக்கு நெறியாய்
தென்னிலங் கேசவெழின் மன்னுமங் கசரூப
திறலழகர் சாமி யென்னுஞ்
சிங்கவே றனையவுத் துங்கவுள் ளக்களி
சிறந்திட மகிழ்ந்து காண்க
துறைநிலவு கலைவாரி கரைகண் டுயர்ந்துநின்
றொல்குலத் தாசர் தம்பாற்
றோமிலா நண்புபெற் றோங்குவைத் தியநாத
சுகுணன் குலத் துதித்தோன்
துகளற்ற சீரளவை நகரத்து வருகனக
சபைமிக்க துன்று பத்தி
தூண்டநின் மாபெருமை பூண்டசுமு கம்பெறச்
சோர்விலா தெழுது நிருபம்
முறைநிலவு மிறைமைபெறு முடிமன்னர் திலகநீ
முகமலர்ந் தகமு வந்தே
மூளுமன் பாலணிய நீளுமின் பானவிசை
மெய்த்தமடன் மாலை தரவும்
முகதரிச னங்கண்டு மிகுகரிச னங்கொண்டு
முன்பெய்த வுங்கருதி நின்
முன்னணுகு மென்றனக் கின்னருள் சுரந்தாழி
மூதுலகி னீவாழி யே.

இவர் வேலூருக்குப்போய் அழகர்சாமி முன்னிலையில் தாம் அவர்மீது பாடிய மடலை அரங்கேற்றி மீண்டு வரும்போது, வழியில் எதிர்ந்த சில புலவரை நோக்கிப் பரிசில்பெறச் செல்லுமாறு அழகர்சாமிபால் ஆற்றுப்படுத்தியதாக ஒரு புலவராற்றுப்படைச் செய்யுளும் பாடியுள்ளார். அதனையுமிங்கே தருதும் :—

பூவின் மீதெவரு மெய்ச்சு பாவருளில்
புல்லர் மீதுசொலி நெஞ்சுகால்
புண்கள் பட்டுவரு பாவ லீரெனையொர்
புரவ லன்கொலென வெண்ணலீர்
யாவின் மீதுமுய ரோவில் சீருறு
மிலங்கை நாடர சியற்றுபேர்
இசைவி ளங்கழகர் சாமி யண்ணலரு
ளீகை பெற்றுவரு புலவன்யான்
நாவின் மீதுலவு பாவி னத்தருமை
நன்கு ணர்ந்ததமி ழறிவினன்
நாவ லர்க்குதவு வள்ளலங் கவனை
நண்ணி லின்னபரி செய்துவீர்
மாவின் மீதரச னந்த மத்திமிசை
மருவு பேரரச னந்தநீள்
வைய மீதரச னந்த மென்றுமவன்
வாயின் முன்னரடை யாளமே.

இவர் பாடுதற்குக் காலமும் இடமும் வேண்டியதின்று. ஒரு பாட்டுப்பாட வேண்டுமென்று யாரும் வேண்டினால் உடனே பாடிவிடுவார். இவர் சென்னையிலிருக்கும்போது இவருடன் அகராதி வேலையிலிருந்த வீராசாமிச் செட்டியாருடைய நரைத்த குடுமியை ஒருவர் இவர்க்குக் காட்டி இதன்மீது ஒரு பாட்டுப் பாடுவீர் புலவீர் என்றனராம். உடனே அக்குடுமிமேல் வைத்து ஒரு செய்யுள் பாடிவிட்டனர். அச்செய்யுள் வருமாறு :—

நாவலர் வியக்கப் பாவலர் நாவா
 னன்கலை மதிவளர்ந் தோங்கிப்
பாவலர் முகஞ்செம் பதுமமாக் குவிக்கும்
 பான்மையோன் மாயனே டுளத்து
மாவலர்வீரா சாமிவேள் குஞ்சி
 மலரயன் றேவிவெண் கஞ்சப்
பூவலர்ந் திருப்ப வதன்மிசை யிருந்த
 பொற்பெனப் பொலிந்திலங் குறுமால்.

இச் செய்யுள் மிகவும் இன்பம் படைத்ததாகும்.

# குமாரசுவாமி முதலியார்

இவர் உடுப்பிட்டியைச் சார்ந்த வல்லுவெட்டி (வல்லி பட்டி) என்னும் ஊரிலே உயர்ந்த வேளாண்மரபிலே பிறந்தவர். ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்கு முன்னே இருந்தவர். இவர் தந்தையார் சந்திரசேகர மாப்பாண முதலியாருக்குப் புத்திரராகிய கதிர்காமபூப முதலியாரெனப்படுவர். இவர் தாயார் பெயர் வள்ளி யம்மை. சந்திரசேகர முதலியார் புத்திரரும் தாயாருடன் பிறந்தவருமாகிய முத்துக்குமார முதலியார் என்பவர் இவருக்கு ஆசிரியர். அவரிடம் இலக்கண இலக்கியங் களை இவர் கற்றுச் சாமார்த்தியமடைந்ததே யன்றிப் பாடு வதிலும் சாமார்த்திய மடைந்தனர். இவர் இயற்றிய நூல்கள் அருளம்பலக்கோவை, திருவிற் சுப்பிரமணியர் பதிகம், மூளாய்ச் சித்தி விநாயகர் ஊஞ்சல், நல்லைக் கலித் துறை, கந்தவன நாதர் ஊஞ்சல், இந்திரகுமார நாடகம் முதலியன. பல தனிக் கவிகளும் பாடியுள்ளார். ஊர்கா வற்றுறையில் நீதிபதியாயிருந்தவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்ட தமிழக ராதிக்கு ஆசிரியருமாகிய கதிரைவேற்பிள்ளை இவருக்கு இரண்டாம் புதல்வர்.

இவருடைய பாடற்றிறம் உணரும் பொருட்டு இவருடைய கவிகளிற் சிலவற்றை ஈண்டுத் தருதும் :—

## அருளம்பலக்கோவை

திங்கா ளுடலகந் தேய்வுற மாய்வுறச் சித்தரைப்போற்
றங்கா மலந்தர மார்க்கந் தவம்புரிந் தாலுந்தமிழ்
மங்கா துடுவை வருமரு ளம்பல மன்னன்வரைக்
கொங்கார் குழலி முகம்போன் மெனநினைக் கூறரிதே.

## தீருவிற் சுப்பிரமணியர் பதிகம்

பூமேவு வாவிப் பொறிச்சிறகர் வண்டினம்
பொதியிணர் முறுக்கவிழ்த்துப்
புதுமது வருத்தியிசை கூடக் கருங்குயில்கள்
புத்தமிழ் துறழ்ந்துபாட
மாமேவு களிமயில் சிறைப்பறை யடிக்கமட
வஞ்சநட மாடநீடி
மன்னுதண் டலைதலை யசைத்துநனி நாடமிடை
வண்டான நன்றுபுகழுந்
தேமேவு வளமருத வயல்புடை யுடுத்திலகு
செங்கமலை தங்குவல்வைத்
தீருவிலை நற்ருன மாவெண்ணி வள்ளியொடு
தேவகுஞ் சரியுமகிழத்,
தூமேவு சத்திகைத் தலமொளிர வெம்மனோர்
துயர்தீர்க்க வந்தமுருகே
சூாநீ லக்கலப மயின்மீ துலாவிவரு
சுப்ரமணி யக்கடவுளே.

## நல்லைக் கலித்துறை

கல்லைக் கடையர்கள் கைவிட் டெறியக் கனன்றெழுந்து
பல்லைத் திறந்துறு மிக்கவி தெங்கின் பழமுதிர்க்கு
மல்லற் பழனங்கள் சூழ்நல்லை நாதனை வந்தடைந்தோர்க்
கில்லைப் பிரமக் குயவன் வனைவதற் கேதுக்களே.

கட்டித் தயிரை யிடைச்சியர் மத்திற் கடையப்பிரி
குட்டிப் புலியொலி யென்றே புலிகுமு றும்புறவம்
கிட்டிக் கிடக்கின்ற நல்லையில் வேலற்குக் கிள்ளைப்பிள்ளாய்
எட்டிச்சற் றேசென்றெ னுள்ளஞ்சொ லாய்பின்னை யென்சொல்வதே.

# தாமோதரம்பிள்ளை

இவர் யாழ்ப்பாணத்திலே புத்தூரைச் சார்ந்த சிறுப்பிட்டி என்னும் சிற்றூரிலே வேளாண் குலத்திலே சாலிவாகன சகாப்தம் 1755-க்குச் சமமான நந்தனவரு ஆவணி மாசம் பிறந்தவர். இவர் தந்தையார் வயிரவநாதபிள்ளை என்பவர். தாயார் பெருந்தேவி அம்மையார். இவர் தமது தந்தையாரிடம் ஆத்திசூடி, வாக்குண்டாம் முதலிய நீதி நூல்களையும் சூடாமணி நிகண்டு முதலியவற்றையும் கற்றுணர்ந்தபின், சுன்னுகத்திலிருந்த முத்துக்குமாரக் கவிராயரிடம் சென்று இலக்கிய இலக்கணங்களையும் கற்றுணர்ந்தவர். தெல்லிப்பழையில் அமெரிக்கமிஷனுல் தாபிக்கப்பட்ட ஆங்கில கலாசாலையிலே ஆங்கிலம் சில ஆண்டுகள் கற்றபின், வட்டுக்கோட்டையிலே அம் மிஷனுற் ருபிக்கப்பட்ட சர்வ சாஸ்திர கலாசாலையிலும் எட்டாண்டுகள் வரையிற் கற்றவர். கோப்பாயிலிருந்த போதனு வித்தியாசாலையில் சிலகாலம் ஆசிரியராக இருந்து, பின்பு சென்னையில் பார்சிவல் துரையால் நடாத்தப்பட்ட 'தினவர்த்தமானி'ப் பத்திரிகைக்கு அதிபராய் அங்குச் சென்று சிலகாலம் அதனை நடத்தியவர். சென்னைச் சர்வகலாசாலையிலே பீ. ஏ. பரீட்சையிற் சித்தி எய்தியபின் கள்ளிக்கோட்டையிலுள்ள இராசாங்க வித்தியாசாலையிலே ஆசிரியராக இருந்தவர். சென்னை அரசாட்சியாரால் அளிக்கப்பட்ட "ராவ்—பகதூர்" என்னும் சிறப்புப் பெயரும் பெற்றவர். புதுக்கோட்டையில் பெருமன்றத்து நீதிபதி உத்தியோகமும் வகித்து நடாத்தியவர். சென்னைப் பல்கலைக்கழகப் பரீட்சகராகவு மிருந்தவர்.

இவர் உயர்ந்த உத்தியோகங்களில் அமர்ந்தனராயினும், தமிழ்நூற் பயிற்சியையும் விடாது அரிய

தமிழ் நூல்களையெல்லாம் தேடிக் கற்று வந்தவர். செல்லரித்தும் இராமபாணந் தின்றும் எழுத்துக்களின் உருத் தெரியாது கிடந்த ஏட்டுப் பிரதிகளில் உள்ள நூல்களுட் சிலவற்றை மிக அரிதாக ஆராய்ந்து அச்சிட்டு தமிழ் நாட்டார்க்கு உதவி மகிழச் செய்தவர். தாமும் புதிதாகச் சில நூல்கள் இயற்றினவர். சிறப்புக் கவியும் துதி கவியும் சீட்டுக் கவியும் பிற கவியுமாகத் தனிநிலைக் கவிகள் பல பாடினவர். இவர் பரிசோதித்து அச்சிட்ட தமிழ் நூல்களாவன:— தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை, ஐந்தியல் நச்சினார்க்கினியருரையும் ஏனைய பேராசிரிய ருரையுமாயுள்ள பொருளதிகாரவுரை, இறையனா ரகப்பொருளுரை, இலக்கண விளக்கவுரை, வீரசோழியவுரை முதலிய இலக்கண நூல்களும், சூளாமணி, தணிகைப் புராணம் முதலிய இலக்கிய நூல்களுமாம். ஆறுமுகநாவலரால் பரிசோதிக்கப்பட்ட தொல்காப்பியத்துச் சொல்லதிகாரம் சேனாவரையருரையும் இவராலேயே பதிப்பிக்கப்பட்டது. இவர் இயற்றிய நூல்கள் சைவ மகத்துவம், கட்டளைக்கலித்துறை, சூளாமணி வசனம் முதலியவாகும்.

இவருடைய பாடுந் திறமையை உணர்தற்பொருட்டு இவர் பாடிய சில கவிகளை ஈண்டுக் காட்டுதும்.

## வீரசோழியப் பதிப்புரை

### ஆசிரிய வணக்கம்

எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்னா
கத்துயர் மரபினோன் முத்துக்கு மார
வித்தக னடிதலை வைத்துவாழ்த் துவனே.

## சைவ மகத்துவம்

பூவின் மெய்ம்மத மிதுவிது பொய்யெனப் புகலுவ தரிதேயோ
நாவி ஞன்மனத் தானவின் றுணர்வரு ஞானசாகர மாமெய்த்
தேவ வாசகம் யுத்தியிற் கதிதமாந் திறம்புமோ மனுவாலே
மேவு மெவ்வெவ வேதமுந் திறம்புகல் விஞ்சையா ளளப்பின்னே.

## சுப்பிரமணிய தேசிகர்

விண்ணுடு கைலை வழித்தே சிகர்வெவ் விளைக்குநெற்றிக்
கண்ணுன சுப்பிர மணிய சுவாமிகள் கான்மலரை
நண்ணுத் தலையி னசைதீரத் தாங்கநற் கோகழிவாய்
மண்ணுய்ப் பிறந்தில னேயைய கோவிந்த வையகத்தே.

## அம்பலவாண பண்டிதர்

வாக்கிற் சரச்வதி வாய்மைக் கரிச்சந்த்ர மன்னனெடுந்
தூக்கு நடுவு நிலைமையிற் சானவி தூய்மையிற்பொன்
ஆக்கந் தனிலள காபதி மார னழகிலிந்த்ரன்
தேக்கும்வை போகத்தி லம்பல வாணனைச் செப்பிடினே.

## புத்திர சோகம்

விந்தை மிகுந்த வியன்சோம சுந்தர மென்கொழுந்தைச்
சந்திர சூரியர் வந்துதி யாமுன் சகோதரர்தாய்
தந்தைய ரின்றித் தனிநின்ற வேளையிற் ருவிளையோ
நிந்தனை நிந்தனை காணந்த காவிது நின்றனக்கே.

இவர் தமிழ் மொழியை வளர்க்குமாறு புத்தகங்களை அச்சிட்டமையேயன்றி ஏழாலை என்னும் ஊரிலே ஒரு தமிழ் வித்தியாசாலையையும் தாபித்தார். அவ் வித்தியாசாலை ஆசிரியராக இருந்தவர்கள் முருகேச பண்டிதரும் குமாரசுவாமிப் புலவருமே. அதிற் கற்றுச் சிறந்தவர்கள் வித்துவான் சிவானந்த ஐயர், மாணிக்கத்தியாகராச பண்டிதர் முதலாயினோர்கள்.

# பொன்னம்பலப்பிள்ளை

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே சாலிவாகன சகாப்தம் 1759-க்குச் சமமான ஏவிளம்பிஹூ சித்திரை மாதம் 24-ந் திகதியிற் பிறந்தவர். இவர் தந்தையார் வைசிய குலத்துப் பிறந்த சரவணமுத்துச் செட்டியார். இவர் தாயார் ஆறுமுகநாவலர்க்குத் தமக்கையார். ஆகையால் இவர் அவருக்கு மருகராவர். இவர் தமது இளமையிற்றொடங்கி நல்லூரிலிருந்த கார்த்திகேய உபாத்தியாயரிடம் இலக்கிய இலக்கணங்களைக் கற்று வந்தபின் தன் மாமனாராகிய நாவலரிடமும் பலகாலங் கற்றவர். அவர்களிடங் கற்றவளவிலமையாது, தமது நுண்மாணுழை புலங்கொண்டு சங்க இலக்கியங்களையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, இராமாயண முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பிய மென்னும் பேரிலக்கண நூலையும் பலமுறை துருவித்துருவி ஆராய்ந்து கற்றவர். படித்தவற்றை ஒரேமுறையி லவதானிக்கும் ஞாபக சக்தி யமைந்தவர். பாடுஞ் சக்தியுமுள்ளவர். கோவில்களிலும் மடங்களிலும் வீடுகளிலும் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம் முதலியவற்றைப் படித்துப் பொருள் சொன்னவர். பொருள் சொல்லுங்கால் கேட்டவர்கள் "யாழிசையோ பாரதிதன்னின்னிசையோ" என்று அயிர்க்குமாறு தமக்கு இயற்கையாயமைந்த இனியமிடற்றோசையோடும், விரிவுரையோடும் சொல்லின்பமும் பொருளின்பமும் தோன்றச் சொல்வர். இவர் சொல்லும் பொருளிலே பரிமேலழகர் நச்சினார்க்கினியர் பேராசிரியர் முதலியோ ருரைத்த உரைத் திறங்களெல்லாம் அமைந்திருக்கும். வாக்கிற் பிறக்கும் உரையும் பரிமேலழகர் உரைபோலத் தெளிவும் இனிமையும் பொருந்தி ஒளி

ரும். இவர் பொருள்சொல்லும் அழகையும் இனிமை யையுங் கேட்பதற்காக யாழ்ப்பாணத்திலே பற்பல ஊர் களிலுமுள்ள பிரபுக்களும் அறிஞர்களும் தத்தங் கோயில்களிலே புராணபடனம் நடக்குங் காலத்திலே இவரை அழைத்துப் பொருள் சொல்லுவித்துக் கேட்டு மகிழ்வர். சபைகளிலே இவர் சொல்லும் பொருளைக் கேட்கவந்த சனங்கள் அப்பொருளிலுள்ள இன்பங்களை நுகரும் அவாவினாலே சத்தஞ் செய்யாது தாமே அடங்கி இருந்து கேட்பர். ஒருமுறை இவர் வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் வசந்த மண்டபத்திலே பெரியபுராணம் படித்தபோது திருஞானசம்பந்தர் திருக்கலியாணப்படிப் பைக் கேட்பதற்காக ஆயிரக் கணக்கான சனங்கள் வந்திருந்தார்கள். இருப்பதற்கு மண்டபம் இடம் பெரு மையால் நெருக்கமுற்றுச் சனங்கள் சத்தம் செய்யத் தொடங்கினார்கள். அங்குள்ள அதிகாரிகள் சத்தஞ் செய்யவேண்டாமென்று சொல்லி அமைதி செய்துங் கேளாமல் சனங்கள் சத்தஞ் செய்தார்கள். அப்பொழுது இவர்களை அமைதி செய்தற்குரிய உபாயம் தாம் படிக் கத் தொடங்குதலே யென்று கருதி இவர் காப்புச் செய் யுளைப் படிக்கத் தொடங்கினார். உடனே சனங்களெல் லாம் நெருக்கத்தையும் நோக்காமல் அமைதியாயிருந்து விட்டார்கள். இதனால் சனங்களுக்கு அவர் சொல்லும் பொருளைக் கேட்டலில் எவ்வளவு அவா இருந்ததென் பதையும், இவர் சொல்லும் பொருட்சுவையின் மேன்மை எவ்வளவு என்பதையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

இன்னும் கம்பராமாயணத்திற்கு இவர் பொருள் சொல்வது மிக விசித்திரமாயும் மிக இன்பமாயுமிருக் கும். இவர் சொல்லும் நூதனப் பொருள்களைக் கேட் டோர் கம்பன்றான் மீளவும் பிறந்து, தான் பாடிய இராமாயணத்திற்குப் பொருள் சொல்லுகின்றானோ

வென்று அதிசயமுறுவர். இவர் பொருள் சொல்லும் போது நச்சினர்க்கினியரையும் சிவஞான முனிவரையும் போலச் சில இடங்களிலே செய்யுள்களில்வரும் சொற்களை நூதனமாகப் பிரித்துப் பொருள் கொள்வர்.

ஒருமுறை இவர் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலே கந்தபுராணத்துத் திருக்கலியாணப் படலத்திற்குப் பொருள் சொன்னபோது,

"பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீன் றூடன் கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமொ டளித்தே னென்னு நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் லுதக முய்த்தான் மருகனென் றவனை யுன்னி."

என்னுஞ் செய்யுளில், "மருகனென்றவனையுன்னி" யென்றதற்குப் பொருள் சொல்லுங்கால், (மருகனென்று + அவனையுன்னி என்று பிரிக்கவேண்டியதை அங்ஙனம் பிரியாது; என்றவனையென ஒரு சொல் விழுக்காடாகக் கொண்டு அதற்கு, என்று அவமதித்த தக்கனை யென்று பொருள் கூறி; யான் இப்பொழுது சிவனை மருகனென்று நினையாமல் கடவுளென்றே நினைப்பேன்,—தக்கன் சிவனைக் கடவுளென மதியாது மருகனென்று அவமதித்தமையானே தலையிழந்தானன்றே எனத் தக்கன் தலையிழந்த நினைப்பு அப்பொழுது மலையரசனுக்குண்டாயது. அதனால் இவ்வாறு கூறினும். என்று தாம் சொன்ன பொருளுக்குக் காரணமும் கூறி முடித்தனர்.) சில இடங்களிலே தமது ஆராய்ச்சி அறிவு தோன்றவும் பொருள் கூறுவர். (கந்தபுராணத்துத் தெய்வயானை திருமணப்படலத்தில் வரும் "மாவொடு வாழை வருக்கைகொள் பைங்காய் — தீவிய கன்னல் செறிந்திடு செந்தேன் — ஆவருள் பாலிவை யண்டர்கள் செம்மல் — மூவிரு மாமுக னநுகர் வித்தான்" என்னுஞ்

செய்யுளுக்குப் பொருள் சொல்லுங்கால்; மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், இனிய சர்க்கரை, தேன், பால் என்னும் ஆறு பொருள்களையும் ஆறுமுகங்களுமாக நிவேதனம் செய்தான் என்று பொருள் கூறி, அதற்குச் சான்றாக வள்ளியம்மை திருமணப்படலத்து வரும் "செந்தினை இடியும் தேனும்" என்பதை முதலாகக் கொண்ட செய்யுளிலும் இவ்வாறே ஆறுபொருள்களை ஆசிரியர் அமைத்துக்கூறி இருத்தல் காண்கவென்று பொருள் கூறினார்.) இப்படிப் பல. இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும்.

யான் இவரிடம் படிக்கும்போதும் வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் வசந்த மண்டபத்திலே கந்தபுராணமும், பெரியபுராணமும், இராமாயணமும் முறையே படிக்கப்பட்டன. அப்பொழுது அவற்றிற்கு இவரே பொருள் சொன்னார். இவர் சொல்லும் பொருளைக் கற்றவர்களும் பலர் வந்து கேட்டுச்செல்வர். கற்பவர்களும் பலர் வந்து கேட்டு, இவர் சொல்லும் பொருள்களுள் அரியனவற்றைக் காகிதங்களில் குறித்துஞ் செல்வர். இங்ஙனம் கேட்டும் குறித்தும் அறிஞர்களாயினோர் பலர். கந்தபுராணம் முதலிய அந்நூற் குறிப்புக்கள் இப்போதும் பலரிடம் உண்டு. இவரிடம் கேட்டுக் குறித்த பெரியபுராணக் குறிப்புக்கள், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் 'செந்தமிழ்'ப் பத்திரிகையிலே திருவாரூர்ச் சோமசுந்தர தேசிகரால் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. நிற்க:

இவரிடம் நேரே கற்றவர்கள் யாழ்ப்பாணத்திற் பலர்; இந்தியாவிலும் சிலர். அவர்களுள் சிதம்பரத்திலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தலைமையாசிரியராயிருந்து கற்பித்தவரும், திருவாதவூரடிகள்

புராணம், அபிராமி அந்தாதி, புலியூர் அந்தாதி என்னும் நூல்களுக்கு உரை எழுதியவரும், ஈழமண்டல சதகமென்னும் நூலை இயற்றியவரும், உரையாசிரியர் என்னும் சிறப்புப்பெயரைப் பெற்றவருமாகிய மட்டுவில், க. வேற்பிள்ளையும் ஒருவராவர். சிவாஞானமாபாடியம், திருக்கோவையாருண்மை முதலிய நூல்களைப் பிழையறப் பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்தியவரும், இந்தியாவிற் சென்று வசித்து அங்குள்ள பற்பல வூர்களில் பிரசங்கங்கள் செய்து சைவசமயத்தை விருத்தி செய்தவருமாகிய சுவாமிநாத பண்டிதரும் ஒருவராவர். புராணேதிகாசங்களுக்கும், கோவையந்தாதி முதலியவற்றிற்கும் இவர்போலப் பொருள் சொல்ல வல்லவரும், கவிபாட வல்லவருமாகிய வண்ணார்பண்ணை, சி. பொன்னுத்துரை ஐயரும் ஒருவராவர். சிதம்பரத்திலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலே சிலகாலம் தலைமையாசிரியராயும், பலகாலம் தலைவராயும் இருந்தவரும், இவரது மருகனுமாகிய ச. பொன்னம்பல பிள்ளையும் ஒருவராவர். "உதயபானு", "இந்துசாதனம்" முதலிய பத்திரிகைகளில் சமய விஷயமும் பிறவுமாகப் பல அரிய விஷயங்களை எழுதி வெளிப்படுத்தியவரும், பல அரிய நூல்களுக்கு ஆக்கியோனாய் விளங்கியவருமாகிய கொக்குவில், க. சபாரத்தின முதலியாரும் ஒருவராவர். வண்ணார்பண்ணை இந்துக்கல்லூரித் தமிழ்ப் பண்டிதராயிருந்த தாவடி, ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளையும் ஒருவராவர். கந்தர்மடம், வை. சி. சிவகுருநாதபிள்ளையும் ஒருவராவர். கொக்குவில், பண்டிதர் தம்பு என்பவரும் ஒருவராவர். இராமநாத மான்மியம், அருணாசலமான்மியம் முதலிய நூல்களை இயற்றியவரும், புலவருமாகிய சாவகச்சேரி, ச. பொன்னம்பலப்பிள்ளையும் ஒருவராவர். இந்தியாவிலுள்ள தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த உரத்தூர்

கோ. வைத்தியலிங்க பிள்ளையும் ஒருவராவர். திருவாவடு துறை ஆதீனஸ்தராய்விளங்கிய பொன்னோதுவாரும் ஒரு வராவர். மேற்படி ஆதீனஸ்தர் சுப்பிரமணிய ஓதுவாரும் ஒருவராவர். காரைக்குடி சொக்கலிங்கச்செட்டியாரும் ஒரு வராவர். பழனிக் குமாரசுவாமித் தம்பிரானும் ஒருவரா வர். வடகோவைச் சபாபதி நாவலரும் இவரிடம் சில நூல்கள் கற்றனர் என்ப.

இவர் வேதாரணியம், தேவகோட்டை முதலியஇடங் களிலும் சிலகாலம் வசித்தவர். வேதாரணியத்து வசித்த காலத்தில், நற்றிணைஉரையாசிரியர், பின்னத்தூர் நாராயண சாமி ஐயரும் சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் தமக்கு நேர்ந்த ஐயங்களை இவரிடம் கேட்டுத் தெளிந்தனர் என்று அந்நற்றிணை என்னும் நூலின் முகப்பில் எழுதப்பட் டுள்ளன.

இவர் பாரதத்தில் சில பருவங்கட்கும் மயூரகிரிப் புராணத்துக்கும் உரையெழுதி அச்சிட்டு வெளிப்படுத்தி யுள்ளார். இவராலேயே யாழ்ப்பாணத்து நல்லூர் மகா வித்துவான் அரசகேசரி தமிழில் மொழிபெயர்த்து இயற்றிய இரகுவம்சம் என்னும் நூல் பரிசோதித்து அச்சிடப்பட்டது. யாழ்ப்பாணத்துப் புலவர்களுள் மிகச் சிறந்த புலமை படைத்த இவர் சாலிவாகன சகாப்தம் 1825-க்குச் சமமான சுபகிருது வருஷம் மார்கழி மாதத் தில் தேகவியோகமடைந்தனர்.

## முருகேசபண்டிதர்

இவர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் என்னுமூரிலே வேளாண்குலத்திலே பூதப்பிள்ளை என்பவருக்கு மைந்த ராகப் பிறந்தவர். இவர் தேகவியோகமடைந்த காலம் சாலிவாகன சகாப்தம் க அ உ உ-க்குச் சமமான விகாரி

வருடம் ஆவணி மாசம் இருபத்தோராந் தேதியாகும். உடுப்பிட்டி, சிவசம்புப் புலவரிடத்தும், நீர்வேலி, சங்கர பண்டிதரிடத்தும் சிற்சில நூல்கள் கற்றவர். பாரதம், இராமாயணம், கந்தபுராணம், சேதுபுராணம் முதலிய இலக்கியங்களிலும், தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, அகப்பொருள் முதலிய இலக்கணங்களிலும் மிக வல்லுநர். இவர் இலக்கணத்திற் பெரிதும் சாமர்த்தியம் வாய்ந்தவர். அதனுல் 'இலக்கணக் கொட்டன்' என்று அழைக்கப்படுவர்.

யாழ்ப்பாணத்திலும், இந்தியாவிலே சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்பற்றூர் முதலிய இடங்களிலும் தமிழாசிரியராக இருந்தவர். யாழ்ப்பாணத்திலே குமாரசுவாமிப் புலவர்க்கும், வண்ணார்பண்ணை நாவலர் கோட்டத்து முத்துத்தம்பிப்பிள்ளைக்கும், பிறருக்குந் தமிழாசிரியர். யாழ்ப்பாணத்திற் கற்பித்தவிடங்களை, இவர் மாணவர் குமாரசுவாமிப்புலவ ரியற்றிய பின்வருங் கொச்சகப்பாக் காட்டும்.

### தரவு கோச்சகம்

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகந்
துன்னியகல் வளைமுதலாந் தொன்னகர்வாழ் மாணவர்க்கும்
பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

பலவகையழகுந் தொடைநய முதலியவும் பெற விரைந்து கவிபாடுந் திறமுடையவர். மடக்கு சிலேடை முதலிய கவிகள் பாடுதலிலும் வல்லவர்.

இவரியற்றிய பிரபந்தங்களாவன :— மயிலணிச் சிலேடை வெண்பா, ஊஞ்சல், பதிகம்; சந்திரசேகர விநாயகரூஞ்சல், குடந்தைவெண்பா, நீதிநூறு, பதார்த்த தீபிகை என்பனவும் பிறவுமாம். இவையன்றிப் பல

தனிநிலைக்கவிகளும் பாடியுள்ளார். மயிலணி—சுன்னாகத்தைச் சேர்ந்த ஓரிடம். குடந்தை—கும்பகோணம். பதார்த்ததீபிகை—தருக்கசங்கிரக மூலத்தைக் கட்டளைக் கலித்துறையி லமைத்துப் பாடியது. இவர் பாடிய குடந்தை வெண்பாவில் ஒரு செய்யுளும், மயிலணிச் சிலேடை வெண்பாவில் ஒருசெய்யுளும் காட்டுதும்:—

## குடந்தை வெண்பா

மாமியொடு கூடி மகிழ்ந்து மலைதோறும்
கோமி யுறையுங் குடந்தையே—ஏமுனையில்
தாரணித் தேரார் தமையெரித்தார் பூமகனார்
தாரணித் தேரார் தலம்.

கோமி—சரசுவதி. அவள் மாமி இலக்குமி. ஏ—அம்பு. தார்—கொடிப்படை. தேரார்—பகைவர். பூமகன்—பிரமா. தாரணி—பூமி.

## மயிலணிச் சிலேடை வெண்பா

கோகனகப் பூமேலும் கோவேந்தர் வீதியிலும்
வாகனங்க ளேறு மயிலணியே—ஆகவத்தில்
வந்துகைக்கும் தேரார் மடிந்தருளப் பாகனென
வந்துகைக்கும் தேரார் மனை.

கோகனம்—தாமரை. வாகனங்களென்பதற்கு வாகு அன்னங்களெனவும்,வாகனங்களெனவும் பொருளுரைக்க. வாகு—அழகு. ஆகவம்—போர்க்களம். கைத்தல்—வெறுத்தல். தேரார்—பகைவர். வந்து—வாயுதேவன். உகைக்கும்—செலுத்தும். தேரார்—தேரையுடையவர்.

இவரியற்றிய தனிக்கவியிலும் ஒன்று காட்டுதும்:—

## நடுவெழுத் தலங்காரம்

மைந்தன் விதை மாமிகவர் வழிமீ னென்று
மதனவேள் புறவிதழிவ் வேழின் மீது
வந்தநடு வெழுத்தெனக்குச் செய்தான் மற்றை
வரிகள்பதி னென்கிளையுந் தானே கொண்டான்

அந்தநாள் வளைத்தூச்சி தரித்துத் தம்மை
அருச்சிக்கு மவர்க்ககற்றி யங்கை யேந்தி
முந்தவதன் கீழிருந்து நடனஞ் செய்து
முனிந்துரித்தான் மயிலணிவாழ் முதல்வன் றானே.

இங்கே நடுவெழுத்தாற் கொள்ளப்பட்ட பொருள் தத்துவராமற் செய்தான் என்பது. நடுவெழுத்து எடுக்கும்படி கொள்ளப்பட்ட சொற்கள் "மைந்தன், விதை" முதலியவற்றாற் பெறப்பட்ட மதலை, வித்து, மாதுலை, கவலை, ஆரால், காமன், புல்லி என்னும் ஏழு சொற்களும் என்க. வரிகள் பதினான்கு என்றது, இவைகளிலே நடுவெழுத்து நீங்கிய மற்றை எழுத்துகளை. அவற்றை மலைமுதலியனவாகக்கொண்டு வளைத்து முதலிய எச்சங்களோடும் முறையே சேர்த்துப் பொருள் அறிக.

இவர், நிரம்பிய கல்வியறிவில்லாதார் செய்த நூலுரைகளில் உள்ள குற்றங்களை எடுத்துக்காட்டி வாதம் புரியும் வழக்கமுடையவர். பத்திரிகைகளிலே வாத விஷயமாகப் பல கடிதங்கள் எழுதினவர். ஆறுமுக நாவலரையும் பிறரையும் வெல்லக் கருதித் தம் பத்திரிகையிலே சைவ விரோதமும் பிறவுமாகப் பல விடயங்கள் எழுதிய கத்தோலிக்கு வித்துவான் அருளப்ப முதலியார் செய்த அலங்கார பஞ்சகம் என்னும் நூலிலே குற்றங்காட்டி, அலங்கார பஞ்சக சண்டமாருதம் எனக் கண்டனம் ஒன்று வரைந்தவர். அவற்றுள் ஒன்று காட்டுதும்.

## அலங்கார பஞ்சக சண்டமாருதம்

அரும் பிராமணத் தினிய கனியுதவு மருங்கொடி
பருதியம் பாத்தி
இருந்தரா சாத்தி கழுமொரு நீதி யிறைமகள்
இணையறு மறத்தி

பொருந்திவெஞ் ஞான்று ஞானசக் கிலிச்சி புல்லனை
யருள்கநன் குறத்தி
மருந்தெனப் புகழு மருத மடுவினில் வதிசெப
மாலைமா மரியே.

அருங்கொடி இருந்தராசு என்னுந் தொடர்களை அரும்—கொடி, இரும்—தராசு எனப் பிரித்தது என்? இவற்றிற்கு மை இறுதியாவதன்றி "இனமிகல்" என்பதனுற்ருேன்றிய மகரவொற்றும் இறுதியாகுமா? மணத்தினியகனி என்பதற்கு வாசனையைக்கொண்ட இன்பமாகிய கனி என்று உரைத்தவர் மணத்து இனிய எனப் பதம் பிரித்தது என்னை? மணத்து என்னும் வினையெச்சம் வாசனையைக் கொண்ட என்னும் பெயரெச்சப்பொருளைத் தருமா? இனிய என்பதற்கு இன்பமாகியது எனப் பொருளுரைத்தது என்னை?—இனிமைக்கு இன்பம் பிரதிபதமாகுமா? சக்கிலிச்சி என்பதில் இச்சி என்பதற்கு விரும்பி எனப் பொருளுரைக்க ஆன்ருேர் வழக்கும் உண்டா?

## வல்லை வயித்தியலிங்கம்

இவர் சாலிவாகன சகாப்தம் ௧எ௬௫-க்குச் சமமான சுபகிருது௵ மாசிமாதத்திலே வல்லுவெட்டித்துறையென்னும் ஊரிலே பரதவகுலத்திலே சங்கரக்குரிசிலுக்குப் புதல்வராகப் பிறந்தனர். இவர் உரிய காலத்திலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று, அவ்வூரிலுள்ள ஒரு வித்தியாசாலையிலே சென்று கல்விகற்றனர். பின் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடஞ் சென்று இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பாண்டித்தியம் அடைந்து, தென்னிந்தியநாடு சென்று சமஸ்கிருத நூல்களையுங் கற்று அவற்றிலும் தேர்ச்சியுடையராயினர். இலக்கண இலக்

கியங்களிலன்றித் தருக்கம், ஜோதிஷம், வானசாஸ்திரம் முதலிய கலைகளினும் இவர் சிறந்து விளங்கினர். தமிழினும் சம்ஸ்கிருதத்தினும் கவிகளியற்றும் வன்மையுமுடையராயினர். சில புலவர்க்கு சம்ஸ்கிருத சுலோகத் தானும் பாயிரம் அளித்துள்ளார். சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய சந்தான சைவசாஸ்திரங்களையும் கற்றறிந்தார். சைவசமயத்திலே மிகுந்த அபிமானமுடையவராதலினாலே அதனை விருத்திசெய்யும்படி 'சைவாபிமானி' என்னும் பெயரோடு ஒரு பத்திரிகை நடாத்தி வந்தார்.

அக்காலத்திலே சென்னையிலிருந்த ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் எழுதிய சைவமகத்துவம் என்னும் நூலுக்கு மாறாக ஸ்ரீ அருளப்பமுதலியார் எழுதிய சைவமகத்துவதிக்காரம் என்னும் கண்டனத்திற்கு எதிராக இவர் சைவமகத்துவதிக்கார நிக்கிரகம் என ஒரு கண்டனமெழுதி முதலியார் வாயை அடக்கினர். அதனால் தாமோதரம்பிள்ளையவர்களும் சென்னையிலுள்ள மற்றும் அறிஞர்களும் இவரைப்போற்றி இவர்க்கு இயற்றமிழ்ப் போதகாசிரியர் என்னும் பட்டப்பெயரை அளித்தனர் என்ப

ஈழமண்டலத்திலே அட்டாவதானத்தை முதலிற் செய்து பெயர்பெற்ற வல்லை - ஏகாம்பரம் என்பவர்க்கும் இவர் மிக அணுகிய சுற்றத்தவரென்றுங் கூறுவர். இவரிடங் கல்விகற்ற மாணவர்களுட் சிலர் இன்னும் இலைமறைகாய்போல வல்லையிலும் மற்றுமூரிலும் அங்கங்கே காணப்படுகின்றனர்.

இவர் சைவாசாரத்திற் சிறந்து விளங்கியதோடு தம்மவர் பலரையுஞ் சைவாசாரமுஞ் சிவபக்தியுமுடையராய்

விளங்கவும் செய்தனர். தாம் நடாத்திய பத்திரிகையை அச்சிடுதற்பொருட்டும் தாம் இயற்றிய நூல்களை அச்சிடுதற்பொருட்டும் ஓரச்சியந்திரத்தையும் தமதூரிலே தாபித்து வைத்திருந்தனர்.

இவரியற்றி அச்சிட்டு வெளிப்படுத்திய செய்யுணூல்கள் :— சிந்தாமணி நிகண்டு, செல்வச்சந்நிதி முறை, வல்லை வயித்தியேசர் பதிகம், சாதிநிர்ணயபுராணம் என்பனவாகும். இவரியற்றிய உரைகள் :—(கந்தபுராணத்து அண்டகோசப்படலவுரை, தெய்வயானை திருமணப்படலவுரை, வள்ளியம்மை திருமணப்படலவுரை,) கல்வளையந்தாதியுரை, (கந்தரலங்காரவுரை என்பனவாகும்.) (சூரபன்மன் வதைப்படலத்திற்கும் உரையியற்றி அச்சிட்டு வந்தனர். அது முற்றுப்பெறவில்லைபோலும்.)

இவர் திருத்தி அச்சிட்டநூல், நாற்கவிராசநம்பியகப்பொருள்விளக்க வுரையாகும். இவரியற்றிய கவித்திறமுணர ஒரு கவியை இங்கே காட்டுதும் :—

## சிந்தாமணி நிகண்டு

சீர்செறி செஞ்சடைக்கட் டிகழ்மதிப் பிளவுதாங்கும்
ஏர்செறி கரிமுகன்ற னிணைமல ரடியையேத்தி
நேர்செறி யிளைஞரோர்சொற் கொருபொரு ணோராயோராப்
பார்செறி நிகண்டுசிந்தா மணியெனப் பகர்வனன்றே.

இவர் இற்றைக்கு ௩௯ வருடங்களுக்கு முன்னே சார்வரி வருடத்து ஆவணி மாதத்திலே கற்றோரும் மற்றோரும் வருந்தத் தேகவியோகமடைந்தனர்.

இவர் மட்டைக்களப்பிலும் சிலகாலம் வசித்தவர். அஞ்ஞான்று அவ்வூர் வித்துவான் பூபாலபிள்ளை என்பவர் இலக்கண இலக்கியங்களிற் தமக்குற்ற சந்தேகங்களை இவர்பாற் கேட்டுத் தெளிந்தனர் என்ப.

## கணேச பண்டிதர்

இவர் ஏறக்குறையத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலே வேதியர் குலத்திலே பிறந்தவர். வடமொழி வியாகரணங்களை யும் காவியங்களையும், தென்மொழி இலக்கண இலக்கி யங்களையும் கற்றுத் தேர்ந்து பாண்டித்தியம் படைத்த வர். கவிபாடுந் திறமுமுடையவர். இவர் செய்யுள்கள் பழைய செய்யுள்கள் போல ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளு முடையன. (இவர் பாண்டிநாட்டில் இளையாற் றங் குடியில் இருந்த காலத்தில் அத்தல மான்மியத்தைத் தமிழிற் பெயர்த்து விருத்தப் பாவாக அந்நகரவணிகர் வேண்டுகோட்கிணங்கி இயற்றினர்) அதனுள் ஒரு செய் யுள் தருதும். அது வருமாறு :

“ அப்பெரு மான்மி யத்தை யரவணி சடையி ஞர்தஞ்
செப்பரு முகத்தில் வந்த சீர்கெழு குரவன் றானும்
எப்பெரும் புகழும் வாய்ந்த விளசைமா நகரத் தாரும்
தப்பருந் தமிழின் பாவாற் பாடியே தருக வென்றார்.”

இவர் திருவண்ணாமலை யாதீனத்து வித்துவானா யிருந்தவர். இவர் தேகவியோகமாகி முப்பத்தெட்டு வருஷங்களாகின்றன.

## திருஞானசம்பந்த உபாத்தியாயர்

இவர் ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன்னே சுளிபுரமென்னு மூரிலே செல்வநாயகச் செட்டியார் குலத் திலே பிறந்தவர். ஆறுமுகநாவலரிடம் இலக்கண இலக் கியங் கற்றவர். கந்தபுராணம், பெரியபுராணம், பாரதம் முதலிய இலக்கியங்களிலே மிகுந்த பயிற்சி உடையவர். பலருக்குங் கற்பித்தவர். பிரசங்கஞ் செய்யுந் திற மும் கவி பாடுந் திறமுமுடையவர். மாணிக்கப்பிள்ளை

யார் திருவருட்பா, கதிர்காமவேலர் திருவருட்பா முதலிய பிரபந்தங்களும் சில தனிநிலைக் கவிகளு மியற்றினவர். இவர் புதல்வராகிய பண்டிதர் சோமசுந்தரப்பிள்ளை இராமநாதன் கல்லூரியிலே தமிழ்ப் பண்டிதராகவிருந்து இப்பொழுதுங் கற்பித்து வருகின்றனர். இவர் கவியுள் ஒன்று காட்டுதும்:

### கதிர்காமவேலர் திருவருட்பா

"பூவார் மலர்மிசைப் போதனு மாயனும் போற்றியினும்
நாவாற் றுதித்தற் கரிதாங் கதிரை நகருறையும்
மாவாரும் வள்ளிதெய் வானை மணாளற்கு மன்னுமருட்
பாவார் துதித்துணை மாணிக்க வைங்கரன் பாதங்களே."

இவர் முப்பத்துமூன்று வருடங்களுக்குமுன் தேகவியோகமாயினர்.

## கணபதிப்பிள்ளை

இவர் யாழ்ப்பாணத்துள்ள புலோலியென்னு மூரிற் பிறந்தவரும் சைவாசாரம்பூண்ட வேளாளர் குலத்தவருமாகிய வல்லிபுரநாதபிள்ளைக்குப் புதல்வர். தமதூரிலுள்ள ஒரு வித்தியாசாலையிலே கல்வி பயின்ற பின் உடுப்பிட்டி, ஸ்ரீமான் அ. சிவசம்புப் புலவரிடஞ் சென்று தமிழிலுள்ள இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பெரும் பண்டிதரானர். பின் சென்னை சென்று அங்கே ஆங்கிலமும் வடமொழியுங் கற்று, ஆங்குள்ள சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையிற் சித்தியெய்திய பின் வடமொழி நூல்களைக் கற்பதிலே அதி கருத்துடையராகி அவ்வடமொழியிலுள்ள பல நூல்களையும் விரும்பிக் கற்று, அவற்றில் மிகுந்த புலமையுடையராய் விளங்கினர். அக்காலத்தில் இவர் தமது புலமையை யறிந்த சில அறிஞர்களது வேண்டுகோட்கிணங்கி

காஞ்சிபுரம் சென்று அங்குள்ள பச்சையப்பன் கலாசாலையிலே தமிழ்ப்பண்டிதராயிருந்து தமிழ் நூல்களை மாணவர்க்குக் கற்பித்து வந்தனர். பின் திருவனந்தபுரத்து மஹாராஜ கல்லூரிக்குப் பிரதமாசிரியராகச் சென்று அங்கிருந்து வடமொழி தென்மொழியாகிய இருமொழி நூல்களையும் கற்பித்துவந்தனர். வருங் காலத்திலே தமக்குற்ற நோயினாலே சாலிவாகன சகாப்தம் 1817-ல் தேகவியோகமடைந்தனர். தாம் படிப்பித்துவருங் காலத்திலே லோகோபகாரமாக இவரியற்றிய நூல்களும் பல. அவை பெரும்பாலும் மொழிபெயர்ப்பு நூல்களே. அவையாவன :-

வில்ஹணீயம், இரகுவமிசச் சுருக்கம், இந்திரசேனை நாடகம், வாதபுரேசர் கதை (மாணிக்கவாசகர் புராணம்) முதலியவாம். வில்ஹணீயம் வில்ஹணகவிராசன் சரித்திரங் கூறும் நூல். வில்ஹணகவிராசன், யாமினி பூரணதிலகை என்னுமிராசகுமாரிக்குத் தான் காவிய நாடகாலங்கார சாத்திரம் கற்பித்ததையும், அவளைத் தனக்கு மனைவியாக்கிய வரலாற்றையும் சந்திரோதய வருணனையையும் வித்தியாமகத்துவ முதலிய பிறவற்றையும் இதன்கட் கூறுவன்.

இவர் கவித்துவம் புலப்பட அவற்றுள் ஒரு செய்யுள் காட்டுதும் :-

"மந்திரி கேளா யென்றன் மாதவந் தன்னால் வந்த
சந்திர வதனை யாகுந் தையல்சங் கீதந் தன்னில்
தந்திரி வீணை தன்னிற் சமமிலாள் சாகித் யந்தான்
வந்திடும் வகையா தென்ன மகிழ்ந்தெனக் குரைப்பாய் நீயே"

இவர் வேதாரணியத்துள்ள வேதாரணியேசுரருக்கு ஒரூஞ்சலும் பாடியுள்ளார். அதனுள்ளும் ஒரு செய்யுள் காட்டுதும் ;-

"மணியோங்கு மகோததியின் பால தாய
மறைக்காட்டு மதியொளிரு மௌலி யார்மேல்
அணியோங்கு மூஞ்சலிசை யடியார் தங்கள்
அடிக்கடியேன் றமியேனு தாத்திற் பாடப்
பணியோங்கு மென்பாயற் பதுமக் கண்ணன்
பழிதொலைத்தாட் கொண்டவருட் பாம னூர்தங்
கணியோங்கு வீரகத்திச் சேத கன்செங்
கமலமலர் நிகரடிகள் காப்ப தாமே."

இவர் மாணாக்கருட் சிறந்தோர் :— தம்பியாராகிய குமாரசுவாமிப் புலவரும் தங்கையாராகிய பார்வதி அம்மை யாரும் ஆவர். [பார்வதி அம்மையாரது மாணவிகள் இருவர் மதுரைத் தமிழ்ப் பண்டித பரீட்சையிற் சித்தியடைந்திருப்பதே அவ்வம்மையாரது கல்வி வன்மையைக் காட்டும்.]

மொழிநூல் ஆசிரியராகிய மாகறல் கார்த்திகேய முதலியாரும் இவர் மாணாக்கருளொருவரென்பது அவரியற்றிய மொழிநூலின் ஆசிரியவணக்கத்தால் அறியக்கிடக்கின்றது. இன்னும் இவர் சென்னையிலிருந்த திராவிடவர்த்தன சங்கத்துப் பண்டிதருளொருவராயிருந்தனரென்றுங் கூறுப. அச்சபையைச் சேர்ந்த சதுர்வேத வையாகரண ஸ்ரீநிவாசாசாரிய சுவாமிகள் என்னுஞ் சமஸ்கிருத வித்துவ சிரோமணிக்கு இவர் குருவாக இருந்தவரென்றுஞ் சொல்வர்.

முன் காட்டியவையன்றி இன்னும் பல நூல்கள் இவரியற்றியனவாக உள்ளன. அவற்றுட் பல அச்சிடப்படவில்லைப்போலும். அவையாவன :—

இரகுவம்மிச மொழிபெயர்ப்பு, மார்க்கண்டேய புராணம், தருக்க சாஸ்திர வினுவிடை, பதப்பிரயோக விவரணம் என்பன. இன்னும் இவர் சமஸ்கிருத நூல்களும் பல இயற்றியுள்ளார்.

# நா. கதிரைவேற்பிள்ளை

இவர் ஏறக்குறைய எண்பத்தைந்தாண்டுகளுக்கு முன்னே, புலோலி என்னுமூரிலே, சைவாசாரமுடைய வேளாண்குலத்திலே, நாகப்பபிள்ளை என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். இளமை தொட்டு அதி தீவிர புத்தியும், அதி ஞாபகசக்தியும் வாய்ந்தவர். இவர் வித்தியாரம்பஞ் செய்தபின், அவ்வூரிலுள்ள வித்தியாசாலையொன்றிலே கல்வி கற்று வந்தார். அதிகம் வறிய குடும்பத்திலே பிறந்தவர் ஆதலினால், நீண்ட காலங் கற்றுக் கொள்ள முடியாதவராய், ஆறும் வகுப்பு முடிந்தவுடன் வித்தியாசாலையை விடுத்து, அவ்வூர் நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளை என்பவருக்கு இலேககராக அமைந்தனர். பிறருக்குக் கீழமைந்து வாழ்தலில் விருப்பமில்லாத இவர், இருபத்திரண்டாம் வயதிலே, அந்த நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளைக்கும் தமக்குமுண்டான பிணக்கொன்றைச் சாட்டாகக்கொண்டு அம்முயற்சியை விடுத்து, இந்தியாவிலுள்ள சென்னைக்குப் போய், அங்கே சம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் வல்ல புலவரை அடைந்து, தமிழும் சம்ஸ்கிருதமும் கற்றுப் பாண்டித்தியமடைந்தனர். (இவர் சென்னை சென்ற அக்காலத்தே, அங்கு உத்தியோகத்திலமர்ந்திருந்த, தி. த. கனகசுந்தரம்பிள்ளையிடத்தும் தொல்காப்பியமும், வேறு சில நூல்களுங் கேட்டறிந்தனர் என்ப.) இருமொழியினும் வல்ல புலவராய் விளங்கிய இவர், சென்னையிலே பலவாண்டு வசித்தனர். வசித்த காலத்திலே சென்னையிலும் பிறவூர்களிலுஞ் சென்று, பிரசங்கங்கள் செய்வாராயினர்; இணையற்ற நாவன்மையை இயல்பாகவே பெற்றவராதலின், சொற்பஞ்சமின்றி உபந்நியாசங்கள் செய்வதில் எவரினுஞ் சிறந்து விளங்கினர். வித்துவ சபைகளிலும், அரச

சபைகளிலும் அஞ்சாது நின்று பேசுவார். பேச்சு வன்மையில் இவருக்கிணையாவாரில்லை யெனலாம். தடைப்படாமலும் விரைவாகவும் பலமணிநேரம் நின்று ஆயாசமின்றிப் பேசும் வன்மை இவருக்குண்டு. அந்நாளில் இவரது பேச்சுவன்மையை எடுத்துப் பாராட்டாதாரிலர். அதனுலிவருக்கு எங்கும் மிக்க புகழுண்டாயிற்று. அறிவின்மிக்கா ரெவராயினும் தம்மை எதிர்ப்பட்டு ஒரு விஷயத்தை வினுவின், உடனே யவர்மனந் திருப்தியாகச் சமாதானஞ் சொல்லும் சமையோசிதபுத்தியு முடையவர். இவரை வலிந்து வாதுக்கழைத்துத் தோல்வியுற்ற வித்துவான்களும் பலராவர். (பேரிலக்கணமாகிய தொல்காப்பியமும், தமிழ்மறையாகிய தேவர்குறளும் என்றுமிவர் நாநுனியிலிருந்து குதிகொண்டாடும்.)

இவரியற்றிய நூல்கள்: கூர்மபுராண விரிவுரை, பழனித்தல புராணவுரை, சைவசந்திரிகை, சைவசித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம் என்பன. இவரோரகராதியுந் தொகுத்தெழுதி அச்சிட்டுள்ளார்.

இவர் மாயாவாதத்தை நிராகரித்துப் பேசுந் தன்மை வாய்ந்தவராதலினுலே, சென்னையிலுள்ள வித்துவான்கள் யாவருங் கூடி, 'மாயாவாத தும்சகோளரி' என்னும் பட்டத்தை அளித்துள்ளார்கள். அப்பொழுது அக்கிராசனராயிருந்து அப்பட்டத்தை அளித்தவர், காசிவாசி ஸ்ரீ செந்திநாதையரேயாவர். இன்னும் இவர்க்குப் பல சிறப்புப் பெயர்களுள.

இவர் பிரசங்கங்கள் செய்வதிலன்றி அட்டாவதானம், சதாவதானம் முதலியன செய்தலிலும் வன்மை படைத்துப் பெரிய வித்துவ சபைகளிலெல்லாம் அவ்

வவதானங்களைச் செய்துகாட்டிப் பெரும் புகழ்படைத்தார். இத்தகைய தீரம் வாய்ந்த இப்புலவர் கிறீஸ்தாப்தம் 1907-ம் ஆண்டில் தேகவியோகமடைந்தார். இவருடைய கவித்திறனுணர்தற்பொருட்டு இவர் பாடிய சில கவிகளை இங்கே காட்டுதும்.

### கட்டளைக் கலிப்பா

"நல்ல யாழ்ப்பாண மேலைப்பு லோலியி
னுளுமெங்கட் கருள்செய வந்துறை
செல்வ னாகும் கதிரையில் வேலவன்
சீரடித்துணை செய்துணை யாலுல
கல்ல லோட வறிவில னீங்கிதை
யாற்றி னேன்குறை யாண்டிட லீங்கிது
மல்கு நந்தா மணிவிளக் காயெழ
மாசிலெந்தை யருடுண்டு முண்மையே."

[சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம் அவையடக்கம்]

"இடந்தானு முணரானை யின்முருகை யெல்லாங்
கடந்தானை அருளாந்தன் கடலானை வேல்கைச்
கிடந்தானை யெப்பொருளுங் கிடப்பானைச் சூர்க்கா
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நம்பானை யேத்தாத நாவென்ன நாவே."

[சுப்பிரமணிய பராக்கிரமம்]

இவர் சென்னையில் வசிக்குங்காலத்திற் கருங்குழி இராமலிங்கபிள்ளை பாடலை அருட்பா அன்று மருட்பா என மறுத்து எழுதிய கண்டனங் காரணமாக இவர் மீது வேறுசிலர் சென்னைப் பெருமன்றத்து நீதிபதியிடம் முறையீடு செய்தார்கள். அம்முறையீட்டு விசாரணையில் இவரே வெற்றிபெற்றார். இது கிறீஸ்தாப்தம் 1904-ம் ஆண்டு மார்கழிமாதத்து நிகழ்ந்தது. இதனை "மருட்பா

மறுப்பு விஜய மகாசரபம்" என்னுஞ் சிறு புத்தகச் சுவடியாலறியலாம். இச்சுவடி கிறீஸ்தாப்தம் 1905-ம் ஆண்டு தைமாதம் 22-ந் திகதி ஸ்ரீ காஞ்சிபூஷண அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது.

இவர் ஆரணி நகர சமஸ்தான வித்துவானுயு மிருந்தவர். சைவசித்தாந்த மகாசரபம் என்னும் பெய ரும் பெற்றவர்.

## வேற்பிள்ளை

இவர் சாலிவாகன சகாப்தம் ளஎகூகூ-க்குச் சம மான பிலவங்க வருஷத்திலே, மட்டுவில் என்னும் ஊரிலே பிறந்தவர். இவர் தந்தையார் புலோலி என்னும் ஊரிலே யிருந்த வேலாயுதப்பிள்ளை கணபதிப்பிள்ளை உடையார். (உடையார் என்னும் பெயர், அவருக்கிருந்த நன்கு மதிப்புப்பற்றி வந்ததேயாம்.) ஐந்து வயதானவுடன் தந்தையார் இவருக்கு வித்தியாரம்பஞ் செய்து, மட்டுவிலிலிருந்த சண்முகம்பிள்ளை ஆசிரியரிடம் இவரை அழைத்துச்சென்று நெடுங்கணக்கு முதலியவற்றைக் கற்பிக்கும்படி வேண்டினர். அவரும் இவர் தந்தையார் கருத்துக்கு உடன்பட்டு இவருக்கு நெடுங்கணக் காதிய வற்றைக் கற்பித்து வந்தனர். இவரும் அவரிடஞ் சென்று நெடுங்கணக்குப் பயின்று, நீதிநூல்களையும், நிகண்டு, அந்தாதி முதலியவற்றையும் படித்துவருங் காலத்திலே, இவருக்குக் கல்வியிலிருந்த ஆர்வத்தையும், இவரது நுண்ணறிவையும் நோக்கிய தந்தையார் உயர்ந்த இலக் கிய இலக்கணங்களைப் பயிற்ற விரும்பி, அக்காலத்திலே நல்லூரிலே சிறந்த புலவராயிருந்த கார்த்திகேய ஆசிரிய ரிடத்திலே இவரை யழைத்துச்சென்று இவருக்கு உயர்ந்த இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்கும்படி வேண்

டினர். அவர், தந்தையாருடைய வேண்டுதற்குடன் பட்டு, இவருக்கு உயர்ந்த இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தனர். பின் இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடம் சென்று உயர்ந்த நூல்களைக் கற்றார். நாவலரவர்கள் சென்னைக்குச் சென்றிருந்த காலத்துத் தாமு முடன் சென்று அங்கிருந்தும் இவர் கற்றதுண்டு. ஆறுமுக நாவலரவர்களுக்கு இவர்களிடம் மிகுந்த அன்புண்டு. நாவலரிடம் இவர் கற்ற காலத்து ஒருங்கு கற்றுச் சிறந் தவர்களுட் சபாபதி நாவலருமொருவர். இவர் பொன் னம்பலப்பிள்ளையவர்களிடமும் பல நூல்களைக் கற்ற துண்டு. அவரிடம் கற்றமையினாலே அவர்போல இவ ரும் கம்பராமாயணத்தில் அதிக பயிற்சி பெற்றவரா யிருந்தார். யாம் பொன்னம்பலப்பிள்ளையவர்களிடம் வண்ணையிலிருந்து படிக்குங் காலத்திலே இவரும் வண் ணையிலே சில மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொண் டிருந்தனர். அப்போது யாமும் ஐயமானவற்றை இவ ரிடமுங் கேட்டுத் தெளிவதுண்டு. இவர் வாதவூரர் புரா ணத்திற்கு விரிவுரையெழுதிய காலமு மக்காலமேயாம். இவர் தாமெழுதும் விரிவுரையை அவ்வப்போது பொன் னம்பலப்பிள்ளையவர்களிடம் கொண்டுவந்து காட்டுவ துண்டு. இவர் எழுதிய விரிவுரை முழுவதையும் பார்த்து முடித்தபின் உரையின் திறத்தையும், இவர் அறிவின் திறத்தையும் வியந்து இவருக்கு உரையாசிரி யர் என்னுஞ் சிறப்புப்பெயரையும் பொன்னம்பலப் பிள்ளை யவர்களே அளித்தனர். இவர் வாதவூரர் புரா ணத்திற்கு எழுதிய உரையே, இவரது இலக்கிய வன்மை யையும் சித்தாந்த சாஸ்திர வன்மையையும் கண்கூடா கக் காட்டும். இவ்வுரையேயன்றி, இன்னும் புலியூர் அந் தாதியுரை, அபிராமி அந்தாதியுரை, கெவுளிநூலுரை முத லிய உரைகளும் இவராலியற்றப்பட்டனவாகும்.

இவர் இவ்வுரையியற்றிச் சிலகாலம் சென்றபின்பு, சிதம்பரத்திலுள்ள நாவலர் வித்தியாசாலைக்கு ஆசிரியராக அவ்வித்தியாசாலை அதிபரால் அழைக்கப்பட்டுச் சென்று, பலவாண்டுகளாக அவ் வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராகவிருந்து கற்பித்துவந்தனர். தம் வயோதிக நிலைமையாலே கற்பித்தலினின்று நீங்கிய பின்னும், நடேசப்பெருமானைத் தரிசிக்க விரும்பிச் சிதம்பரத்திலேயே தமது மரணகாலம்வரையுமிருந்து அங்கேயே தேகவியோகமடைந்தார். சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே இவரிடம் கற்றவருட் சிறந்தவராய் விளங்குபவர், இப்போது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தலைமையாசிரியராகவிருந்து கற்பித்துவருபவரும், (தஞ்சைவாணன் கோவையுரையைப் பரிசோதித்துப் பல திருத்தங்களோடும் பல குறிப்புகளோடும் அச்சிட்டு வெளிப்படுத்தியவரும், சிதம்பரத்தையே ஜெனனவூராகக் கொண்டவருமாகிய வித்துவான் சுப்பையாபிள்ளையும்) சிதம்பரம் வித்துவான் தண்டபாணி ஐயரு முதலாயினோர். சிதம்பரத்திலன்றி, யாழ்ப்பாணத்திலும் பலர் இவரிடங் கற்றுச் சிறந்த புலமையடைந்துள்ளனர். அவர்களுட் சிரேஷ்டரானோர் ஆவரங்கால் நமசிவாயப்பிள்ளை, சாவகச்சேரிப் பொன்னம்பலப்பிள்ளை என்பவர்களாவர். இவர் இலக்கிய இலக்கணங்களிலன்றிக் கவிகளியற்றுவதிலும் வல்லவர். இவரியற்றிய செய்யுணூல்கள் புலோலிப் பர்வதவர்த்தனியம்மை தோத்திரம், புலோலி வயிரவக்கடவுள் தோத்திரம், ஈழமண்டல சதகம் என்பனவாம். (இவ் வீழமண்டல சதகம், இந்தியாவிலே இவர் இருந்தபோது ஈழமண்டலத்தின் பெருமையையறியாது இகழ்ந்தோர் சிலர்க்கு அதன் பெருமையை அறிவிக்கும்படி இயற்றப்பட்டதாகும்.) இவர் பரிசோதித்து அச்சிட்ட நூல்கள் வேதாரணியபுராணம்,

சிதம்பரச் சிவகாமியம்மை சதகம் முதலியனவாம். இவர் இலக்கிய உணர்ச்சியிற் சிறந்த புலவராய் விளங்கியதன்றி அவற்றையெடுத்து நயம்பட வுரைக்கவும் வல்லவராயிருந் தார். தம்மோடு சம்பாஷிக்க விரும்பிவரும் அறிஞர் களுக்குப் பழையநூற் சிறப்புக்களையும், சைவசமயப் பெருமைகளையும் எடுத்து இனிமையாகவும் தெளிவாக வும் மகிழ்வோடு சொல்லிக்கொண்டிருப்பார். அவற் றைக் கேட்பவர்களும் அலுப்பின்றி யிருந்து கேட்டு மகிழ்வார்கள். இன்னும் இவர் புராணங்களுக்குப் பொருள் கூறிப் பிரசங்கஞ் செய்வதிலும் வல்லவர். தம் விருத்தாப்பிய தசை முதிரமுதிர, சிவனடிக்கண் அன் பும் முதிரப்பெற்று, அவனடிப் பூசையையுங் கிரமமாகச் செய்துவந்தனர். இவர் கவித்திறமுணர ஈழமண்டல சத கத்துள் ஒரு கவியை இங்கே காட்டுதும்:—

### வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை

பொன்னம் பலப்பெயர்ப் புட்கலா வர்த்தம்
புராதன நியாயோததி
புகழ்சங்க லக்கியப் புணரிரா மாயணப்
பொருவறு மளக்கர்புவியிற்
றுன்னித் துலங்கிமலி சூதஞெலி மாலையாந்
தொல்பயோ ததிகாவியத்
துங்கவார் கவிபார தப்பரவை லக்கணத்
தொடுகடல்க டுய்த்தெழுந்தே
மின்னிலந் திடுக்கிட விடித்தியாழ்ப் பாணகிரி
மீதேறி நல்லைமுடிமேன்
மேவிப் படிந்துசெந் தமிழ்மேதை நிதிமாரி
மிகவும்பொ ழிந்திட்டதிச்
சன்மத்து வித்தியார்த் திப்பயிர் தழைத்திடச்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

இவர் பாடிய தனிச்செய்யுளொன்றையும் இங்கே காட்டுதும்:

குருவாகி ஞானங் கொழுத்தவல் லாயெனைக் கூய்மலரின்
மருவாகி முத்தி வழங்கவல் லாய்வறி யேனைவண்மைத்
தருவாகி யாங்கணுந் தாங்கவல் லாய்சிற் சபாமத்தியிற்
திருவாகி நிற்குஞ் சிவகாமி தேவியென் சீரமுதே.

இவருக்கு ஐந்து புத்திரர்கள் உளர். அவர்களுள் முதற்புதல்வர் திருஞானசம்பந்தப்பிள்ளை. இவர் நெடுங் காலமாக 'இந்துசாதன'ப் பத்திராதிபராக இருந்து வருதலோடு இந்துக்கல்லூரி என்னும் ஆங்கில வித்தியாசாலையிலே தமிழ்ப்பண்டிதராக இருந்து கல்விகற்பித்தும் வருகின்றனர். இரண்டாவது புதல்வர் மாணிக்கவாசகர் இவர் ஆங்கிலம்பயின்று நியாயவாதி உத்தியோகத்திலமர்ந்திருக்கின்றனர். இவர், கொக்குவில் ஸ்ரீமான் சபாரத்தின முதலியார் புத்திரியை விவாகஞ்செய்து கொண்டு அங்கேயே வாழ்கின்றனர். மூன்றாவது புதல்வர் மகாலிங்கசிவமாவர். இவர் தமிழிற் சிறந்த பண்டிதர். ஆங்கிலத்திலும் சம்ஸ்கிருதத்திலும் இவருக்குச் சிறிது அறிவுண்டு. வாக்குச் சாதுர்யமும் சமயோசித புத்தியுமுள்ளவர். சபையோர் விரும்பிக் கேட்குமாறு இனிமையாகப் பேசும் சாமர்த்தியமும் பூண்டவர். அதனால் பற்பல இடங்களிலும் இவரை யழைத்துப் பிரசங்கஞ் செய்விப்பார்கள். நற்குணமும் தெய்வ பக்தியும் வாய்ந்தவர். பிறரை இகழும் குணம் இல்லாதவர். நான்காவது புத்திரர் கந்தசுவாமி என்பவராவர். இவர் கொழும்பில் ஆங்கில ஆசிரியராக இருக்கிறார். ஐந்தாவது புத்திரர் நடராசப்பிள்ளை. இவர் ஆங்கிலங் கற்று ஆங்கில வித்தியாசாலையிற் படிப்பித்து வருகின்றனர். இவரும் மிகச் சிறந்த குணமுள்ளவர்.

# சபாபதி நாவலர்

இவர் சாலிவாகன சகாப்தம் ௧௭௬௬-ல் வடகோவைப்பதியிலே, வேளாளர் மரபிலே சுயம்புநாதபிள்ளை செய்த அருந்தவப்பயனால் அவருக்குப் புதல்வராகப் பிறந்தனர். தந்தையார் இவருக்கு உரிய காலத்தில் அவ்வூரிலிருந்த ஜகநாதையர் எனப் பெயரிய பிராமண குருவினால் வித்தியாரம்பஞ் செய்வித்து அவரையே ஆசிரியராக்கினர். அவரிடம் இவர் கல்விபயின்று வருநாளிற் தந்தையார் இவருக்கு உயர்ந்த இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்க விரும்பித் தமிழ் சம்ஸ்கிருதம் என்னும் இரு மொழியினும் வல்லவராய் நீர்வேலிப் பதியிலிருந்த சங்கரபண்டிதரிடம் இவரை யழைத்துச் சென்று அவருக்குத் தம் கருத்தைத் தெரிவித்தனர். பண்டிதரும் அவர் கருத்துக்கிசைந்து அவ்வாறே இவருக்கு இருபாஷையிலும் உயர்ந்த நூல்களைக் கிரமமாகக் கற்பித்து வந்தனர். இவரும் அவரிடம் இரு மொழியிலுமுள்ள உயர்ந்த நூல்களைக் கிரமமாகக் கற்றுத் தேறினர். ஆறுமுக நாவலரிடமும் இவர் சில நூல்களைக் கேட்டனரென்ப. வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யிடத்திலே தேவர்குறளைப் பரிமேலழகர் உரையுடன் நன்கு கற்றனர். இவர் இளமையிலேயே ஆங்கிலமுங் கற்று அதன் கண்ணும் மிகப் பழக்கமுடையராய் விளங்கினர்.

இவர் கல்வியிற் சிறந்து விளங்கும்பொழுது இவரது கல்வித்திறமையை யறிந்த ஆறுமுகநாவலர் சிதம்பரத்திலே தம்மாற் றாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு இவரைத் தலைமையாசிரியராக அனுப்பினர். இவரங்குச்சென்று தலைமையாசிரியராகவிருந்து

கற்பித்துவந்தனர். சிலகாலஞ் சென்றபின் இவர் திருவாவடுதுறையை அடைந்து அவ்வாதீனத்துப் பதினாறுவது சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் அருளுபதேசம் பெற்று அவர்களிடம் பன்னிரண்டுவருடம் சந்தான சைவ சித்தாந்த நூல்களை முறையாகக் கற்று வல்லராகி இலக்கண இலக்கிய தருக்க வேதாந்த சித்தாந்த சாகரமாய் அவ்வாதீன வித்துவ சிகாமணியாய் விளங்கினார்.

அவையிலிருந்து கேட்போர் மகிழப் பேசும் இவரது உரை வன்மையினையும் மாயாவாதம் முதலிய சமய வாதிகளையெல்லாம் வாயடங்கச் செய்யும் நியாயவாத வன்மையினையும் நோக்கி இவருக்கு நாவலரென்னுஞ் சிறப்புப்பெயரை மனமகிழ்ந்து அவ்வாதீனத்துச் சுப்பிரமணிய தேசிகர் அளித்தனர் என்றும், அதனை அநுவதித்து மதுரைத் திருஞானசம்பந்த ராதீனகர்த்தராகிய ஞானசம்பந்த தேசிகர் மகாவித்துவான் என்னும் விசேடணத்தோடு சேர்த்துக் கூறி ஆசிர்வதித்தனர் என்றும் கூறுப.

திருவாவடுதுறை யாதீனத்திலே சிவஞான போதத்திற்குச் சிவஞானமுனிவர் அருளிச்செய்த திராவிட மாபாடிய ஏட்டுப்பிரதியொன்று உளது. அதனை வித்துவான்கள் பெற்றுப் படித்த லரிதாகும். அப்பிரதியை இவர் மஹா சந்நிதானமாய் விளங்கிய சுப்பிரமணிய தேசிகரிடம் அன்போடு பெற்றுப் படித்தனர். இதனால் இவர்பால் ஆதீனத்திற்கிருந்த மதிப்பு எத்துணையதென் பதை நாம் அறிந்துகொள்ளலாம். (அவ்வேட்டுப் பிரதியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் பெற்றுப் படித்தனர் என்று சிலர் கூற யாங் கேட்டுள்ளேம்.)

இவர் நீண்டகாலஞ் சென்னையிலே வசித்தனர். வசித்த காலத்திலே தமிழ்நாடெங்குஞ் சென்று பற்பல பிரசங்கங்களைச் செய்தும், பற்பல கட்டுரைகளைப் பத்திரிகையில் வரைந்தும், புது நூல்களை இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்தியும் தமிழையும் சைவசமயத்தையும் வளர்த்து வந்தனர். இவராற் றமிழ்நாட்டையும் நன்மையைக் குறித்துத் தமிழ்நாட்டிலுள்ள மடாதிபதிகளும் கோயிலதிகாரிகளும் பிரபுக்களும் இவரைப் புகழ்ந்து போற்றி மதித்துவந்தனர்.

இராமநாதபுரத்தரசராகிய பாஸ்கரசேதுபதி அவர்களும் இவரிடத்தே பெரும் பற்றும் மதிப்புமுள்ளவராய் இருந்தனர். அதனை இவருக்கெழுதிய கடிதங்களில்,

"சைவ சிகாமணியாயும் பரசமய கோளரியாயும் விளங்காநிற்கும் கனம் நாவலரவர்களுக்கு" என்றும்,

"சைவப் பயிர்தழைக்கப் பிரசங்க இடிமுழக்குடனும், விபூதி ருத்திராக்ஷப் பொலிவாகும் மின்னலுடனும் ஓங்கி வளரும் ஒரு முகிலாகிய கனம் நாவலரவர்களுக்கு" என்றும் பாராட்டிக் கூறியவற்றால் அறியலாகும்.

இவர்காலத்தே திருவாவடுதுறை மடாதிபதியாயிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரேயன்றி அவருக்குப்பின் மடாதிபதியான அம்பலவாண தேசிகரும் இவரைப் பெரிதும் போற்றி மதித்தனர். இவ்வாதீன மடாதிபதியன்றி மதுரையாதீன மடாதிபதியாயிருந்த ஞானசம்பந்த தேசிகரும், சூரியனார்கோயில் மடாதிபதியாயிருந்த முத்துக்குமார தேசிகரும் இவரைத் தங்கள் வாக்காலும் திருமுகங்களாலும் பெரிதும் போற்றி மதித்துள்ளார்கள்.

இவர் கவி இயற்றுவதிலும் வல்லுநர். இவரியற்றிய நூல்களெல்லாம் மாதவச் சிவஞான சுவாமிகளுடைய போக்கினைப் படியெடுத்துள்ளனவாகும். இவரியற்றிய நூல்களாவன:— யேசுமத சங்கற்ப நிராகரணம், சிதம்பர சபாநாத புராணம், சிவகர்ணாமிர்தம், பாரததாற்பரிய சங்கிரகம், இராமாயணதாற்பரியசங்கிரகம், சதுர்வேத தாற்பரியசங்கிரகம், திருச்சிற்றம்பல யமகவந்தாதி, திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, (மாவையந்தாதி, நல்லைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம்,) இலக்கணவிளக்கப் பதிப்புரை மறுப்பு, வைதிக காவிய தூஷண மறுப்பு, திராவிடப்பிரகாசிகை என்பனவாம். இவர் பதிப்பித்த நூல் சிவசமவாதஉரை மறுப்பு. [சிவஞானசுவாமிகள் இயற்றியது]. [பாரததாற்பரியசங்கிரகம், இராமாயண தாற்பரியசங்கிரகம், சதுர்வேததாற்பரியசங்கிரகம், என்பன இவரால் மொழிபெயர்க்கப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களாகும்]. [இவரியற்றிய சிதம்பரசபாநாதபுராணம் மிகச் சிறப்புடையதாகும்.] அதனுள் ஒரு செய்யுளை இங்கே காட்டுதும்:

"ஞானமிக வளரினஃ றிணையவுயர் திணையாகு
நவிலஞ் ஞான
வீனமிக வளரினுயர் திணையவஃ றிணையாகு
மென்று தேற்றன்
மானவஃ றிணைமேலு மாண்டஉயர் திணைகீழும்
வடிவிற் காட்டித்
தேனமரும் பொழிற்றில்லைச் சிகரிவாழ் கற்பகத்தை
வணக்கஞ் செய்வாம்."

இவர் இயற்றிய யேசுமத சங்கற்ப நிராகரணம், சிவஞானசித்தியார் பரபக்கப்போக்கும் நோக்கும் உடைய செய்யுட்களான் அமைந்த சிறந்தநூல் என அறிஞர் பலர் பாராட்டிக் கூறுவர். இந்நூலுக்குச் சிறப்புப்

பாயிரமாக ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் பாடிய விருத்தங்களும் மிகச் சிறந்தனவாய் இவர் புலமையையும் நன்கு தெரிக்கின்றன.

இவர் கரவருடம் சித்திரைமாதம் சிதம்பரத்திற்குக் கும்பாபிஷேக தரிசனத்தின்பொருட்டுச் சென்றனர். அப்பொழுது அங்கே தரிசனத்தின்பொருட்டு வந்திருந்த மாட்சிமைதங்கிய பாஸ்கரசேதுபதி மகாராஜா இவரைச் சந்தித்துத் தம்மொடுகூட இராமநாதபுரத்திற்கு அழைத்துச் சென்று அங்கே இவரைச் சிலகாலம் வசிக்கச்செய்தனர். அக்காலத்திலே அங்கே சேதுபதி மகாராஜா வேண்டுகோட்படி சுத்தாத்துவித சைவக்கொள்கையை நிலைநாட்டும்படி பல பிரசங்கங்கள் செய்தனர். பின் இவர்கள் மகாராஜாவோடு கூட ஆலயதரிசனஞ் செய்யும்படி சென்றபொழுது உத்தரகோசமங்கை, தூத்துக்குடி, திருச்செந்தூர், திருக்குற்றாலம் முதலிய இடங்களிலெல்லாம் மகாராஜாவே அக்கிராசனராக வீற்றிருப்பப் பிரசங்கஞ் செய்தனர்.

இவர் செய்த பிரசங்கங்களைக்கேட்ட மகாராஜா மீட்டுந் தம்மூருக்கு இவரை அழைத்துச்சென்று தமது அத்தாணிமண்டபத்தில் உயராசனத்திருத்தி நண்பினால் இனிய உரைகள் கூறிச் சன்மானமாக மூவாயிரம் ரூபா அளித்து வேண்டியபோது வேறும் உதவி செய்வதாகக் கூறினார்கள். அப்போது இவர் மகாராஜாவிடம் விடைபெற்றுக்கொண்டு திருப்பூவணம், திருவாலவாய் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு சென்னைமாநகர் சேர்ந்தனர்.

மகாராஜா செய்த சன்மானத்தோடு சென்னைமாநகர் சேர்ந்தபின் சித்தாந்த சைவபரிபாலனத்தின்பொருட்டுச் சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலை எனப் பெயரிய

யந்திரசாலையைத் தாபித்து 'ஞானமிர்தம்' என்னுஞ் செந்தமிழ்ப் பத்திரிகையை நடாத்தி வந்தனர். அப்பத்திரிகை தமிழுலகிற்குப் பயன்படும் அரிய விஷயங்கள் பொதிந்ததாக விளங்கிற்று. அப்பத்திரிகைக்குப் பாஸ்கரசேதுபதி மகாராஜாவும் பொருளுதவி புரிந்தனர். 'பிரமவித்தியா' என்னும் பத்திரிகையால் [2-ம் பு. 12 இ. ப.] அப்பத்திரிகை "'ஞானமிர்தம்' என்னும் ஓரமிர்தம், புத்தியென்னும் மத்தினாற் கடைய, நாவலர் என்னும் திருப்பாற்கடலில் பிறந்து உலாவுகின்றது" என்று புகழப்பட்டது. சென்னையில் இருக்கும்பொழுது மயிலாப்பூரிற் பல பிரசங்கங்கள் செய்துள்ளார். பின் நடராச தரிசனஞ் செய்யுமவாவினால் இவர் சிதம்பரஞ் சென்றனர். சென்று அங்குள்ள தமதில்லத்திற் சிலமாதகாலந் தங்கி இருந்தனர்.

இருக்கும்போது தமது தேகவியோககாலத்தை யாதோ ஒரு குறியினாலறிந்துபோலும் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் ச. பொன்னம்பலப்பிள்ளை, சுவாமிநாதபண்டிதர், சிவப்பிரகாசபண்டிதர் முதலியோரை இவர் வருவித்து அவர்கள் கேட்பப் "பவனமாய்ச் சோடையாய்" என்னுந் தேவாரத்தை ஓதி அதன் பொருளையுமுரைத்து இன்புறச்செய்து தமதுஉயிர் நீங்கப்பெற்றனர். அப்போது வயசு ஐம்பத்தெட்டு. இவர் தேகவியோகமான காலம் கிறீஸ்தாப்தம் ஆயிரத்துத்தொழாயிரத்துமூன்றாமாண்டு. இவரிடத்திற் கல்விகற்ற மாணவருட் சிறந்தவர்கள் சிதம்பரம் சோமசுந்தரமுதலியார், சிவராமச்செட்டியார், விழுப்புரம் இராமசாமிப்பிள்ளை, மாகறல் கார்த்திகேசமுதலியார், (திருமயிலை சிங்காரவேலுமுதலியார், பாலசுந்தர முதலியார்,) சுழிபுரஞ் சிவப்பிரகாசபண்டிதர் முதலியோர். இவர்களுட் பாலசுந்தரமுதலியார் அவர்கள் இவரை ஒரு தமிழ்த் தெய்வமாகக் கொண்டாடுபவர்கள். சிவஞான

முனிவர்போல் வசனநடை எழுதுவதில் இவர் சிறந்து விளங்கியது உலகறிந்த தொன்றாகும்.

இவர் சங்கரபண்டிதர் இயற்றிய சைவப்பிரகாசனம் என்னும் நூற்கு அளித்த சிறப்புப்பாயிரக் கவியையும் இங்கே தருதும் :—

"நற்சுருதி யிற்பரந்த ஞானமெலாந் தான்சுருக்கிப்
பொற்புறவே சொற்கொள் பொருள்விளக்கிச்—சொற்ற
சைவப்ர காசனநூல் சாற்றுபுகழ்ச் சங்கரனுஞ்
சைவப்ர காசபண்டி தன்."

## கதிரைவேற்பிள்ளை

இவர் ஏறக்குறைய ககo வருடங்களுக்குமுன்னே உடுப்பிட்டி என்னுமூரிலே வேளாளர்குலத்திலே பிரபலம்பெற்று விளங்கிய குமாரசுவாமி முதலியாருக்குப் புதல்வராகப் பிறந்தவர். அத்துவக்காத்தும் இலங்கைச் சட்டநிரூபணசபைப் பிரதிநிதிகளுள் ஒருவராயிருந்தவருமாகிய கௌரவ பாலசிங்கத்துக்குத் தந்தையார். கடவுட்பத்தியும் நல்லொழுக்கமுமுடையவர். அங்கிலம் தமிழ் என்னும் இருபாஷையினும் பாண்டித்தியமுடையவர். அங்கில அரசநீதிகளும் மநுநீதிகளும் நன்கறிந்தவர். ஊர்காவற்றுறை நியாயசாலையிலே (பொலிஸ்கோடு) நீதிபதியாயிருந்தவர். வேதாந்த சித்தாந்த நூல்களும் தருக்க நூல்களும் நீதிநூல்களும் வேறுநூல்களுங் கற்றவர். சம்ஸ்கிருதமும் நன்கு தெரிந்தவர்.

சுன்னாகம், அ. குமாரசுவாமிப்புலவரையும், உடுப்பிட்டி, ஆறுமுகப்பிள்ளையையும், ஊரெழு, சு. சரவணமுத்துப்புலவரையும், பிறரையும் சிலசில பாகங்களுக்கு லேககர்களும் துணைவர்களுமாகக்கொண்டு தமிழிற் பெரிய

ஓரகராதி தகரவருக்கம்வரையு மெழுதினவர். அந்நூல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் அச்சிடப்பட்டுள்ளது. தர்க்க பரிபாஷை என்னும் நூலு மிவராற் பரிசோதித்தச்சிடப்பட்டது. இவர் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் தேகவியோகமாயினர்.

## அம்பிகைபாகர்

இவர் ஏறக்குறைய எண்பத்தைந்துவருடங்களுக்கு முன்னே இணுவில் என்னுமூரிலே வேளாளர்குலத்திலே பிறந்தவர். கந்தபுராணம், தணிகைப்புராணம், பாரதம் முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங்களையும் கற்றவர். நாவலரிடம் சேனாவரையத்தையும் நடராசையரிடஞ் சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாஸ்திரங்களையும் பாடங் கேட்டவர். இணுவை அந்தாதி, தணிகைப்புராணத்திற்கு நகரப் படலம்வரையுமுரை, சூளாமணி வசனம் முதலியன இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்தியவர். தணிகைப்புராணம் முழுவதற்கும் ஒரு பொழிப்புரை எழுதியுள்ளாரென அறிகின்றேம். அது அச்சிடப்படவில்லை. இவருக்கும் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்கும் மிகுந்த நண்புண்டு. இவரிடத்து யாம் தணிகைப்புராணத்துக்குப் பொருள்கேட்டறிந்துள்ளேம். இவரியற்றிய இணுவையந்தாதியில் ஒரு செய்யுள் காட்டுதும்:—

"திருத்தங் கெழுமி யுடைத்தாமர் தில்லைத் திருச்சபையில்
நிருத்தங்கொ ளீச ரளித்தமுன் னேன்சிர நீண்மருப்பொன்
றுருத்தங் கொசித்த வுணற்செற்ற முன்னே னுறுதுணைகாண்
மருத்தங் கிணுவையந் தாதியென் வாயில் வருவிக்கவே."

# கதிர்காமையர்

இவர் இற்றைக்கு அறு வருடங்களுக்குமுன்னே புன்னாலைக்கட்டுவன் என்னுமூரிலே அந்தணர் மரபிலே சங்கர ஐயருக்குப் புதல்வராகப் பிறந்தவர். உரியகாலத்திலே தந்தையாரால் வித்தியாரம்பஞ்செய்யப்பெற்று அவரிடத்திலே சிலவாண்டு சம்ஸ்கிருதமுந் தமிழும் பயின்றபின், ஊரெழு என்னுமூரிலிருந்த மயில்வாகனப்புலவர் என்பவரிடத்திற் சென்று தமிழிலக்கியங்கள் சில கற்றவர். கந்தபுராணம், பெரியபுராணம், பாரதம் என்னும் இலக்கியங்களில் அதிக பயிற்சி உடையர். மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, புலியூரந்தாதி என்பவற்றிலும் மிகப் பயிற்சி உடையர். சூடாமணி நிகண்டை முதலில் இருந்து முடிவுபோக வாய்ப்பாடமாகச் சொல்ல வல்லவர். நீர்வேலிச் சங்கரபண்டிதரிடத்திலே சென்று தமக்கு நேர்ந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தவர். ஆறுமுகநாவலரோடும் பரிசயமுடையவர். சுன்னகத்து முருகேசபண்டிதர் இவருக்கு நண்பராவர். இணுவில் நடராசையரிடஞ் சித்தாந்த நூல்களைக் கேட்டறிந்தவர். சிவஞானசித்தியாருரைகளுள் ஒன்றாகிய ஞானப்பிரகாசருரையில் நன்கு பயின்றவர். ஊரெழு சரவணமுத்துப்புலவருங் காசிவாசி செந்திநாதையருந் தமதிளமைப்பருவத்திலே இவரிடம் பாடங்கேட்டவர்களாவர். இவரிடம் யாமும் இளமைப்பாராயத்திலே பாடங் கேட்டுள்ளேம். (இவர் எமக்குப் பெரியதந்தையாராவர்.) இவர் புன்னாலைக்கட்டுவனிலே ஒரு தமிழ் வித்தியாசாலையைத் தாபித்து அரசினர் நன்கொடையும் பெறச்செய்தவர். இவர்க்கு நான்குபுத்திரருளர். பின்னாளிலே புத்திரர்களும் ஆசிரியர்களாக இருந்து அவ்வித்தியாசாலையிற் கற்பித்துவந்தனர். அவ்வித்தியாசாலை இப்பொழுது அரசினரால் நடாத்தப்படுகின்றது. இவர் புதல்வர்களுள் முதற் புதல்வராகிய சுந்தரமூர்த்தி ஐயரென்பவர் தாம்

விவாகஞ்செய்த ஊராகிய தெல்லிப்பழையிலே ஒரு தமிழ் வித்தியாசாலையைத் தாபித்துத் தாமே தலைமையாசிரியராகவிருந்து நடாத்தி அரசினர் நன்கொடையும் பெறச் செய்தனர். அஃது இப்பொழுதும் நடந்துவருகின்றது. புத்தூர், சிறுப்பிட்டி, அச்செழு, ஊரெழு, ஏழாலை, மயிலிட்டி, தையிட்டி, மாவிட்டபுரம், வயாவிளான், பலாலி முதலிய ஊர்களிலிருந்துவந்து பலர் இவரிடங் கற்று அறிஞர்களாயினர்.

## நடராசையர்

இவர் ஏறக்குறைய 95 வருடங்களுக்குமுன் இணுவில் என்னுமூரிலே அந்தணர் குலத்திலே பிறந்தவர். இலக்கண இலக்கியங்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் ஆறுமுகநாவலரிடங் கற்றவர். சித்தாந்தசாத்திரங்களிலே பாண்டித்தியம் பெற்றவர். சிதம்பரம், மதுரை முதலிய சிவஸ்தலங்களிலே பலநாள் வசித்தவர். அங்கும் இங்கும் பலர்க்குச் சித்தாந்த சாத்திரம் படிப்பித்தவர். சோதிடம், மந்திரம், வைத்தியம், யோகம், வடமொழி முதலியவைகளுந் தெரிந்தவர். கவி பாடுந் திறமுமுடையவர். தற்புகழ்ச்சி தருக்கு தலையெடுப்பு முதலிய தீக்குணங்களில்லாதவர். இவர் ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்த நூல்:

சிவஞானசித்தியார் சுபக்கம் ஞானப்பிரகாசர் உரை. இவர் ஞானப்பிரகாசர் உரையைக் குறித்துப் பாடிய செய்யுள் வருமாறு:—

"சொல்லி னவிற் றரிசறுஞ் சோத்திரத்
தொல்லு மேற்சிவ ஞான முதித்திடும்
செல்லு மெய்யரு ணந்திசெய் சித்திக்கு
நல்ல ஞானப்ர காச னவிற்றுரை."

# திருஞானசம்பந்தப்பிள்ளை

இவர் ஏறக்குறைய ௯௦ வருடங்களுக்குமுன்னே நல்லூரிலே வேளாளர் குலத்திலே பிறந்தவர். நாவலர்க்கும் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளைக்கும் மாணவகர். இலக்கண இலக்கியங்களுந் தருக்கமுஞ் சித்தாந்த சாத்திரமுங் கற்றவர். தர்க்கசாத்திர ஆராய்ச்சியிலுந் தர்க்கவாதஞ்செய்வதிலு மிக விருப்பமுடையவர். அதுபற்றி இவர் தர்க்ககுடாரதாலுதாரி என எவராலு மழைக்கப்படுவர். கும்பகோணத்திலே சில ஆண்டுகளும் சிதம்பரத்திலே பல ஆண்டுகளும் வசித்தவர். பலருக்குப் பாடஞ்சொன்னவர். தர்க்காமிர்த மொழிபெயர்ப்பு, அரிகர தாரதம்மியம், வேதாகமவாததீபிகை, நாராயணபரத்துவ நிரசனம் முதலிய நூல்கள் செய்தவர். இவர்செய்த அரிகரதாரதம்மியத்துள் ஒருசெய்யுள் இங்கே காட்டுதும்:—

"ஒருவனே ரிடத்திலிந்த விசுவத்தில்
வசிக்கையி லுவகை யுற்றான்
கருதுமற்றை யவன்விசுவே சுரனெனவே
யவனியினிற் கழறப் பெற்றான்
இருவர்தமி லெவனதிக னெனவூகித்
துண்மையிசைத் திடுக மாசு
மருவுதவி லறிவுடையீர் யாமவனை
யடைந்துவழி படுவா மன்றே."

இத்தகைய இவர் இற்றைக்கு ௩௮ வருடங்களுக்கு முன் சிதம்பரத்திற் றேகவியோகமாயினர்.

# சிவசம்புப்புலவர்

இவர் சாலிவாகன சகாப்தம் ௧௭௫௨-ல் யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையைச் சார்ந்த உடுப்பிட்டியிலே பெரும் பிரபுவாயிருந்த அருளம்பல முதலியாருக்குப் புதல்வராய் அவதரித்தவர். இருபாலைச் சேனாதிராய முதலியாருடைய மாணாக்கராய் விளங்கிய நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரிடத்தும் அவர் மாணாக்கராய் விளங்கிய நல்லூர்ச் சம்பந்தப் புலவரிடத்தும் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களும், இராமாயணம் பாரதம் முதலிய இலக்கியங்களும் பிறவும் கற்றுணர்ந்தவர். இளமை தொடங்கிக் கவிபாடுஞ் சாமர்த்தியமுமுடையவர். ஈழமண்டலத்திலே பிரபந்தம் பாடியவர்களுள் இவரே அதிகமான பிரபந்தம் பாடியவர். தன் மேற் கவி பாடிவரும் பாவலர்களுக்கெல்லாம் புட்கலாவர்த்தமென்னப் பொன்மழை பொழியுங் காவலரும், செந்தமிழ்ப் புலவர்கள் கூடிய சங்கங்களிற் சிங்கம்போல் நின்று பிரசங்கஞ் செய்யும் நாவலரும், செந்தமிழ் மொழி அபிமான சீலருமாகிய இராமநாதபுரம் ரவிகுலமுத்து விஜய ரகுநாத பாஸ்கர சேதுபதி மகாராசாவின்மீது கல்லாடக் கலித்துறையும், நான்மணிமாலையும், இரட்டை மணிமாலையும் வேறு தனிக் கவிகளும் பாடிச்சென்று அவர் முன்னிலையிலே ஸ்ரீமாந் ரா. இராகவ ஐயங்கார் முதலிய வித்துவான்கள் கூடிய சபையில் அரங்கேற்றி அவர் மதிப்பும் பரிசிலும் பெற்றவர். பொன்னுச்சாமி தேவரவர்கள் அருந்தவப்புதல்வரும் மதுரையின்கண் இப்பொழுது நிகழுந் தமிழ்ச்சங்கத்தைத் தாபித்தவருஞ் செந்தமிழ்க் கலைஞருமாகிய ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கள் மேலும் ஒரு நான்மணிமாலை பாடிப் பரிசிலும் பெற்றவர். இவையன்றி இந்தியாவிலும் ஈழ மண்டலத்

திலுமுள்ள சில ஆலயங்கள்மீதும் பல பிரபந்தங்கள் பாடியுள்ளார். வேறும் பிரபுக்கள்மீதும் சில நூல்கள் இயற்றியுள்ளார். இவரியற்றிய பிரபந்தங்கள் ஏறக்குறைய அறுபது வரையிலுள்ளன. அவற்றின் பெயர்கள் ஈண்டுக் காட்டப்புகின் விரியுமென்றஞ்சி விடுக்கின்றேம். பாடும்வன்மை நோக்கி இவருக்குப் புலவரென்னும் பெயர் நாவலராற் கொடுக்கப்பட்டதென்பர்.

இவர் மேற்கூறிய பிரபந்தங்கள் முதலியவற்றை இயற்றியதேயன்றி, சில நூல்களுக்கு உரையும் இயற்றியுள்ளார். அவற்றுள் அச்சிட்டு வெளிவந்தன மறைசையந்தாதியுரை, யாப்பருங்கலக்காரிகையுரை, கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படல வுரை முதலியன.

அக்காலத்திலே இவரிடத்துக் கற்று வித்துவான்களானவர்கள் பலருளர். அவருட் சிறந்து விளங்கியவர்கள் வல்லுவெட்டித்துறை, இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்திலிங்கம்பிள்ளையும், அவ்வூர் த. அருணுசலம் பிள்ளையும், புலோலி, ம. தில்லைநாத நாவலரும், வ. குமாரசுவாமிப் புலவரும், அ. வேல்மயில்வாகனச் செட்டியாரும், தும்பளை, ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்களும், கரணவாய் வடக்கு, சு. கனகசபாபதிக் குருக்களும், கரணவாய் தெற்கு, தி. ஞானப்பிரகாச தேசிகரும், கை. திருஞானசம்பந்த தேசிகரும், கை. நமசிவாய தேசிகரும், அல்வாய், நொத்தாரிசு இ. ஆறுமுகம்பிள்ளையும், பொலிகண்டி, வே. சிதம்பரப்பிள்ளையும், மந்துவில், ஆசிரியர் வயித்திலிங்கச் செட்டியாரும் முதலாயினோர்.

இவர் தமது தந்தையின் குலப்புகல்வராகிய கோப்பாய் அம்பலவாண முதலியார்மீதும், அவர் புத்திரரும் சமாதான நீதிபதியுமாகிய மயில்வாகனம் அவர்கள்மீதும் மிகுந்த அன்பும் மதிப்புமுடையவர். மயில்வாகனம்

அவர்கள் தேகவியோகமான காலத்து அவர்மீது மயில் வாகன வம்ச வைபவமென்னும் ஒரு நூலும் இயற்றி யுள்ளார்.

இவரியற்றிய கல்லாடக் கலித்துறை முதலியவற் றுள் இவர் பாடற்றிறம் அறியும்பொருட்டுச் சில செய் யுள்கள் காட்டுதும்.

## பாற்கரசேதுபதி கல்லாடக் கலித்துறை

### உண்மகிழ்ந் துரைத்தல்

பொருந்தனல் வெஞ்சுரம் பொன்னுக்குற் றேன்கட்
புணர்த்ததுன்புன்
வருந்தன மூழ்கத் தொடமுனம் பாற்கர வள்ளறந்த
பெருந்தனந் தீண்டமுன் பாவல ரொற்கம் பிரிந்ததென
மருந்தன வின்மொழி யாய்தீர்ந்த தற்புதம் வாய்ப்பித்ததே.

### பதிபரிசுரைத்தல்

வாத்திய லோங்கிய பாற்கர ஞட்டு வளவயல்பார்
தாத்தியல் வையைப் பெருக்கது பார்மலர்த் தண்டலைபார்
புரத்தியல் பாரன்ன சத்திரம் பார்செல்வர் பொன்மனைபார்
சாத்திய னேக்கன மேபார் தருங்கல்விச் சாலைகளே.

## பாற்கரசேதுபதி நான்மணிமாலை

### வெண்பா

உம்பரிடைப் பாற்கரன்று னேவாத வெஞ்சுடரோ
னிம்பரிடைப் பாற்கரன்றண் ணென்சுடரோன் — பம்பும்
புறவிருளைப் போக்குமவன் பொங்கவகத் தூர்கார்
நிறவிருளைப் போக்குமிவ னின்று.

### கலித்துறை

நின்றஞ்ச மென்ன வடைபவர்க் கன்னை நெடிதுறமேற்
சென்றஞ் சவித்த வடியவர்க் காவி செழுந்தமிழ்க்கு
மன்றஞ் சகத்துக்குக் கற்பக மன்னர் மகுடமணி
குன்றஞ் சமான மெனுங்குணப் பாற்கரக் கொற்றவனே.

## பாற்கரசேதுபதி இரட்டைமணிமாலை

### கலித்துறை

மாணுறு மீசை பொறைநிறை பத்திமை வாய்மையுறக்
காணுறு நீதியுட் டூய்மை கருணைநற் கல்வியின்ன
பூணுறு மேரு நிகர்புயப் பாற்கரன் புண்ணியமெய்க்
கேணுறு மங்க மெனத்தவத் தாற்பெரி தெய்தியவே.

## பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை

### வெண்பா

சீர்வாய்ந்த சைவ சிகாமணிபொன் னுச்சாமிப்
பேர்வாய்ந்த செல்வப் பிரபுமைந்த—னேர்வாய்ந்த
பாண்டித் துரையையுற்ற பாவலர்க ளில்லமெல்லாம்
வேண்டித் திருமருவு மெய்.

சொல்லாரும் பாமாலை சூடினன் வண்மையினு
ரெல்லாரு மோர்வடிவா யெய்ந்தனையா—னல்லார்கள்
பல்லாரு மேத்தியிடும் பாண்டித் துரைபுகழ்மை
செல்லாத தெம்மா திரம்.

## மயில்வாகன வம்ச வைபவம்

தென்னிலங்கைத் தீவினுக்கோர் தீப மென்கோ
தெளிதருசஞ் சீவியென்கோ செந்தே னென்கோ
மன்னர்முடி மணியென்கோ தரும தான
மாளிகையென் கோசுகுண வடவெற் பென்கோ

புன்னெறியி லாக்கருணைப் புணரி யென்கோ
போதருமோக் குஞ்சுகந்த புட்ப மென்கோ
சொன்னதரு வென்கோமெய்ச் சுரபி யென்கோ
துங்கமயில் வாகனமா துரையைத் தானே.

இவர், ஆறுமுகநாவலரவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்தபோது அவர்மீது பாடிய கவிகளுள் ஒன்றையும் ஈண்டுத் தருதும்:

ஆரூர னில்லை புகலியர் கோனில்லை யப்பனில்லை
சீரூரு மாணிக்க வாசக னில்லை திசையளந்த
மேரூரு மாறு முகநா வலனில்லை பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.

இக் கவியைப் பாடிய இப்புலவரைப் புகழ்ந்து சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் புகழ்ந்து பாடிய ஒரு கவியையும் ஈண்டுக் காட்டுதும்:

ஆரூர னில்லையென் காரிகை யாலிவ் வவனிதொழப்
பேரூரு மாறு முகநா வலர்பெரு மான்பெருமை
சீரூரு மாறு தெரித்தாய் சிவசம்பு தேசிகநிற்
காரூரி னேரின்றன் றேநின்சொல் வன்மை யறிந்தனனே.

இத்தகைய இப்புலவர்பெருந்தகை சாலிவாகன சகாப்தம் ௧அ௩௧-க்குச் சமமான சாதாரண வருஷம் புரட்டாதி மாதம் ௧௩-ம் திகதி இவ்வுலக வாழ்வைத் துறந்தார். அதனை,

## வெண்பா

சாதா ரணவனிதை சாந்தன்றேப் பிற்பக்க
மீதாரும் பன்மூன்றின் மேதினிவிட்—டாதார
மன்னு சிவசம்பு மாபுலவன் சங்கரனார்
துன்னுலகுற் றுற்றான் சுகம்.

என்னும் வெண்பாவா லறிக.

# வேன்மயில்வாகனப்புலவர்

இவர் முன்பின் சாலிவாகன சகாப்தம் 1788 வரையில் அச்சுவேலி என்னுமூரிற் பிறந்தவர். இவர் தந்தையார் சிதம்பரச்செட்டியாருக்குப் புதல்வராகிய அரிகரபுத்திரச்செட்டியார். தாயார் புலோலியூரில் வசித்த வைத்தியநாதச் செட்டியாருக்குப் புதல்வியாகிய முத்தாச்சி அம்மை. பரம்பரையாகச் சைவாசாரம் பெற்ற இருமரபுந் தூய வைசிய குலத்தவர்களாகிய இவ்விருவருக்கும் அருந்தவப் புதல்வராகப் பிறந்த இவர், உரியகாலத்திலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்றுத் தமதூர்ப் பாடசாலை யொன்றிலே கல்வி கற்றபின் தந்தையார் விரும்பியவாறு உடுப்பிட்டி, ஸ்ரீமத் அ. சிவசம்புப் புலவரிடஞ் சென்று இலக்கிய இலக்கணங்கள் கற்றுவந்தனர். புலவரிடம் கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய புராணங்களையும், இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களையும், கடைச்சங்க நூல்களையும், இடை கடைச்சங்க இலக்கணமாக விளங்கிய தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணநூலையும் பிறவற்றையுங் கற்றுப் பாண்டித்தியமுடையராயினர். பின் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடஞ் சென்று சித்தாந்த பாடங் கேட்டு அதிலுஞ் சிறந்த பயிற்சியுடையராய் விளங்கினர். அப்பொழுது வித்துவசிரோமணி ச. பொன்னம்பலப்பிள்ளையிடமுஞ் சில நூல்கள் பாடங்கேட்டனர் என்ப.

நாவலரிடங் கற்றபின், அவரால் புலோலியிலே தாபிக்கப்பட்ட சைவ வித்தியாசாலைக்கு இவரே தலைமை ஆசிரியராயினர். இவர் ஆசிரியராக இருந்து படிப்பிக்குங் காலத்திலே இவரிடம் உயர்ந்த இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேறினோர் பலர். அவருட் சிறந்தவர்களாய்

விளங்கினோர் அல்வாயில் விதானை உத்தியோகத்தமர்ந்த க. வைரமுத்து என்பவரும், அல்வாய் தெற்குச் சைவ வித்தியாசாலை ஸ்தாபகரும் ஆசிரியருமாயிருந்த க. மயில்வாகனம்பிள்ளையும், மேலைப்புலோலிச் சைவ வித்தியாசாலையில் ஆசிரியராயிருந்த க. ஆறுமுகம்பிள்ளையும், அல்வாய் க. மார்க்கண்டேயக்குருக்களும், இ. சபாபதிக்குருக்களும், ஆத்தியடி மு. ஐயாமுத்துக்குருக்களும், காரெட்டி கா. குமாரசுவாமிப்பிள்ளையும், புலோலி சு. சோமசுந்தரஞ்செட்டியாரும், அச்சுவேலியை ஜநநஸ்தானமாகவும் கந்தவனக்கடவையை வாசஸ்தானமாகவுங் கொண்டவரும், கந்தவன ஆலய மனேசரும், சித்தாந்த சைவப்பிரசாரகருமாய் விளங்கும் திக்கம் சி. செல்லையபிள்ளையும், திக்கம் சி. பொன்னையபிள்ளையும், வித்துவானும் 'ஞான சித்தி'ப் பத்திராதிபருமாய வதிரி சி. நாகலிங்கபிள்ளையும், அல்வாய் வே. சபாபதி ஜோதிஷரும், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாய்க் கொண்டவரும் தென்மயிலை வாசருமாகிய முத்துக்குமாரு சிவராமலிங்கம்பிள்ளையும், முத்துக்குமாரு வைரமுத்துப்பிள்ளையும் (யாழ்ப்பாணம் மணியம்) முதலாயினோராவர்.

இவர் ஏறக்குறைய 37வது வயசில் தேவகோட்டைத் தனவைசியர்கள் வேண்டுகோட்படி அங்குச் சென்று 7 வருஷ காலம் வரையில் பல மாணவர்களுக்குக் கல்வி கற்பித்துக்கொண்டும், சைவப் பிரசங்கங்கள் செய்து கொண்டுமிருந்தனர். பின் கொழும்புக்குவந்து தம்பையா முதலியார் சத்திரத்திலே ஏறக்குறைய மூன்று வருஷ காலம் வாரந்தோறும் சைவப் பிரசங்கங்கள் செய்துவந்தனர். பின் யாழ்ப்பாணம் வந்து தம் சென்னவூரில் இருக்குங் காலத்திலே 47வது வயசிலே தேகவியோகமடைந்தனர்.

இன்னு மிவர் கிரமந்தவருது பத்தியோடு சிவபூசை செய்துவந்தவர். அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்னும் ஆண்மைக் குணங்கள் உண்மையாக நிறையப்பெற்றவர். பிறர் மனை விரும்பாப் பேராண்மை பூண்டவர். "குலனருள் தெய்வம் கொள்கை" என்னுஞ் சூத்திரத்திற் கேற்ப ஆசிரிய இலக்கணம் அமைந்தவர். ஆசாரசீலர்.

## நமச்சிவாயப்புலவர்

இவர் ஏறக்குறைய அறு வருஷங்களுக்குமுன்னே ஆவரங்கால் என்னுமூரிலே வேளாளர் குலத்திலே சுப்பிரமணியபிள்ளைக்குப் புதல்வராகப் பிறந்தவர். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடத்தும், மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளையிடத்தும் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கற்றவர். சித்தாந்த சாஸ்திரங்களுந் தெரிந்தவர். சுப்பிரமணியக் கடவுள்மீது பத்தியுடையவர். சங்கீதத்தில் மிகுந்த ஞானமுடையவர். அதனுற் பல சங்கீத கீர்த்தனங்கள் பாடியுள்ளார். இவர் பாடிய சங்கீத கீர்த்தன பல்லவி ஒன்றைச் சிறப்பித்து, அல்வாய், ஆரிய திராவிட பண்டிதர் வே. கணபதிப்பிள்ளைச் சோதிடர், தாம் பாடிய ஈழமண்டல சதகத்திலே,

> "நேயப் பட'வே லனைக்கொண்டு வா'வென் னீள்பல்லவி
> தாயப் படமொழிக் தோன்புயல் கண்வளர் தங்கரியா
> காயப் படவுய ராவரங் கானகர் காணமச்சி
> வாயப் புலவனைப் பாராட்டு மீழநன் மண்டலமே."

என்னுங் கவியாற் பாடியுள்ளார். இக் கணபதிப்பிள்ளை இவரிடமுஞ் சிலவாண்டு கற்றவரெனக் கேள்வி. இவர், அக்காலத்துச் 'சுதேசநாட்டிய'ப் பத்திராதிபராயிருந்தவரும், யாழ்ப்பாண வைபவ நூலாசிரியருமாகிய வயாவிளான் திரு. க. வேலுப்பிள்ளை அவர்களுக்குக் குருவா

மபிமானங் கருதி அவர் புதல்வர் திரு. சாரங்கபாணி என்பவர், இவர் பாடிய சங்கீதகீர்த்தனங்களைத் தொகுத்து அச்சிட்டுள்ளார். அக்காலத்திலே நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைப்பற்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுதிய கண்டனங்களுக்கு மாறாகப் பிறர் எழுதிய கண்டனங் களை மறுத்துச் சில கண்டனம் இவரும் எழுதியதாக அறிகின்றோம். அவற்றுள் ஒன்று, "பரிகண்டனம்" என்பது. அதன் முகப்பிலும் இறுதியிலு மிவர் பாடி வைத்த இரு வெண்பாக்களை இங்கே காட்டுதும்:—

"அண்ணாநீ நம்பெருமா னன்றநெடுஞ் சீர்மறைக்க
வெண்ணாதே நின்மதிக்கூர்ப் பென்னேயோ—வுண்ணாடி
யம்பரத்தை மேற்கட்டி யான்மறைக்கப் புக்கானை
இம்பரிடைக் கண்டனையோ வின்று."

"பித்தனென்றும் பேயனென்றும் பேய்வனத்தி லாடியென்
எத்தனைபே ரீசனையு மேசினார்—அத்தனையும் [றும்
சான்றோ ரறியாரோ சாற்றுதியோ மூத்தவா!
என்றோ னுனக்கிந்த வேச்சு."

என்பன.

இவ் வெண்பா இரண்டனுள்ளும் 'அண்ணா'! எனவும், மூத்தவா! எனவும் இவர் விளித்தற்குக் காரணம், தமது மாற்றார் கண்டனத்துள் தம்மைத் "தம்பி!" என அவர் விளித்தமையே: மூத்தவா! என்பது, 'மூதேவிக் கிடமானவனே' என்ற பொருளையுங் குறிப்பது போலும்.

இவர் பாடிய சங்கித கீர்த்தனையுள்ளும் ஒன்றை இங்கே தருதும்:—

இராகம் - கமாசு    தாளம் - ஆதி

## பல்லவி

நெஞ்சமே யிந்தச் சடமென்ன சதமா—நீ
நிதமு முருகனை யேதுதி ... (நெஞ்சமே)

## அநுபல்லவி

தஞ்சமென்பவர்க்குச் சஞ்சலந் தீர்த்திடும்
சதுர்மாமறை துதியேசெயுஞ் சரவணபவ னிருதாள்பணி
(நெஞ்சமே)

## சரணங்கள்

1. காமவிகாரப் பிரபஞ்ச மாய்கைதனை
நீக்குநீ நீக்குக்—காலன்
கட்டிக்கொண்டேகுவான்
துஷ்டச் சினேகத்தைப் போக்குநீ போக்கு—கால
தாமதஞ் செய்யாமல்—நேயமுடனிதம்
தருவாய்கதி அருள்வாயெனச்
சரவணபவ னிருதாள்பணி. ... (நெஞ்சமே)

2. பொய்யாமுடல் மும்மலக்கிர்மி
கட்குயர் நாட்டம்—வெகுநாட்டம்—உயிர்
போய்விட்டாலூரார்
சுடுவாரப்போதல்லோ—ஓட்டம் விட்டோட்டம்—இதை
மெய்யாக எண்ணிநீ—உய்ய முயற்சிசெய்
மேலோர்களு மேலோனென
வெதுபிரியமுட னுனைநாடுவர் ... (நெஞ்சமே)

3. தாய்தந்தையுற்றவர்
தாரமென் றிருக்காதே! இருக்காதே—இது
தப்புமோ ஈங்கணக்
தப்புவமோ தெரியாதே! தெரியாதே—திரு
மாயன்மருகனை மாதவர்போற்றிடும்
வானக்குற மகளாரணை பரனைத்துதி தருவார்கதி
(நெஞ்சமே)

## கந்தப்பிள்ளை

இவர் கிறீஸ்தாப்தம் ௧அ௪௦-க்குச் சமமான சார்வரி வருடம் வைகாசி மாதத்திலே மக நட்சத்திரத்திலே வேலணை என்னுமூரிற் சைவாசாரமுள்ள வேளாண் மரபிலே விஞசித்தம்பி என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். தமிழ் இலக்கண இலக்கியமுஞ் சித்தாந்த சாத்திரமும் நன்கு கற்றவர். (சந்தான சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையுஞ்) சித்தாந்தபானுவாய் விளங்கிய இணுவில் நடராசையரிடங் கிரமமாகக் கேட்டறிந்தவர். நற்குணமும் நல்லொழுக்கமும் வாய்ந்தவர். சைவசமயப் பற்றுடையவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடம் மிகுந்த பத்தியுள்ளவர். அவரிடமும் இலக்கண இலக்கியங்கள் கேட்டறிந்தவர். அவர் கட்டளைப்படி தமதூரிலே தமிழ் வித்தியாசாலையொன்று தாபித்துத் தாமே அதிபராகவிருந்து நடாத்தி அரசினர் நன்கொடையும் பெறச் செய்தவர். தவறாது சிவபூசை செய்துவந்தவர். (சித்தாந்த நூலாகிய தத்துவப்பிரகாசத்தை உரையோடு பரிசோதித்து அச்சிட்டவர்.) கொழும்புச் சைவபரிபாலன சபையிற் பலவாண்டு சைவப் பிரசாரகராயிருந்து பிரசங்கங்கள் செய்தவர். யாழ்ப்பாணம், சிதம்பரம் முதலிய பல இடங்களிலும் சைவசித்தாந்த மகிமைகளை எடுத்து இனிது விளக்கிப் பிரசங்கஞ் செய்தவர். அரிய பல சித்தாந்த விஷயங்களைப் பத்திரிகைகள் வாயிலாக வெளிப்படுத்தினவர். தமதூரிலே அச்சுயந்திரமொன்று தாபித்து, அதிலே சைவசமயத்துக்குரிய சூக்குமார்த்தங்களையெல்லாம் தெரிவிக்கும் பொருட்டுச் "சைவ சூக்குமார்த்த போதினி" எனப் பெயரிய பத்திரிகையை அச்சிட்டு மாதந்தோறும் வெளிப்படுத்தி வந்தவர். தமதூரிலும் பிறவூரிலுமாகப் பலர்க்கு இலக்கண இலக்கியமுஞ் சித்

தாந்த சாத்திரமுங் கற்பித்தவர். தீவுப்பகுதியிலுள்ள வர்களைத் தீட்சை பெறவும், மாமிச போசனஞ் செய்யாதுவிடவும், சிவபூஜை செய்யவும் செய்தவர். வேலணையிலுள்ள மகாகணபதிப்பிள்ளையார் கோயிற் திருப்பணியை நிறைவுபெறச் செய்தவர். நித்திய நைமித் தியங்களும் நடைபெறச் செய்தவர். அப் பிள்ளையார்மீது திருவூஞ்சல் முதலியவும் தனிக்கவிகளும் பாடியவர். காசிவாசி செந்திநாதையருக்கும், வட்டுக்கோட்டை அம் பலவாண நாவலருக்கும், சுவாமிநாத பண்டிதருக்கும் நண்பர்.

இத்தகைய அறிஞராகிய இவர் சென்ற பிரமாதீச வருடம் தைமாதம் உச-ம் திகதி தேகவியோகமாயினர். இவராற்ருபிக்கப்பட்ட தமிழ் வித்தியாசாலை இப்பொழு தும் இவர் சந்ததியாரால் கிரமமாக நடத்தப்பட்டு வருகிறது.

இவரிடங் கற்றவர்கள் அவ்வூர் ஆசிரியர் தம்பு, அவ்வூர் ஆசிரியர் நமசிவாயம், அவ்வூர் பேரம்பலப் புல வர் முதலாயினோர்.

இவர் பாடிய ஊஞ்சலுள் ஒரு செய்யுள் இங்கே காட்டுதும்:—

திருமாலு மலரயனு மிருக்கை கூப்பச்
　　சிறந்தமுனி வாரமரர் வணங்கிப் போற்ற
வருமிரவி மதிகவிகை தாங்கி மேவ
　　வாமுறுநல் லடியர்மலர் மாரி தூவ
உருகவரு தும்புருநா ரதர்கள் பாட
　　உயர்கணத்தி ஞதர்துதி யோசை நீட
அருளுருவாய்ப் பெரியபுல மமர்ந்தே யோங்கு
　　மாதிமகா கணபதியே யாடி ரூஞ்சல்.

## ஏரம்பையர்

இவர் சோழநாட்டிலுள்ள திருப்பூவணமென்னு மூரிலிருந்து வந்து மாதகலிற் குடியேறிய பசுபதி ஐயரின் வழியில் வந்த சுப்பிரமணிய சாஸ்திரியாருக்குக் கிறிஸ்தாப்தம் 1847-ம் ஆண்டுக்குச் சமமாகிய பிலவங்க வருடம் மாசிமாதம் 29-ம் திகதி சனிவாரத்திற் புதல்வராகப் பிறந்தார். இவருக்கு இளமையிலே தந்தையார் தாமே ஆசிரியராக வித்தியாரம்பஞ் செய்து சம்ஸ்கிருதமும் தமிழும் கற்பித்து வந்தனர். வருங் காலத்தில் தமிழில் உயர்தரக் கல்வி கற்க விரும்பிச் சங்கானை மேற்கிலிருந்த வேலுப்பிள்ளை ஆசிரியரென்னு மொருவரிடம் சென்று இவர் இலக்கண இலக்கியங்களைக் கற்று வந்தார் பின் நல்லூரிலிருந்த சம்பந்தப் புலவரிடஞ் சென்று மேலான சில இலக்கண இலக்கியங்களையுஞ் சித்தாந்த நூல்களையுங் கற்றார். பின், சங்கர பண்டிதரிடஞ் சென்று சம்ஸ்கிருத நூல்களைக் கற்றுக்கொண்டனர். அக்காலத்திலே ஆறுமுகநாவலரிடத்துஞ் சென்று ஐயங்களைக் கேட்டுத் தெளிவார். பின் நிருவாண தீட்சை பெற்றுச் சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அப் பூசையைக் கிரமமாகச் செய்து வந்ததன்றி, ஊர்கடோறுஞ்சென்று சைவப்பிரசங்கங்களுஞ் செய்துவந்தார். வண்ணார்பண்ணையிலே சைவபரிபாலன சபை தொடங்கிய காலத்திலே அச்சபையின் சைவப்பிரசாரகராகி, நந்தாவிலிலிருந்த அறிஞர்திலகராகிய சுப்பையருடன் ஊர்கடோறுஞ் சென்று சைவப் பிரசங்கமுஞ் செய்து வந்தார். அக்காலத்திலே கொழும்பு, திரிகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களிலுஞ் சென்று சைவப் பிரசங்கங்கள் செய்து புகழ்படைத்தார். அரனடிக்கன்பு, சாந்தகுணம், பரோபகாரம், அருட்குணம் முதலிய நற்குணங்களும்

நல்லொழுக்கமும் நிறைந்தவராய் விளங்கினர். ஆறுமுக நாவலரால் வண்ணார்பண்ணையிற் ருபிக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தில் இவருமோ ரங்கத்தவராயிருந்தார். (வடமொழி நீதி சாத்திரத்தைத் தமிழிலே பெயர்த்துச் செய்யுள் நூலாக இயற்றினர்.) வண்ணார்பண்ணையிற் பெருந் தனவானும் சிவபக்திமானுமிருந்த இராவகப்பிள்ளையின் புதல்வர் மயில்வாகனப்பிள்ளை விரும்பியவாறு, செய்யுள் நூலாயுள்ள சேதுபுராணத்தை எவரும் எளிதிற் படித்துணர்ந்துகொள்ளுமாறு வசன ரூபமாக்கி, அப்பிரபுவின் பொருளுதவிகொண்டு அச்சிட்டு வெளிப்படுத்தினர். சிராத்தவிதி, கணூல், சூரனுடைய முற்பிறப்பின் சரித்திரம், நாகேஸ்வரி தோத்திரம், குவாலலம்பூர் சிவபெருமானூஞ்சல், கவணவத்தை வைரவரூஞ்சல், மாதகற் பிள்ளையாரூஞ்சல், காலிக் கதிரேசர் ஊஞ்சல் ஆகிய இந்நூல்களும் இவரால் இயற்றப்பெற்று வெளிப்படுத்தப்பட்டன. மிருகாவதி விலாசம், கண்ணப்பர் சரித்திரம் (நாடகம்), ஆசௌச தீபிகை வினவிடை, மனுநீதி கண்ட சோழன் சரித்திரம் (நாடகம்) ஆகிய இந்நூல்களும் இவரால் இயற்றப்பெற்றனவாய் வெளிவராதனவாகும். வண்ணார்பண்ணை இந்துக்கல்லூரியிலே சைவ பரிபாலன சபையாரால் நடாத்தப்பெற்ற குருவகுப்பிற்கு இவர் தலைமை ஆசிரியராக இருந்தவர்.

கீரிமலையிலுஞ் சிலகாலம் வசித்து வந்தார். அங்கே அப்போது ஆறுமுகநாவலருடைய தருமப் பொருள் கொண்டு த. கைலாசபிள்ளையால் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலையை அவர்களுடைய அற்ப பொருளுதவியைப் பெற்றும் பெறுமலும் தாமே ஆசிரியராக விருந்து நடாத்தி வந்தார். அக்காலத்தே பிராமணப் பிள்ளைகளுக்கும் பிறர்க்கும் தமிழிலுஞ் சம்ஸ்கிருதத்திலும் உயர்ந்த இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து

வந்தனர். சிலகாலஞ் சென்றபின் உடம்பிலுண்டான அசௌக்கியத்தால் மாதகல் என்னுந் தமதூரையடைந்து, அங்கே கிறீஸ்தாப்தம் 1914-ம் ஆண்டு ( ஆனந்த ஸூ ) தை மாதத்தில் தேகவியோகமானார்.

இவர் பல தனிக் கவிகள் பாடியதேயன்றி பலருக்குச் சிறப்புப்பாயிரங்களுமளித்துள்ளார். அவற்றுள் திருக்கோவையாருண்மை என்னும் நூலைப் பதிப்பித்த போது அப்பதிப்பின் சிறப்புப்பாயிரமாக சி. சுவாமிநாத பண்டிதருக்கு ( தம்பையபிள்ளைக்கு ) அளித்த கவி வருமாறு :—

### நேரிசை யாசிரியப்பா

திருவளர் மார்பத் துருவளர் கண்ணன்
மருவளர் பதுமத் தொருபெருந் தாதை
யிருவரு மிகலிப் பொருவறப் பொலிந்து
பெருநிலம் போகிய வருமருந் தன்ன
வடிமுடி யறியு மாதர வதனிற்
படிதனை நொடியிற் பகிரக் கிழிக்குந்
தாளுறு மேனமுந் தாவிச் சிறையாற்
கோளுறு மண்டபம் போழுறு மெகினமு
மாகிய வுருக்கொண் டகந்தை மேவிட
மோகியர் வேகியர் மூள்சி னத்தராய்த்
துருவிச் சென்று துன்னுத லரிதென
மருவித் துதிக்கு மங்கை மணாளன்
சதுருறுந் துவாத சாந்தத் தலமாம்
பதியென விளங்கும் பகால வாயி
னேதரு மோர்திசை யுயர்ந்தங் சோங்கும்
வாதவூர் வள்ளல் வாய்மலர்ந் தருளிய
கோவையி னுண்மையாங் கோதறு முறையைப்
பாவலர் மகிழப் பரப்பின னீழத்
தென்னிலங் காபுரி மன்னியாழ்ப் பாண
மென்னுநாற் றேயத் திலங்கிய நல்லூர்

நாவலர் புகழுறு நாவல னென்றே
பூவுல களவோ தேவுல களவும்
பொங்கிய சீர்த்தி யங்கவன் மருகாய்த்
தங்கியு மக்குருத் தண்ணளி பெற்றுங்
கலைக்கட லனைத்து நிலைத்திடக் கொண்டே
மலைத்திடா தெவருந் தலைப்படப் புகட்டி
பயன்மிகும் பொன்னம் பலவப் பிள்ளை
வியனுறுஞ் சிரேட்ட வித்துவ சிரோமணி
தன்னிடத் தன்பு மன்னிட நெடுநா
ளன்னிய மின்றி யமைதரக் கற்றோன்
றன்னா சிரியன் றன்னைப் போல
வுன்னரு நூல்க ளுறுநர்க் குரைப்போ
னல்லூர் மாவை சொல்லூர் மருதடி
பல்லூ ராலயம் பணிந்திடச் சாரு
மடியவர் முன்ன ரடர்ந்து பலவாய்க்
குடிலவார்த் தைகள் கூறி நிற்கும்
விவிலியர் தூடனம் வினவ நீதென
நவிலரு மோர்சபை நண்ணிடக் கூட்டியும்
பத்திரப் புத்தகம் பரிவொடு பதிப்பித்
தெத்திசை தனிலு மெண்ணில பரப்பியுங்
கண்டன மியற்றி மிண்டிடா தோட்டி
யெண்டகு கீர்த்தி பண்டையிற் படைத்தோன்
கொச்சைச் சமயக் குழியில் வீழ
வச்செழு வூரி லடர்ந்த வெழுவரின்
முன்னர்ச் சென்று முதல்வன் மேன்மையைப்
பன்னிச் சைவப் பண்பைத் தேற்றித்
திருத்திய கருணை திகழ்ந்த வறிஞ
னுருத்த லில்லா உயர்குண சீலன்
சிவனடி யவரைச் சிவனெனப் பேணிப்
பவவினை கெடுக்கும் பக்திமிக் குடையோன்
றுர்க்குணத் தவரைத் தூரத் தகற்றி
நற்குணத் தவரை நண்ணுறும் பெயரின்

றாளாண் முயற்சி தண்ணளி யுற்ற
வேளாண் குலத்தில் விளங்க வந்தோன்
சைவ தீக்கை யுய்வரப் பெற்று
மெய்திகழ் நூல்கள் விழைபவன் வண்ணைச்
சின்னத் தம்பி செய்த தவத்தான்
முன்ன வந்த முழுத்தவ முடையோன்
றம்பைய பிள்ளை யென்பதோர் பெயரை
யம்புவி யேத்திட வாண்டநற்
சுவாமி நாத சுகுண பண்டிதனே.

இவர் இறந்தபோது இவரைக்குறித்து "இந்துசாதன"ப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையையு மிங்கே தருதும்:

## ஸ்ரீமத் ஏரம்பையர் அவர்களின் தேகவியோகம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசாரகரா யிருந்து பின், கீரிமலையிலே ஒரு பாடசாலையை ஏற் படுத்தி நடத்திவந்தவராகிய ஸ்ரீமத். சு. ஏரம்பையர் அவர்கள் இற்றைக்குச் சில வாரங்களின்முன் சிவபத மடைந்துவிட்டனர். இவர் சைவ சித்தாந்த சாஸ்திரங் களை நன்கு கற்றுத் தமது வருணத்துக்கேற்ற ஒழுக் கங்களிற் சிறிதுந் தவறாது நடந்துவந்த ஒரு பிராம ணோத்தமர். அதிகக் கல்வியறிவும், மிக்க வாக்குவல்லப மும், பக்தி விசுவாசமுமுள்ள இவரையிழந்து துன்புறு மிவரது சுற்றமித்திரருடன் நாமுமனுதாபப்படுகிறோம்.

—"இந்துசாதனம்" ஆனந்தஞ௵ தைமீ 8-ந் உ

## சிவப்பிரகாசபண்டிதர்

இவர் ஏறக்குறைய எழுபத்தைந்து வருடங்களுக்கு முன் நீர்வேலி என்னுமூரிலே வேளாளர் குலத்திலே சங்கர பண்டிதருக்குப் புதல்வராகப் பிறந்தனர். இவர் தந்தையாரிடத்திலே வடமொழியில் இரகுவம்சம், மாகம் முதலிய காவியங்களையும், முக்தபோதம், ஆசுபோதம் முதலிய வியாகரணங்களையும், தென்மொழியில் தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங்களையும் வேறு நூல்களையுங் கற்றவர். பாலாமிர்தம், பாலபாடம் முதலிய நூல்களும், திருச்செந்தூர்ப் புராணவுரை, சிவானந்தலகரித் தமிழுரை முதலிய உரைகளும், வேறுஞ் சில மொழிபெயர்ப்புக்களுஞ் செய்தவர். கவிபாடுந் திறமுமுடையவர். கவித்திற முணர ஒரு செய்யுள் காட்டுதும்:

**பாலாமிர்தம்**

இச்செயலா லீதுவரு மென்றுரா யாமலே
எச்செயலு மேலோ ரியற்றார்தாம்—இச்சையொடு
வல்லையயற் றுவரேல் வந்திடுமே மாறுக
அல்லலவர்க் கென்றே யறி.

## சரவணமுத்துப்பிள்ளை

இவர் கிறீஸ்தாப்தம் 1848-ம் ஆண்டளவில் ஊரெழு என்னும் ஊரிலே சைவசமயமுடைய வேளாளர் குலத்திலே சுப்பிரமணியபிள்ளை என்பவருக்குப் புத்திரராகப் பிறந்தவர். தந்தையாரூர் சங்கானை. இளமையிலே அயலூராகிய புன்னாலைக்கட்டுவனிலிருந்த இலக்கியப் புலவராகிய பிரமஸ்ரீ ச. கதிர்காமையரிடம் சில இலக்கியங்கள் கற்றவர். பின்பு, சுன்னாகம் முருகேச பண்டிதரிடம் நன்னூல், காரிகை முதலிய இலக்கணங்களும், சில இலக்கியங்களும்

கற்றவர். (இவர் கற்ற காலத்திலே இவருடன் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவரும், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யும் கற்றனர்.) தெளிவாகத் தமிழிலே வசனநடை எழுது வதிலும் கவி பாடுவதிலும் பிரசங்கஞ் செய்வதிலும் இவர் சிறந்தவராக விளங்கினுர். ஆங்கிலமுந்தெரிந்தவர். (சந்தான சித்தாந்த சாஸ்திரங்களிலும்) மிக்க பயிற்சியுடையவர். இதனு லிவரைச் சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிர சாரகர் எனப் பலரும் புகழ்ந்து பேசுவர். கொழும்புச் சைவ பரிபாலன சபையிற் சிலகாலம் சைவப் பிரசார கராயிருந்தவர். "சைவ உதயபானு" என்னும் பத்திரி கைக் கதிபராய் அதனை ஆறுவருடம் வரையில் நடத்தி யவர். இதனுல் "பத்திராதிபர் சரவணமுத்து" எனப் பலரும் இவரைக் கூறுவது பெருவழக்காயிற்று. பிற் காலத்திலே வேறுசில பத்திரிகைகளுக்கும் விஷயதானம் புரிந்தவர்.

நல்லூரில்இருந்த (ஓவசியர்) தம்பு றைற்றர் என்பவ ரது மகளை விவாகஞ் செய்தவர். அவ்விடத்திற்றுனே தமது மரணகாலம் வரையும் வசித்தவர். இவருக்குச் சிவஞானசுந்தரம் எனப் பெயரிய புதல்வரொருவர் இருந் தனர். அவர் ஆங்கிலத்தில் வல்லவராய்க் காட்டு உடையா ரென்னும் உத்தியோகத்தமர்ந்து இளமையிலே தேக வியோக மடைந்தனர். சரவணமுத்துப்பிள்ளை யென்னு மிவர் போலிக்கொள்கைகளைத் தாக்கிக் கண்டன மெழுது வதிலும் அதி சமர்த்தர். இவர் விரைவிற் பாடும் சாமர்த்தியமுடையவர். (இராமநாதபுரத்து மகாராசாவா கிய பாஸ்கரசேதுபதிமீது பிரபந்தம் பாடிப் பரிசிலும் பெற்றவர்.) அவர்மேல் சித்திரகவியுளொன்றுகிய தேர்க் கவியும் பாடியுள்ளார். கவிநயம் அறிதற்பொருட்டுப் பிரபந்தத்துள் ஒரு செய்யுளையும் தேர்க்கவியையும் முறையே இங்கே காட்டுதும்;

## பிரபந்தச் செய்யுள்

### கட்டளைக் கலித்துறை

சித்தாந்த சைவத் திறந்தெரிந் தான்மன்னர் தேடுசெங்கோ
லைத்தாங் தகையி னிறுத்து வராங்க ணமர்பிரசை
சத்தாந் தவநெறி சேர்வரென் றோர்ந்தத் தனிவழிக்கே
சித்தாந்தஞ் செய்தது சேது பதிப்பெயர்ச் சிங்கமொன்றே.

### தேர் வெண்பா

தேர்மீது தேமாலை தேனேக மார்புதுவ
ளார்மீது விற்பனர்க்கீ யற்புதத்தின்—போர்மீது
போதுவபோலாமனத்திற் போய்த்திகழ்ந்தாய்பன்னூேத்துச்
சேதுபதி மன்னவனே தேர்.

தென்னிந்திய நாடுகளினுஞ் சென்று சிற்சில பிரசங்கங்கள் செய்துள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கத் தாபகரும் தலைமைப் புலவருமாகிய பாண்டித்துரைத் தேவர் அவர்களை அக்கிராசனராகக்கொண்ட ஓர் சபையிலும் பிரசங்கஞ் செய்து அவராற் பாராட்டப் பெற்றனர். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் புலவருள்ளும் ஒருவர். யாழ்ப்பாணத்தில் இவரது பிரசங்கம் குறிப்புரை நிகழப் பெறாத சபைகள் மிகச் சிலவாகும். கோயில்களிலும் சபைகளிலும் புராணப் பிரசங்கம் செய்தவர்.

சேர். அம்பலவாணர் கனகசபைப்பிள்ளை, அத்துவக்காத்து திருநாவுக்கரசு முதலிய கனவான்கள் சிலர் இவரிடஞ் சித்தாந்த நூல்கள் கேட்டறிந்துள்ளார்கள். இவரிடஞ் சித்தாந்த நூல்களைக் கிரமமாகக் கேட்டறிந்தவர்கள் நல்லூரில் வசிப்பவரும் முகாந்தரம் என்னும் பட்டம் பெற்றவரும் வித்தியாதரிசியுமாக விளங்கும் சி. கந்தையபிள்ளையும் நல்லூர் வைத்தியர் கா. பொன்னையபிள்ளையும் முதலாயினோர். சுன்னாகம் அ. குமார

சுவாமிப்பிள்ளையின் மாணவரும் "வித்தக" ப் பத்தி ராதிபரும் சிறந்த பண்டிதருமாய் விளங்கும் தென்கோவை ச. கந்தையபிள்ளையும் இளமையிலே இவரிடம் சிலநூல்கள் கற்றவர். சரவணமுத்துப்பிள்ளை ஆறுமுக நாவலரிடம் மிகுந்த அன்புடையவர். ஆறுமுக நாவலர் தேக வியோகமடைந்த காலத்திலே இவரியற்றிய இரங்கற் பாக்கள் ஒழுகிய ஓசையுடையனவாய்க் கேட்போர் மனத்தை உருக்கு நீர்மையவாய் மிளிர்கின்றன.

இன்னு மிவரியற்றிய கையறுநிலைச் செய்யுட்களும் சிறப்புக் கவிகளும் பல.

சிறப்புக்கவிகளுள் சங்கரபண்டிதர் இயற்றிய சைவப் பிரகாசனத்துக்கு இவர் அளித்த சிறப்புக் கவியை இங்கே தருதும்:—

கற்றூர் புகழ்சைவ சித்தாந்தப் பாலின் கடல்கடைந்து
மற்றூர் நினைக்கருஞ் சைவப் பிரகாசன மாவமிழ்தை
நற்றூ ரணிச்சைவ நற்புல வோர்க்கு நயந்தளித்தான்
வற்றூ வறிவுடைச் சங்கர பண்டித மாதவனே.

இவர் தமது தந்தையார் மீது கையறுநிலைச் செய் யுளாக இயற்றிய நீண்ட கலிவெண்பா யமகத்தொடை அமைந்து ஐந்திணை வளம் காட்டும் வர்ணனைகளும் சித் தாந்த சாஸ்திரப் பொருளும் அமைந்தது. அக்கவி இப் பொழுது அகப்படவில்லை. ஞாபகமாக ஒருவர் கூறிய அக் கவியின் முதல் இரண்டு அடிகள் பின்வருவன.

"பூமேவு சக்கரத்துப் புத்தேளுங் கண்ணளித்த
பூமேவு சக்கரத்துப் புத்தேளும்—பூமேவும்
.........................................
..........................."

ஊர்காவற்றுறை நீதிபதியாயிருந்த கு. கதிரவேற் பிள்ளையால் தொகுக்கப்பட்ட அகராதி வேலைக்குஞ் சில காலந் துணை புரிந்தனர். இத்தகைய புலவர் கிறீஸ்தாப்தம் 1916-ம் ஆண்டில் தேகவியோகமடைந்தனர். தேக வியோகமடைந்தபோது மேற்கூறிய இவரது மாணவர் தென்கோவை ச. கந்தையபிள்ளை பாடிய இரங்கற் பாக்களு ளொன்றை இங்கே காட்டுதும் :

பாற்கர சேது பதிமேற் பிரபந்தம் பாடியவன்
பாற்கர வாத பரிசுகள் பெற்றவன் பங்கயனும்
பாற்கர வாரணக் கோவு மறியாப் பதம்பணிவோன்
பாற்கர நாம சரவண முத்தெனும் பாவலனே.

வண்ணார்பண்ணையைச் சார்ந்த கந்தர்மடத்து வசிக்கும் நல்லூர், தி. கிருஷ்ணபிள்ளை என்பவரும் இவரது மாணாக்கர் என்பர். கிருஷ்ணபிள்ளை ஆறுமுக நாவலர் கலாசாலையில், சிலகாலம் ஆசிரியருளொருவராக இருந்து கற்பித்தவர்.

சரவணமுத்துப்பிள்ளை இறந்தபின் இவரது மனைவியாராகிய அன்னபூரணியம்மையார் கைம்மை நோன்பிற் சிறந்தவராய், சிவஸ்தல யாத்திரைகள் செய்து திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய தலத்திற் சிலகாலம் வசித்து இப்பொழுது நல்லூரில் இருக்கின்றனர்.

## சிற். கைலாசபிள்ளை

இராசவாசல் முதலியார் என்னும் சிறப்புப் பெயர் பெற்று இலங்கைத் தேசாதிபதியின் தமிழ் முதலியாராகவும் இராசமாலிகித நிலையத்தில் தமிழ் மொழி பெயர்ப்பாளராகவும் இருந்த இவர் யாழ்ப்பாணத்துப் பரம்பரைத் தமிழ்ப் பண்டிதருளொருவராவர். இவர்

கிறீஸ்தாப்தம் 1857-ம் ஆண்டு நல்லூரிற் பிறந்தார். இவரது தந்தையார் கொழும்புத்துறையில் மணியகாரராயிருந்த இராசரத்தின முதலியார் மகன் திருச்சிற்றம்பலம் என்பவராவர். (இவர் தாயார் வித்துவசிரோமணியாகிய இருபாலைச் சேனாதிராச முதலியாருக்குப் பிரதம மாணவரும், ஆறுமுக நாவலர்க்குப் பலகாலம் இலக்கண இலக்கியங்கள் படிப்பித்தவருமாகிய சரவணமுத்து முதலியாருக்கு மகளாகிய மாணிக்கவல்லி என்பவர்.) கைலாசபிள்ளையவர்களது தந்தைமரபு தாய்மரபாகிய இருமரபினரும் கல்விச் செல்வம் அதிகாரம் சைவாசாரம் முதலியவற்றில் தலைசிறந்து விளங்கியோராவர்.

இவர் இளமையில் தமது உறவினராகிய நல்லூர்ச் சம்பந்தப் புலவரிடம் சிறிது தமிழ் கற்றவர். பின் "சென்ஜோன்ஸ் கொலீஜ்" என்று கூறப்படும் சுண்டிக்குளி ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கிலங் கற்று உயர்தர வகுப்பிற் சித்திபெற்று அக்கலாசாலை மாணவருள் சிறந்தவராயினர். ஆங்கிலபாஷையில் மிகச் சிறந்த அறிவுடையவர். மேற்படி கலாசாலையை இவர் விட்டகாலத்தில் நிகழ்ந்த கூட்டத்தில் சபையார் வியப்படையுமாறு சிறந்த உச்சாரணத்தோடு பொருட் சிறப்பமையும்படி இவர் நிகழ்த்திய ஆங்கிலப் பிரசங்கத்தை இப்பொழுதை முதியோர் பலர் பாராட்டிக் கூறுவர். பின்பு அரசினர் லேககபரீட்சையாகிய "கிளறிக்கல்" பரீட்சையில் சித்தியெய்திக் கொழும்புப் பகிரங்கத் தொழில் நிலையத்தில் (அரச) சேவை நடாத்தினர். அக்காலத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சம்ஸ்கிருதத்தையும் தாமாகவே படித்துச் சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் மிக்க பரிசயமுடையராயினர். சிலவருடம் அரச சேவை செய்து பின் உடல் நலம் குன்றியமை காரணமாக அதனை விடுத்

துத் தென்னிந்தியாவில் ஸ்தலயாத்திரை செய்வாராயினர். அக்காலத்தில் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் இவரது ஆழ்ந்த கல்வியறிவையும் கூரிய மதியையுங் கண்டு தமது பழந்தமிழ்நூற் பரிசோதனத்துக்குச் சிலகாலம் இவரைத் துணைவராக்கிக்கொண்டனர். (இக்காலத்தில் சென்னைக்கு அண்மையில் உள்ள வடதிருமுல்லைவாயில் சென்று சுவாமிதரிசனஞ்செய்வது இவர் வழக்கம்.) இந்நாட்களிற்றான் இவரும் இவர்நண்பரிருவருமாகக் கூடி வடதிருமுல்லைவாயில் மும்மணிக் கோவையைப் பாடினர். அகவல் இவர் பாடியன. வெண்பாவும் கலித்துறையும் மற்றையோர் இருவரும் பாடியன. (இவரது அகவல்களை அக்காலத்து வித்துவான்களாகிய தொழுவூர் வேலாயுதமுதலியார், சபாபதிநாவலர் முதலிய பலரும் மிகப் பாராட்டிக் கூறுவர்.) அக்காலத்தில் சென்னையிலும் பிற இடங்களிலும் இருந்த வித்துவான்கள் யாவரும் இவர்பால் மிக்க நண்பும் அன்பும் உடையராயினர். [டக்டரும் மஹாமஹோபாத்தியாயருமாகிய சாமிநாதையர் இவருட் சிறந்தவராவர்.] இவரது அகவல்கள் கல்லாடச் செய்யுட்கள்போல இறுக்கமும் பொருளாழமும், குமரகுருபர சுவாமிகளது அகவல்கள்போல ஓசையும் வனப்பும் உடையனவாகும். (மஹாமஹோபாத்தியாயரும் டக்டருமாகிய சாமிநாதையரவர்கள் இவரை ஒருகால் திருவாவடுதுறை ஆதீனத்துக்கு அழைத்துச் சென்று அக்காலச் சந்தானகுரவராகிய சுப்பிரமணிய தேசிகரை அடையும்படி செய்தனர். தேசிகர் இவரது மும்மணிக்கோவை அகவல் ஒன்றை இவர் படிக்கக்கேட்டு ஆநந்தமடைந்து அதனை இரண்டாம் முறையும் படிக்கும்படி கட்டளையிட்டு இவரை "வித்துவான்" எனப் புகழ்ந்து பட்டுப் பீதாம்பரங்களும் பரிசாக வழங்கினர்.) திருவாவடுதுறை ஆதீனத்திலும் இவர் தேசிகருக்கு அணுக்கராய்ச் சிலகாலம் வதிந்தனர்.

ஆதீன சம்பிரதாயங்களையும் இவர் நன்றாக அறிந்தவர். இக்காலத்தில் இவருக்கும், சி. வை தாமோதரம்பிள்ளைக்கும் சபாபதிநாவலருக்கும் தேசிகர் சிவஞானபோத மாபாடியத்துட் சில பாகங்களை வாசித்து விளக்கியுள்ளார். இப்பாகத்தை இவர் பிரதி செய்து வைத்துக்கொண்டார். இவர் சந்தான சித்தாந்த சாஸ்திரங்களிலும் பண்டார சாஸ்திரங்களிலும் மிக்க பயிற்சியுடையவர். இதன் பயனாகவே பிற்றைஞான்று கொழும்பு விவேகானந்தசபை அங்கத்தவர் பலருக்குச் சந்தான சித்தாந்த சாஸ்திரங்களை இலக்கண இலக்கிய தருக்கமுறை பிறழாது பல வருடம் படிப்பித்துமுள்ளார்.

மூன்று வருடகாலம் ஸ்தல யாத்திரை செய்தபின், தமது தாயார் கேள்விப்படி மீண்டு யாழ்ப்பாணம் வந்து அரசினர்பாற் பலவருடம் உயர்தர நீதிமன்றத் துவிபாஷகராய்ச் சேவைபுரிந்தனர். பின்பு யாழ்ப்பாணக் கச்சேரிப் பிரதம முதலியாராகவும், மட்டுக்களப்புக் கச்சேரி முதலியாராகவும் இருந்து, ஈற்றில் தேசாதிபதியவர்களுக்குத் தமிழ் முதலியாராய் இராசமாலிகித நிலையத்தில் சேவை செய்தனர். கொழும்பில் வசித்த இக்காலத்தில், சேர் பொன். இராமநாதர் இவரிடம் தாயுமானசுவாமி பாடல் முதலிய சில நூல்களைப் படித்தனர். சேர் பொன். அருணாசலம் அவர்கள் இவருக்கு மிக்க நண்பராய் இவரை உசாத்துணைவராகக் கொண்டு பொதுவாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களும், சிறப்பாகச் சங்க நூல்களும் கற்றனர். இவர் பத்துப்பாட்டு, புறநானூறு, கல்லாடம் முதலிய நூல்களில் மிக்க பயிற்சியுடையவர். பழைய அகவல்களை மிகப் பாராட்டுவார். இவர் அகவல் படிக்கும் முறையும், அதற்குரிய இசையும் கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய் உள்ளன. இவர்போல உரிய இசைப்படி அகவல் படிப்போரும்

பாடுவோரும் இவர்காலத்தும் இக்காலத்தும் இல்லை என்று கூறுவது மிகையன்று. மற்றைய பாக்கள் பாவினங்கள் பாடுவதிலும் வல்லவர். சமஸ்கிருதத்திலும் காவிய நாடகங்கள் தெரிந்தவர். சாகுந்தல நாடகச் சுலோகங்கள் சில இவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அச்செய்யுட்கள் இப்பொழுது கிடைக்கவில்லை.

இவர் வாக்கு மிகச் சிறந்தது. சமஸ்கிருத சுலோகங்களை இவர் உதாத்த அநுதாத்த ஸ்வரிதப்பிரசயம் வழுவாது படிப்பது கேட்டுப் பார்ப்பனகுருமாரும், பௌத்தகுருமாரும் வியப்படைவர். ஒருமுறை "பிளேக்" என்னும் பெயரிய இலங்கைத் தேசாதிபதி முன்னிலையில் கூடிய ஒரு சமாசத்தில் இவர் சமஸ்கிருத சுலோகங்கள் வாசித்து அவற்றை ஆங்கில பாஷையில் விளக்க நேர்ந்தபோது, இவரது உச்சாகரணத் தொனியைக் கேட்ட மஹோபாத்தியாய சர்வேசுரசாஸ்திரிகளும், சமஸ்கிருத மகா பண்டிதர்களாகிய ஸ்ரீ சுமங்கலா, தர்மராமா முதலிய பௌத்த குருமாரும் வியப்புற்று நாணி நின்றனர் என்றால், இவர் வாக்கின் திறம் என்னென்று உரைக்கலாம்.

இவர் சங்கீத ஞானமும் உடையவர். தேவாரம் முதலியவற்றை யாழிசையோடும். பத்திமையோடும் பாராயணம் செய்பவர். சிவசின்னந் தரித்தலிலும், சைவாசாரத்திலும், சிவபத்தியிலும் சிறந்தவர். எவரோடும் மலர்ந்த முகமுடையராய் இன்சொல்லே பேசுபவர். சமயவிஷயமும் கல்வி விஷயமுமாகவே பலரோடும் சம்பாஷணை செய்பவர். வீண் வார்த்தை பேசுவோரைக் கண்டால் மௌனம் சாதிப்பவர். இலங்கையிலுள்ள தேசாதிபதிமார், உயர்தர நீதிமன்றத் தலைவர்கள், உயர்தர உத்தியோகஸ்தர், பிரபுக்கள் முதலிய யாவரும் இவரை மிக

நன்கு மதித்து வந்தனர். "காவன் மன்னரைக் கடவுள் காக்கவே" என்னும் அரச வாழ்த்தை ஆங்கிலத்தி னின்று ஆங்கில சுரமும் சங்கீதசுரமும் வழுவாதபடி மொழிபெயர்த்தவரிவரே. இக்கவி, பாடசாலை மாணவரா லும் பிறராலும் இன்றும் பாடப்பட்டு வருகிறது.

உயர்தர நீதிமன்றத் துவிபாஷக உத்தியோகஸ்தர்க ளுள்ளும், சம்ஸ்கிருத உணர்ச்சியும் தமிழ்ப் புலமை யும் வாய்ந்த இவரே சிறந்து விளங்கினர். அரசினர் கட்டளைச் சட்டங்களை ஏற்ற தமிழ்நடையில் இவர் மொழிபெயர்த்த நூல்களும் பலவாகும். இந்நூல்களே இவருக்குப் பின்வந்த மொழிபெயர்ப்பாளர் பலர்க்கு வழிகாட்டியாக இருந்தன; இருக்கின்றன.

இவருக்கு இராசவாசல் முதலியாரென்னும் சிறப் புப் பெயர் புனையப்பட்டபோது கொழும்பு நகரத்தில் உயர்தர உத்தியோகஸ்தரும் பிரபுக்களும் இவரை ஓரி டத்து வரவழைத்து விசேஷ உபசாரணை நடாத்தி னர். (இலங்கை அரசினர் சேவையில் இருந்தோருள் தமிழ்ப் புலமையிற் தலைவராய் விளங்கியவர் இவர் ஒருவரே ஆவர். பொருள் புகழ் கருதி ஒருபாற்கோடாது பணிபுரிந்தவரும் இவரே என்பதும் மிகையன்று.) அக் காலத்தில் வித்தியாதிகாரியாகிய ஹாவேட்துரை இவர் பால் மிக்க மதிப்பும் நம்பிக்கையும் உடையவராதலால் இவரைக்கொண்டே சிவில் சேவிஸ், நொத்தாரிசுப் பிரதம பரீட்சை, கிளறிக்கல் பரீட்சை என்பனவற்றில் தமிழ்ப் பரீட்சைகளை நடாத்துவித்தனர்.

இவர் மிக்க சாந்தமும் பொறுமையும் உடையவர். ஆடம்பரமான ஒழுக்கமும் இல்லாதவர். இவரது பாடற் சிறப்பைப் பின்வரும் ஆசிரியப்பா நன்று புலப்படுத்துவ தாகும்.

வடதிரு முல்லை வாயில் மும்மணிக்கோவை
தேசிவர் தடித்துத் தெளித்தசெஞ் சடைமிசை
மாசிவர் இறுமதி மறன்மறந் துடங்கு
மாசுணம் பயிலிய வைத்தவெம் மாசிலா
மணியெனத் தன்பெய ரணியிய நாயகன்
..........................................
திரிகுவ ராணின் றிறந்தேர் பாற்றரோ
மாதுநீ மொழிமோ வாழிய
யாதுகொ றில்ல யாஞ்செய வற்றே.

[குறிப்பறிதல் என்னுந்துறை]

இச்செய்யுளைச் 'செந்தமிழில்' (1913) "வெள்ளியந் திருமலை கிழார்" என்னும் பெயரோடு வெளிவந்த கட்டுரையிற் காண்க.

இவர் 1916-ம் ஆண்டு தேகவியோகமடைந்தனர். இவரது உத்தியோகம் இவருக்குப்பின் இவரது தாயார் சகோதரி புத்திரரும், ஆங்கிலம் தமிழ் என்னும் இரு மொழிகளிலும் மிக்க பாண்டித்தியமுடையவரும், சோதிடம் வானசாஸ்திரம் சரித்திர ஆராய்ச்சி என்பனவற்றில் வல்லவருமாகிய வைத்தியநாத முதலியாருக்குக் கிடைத்தது. இவர் இறந்தபொழுது இவருக்கு வயது அறுபது.

இவர் மதுரைச் சங்கத்திலும் ஓர் அங்கத்தவர். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தவரால் நடாத்தப்பட்ட பரீட்சைகளிலும் சிலகாலம் இவர் பரீட்சகராய் இருந்திருக்கின்றனர். "போற்றுகம் வம்மே" எனப் புலவரை உளப்படுத்தி ஆற்றுப்படுத்தி இவர் பாடிய தனிச்செய்யுள் ஒன்று "செந்தமிழ்" முதலாம் தொகுதியில் "வெள்ளியந் திருமலை கிழார்" என்னும் பெயரோடு வெளிவந்துள்ளது. அதனை இங்கே தருதும்:—

## நிலைமண்டில ஆசிரியப்பா

போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!
மாற்றருஞ் சிறப்பின் வண்டமிழ்ப் புலமைப்
பாவல் லீரும் நாவல் லீரும்
போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!
வடாஅது நெடியோன் வண்புகழ் மலையே
தெணாஅது குமரியந் தெண்டிரைப் பௌவமே,
குணாஅது வங்கக் குரைகடற் குடாவே
குடாஅது மலையக் குண்டுநீர்ப் பரப்பே,
என்றென் றமைந்த தென்றமிழ் வாழ்க்கைப்
பாவல் லீரும் நாவல் லீரும்
போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!
தென்றமிழ் நிலத்தின ரன்றுதாம் பலகாற்
பிரிந்துறை கொள்கைய ராகித் தெரிந்த
யாழின் வந்த வாழ்வுடைப் பெயரிற்
றாழ்வின் றோங்கிய தண்டமிழ் நிலத்திலும்
முத்தமிழ் விரகன் முதிரிசைப் பனுவல்
"நிரைகழ லரவ" நிறைமொழி பெறீஇக்
கோணா தோங்கிய கோணமா மலையினும்;
திரைகட லோடிய திருவமர் சிறப்பிற்
சிங்கா வண்டுறைச் சிங்க புரத்தினும்;
தாங்கா விளையுட் டகைசால் கழனியுந்,
தூங்கு குலைத்தெங்கு தேங்குபல படப்பையும்
பொறிகா ணலவனொடு மீனமுங் குறையாச்
செறிமாண் கழிசூழ் புளியந் துருத்தி
மட்டுக் களப்பினும் வண்புகழ் நிறீஇய
அரும்பொருட் பொன்பெயர் அமர்நாட் டங்கணும்
இட்ட வாழ்க்கை கட்டிய பான்மைப்
பாவல் லீரும் நாவல் லீரும்
போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!
தென்றிரு மதுரைச் செழும்பதி யகவயின்
நான்மைச் சங்கமும் நன்குநிலை யிடுமார்,

மும்மைச் சங்க மும்மையி னிரீஇர்
செம்மைத் தமிழ்த்திறம் சீர்பெற வளர்த்த
பாண்டி மன்னர்மன் வேண்டுபு கொண்டனர்
பாண்டியந் துரைக் கோலமும் போலுமென்
றியாண்டு மேதையோர் செம்மாந் தனரால்
நமரங் காள்! நம் மொருமொழி கேண்மோ:-
அன்பினைந் திணையென் றரும்பொருண் மலர்ந்த
அங்கயற் கண்ணி பங்குறை யிறைவனும்
கீரன் றமிழினின் வாரம் வைத்த
முருக வேணம் முதற்பெரு வணிகச்
சங்கத் தமிழின் றலைமைப் புலவனும்
யாங்கா கியரென யாமயங் கலமால்;
பொலம்புரி முளரிப் பொய்கையங் கோட்டுக்
கூடல் லாலவாய் நீடுபெலங் குன்றினும்
எஞ்ஞான் றும்மென இஞ்ஞான் றதனினும்
உண்மகிழ்ந் துடங்கும் உறைகுந ரலரோ?
கலையெலா முவர்பாற் கற்றொருங் குணர்ந்த
பொதியமா மலையிற் றிருமா முனியும்
வதியுமா மகிழ்தலும் தவிர்கலன் மன்னே!
வடமா மொழிக்கட் கடவுண்மா மறையோ,
அப்பெரு மறையின் அரும்பெறற் பயனைச்
செப்பிடு மருணூற் றிறந்தெரி பாதமோ,
கேட்டன் முதலாக் கிளந்திடு திறமோ,
கோட்டமில் சிவநெறிக் குரவருந் தாமோ,
என்றென் றிவ்வெலாந் துன்றுபு மன்ற
நான்மையின் முடிந்த பான்மையி னன்றே
சங்கமு மிங்ஙன் சான்றுநின் றதுதான்!
ஈதுநந் தெய்வத் திருவருட் பாங்கென்
றோதுறு மருநூல் ஒருநாற் பயனும்
நாற்பெருஞ் சங்க நன்னெறி நிலையிற்
பிறவா நெறியி னிறுமாப் பம்மே!
ஆதலின் நாமெலாங் காதலிற் குழுமிப்
போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!

மாற்றருஞ் சிறப்பின் வண்டமிழ்ப் புலமைப்
பாவல் லீரும் நாவல் லீரும்
போற்றுகம் வம்மே! போற்றுகம் வம்மே!!

இவரது முதற்றாரத்து மகன் சபாநாதர் கொழும்பு ரேகுக் கந்தோரில் லேககராய் இருக்கின்றனர். இவர் மட்டுக்களப்புக் கச்சேரி முதலியாராக இருந்த காலத்தில் அவ்வூரவரைத் தமிழார்வமும் சைவசமயப் பற்றும் உடையராமாறு ஊக்கிப் புளியந்தீவில் 1902-ம் ஆண்டில் சைவப்பிரகாச வித்தியாசாலையொன்று தாபித்து நடாத்தச் செய்தவர். ஆரம்பகாலத்தில் இவ்வித்தியாசாலையில் பிரதம ஆசிரியராயிருந்து இதனை நடாத்தியவர் கைலாசபிள்ளையவர்களது சிரமித்திரராகிய தென்கோவை பண்டிதர் ச. கந்தையபிள்ளை யவர்களாவர்.

## வித்துவான் சிவானந்தையர்

இவர் தெல்லிப்பழைக்கு அயற்கிராமாகிய பன்னாலை யென்னுமூரிலே ஏறக்குறையச் சாலிவாகனசகாப்தம் கஎகூ௫ வரையில் (கிறீஸ்தாப்தம் 1873 வரையில்) பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் சபாபதி ஐயர். தந்தையார் இவருக்கு ஐந்து வயதானவுடன் வித்தியாரம்பஞ் செய்து, அக்கிராமத்திலுள்ள ஆசிரியரொருவரிடஞ் சென்று கல்வி கற்கும்படி செய்தனர். இவர் கல்வி கற்று வரும் நாளிலே இவரது திறமையைக் கண்ட தந்தையார், இவருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்கத் தகுந்த ஆசிரியர் அவ்வூரில் இல்லாமையால், ஏழாலையென்னுமூரிலே உயர்தரக் கல்வி கற்பித்தற்குரியதாக, ஸ்ரீமான் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலைக்கு இவரை

அழைத்துச் சென்று அங்கு அப்போது தலைமை யாசிரியராகவிருந்த சுன்னாகத்துக் குமாரசுவாமிப் புலவரிடம் ஒப்பித்து, இவருக்கு இலக்கிய இலக்கணங்களைக் கற்பிக்கும்படி வேண்டினர். புலவரும் உடன்பட்டு இவரை உயர்தர வகுப்பிற் சேர்த்து அவ்வகுப்பிற்குரிய இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்துவந்தனர். இவரே அவ்வகுப்பு மாணவருள் நுண்ணிய விவேகமும் ஞாபகசக்தியு முடையவராய்க் காணப்பட்டமையினால், இவரிடம் புலவரும் மிக்க அன்புவைத்து இவருக்குத் தமிழ் நூல்களை மாத்திரம் கற்பித்தலோடமையாது விசேடமாகச் சம்ஸ்கிருத நூல்களையும் கற்பித்து வந்தனர். அதிக விவேகியாகிய இவர் புலவரிடம் பல்லாண்டு படித்துத் தமிழ் இலக்கண இலக்கிய அறிவிற் சிறந்து விளங்கியதன்றிக் கவிபாடுவதிலும் அதி சாமர்த்தியம் பெற்றனர். பின் சிதம்பரத்தையடைந்து அங்கே பச்சையப்ப முதலியாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கில வித்தியாசாலையிலே தமிழ்ப் பண்டிதராகவிருந்து சில்லாண்டு கற்பித்து வந்தனர். ஆங்கில உணர்ச்சியும் இவருக்குச் சிறிதுண்டு. சிதம்பரத்திலே சாஸ்திரியாரொருவரிடம் இவர் சம்ஸ்கிருதத்திலே தருக்க சங்கிரக நூலுரைகளைக் கற்று அவைகளிற் சிலவற்றை மொழிபெயர்த்துத் தமிழிலே எழுதியச்சிட்டு வெளிப்படுத்தினர். அவை, தருக்க சங்கிரகத்தின் உரைகளாகிய நியாய போதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், அதனுரையாகிய நீலகண்டீயம் என்பவைகளாம். மொழி பெயர்க்கும்பொழுது அங்கிருந்த யாழ்ப்பாணத்தவரான தர்க்க குடார தாலுதாரி எனப் போற்றப்பட்ட ஸ்ரீமான் திரு ஞானசம்பந்தப்பிள்ளை என்பவரின் உதவியையும் பெற்றனர் என்ப. இவர் சிதம்பரத்திலிருக்கும் காலத்திலே புலியூர்ப் புராணம் என்னும் ஒரு புராணம் பாடியுள்ளனர். புலியூர் அந்தாதி முதலியனவும் பாடியுள்ளனர். புலி

யூர்ப் புராணம் இவருடன் அதி நண்பு பூண்டவரும், தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்ல அறிஞராயும் சித்தாந்த விற்பன்னராயும் விளங்கியவருமாகிய தெல்லிப்பழை பிறக்றர் ஸ்ரீமான் தம்பையா அவர்கள் விரும்பியவாறு இயற்றப்பட்டதாகும். அதனை அவர் பாரியாராகிய ஸ்ரீமதி பவளநாயகியம்மையார் இற்றைக்கு இரண்டு வருடங்களின் முன் அச்சிடுவித்து வெளிப்படுத்தியுள்ளனர். ஏனைய வெளிவரவில்லை. இவர் தாம்பாடிய சனிதுதியைத் தாமே அச்சிடுவித்து வெளிப்படுத்தியுள்ளனர். இவர் சிதம்பரத்திலிருந்து படிப்பித்துவருங் காலத்திலே யாதோ ஒரு காரணத்தால் அவ் வித்தியாசாலையைவிட நேர்ந்தது. அதனால் இவர் தம்மூருக்கு வந்திருந்த பின்னர், தம் தமையனார் விரும்பியவாறு விவாகஞ் செய்துகொண்டனர். இவருக்கு ஒரு புத்திரியுண்டு. இவர் காத்திராப்பிரகாரம் உண்டான சுரநோயினாலே நளவருடம் (கிறீஸ்தாப்தம் 1916-ம் ஆண்டு) மார்கழி மாதத்தில் தேகவியோகமடைந்தனர். இவர் தேகவியோகமானபோது வயது நாற்பத்துமூன்று. இவர் புத்திரியை இவர்மருகரும் பாலபண்டிதருமாகிய ப. இரத்தினேஸ்வர ஐயர் என்பவர் விவாகஞ் செய்துள்ளார். இவர் கவிச்சிறப்பு அறியப் புலியூர்ப் புராணத்துள் ஒரு கவிதை இங்கே தருதும் :—

“ஆம்பல் பற்பல வொருகையிற் பற்றின ரழிப்பார்
தேம்பப் புண்டரீ கம்பல வொருகையிற் சிதைப்பார்
சாம்பு மெல்லியர் மகளிரென் றுரைப்பது சழக்கோ
நாம்பு கன்றது பொய்யுரை படுங்கொலோ நவிற்றீர்.”

இவரது தலையின் முற்பக்கம் உயரமான புடைப்புடையது. அதனால் இவரை மிடாத்தலையரென்பர். தம்மோடு பேசுபவர்க்கும், படிப்பு விஷயமாகத்தான் வேறு விஷயமாகத்தான் வாதம்புரிவோர்க்கும் உடனுக்குடன் வேடிக்கையாக யாவரும் வாயடங்கி நாணி நகைப்

போடு செல்லும்படி மிகச் சாதுரியமாகவும் விசேடமாக வும் விடைகூறுவதில் நிபுணர். விரைவிற் பாடும் வன்மை யும் உடையவர். பல தனிச் செய்யுட்களும் கையறு நிலைகளும் பாடியுள்ளனர்.

### கையறுநிலை

"ஓயா தொருகண மூறியொன் றாக வுளங்குலைந்து
பாவாய் நினதுயிர்க் கேள்வர்மெய் வாடிப் பதைபதைக்கப்
போவா யவர்துயர் தீரவொன் றேனும் புகல்கின்றிலாய்
ஆவா கொடியையன் றோவுரை நீதைய லம்பிகையே."

### சனி துதி

"வருங்கொ லேத்தொழின் மடங்க லுட்படப் புகாவகையா
னெருங்கு றுஞ்சிறு நெறிகடிந் துள்ளன்பு நீடப்
பருங்க யிற்றிடைப் பிணித்து வன்கொடு வரிபாற்றி
யருங்க லைத்தொகை வளர்ப்பது நைமிசா ரணியம்."

வருத்திடு கோர மேனி
வானவ போற்றி வான்மே
லுருத்திர னுவாய் போற்றி
யுலகுளோ ரஞ்சி யஞ்சிக்
கருத்தழி கடவுள் போற்றி
காளனே ருருவாய் போற்றி
யருத்தியின் யாவு முண்ணற்
கமர்ந்திடு முளத்தாய் போற்றி.

## குமாரசுவாமிப் புலவர்

இவர் யாழ்ப்பாணத்துச் சுன்னுகத்திலே வேளாண் குலதிலகராய் விளங்கிய அம்பலவாணபிள்ளைக்குப் புதல் வராகத் தோன்றினர். உடுவில் முத்துக்குமார கவி ராயருக்குப் பௌத்திரர். இவர் பிறந்த காலம் சாலி வாகன சகம் ஆயிரத்து எழுநூற்று எழுபத்தைந்துக்குச்

(கிறீஸ்தாப்தம் 1850) சமமான பிரமாதீச வருஷம் தைமாதம் பதினெட்டாந் திகதி ஞாயிற்றுக்கிழமை. இவர் இளமையிலே தமிழ் நெடுங்கணக்குப் பயின்று சொற் பயிற்சியும் வந்தபின், மல்லாகத்திலுள்ள ஆங்கில வித்தியாசாலையிலே சென்று ஆங்கிலமும் தமிழுங் கற்றுவந்தனர். அக்காலத்திலே இவரது நுண்மதியை நோக்கிய தந்தையார், தமிழ்க் கல்வியை நன்கு கற்பிக்க விரும்பித் தம்மூரிலே யிருந்தவரும் இலக்கணக் கல்வியில் நுண்மதி படைத்தவருமாகிய முருகேச பண்டிதரிடம் இலக்கிய இலக்கணம் கற்குமாறு இவரை யனுப்பினர். இவர் அவரிடஞ்சென்று இலக்கிய இலக்கணம் கற்றுவரும் நாளிலே, ஆசிரியரைப்போலவே இவரும் இலக்கணவறிவிற் சிறந்தவராய்க் கவிபாடும் வன்மையையும் பெற்றுக்கொண்டார். பின் சம்ஸ்கிருதம் படிக்க விரும்பி, அப்பாஷையில் அதிக வன்மை படைத்தவரும் குற்ற விசாரணைச் சிறுமன்றில் (பொலிஸ் கோட்டில்) பாஷாந்தரீகரண உத்தியோகத்தமர்ந்தவரும் அவ்வூரவருமான நாகநாத பண்டிதரிடஞ் சென்று அப்பாஷையைக் கற்றுவந்தனர். அவரிட மிவர் இரகுவம்சம் முதலாகிய காவியங்களையும் பயின்று, சாகுந்தலம் முதலிய நாடகங்களையும், வேறு நூல்களையும் கற்றுத் தேர்ந்து, சம்ஸ்கிருத நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கத்தகும் வன்மையும் உடையராயினர். இவர் மொழிபெயர்ப்பு வன்மையும், கவிபாடும் வன்மையும் உடையவர் என்பதை அறிதற்பொருட்டு இவர் மொழி பெயர்த்துப் பாடிய ஒரு கவிதை இங்கே காட்டுதும்:

"முந்தேறு கிருதயுக பூபதிமாந் தாதாவு
முடிந்து போனான்
நந்தேறு கடலடைத்த செயராமச் சந்திரனு
நடந்து விட்டான்

வந்தேறு குருகுலத்துத் தருமன்முதன் மகிபரெலா
மாய்ந்து போனார்
அந்தோவிங் கிவரொடும்போ காதபுவி நின்னொடுதா
னடையு மையா."

என்பது. இக்கவியேயன்றி இன்னும் மொழிபெயர்த்துப் பாடிய நூல்கள் :-- மேகதூதக் காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா முதலியவைகளாம். இவையும் அவரது இருமொழி வன்மையையும் காட்டும். சிசுபால சரிதம் இவர் மொழிபெயர்த் தெழுதிய சிறந்த வசன நூலாகும்.

(இவர் முருகேச பண்டிதரிடத்தன்றி, அளவெட்டி கனகசபைப் புலவரிடத்துஞ் சென்று சிற்சில இலக்கண நூல்களைப் படித்தவரென்றும், படிக்கும் காலத்திலே பிரயாசையோடும் தேகசிரமத்தையும் நேரத்தையும் கவனியாது, (எவரிடத்து அரிய நூல்கள் இருக்கின்றனவோ அவரிடம் வருத்தம் பாராது சென்று பெற்றுப் படிப்பரென்றும்) அறிந்தோர் சிலர் கூறுவர்.)

இவர் தமிழிற் சிறந்த பாண்டித்தியமடைந்திருக்கும் காலத்திலே, தமிழபிமானம் பூண்டு ஏட்டுப் பிரதிகளாயிருந்த தொல்காப்பியம் நச்சினார்க்கினியருரை, கலித்தொகை, இறையனார் களவியலுரை முதலிய சங்கச் சான்றோர் நூல்களையும், சூளாமணி இலக்கண விளக்கம் முதலிய பிற்றைச் சான்றோர் நூல்களையும் அச்சுப் பிரதிகளாக்கித் தமிழுலகிற்கு உபகரித்தவராகிய ராவ்பகதூர் ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் சைவசமய விருத்தியையும், தமிழ்மொழி வளர்ச்சியையுங் குறித்து ஏழாலையிலே ஆயிரத்தெண்ணூற்றெழுபத்தெட்டாம் ஆண்டுக்குச் சமமான தாது வருஷம் ஆவணிமாசம் பத்தாந்திகதி புதவாரத்திலே

ஒரு தமிழ் வித்தியாசாலையைத் தாபித்து, அதில் முருகேச பண்டிதரையும் இவரையுமே ஆசிரியர்களாக நியோகித்தனர். அப்போது இவருக்கு வயசு இருபத்திரண்டு.

இருவரும் கற்பித்துவருங் காலத்திலே, சிறிது காலத்தின்பின் முருகேச பண்டிதர் அவ்வித்தியாசாலையை விட்டு வேறிடஞ் செல்ல, இவரே தலைமை ஆசிரியராக விருந்து கற்பித்துவந்தனர். (இவ்வித்தியாசாலையிலே இவரிடத்துப் படித்துப் புலமையடைந்தவர்கள் தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையரும், அவ்வூர் பாலசுப்பிரமணிய ஐயரும், அவ்வூர் க. சங்கரப்பிள்ளையும், அவ்வூர் நா. மயில்வாகனப்பிள்ளையும், மாவிட்டபுரம் ச. விசுவநாத முதலியாரும், தையிட்டி மா. பொன்னையரும், வண்ணார்பண்ணை சைவப்பிரசாரகர் மாணிக்கத்தியாகராச பண்டிதரும், ஏழாலை வி. தம்பையபிள்ளையும், கொக்குவில் வாசரும் மாணிப்பாய் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதருமாகிய இளையதம்பிப்பிள்ளையும் முதலாயினோர்.) (இவர்களுள்ளே இயற்கையான நுண்மதியோடு நூலறிவும் மிக்குப் பிரபலம் பெற்றவர் சிவானந்தையரே.) (சம்ஸ்கிருத தருக்க சங்கிரகத்தை அதனுரைகளாகிய நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம் என்னுமிவற்றோடும், அன்னம்பட்டீயத்தின் உரையாகிய நீலகண்டீயத்தோடும் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளிப்படுத்திருக்கின்றனர். புலியூர்ப் புராணம், புலியூரந்தாதி, சனிதுதி முதலியன பாடியுமிருக்கின்றனர்.) இச் சிவானந்தையரும், மாவிட்டபுரம் மயில்வாகனப்பிள்ளையும் தேகவியோகமடைந்தனர். ஸ்ரீமான் மாணிக்கத்தியாகராச பண்டிதர், கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மையோடு இவ்வீழ நாட்டிலுள்ள பற்பல ஊர்களேடோறும் கதாப்பிரசங்கஞ் செய்து வருகின்றனர். வி. தம்

யைபிள்ளை புராணப் பிரசங்கங்கள் புரிந்து வருகின்றனர்.

இவரிங்கே படிப்பித்துவருங் காலத்திலே, ‘இலங்கை நேசன்’ முதலிய பத்திரிகைகளில் பல அரிய விஷயங்கள் எழுதி வந்தனர். அன்றியும், பற்பல ஊர்களிலுஞ் சென்று பிரசங்கங்களுஞ் செய்து வந்தனர்.

இன்னும் அக்காலத்திலே பற்பல ஊர்களிலுமுள்ள ஆலயங்களுக்கு அவ்வவ்வாலய அதிபர்கள் விரும்பியவாறு பதிகங்களும் ஊஞ்சல் முதலியனவும் பாடியுள்ளார். அவைகள் :- (வதுளைக் கதிரேசரூஞ்சற் பதிகம், நகுலேஸ்வரரூஞ்சல், துணைவைப் பதிகம், தென்கோவை வெள்ளெருவை விநாயகரூஞ்சற் பதிகம், ஏழாலை யத்தியடி விநாயகரூஞ்சற் பதிகம் முதலியனவாகும்.) மிலேச்ச மத விகற்பக் கும்மியொன்றும் இவரால் அக்காலத்திலே பாடப்பட்டதாகும். இவரால் பாடப்பட்ட தனிக் கவிகள், சிறப்புக் கவிகள், கையறு நிலைகளும் மிகப் பலவாகும்.

பிற்காலத்தில், சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களைப்போன்று இவரும் கட்டளைக்கலித்துறை பாடுதலிற் சிறந்தவராயினர்.

இன்னும் அக்காலத்திலே அஃதாவது கிறீஸ்தாப்தம் ஆயிரத்தெண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டிலே இவருக்கு விவாகமும் நிகழ்ந்தது. இவருக்கு ஒரு புத்திரியும், இரு புத்திரருமுளர். அவருள் முதற் புதல்வரான அம்பலவாணபிள்ளை கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையிலே ஆசிரியராகவிருந்து ஆங்கிலம் கற்பித்து வருகிருர். இளைய புதல்வரான முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை சென்னையிற் சென்று படித்து

பீ. ஏ. பரீட்சையிற் சித்தியெய்தி, இப்பொழுது திருநெல்வேலியில் உள்ள துவிபாஷா பாடசாலைத் தலைமையாசிரியராகவிருந்து படிப்பித்து வருகின்றனர்.

இவர் ஏழாலை வித்தியாசாலையில் படிப்பித்தலை ஒழித்து வீட்டிலுமிருந்து சிலகாலம் படிப்பித்தனர். அப்போது இவர் இயற்றிய நூல்கள், இலக்கண சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம், மேகதூதக் காரிகை முதலியனவாம். அன்றியும் அக்காலத்திலே சூடாமணி நிகண்டின் முதலாவது இரண்டாவது தொகுதிகளுக்குச் சொற்பொருளும் எழுதி யச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். நீதிநெறி விளக்கத்திற்கு ஒரு புத்துரையும் இவரால் எழுதப்பட்டுள்ளது.

ஆயிரத்துத் தொளாயிரத்து இரண்டா மாண்டிலே இவர் ஆறுமுகநாவல ரவர்களாலே தாபிக்கப்பட்ட வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே அவ்வித்தியாசாலைக் கதிபராகவிருந்த ஸ்ரீமான். த. கயிலாயபிள்ளையவர்கள் விரும்பியவாறு தலைமையாசிரியராக விருந்து கற்பித்து வந்தனர். அக்காலத்திலே தமிழிலும் ஆரியத்திலும் உயர்தர நூல்களைக் கற்பிக்கும் நோக்கத்தோடு அவ் வித்தியாசாலையின் ஒரு பாலாக அவ்வித்தியாசாலையின் அதிபரவர்களால் அரசின ருதவியோடு காவிய பாடசாலை தொடங்கி நடத்தப்பட்டது. அப் பாடசாலைக்கு இவரே தலைமையாசிரியராக விருந்து தமிழிலக்கண இலக்கியங்களும் சம்ஸ்கிருத பாடங்களிற் சிலவும் கற்பித்து வந்தனர். அப் பாடசாலையிலே இவரிடம் படித்துப் பரீட்சையிற் சித்தியெய்திய மாணவர்கள் பெயர் வருமாறு:—

உடுவில் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர், அவ்வூர் ஜெகநாதையர், காரைநகர் ச. பஞ்சாட்சர ஐயர், வல்லு

வெட்டித்துறை மு. சுப்பிரமணிய தேசிகர், இருபாலை மு. வேதாரணிய தேசிகர், அவ்வூர் சி. தியாகராசபிள்ளை, தாவடி மு. பொன்னையபிள்ளை, நாயன்மார்கட்டு செ. சிவ சிதம்பரப்பிள்ளை, நீர்வேலி மயில்வாகனம்பிள்ளை, தெல்லிப்பழை சி. கதிரிப்பிள்ளை, தென்கோவை வேதாரணிய தேசிகர், வேதாரணியம் தி. அருணாசல தேசிகர், சிறுப்பிட்டி த. கார்த்திகேசபிள்ளை, நல்லூர் கா. குருமூர்த்தி ஐயர், மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு ஏ. பெரியதம்பிப்பிள்ளை.

(இவருள் மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை யவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்க பண்டித பரீட்சையில் சித்தியெய்தி இலக்கண இலக்கிய உணர்ச்சியில் மிகச் சிறந்தவராய் இப்பொழுது திருநெல்வேலிச் சைவ ஆசிரிய கல்லூரியில் தமிழ்த் தலைமையாசிரியராக இருந்து கல்வி கற்பித்து வருகின்றனர்.) (வ. மு. இரத்தினேஸ்வர ஐயரும் இப்போது பர்மா தேசத்திலே கல்வி கற்பித்துவருகின்றனர். (நாவலர் கலாசாலையிற் படிப்பித்துவருங் காலத்திலே இவர் யாப்பருங்கலக்காரிகையுரை, தண்டியலங்காரவுரை, அகப்பொருள் விளக்கவுரை என்பவைகளை மாணாக்கர்கள் படித்தற்கேற்ற வகையாக எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளனர்.)

நாவலர் வித்தியாசாலையில் இவர் படிப்பிக்குங் காலத்திலே அங்கே மேற்கூறிய அதிபரவர்களால் ஒரு தமிழ்ச் சங்கம் தாபிக்கப்பட்டது. அச்சங்கத்தில் பிரதம வித்வானாய் விளங்கியவர் இவரே.

இச்சங்கந் தாபித்தபின் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் மதுரையிலே ஒரு சங்கந் தாபிக்கப்பட்டது. அச் சங்கத்திற்கு ஓரங்கத்தவராகும்படி தேவரவர்கள் இவருக்கு ஒரு கடிதம் எழுதி வேண்டி

னர். அவ்வேண்டுகோட்குத் தாமுடன்பட்டுத் தம துடன் பாட்டைக் குறித்துத் தேவர் அவர்களுக்கு இவர் ஒரு கடிதம் எழுதினர். அக்கடிதம் நோக்கிய தேவர் அவர்கள் மகிழ்ந்து இவரைத் தமது சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்த்ததுமன்றி, இவர் உடன்பட்டமைக்காக ஒரு வந்தனக் கடிதமும் எழுதினர். அக்கடிதம் வருமாறு :-

மதுரைத் தமிழ்ச்சங்கம்
29-11-02

ஐயா !

தாங்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் கல்வியங்கத்தினருள் ஒருவராய் அமர்ந்து செந்தமிழ்ப்பாஷாபிவிருத்திக்கு வேண்டுவனவற்றைப் புரிதற்கு மனமுவந்து வரவிடுத்துக்கொண்ட சம்மதப் பத்திரிகையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்ச்சியடைந்தேன். இவ்வாறு அன்புகூர்ந்து மனமுவந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கின்றேன்.

இங்ஙனம்
பாண்டித்துரை.

அதன்பின் தேவரவர்கள் சங்கத்தால் நடாத்தப் பெறும் செந்தமிழ்ப் பத்திரிகைக்கு விஷயதானம் புரியுமாறும் ஒரு கடிதம் எழுதி வேண்டினர். இவரும் அதற்குடன்பட்டு அவர் வேண்டிய நாட்டொட்டு அருமையும் பெருமையுமமைந்த விஷயங்கள் பல எழுதி வந்தனர். தேவரவர்கள் கடிதம் வருமாறு :-

மதுரைத் தமிழ்ச்சங்கம்

ஐயா !

நம் சங்கத்தினின்றும் 'செந்தமிழ்' எனப் பெயரிய ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை வெளிப்படுத்தலாகுமென முன்னரே யறிவித்துள்ளபடி வெளியிடற்கு அப்பத்திரிகைக்குத் தங்கள் அருமை

யிற் கற்ற கல்வியானுய விஷய சாதனங்கள் இன்றி யமையாச் சிறப்புடையவாதலின் தங்கள் நுண்ணறிவிற்கெட்டிய அரும்பெரும் விஷயங்கள் யாவும் நம் செந்தமிழ்ப் பத்திரிகை தன்னிடங்கொண்டு இத்தமிழுலகிற்கு மிக்க நன்மை புரியுமாறு செய்விக்கத் தங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

**பாண்டித்துரை**

அக்கிராசனுதிபதி

இவர் செந்தமிழ்ப் பத்திரிகைக்கு எழுதிய விஷயங்கள் யாவும் அருமையும் பெருமையுமாயவை என்பதை அப்பத்திரிகைக்கு உதவிபாசிரியராயிருந்த வித்துவான் ஸ்ரீமான் மு. இராகவ ஐயங்காரவர்கள் எழுதிய மதிப்புரைக் கடிதமொன்ருனு மறியலாம். அதனையுமிங்கே தருதும் :—

மதுரைத் தமிழ்ச்சங்கம்

8 - 1 - 05

**ஸ்ரீமத் பிள்ளையவர்கட்குப் பிரிய விஞ்ஞாபனம்,**

தங்கட்கு யாங்கள் நெடுநாளாகக் கடிதம் எழுதாத பிழையைப் பொறுப்பீர்களாக. தாங்கள் நம் செந்தமிழுக்கு எழுதிவரும் அரிய விஷயங்கள் தமிழகம் முழுவதும் படித்துப் பாராட்டத்தக்கனவாக ஒளிர்கின்றன. நம் செந்தமிழ்ப் பெருமையை வளர்த்தற்கண் தாங்கள் கொண்டுள்ள முயற்சியளவு வேறெவருங் கொண்டிலர் என்பது இந்நாட்டின் பொது அபிப்பிராயம். (யான் தேவரவர்களுடன் சென்னை சென்றிருந்தபோது மகாவித்வான் ஸ்ரீமத் வே. சாமிநாதையரவர்கள் தங்களையும் என்னருமை மைத்துனர் ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்களையும் இரண்டு தமிழ் இரத்தினமென்று பாராட்டித்

தேவரவர்கள் திருமுன்பு புகழ்ந்தது உண்மையில் அதிசயோக்தியன்று. யான் தங்களுடன் கடிதமூலம் மிகுதியும் பழகாதவனாயினும் தங்கள் அருமைப்பாடுகளை நன்கு உணருமாற்றல் உடையேனாதலாலும் செந்தமிழ்ப் பத்திரிகையோடு சம்பந்தமுடையேனாதலாலும் இக்கடிதத்தை வலியத் தங்கட்கு எழுதத் துணிந்தேன்.

எங்களோடு கொண்ட நட்புரிமை என்றும் பெருகிவரத் திருவருளைச் சிந்திக்கிறேன்.

இங்ஙனம்

மு. இராகவையங்கார்

செந்தமிழ் உதவிப் பத்திராசிரியர்

எமது புலவர் அடுத்த வருடம் (1910-ம் ஆண்டில்) மதுரைத் தமிழ்ச்சங்கத்தை நோக்கும்படியும் ஆலயதரிசனஞ் செய்யும்பொருட்டும் இந்தியாவுக்குப் பிரயாணமாயினர். அப்போது இவருடன்சென்றவர் பண்டிதர் சோமாஸ்கந்தபிள்ளையும், ஸ்ரீநிவாசக் குருக்களும், இவர் நண்பர் சுன்னாகம் வயித்தியநாதப்பிள்ளையுமாவர். இவர்களோடு பிரயாணமாகி இராமேசுவரம் சென்று அங்கு முறைப்படி தீர்த்தமாடிப் பின், சேதுபந்தன தீர்த்தமாடிப் பின்னும் இராமேசுவரஞ் சென்று இராமநாத தரிசனஞ் செய்து, அன்றிரவு அங்கு வசித்து மறுநாள் தமது வருகையைப் பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்குத் தந்தி மார்க்கமாகத் தெரிவித்து, அவர் வசிக்கும் இராமநாதபுரம் போயினர். அப்போது தேவரவர்களனுமதிப்படி வித்துவான் ஸ்ரீமத் கோபாலையரவர்கள் புகையிரதஸ்தானத்தில் வந்துநின்று இவரை அழைத்துக்கொண்டு சென்று தேவரவர்களுடைய மாளிகையின் பக்கலிலுள்ள ஒரு மாளிகையில் வசிக்கச்செய்து, வேண்டிய உபசாரணைகளுஞ் செய்தனர். இவரங்கே வசித்து மறுநாள் மதுரை

சென்றனர். (தேவரவர்கள் மதுரைப் புகையிரத ஸ்தானத்தில் வந்துநின்று தமது வண்டியிலேற்றிக்கொண்டு சென்று தாமிருந்த மாளிகையில் வசிக்கச்செய்து உபசரித்தார்கள்.) (மறுநாள் ஸ்ரீமத் சுப்பிரமணியக் கவிராயர், ஸ்ரீமத் அருணாசலக் கவிராயர், ஸ்ரீமத் நாராயண ஐயங்கார், ஸ்ரீமத் ரா. இராகவையங்கார் முதலிய வித்துவான்களையும் அங்கே வரவழைத்து, அவர்களும் தாமுமாக வித்தியாவிடயங்களைக் குறித்து இவரோடும் சம்பாஷித்தனர்.) பின் தேவரவர்கள் சங்க மண்டபத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்குள்ள கலாசாலை, புத்தகசாலை, அச்சியந்திரசாலை முதலியவற்றையெல்லாம் காண்பித்துக்கொண்டு, மீளவும் தம் மாளிகைக்கு அழைத்துவந்து இரவு அங்கே தங்கும்படி செய்தனர். மறுநாளும் இவர் சங்கஞ் சென்று, அங்குள்ள வித்துவான்களோடு சம்பாஷித்துக்கொண்டு இரவு தேவர் மாளிகையிலே தங்கி, மற்றைநாள் தேவர் விடையோடு அங்குநின்றும் புறப்பட்டுக் கும்பகோணஞ் சென்றனர். சென்று சுவாமி தரிசனஞ் செய்து பின் திருவாவடுதுறை யாதீனத்துத் தம்பிரானாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரைக் காணும்படி அங்குப் போயினர். அப்போது தேசிகர் திருவிடைமருதூரில் இருக்கின்றாரெனக் கேட்டு அங்குச் சென்றனர். சென்று தேசிகரைக் கண்டு அவரால் உபசரிக்கப்பட்டு அன்று அங்கே தங்கினர். தங்கிய பொழுது தேசிகர் இவரை இலக்கண இலக்கியங்களிலும், தருக்க சாஸ்திரங்களிலும் பல வினாக்கள் வினாவினர். அவ் வினாக்களுக்கெல்லாம் இவர் தக்கவாறு விடையளித்தனர். அப்பொழுது தேசிகர் இவரது புத்தியின் கூர்மையை வியந்து "யாவற்றையும் கிரமமாகப் படித்திருக்கிறீர்கள்" எனப் பாராட்டி, ஒருநாள் முழுவதும் இவரோடு அளவளாவி உயர்ந்த பட்டுச் சோமன் சோடியும் பரிசாக வழங்கினார்கள்.

(வடதேய யாத்திரையால் யாழ்ப்பாணம் வந்தபின்பு, நட வா மடி சீ முதலாக நன்னூலார் வகுத்துக் கூறிய இருபத்துமூன்றீற்றினுள்ளும் அடங்கிய வினைப் பகு பதங்களுக்கும் அவ்வவற்றினடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதங்களுக்கும் பகுதி விகுதி முதலிய உறுப்புக் களைப் பகுத்துக்காட்டி ஒருநூல் இயற்றி, அதனை (வினைப் பகுபத விளக்கமென்னும் பெயரோடு அச்சிட்டு வெளிப்படுத்தினர்.) இதுவும் வடமொழி தென்மொழி யென்னு மிருமொழி புணர்ச்சியோடு நுண்மாணுழை புலமுமுடையோர்களாலன்றி ஏனையோர்களால் இயற்றற் கரியது. (இதன் சிறப்பு மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் அவர்கள் எழுதிய கடிதத்தானும், தற் போது 'செந்தமிழ்'ப் பத்திராதிபராகவிருக்கும் வித்துவ மணி திரு. நாராயண ஐயங்காரவர்கள் எழுதிய மதிப் புரையானு மறியலாம். அவற்றுள் மஹாமஹோபாத்தி யாய உ. வே. சாமிநாதையரவர்கள் கடிதம் வருமாறு:-

> நீங்கள் பேரன்புடன் அனுப்பிய வினைப் பகுபத விளக்கம் என்னும் புத்தகம் வரப்பெற்று மிக மகிழ்ச்சியடைந்தேன். மேற்படி புத்தகம் உருவத் தாற் சிறியதாய் இருந்தாலும், பொருளமைப்பில் மிகப் பெரியதாயிருக்கின்றது. எத்தனை வருடம் கடினமாக உழைத்துத் தொகுத்தீர்களோ தெரிய வில்லை. தங்களுடைய வேலைகளுள் எதுதான் சாதா ரணமானது.)

இந்நூல் இயற்றிய ஆண்டிலே சென்னையரசாட்சி யார் வித்துவான்களைக்கூட்டி ஒரு தமிழகராதி யெழுது விக்க விரும்பி, அக்கருத்தை அரசாங்க உத்தியோகத் தர்களுக்குத் தெரிவித்தார்கள். அவ்வுத்தியோகத்தர்கள் "சான்ட்லர்" என்பவரை அக்கிராசனராகக் கொண்டு 1931-ம் ஆண்டிலே அதாவது பிரமாதீச வருஷத்தில்

ஒரு சபை கூட்டினார்கள். கூட்டப்பட்ட அச்சபையார் அவ்வகராதியை எழுதுவிக்குமுன் அவ்வகராதி எப்படி எழுதப்படவேண்டு மென்பதைப்பற்றித் தத்தம் அபிப் பிராயத்தைத் தெரிவிக்குமாறு பற்பல வூர்களிலுமிருக் கும் தக்க வித்துவான்களிடம் கடிதமூலமாகக் கேட் டார்கள். கேட்கப்பட்டவர்களில் இவருமொருவர். இவர் தம் நண்பரான ஸ்ரீமத் கைலாயபிள்ளை, ஸ்ரீமத் முத் துத்தம்பிப்பிள்ளை என்னுமிருவரோடும் ஆலோசித்து, ஆறுமுகநாவலர் கலாசாலையில் ஒரு சபை கூட்டினார். கூட்டிய அச்சபையார் கருத்தின்படி இவ்விதம் எழுதப் படவேண்டுமென்று ஒரு நிருபம் அச் சென்னைச் சபை யாருக்கு இவர் எழுதினர். எழுதிய நிருபத்தைக் கண்ட அச் சபைத் தலைவராகிய 'சான்ட்லர்' அவர்கள் அடுத்த வருடம் தைமாதம் யாழ்ப்பாணம் வந்து இவரையழைத்து அகராதி எழுதுதற்கு வேண்டிய விஷயங்களைப்பற்றிப் பேசினர். இரண்டுவாரம் வரையில் இருந்து வேண்டிய வற்றை இவரோடு கலந்து பேசிக்கொண்டு இவரைச் சென்னைப்பட்டினம் வந்து எழுதுவோரி லொருவராக விருக்குமாறு கேட்டனர். இவர் தேகாரோக்கியமின்மை முதலியவற்றைக் கருதி அதற்குடன்படவில்லை. பின், 'சான்ட்ல'ரவர்கள் இவர் அச்சிடும் நோக்கமாக எழுதி வைத்திருந்த ஓரகராதிப் பிரதியை ஒருதொகைப் பணங் கொடுத்துப் பெற்றுச் சென்றனர்.

இவர் பின் வடமொழியிலுள்ள சாணக்கிய சத கத்தை மொழிபெயர்த்து வெண்பாவாற் பாடி "சாணக் கிய நீதிவெண்பா" வெனப் பெயரிட்டு அச்சிட்டனர். அவ்வெண்பாக்கள் பழைய வெண்பாக்கள்போல மிகச் சுவையும் இசையும் அமைந்துள்ளனவாகும். இது அச் சிட்ட காலம் 1914. இதன்பின் இவர் சங்க இலக்கி யங்களிலும், சங்கமருவிய இலக்கியங்களிலும், பிற்றைச்

சான்றோர் இலக்கியங்களிலுமுள்ள அருஞ் சொற்களை யெல்லாம் ஆராய்ந்து தொகுத்து ஓர் அகராதியெழுதி, அதற்கு இலக்கியச் சொல்லகராதி யெனப் பெயர் தந்து அதனை ஒரு நூலாக அச்சிட்டனர். இது அச்சிட்ட காலமும் முன்னைய ஆண்டே.

இதன்பின் இவர் அச்சிட்ட நூல் தமிழ்ப்புலவர் சரிதம்; இது தமிழிற் புலமையடைந்த புலவர்களுடைய சரிதங் கூறுவது. இதில் ஏறக்குறைய நானூறு புலவர் களின் சரிதங்கள் அடங்கியுள்ளன. சரிதம் மிகச் சுருக் கிக் காட்டப்பட்டிருப்பினும், எழுதப்பட்ட வாக்கிய நடையோ முரண் முதலிய தொடைநயமும், சுருங்கச் சொல்லல் முதலிய அழகுமமைந்து தஞ்சுவையை மிகப் பெருக்கிக் காட்டுகின்றன. (புலவர்களுடைய ஊரும் பேரும் குலமும் செயலும் முதலியனவன்றிக் காலமும் தெரிந்தவரையில் உணர்த்தப்பட்டுள்ளது.) சிற்சில புல வர்கள் பாடிய அருஞ் செய்யுள்களும் காட்டப்பட்டுள் ளன. கடினமான சில செய்யுட்களுக்கு உரையும் எழு தப்பட்டுள்ளது. இந்நூற்கு ஒரு முகவுரையும் மிக விசேடமாக எழுதப்பட்டுள்ளது. அம் முகவுரையை வியந்து ஸ்ரீமத் ரா. இராகவையங்கார் அவர்களும், ஸ்ரீமத் திரு. நாராயணையங்காரவர்களும் கடிதமெழுதியுள்ளார் கள். இது அச்சிட்ட காலம் 1916.

இப்புலவர் சரிதம் மகாராஜ சமுக பூஜித மகத் துவ ஸ்ரீயுக்த ராஜராஜேசுவர சேதுபதியவர்களின் செந்தமிழ்ப் பரிபாலன விருப்பம் நோக்கி யமைக்கப் பட்டது. இந்நூலை யச்சிடுதற்குச் சேதுபதியவர்களும் ஒரு தொகைப் பொருளுதவினார்கள்.

இதன்பின், இவரும் தி. த. கனகசுந்தரம்பிள்ளையு மாக ஆராய்ந்து பதிப்பித்தது இராமாவதாரத்துப் பால

காண்டம். முன்னுள்ள அச்சுப்பிரதிகளேயும், பல ஏட்டுப் பிரதிகளேயும் வைத்து ஒப்புநோக்கி நன்கு ஆராய்ந்து அவற்றுள் உண்மையான பாடம் இதுவெனக் கண்டு திருத்தப்பட்ட செய்யுட்களே உடைத்தாகலின், இது முன்னுள்ள அச்சுப்பிரதிகளினும் எத்துணையோ மடங்கு சிறந்தது. இதற்கு ஓர் அரும்பதவுரையும் செவ்விதாக எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் கருத்துக்குச் சிறிதும் இயையாத முன்னுரைகளேயெல்லாம் விடுத்துப் பெரும் பாலும் அவர் கருத்தோடு பொருந்த எழுதப்பட்டுள்ள தாகலின் இவ்வுரையும் முன்னுரைகளினும் மிகச் சிறந் தது. இது அச்சிடப்பட்ட காலம் கி. பி. 1918-ம் ஆண்டு.

பின் வடமொழியிலுள்ள மாகமெனப்படும் சிசுபால வதமென்னும் நூலே அந்நூலிலுள்ளபடி வருணனைகளும் நடையும் சுவையுமமையத் தமிழில் மொழிபெயர்த்துக் கத்தியரூபமாக எழுதியச்சிட்டனர். எழுதும்போது வட மொழியிலுள்ள மகாபாரதம், பாகவதம் என்னும் நூல் களிற் சொல்லப்படும் சிசுபாலனென்பவனது கதையை யுந் தழுவி எழுதினர். தமிழிலே உரைநடையில் இது போலும் மொழிபெயர்ப்பு நூல் செய்தவர் இதுவரை யும் இல்லையெனலாம். இது அச்சிடப்பட்ட காலம் 1921.

பின் வடமொழியிலுள்ள இராமோதந்தமென்னும் நூலேத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடி மதுரைத் தமிழ்ச் சங்கத்தாருக்கு அச்சிடும்படி உதவினர். மாணுக் கர் படித்தற்பொருட் டியற்றியதாதலின் இதிலுள்ள செய்யுட்கள் யாவும் கடினபதம் நீக்கி யியற்றப்பட்டன. ஆயினும் பொருளாழமுஞ் சுவையுமமைந்துள்ளன. இது அச்சிடப்பட்ட காலம் 1922-ம் ஆண்டு.

அதன்பின் இரகுவம்ச காவியத்தைக் கத்தியரூப மாகத் தமிழில் மொழிபெயர்த் தெழுதிவந்தனர். எழுதி

வந்த இந்நூல் பூரணமாகமுன் முன்பற்றிய வாதநோய் குறைந்து வயிற்றுளைவு நோய் உண்டாயிற்று. உண்டாய அந்நோயின் முதிர்வினாலே இவர் கிறீஸ்தாப்தம் 1922-க்குச் சமமான துர்மதி வருடம் மாசிமாதம் 25-ந் திகதி புதன்கிழமை புத்திரரும் மித்திரருமேங்கக், கற்றோரும் மற்றோருமிரங்கத் தேகவியோகமடைந்தனர்.

இவர் தேகவியோகமடைந்த காலத்தைக் குறித்து யாம் பாடிய வெண்பாவையு மிங்கே தருதும்.

" ஆண்டுநிகழ் துன்மதியி லாயகும்ப நன்மதியிற்
பூண்டவிரு பானைந்திற் புந்தியினி—னீண்டகலை
கூர்தசமி சுன்னைக் குமாரசுவா மிப்புலவப்
பேர்மணிசென் மேற்கதிநாட் பேறு."

இந்நூல்களன்றி, இன்னுஞ் சில நூல்கள் இவராற் றிருத்தப்பட்டும், உரையெழுதப்பட்டும் நூதனமாக இயற்றப்பட்டுமுள்ளன. திருத்தப்பட்டன உரிச்சொனிகண்டு, பழமொழி விளக்கமென்பன. (உரையெழுதப்பட்ட நூல் கலைசைச்சிலேடைவெண்பா என்பது.) இவ்வுரையே இதற்கு முதலுரை. இயற்றப்பட்டன, அத்தியடி விநாயகரூஞ்சல் முதலியன. விரிவஞ்சி இவை முதலிய விரிக்கப்படாது விடப்பட்டன.

இன்னுந் தன் மாணாக்கராகிய பிரமஸ்ரீ ஆ. சண்முகரத்தினசர்மா என்பவர் நடாத்திய ஞானப்பிரகாசமென்னும் பத்திரிகைக்கு இவரளித்த சிறப்புக்கவியொன்றையும் இங்கே காட்டுதும்:—

" பற்றுள செந்தமிழ் வாக்கியங் காட்டும் பகைநொதுமல்
அற்றுயர் நூதன சம்பவங் காட்டு மருங்கவிக்குஞ்
சிற்றுரை காட்டும் பொழிப்புரை காட்டுஞ் சிறந்தபொருள்
உற்றுள ஞானப் பிரகாச மென்னு மொளிவட்டமே."

இனி, இவர் புலமை நலங்களுட் சில கூறுதும்:-

இவர் சொற்களை வரையறுத்துப் பிழையின்றி யெழுதுவதிலும், அவற்றிற்குப் பொருள் கூறுவதிலும் மிக வல்லுநர். இலக்கியங்களின் மூலபாடங்களைப் பல முறை நோக்கி அவற்றின் பொருளை நுண்ணிதிற் கண்டு உரை கூறுவதிலும் வல்லுநர். ஏட்டுப்பிரதிகளாயுள்ள பழைய நூலுரைகளை நோக்கிப் பிழையற அச்சிற் பதிப்பித்தலிலும் வல்லுநர். பிறர் அச்சிற் பதிப்பித்த நூலுரைகளை நோக்கி யவற்றிலுள்ள பிழைகளை நுண்ணிதிற் கண்டு வெளிப்படுத்தவும் வல்லுநர். சொற் சுருங்கன் முதலிய அழகுபெற வாக்கியங்களைத் தொடுக்கவும் வல்லுநர். பழைய பாக்கள்போல வெண்பா முதலிய பாக்கள் இயற்றவும் வல்லுநர். இவருடைய இவ் வன்மைகளை நோக்கித் தாம் செய்த நூல்களைத் திருத்துவித்தாரும் பிழை கூறுவாரோ என்னுமச்சத்தால் சிறப்புப்பாயிரம் பெற்றாரும் பலரென்றால் இவர் வன்மையைக் குறித்து யாம் சொல்வதென்னோ?

இனி, இவர் குண நலங்களுள்ளும் சில கூறுதும்:-

இவர் மாணாக்கர்களுக்குத் தாம் அறிந்த நுண் பொருள்களையெல்லாம் வஞ்சியாது உணர்த்துபவர். பணத்தை விரும்பி மாணாக்கர்களைக் கற்பியாதவர். தமது புத்தகங்களைக் கொடுத்தும் மாணாக்கர்களைக் கற்பிக்கும் தருமசீலர். தமிழ்க்கல்வி கற்கும்படி இளைஞரை ஏவுபவர். கற்றவரிடத்தில் மிக அன்புடையவர். அவரைப் பெரிதும் உபசரிப்பவர். கற்றவரோடு பேசும் விருப்புடையவர். மற்றவரோடும் விநோதமாகப் பேசும் விருப்பமுடையவர். ஏனைய புலவரைப்போலப் பிறரைக்கொண்டு தம்மை மதிப்பிக்க விரும்பாதவர். உடைநடைகளாற் பிறர் தம்மை மதிக்கவேண்டுமென்று எண்ணாதவர். தம்

மைப் புலவரென்று தாமியற்றிய நூல்களில் தாமே எழுதாதவர். தமக்கு அவமானமென்று கருதாது தமக்குப் புலப்படாதவற்றைக் கற்றவர்பால் வினவியறியும் பெருங்குணம் பூண்டவர். தெரியாதென்று சொல்லுதல் அவமானமென்று கருதாது தெரியாதவற்றைத் தெரியாது என்றே சொல்லுபவர். நூலுரைகளில் வரும் பிழைகளையும் ஒப்புக்கொள்பவர்.

இவர்காலத்தில் இலங்கையரசாட்சியார் இலங்கையிலுள்ள தமிழ் வித்துவான்களுட் சிறந்தவராயுள்ளவர்கள் ஐவர்க்குத் தனித்தனி இருநூற்றைம்பது ரூபா கொடுத்துச் சன்மானிப்பதாகத் தீர்மானித்தனர். அப்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள செந்தமிழ்ப் பரிபாலன சபையார் நாவலர் கலாசாலையில் ஒரு சங்கங் கூட்டி அரசாட்சியாருடைய சன்மானப் பணத்தைப் பெறுதற்குத் தகுந்த தமிழ்ப்புலவர் இவரேயென்று தீர்மானித்து அதனை அரசாட்சியாருக்கு அறிவித்தார்கள். அரசாட்சியாரும் அப்பணத்தைக் கொடுத்து இவரைச் சன்மானித்தார்கள். இவர் சன்மானிக்கத் தகுந்தவர் என்பதை இவரியற்றிய நூல்களே கூறுமாதலின் யாம் கூறல் மிகையாகும்.

ஊர்காவற்றுறைக் கோட்டு நீதிபதியும் திரிபாஷாவிற்பன்னரும் குணக்குன்றுமாக விளங்கிய நல்லூர் கு. கதிரைவேற்பிள்ளையவர்களால் மிகப் பெரிய தமிழகராதி தொகுக்கப்பட்ட காலத்தில் இன்றியமையாத் துணைவராய் விளங்கியவர் இவரே. இவரது சொற்பொருளுணர்ச்சி வன்மைக்கு இவ்வகராதியும் தக்க சான்றாகும்.

இவர் பள்ளிக்கூடங்களில் ஆசிரியராய் அமர்ந்து முறையாகக் கற்பித்தகாலத்துப் படித்தவரேயன்றி, இவர்

இல்லத்தும் வழிதெருக்களிலும் இவர்பால் தொடர்ந்து சிலபல நூல்களைக் கற்றோரும் ஐயங்களை வினவித் தெளிந்தோரும் பலராவர். இவ்வாறு இவரிடம் கற்றோர் வண்ணைச் சண்முகரத்தின சர்மா, தென்கோவை ச. கந்தையபிள்ளை, இளவாலைச் சங்கரப்பிள்ளை, கோண்டாவில் இளையதம்பிப்பிள்ளை, கந்தரோடை அ. கந்தையபிள்ளை, சுதுமலை நாகலிங்கப்பிள்ளை முதலியோர். யாமும் இவர் இல்லத்துஞ் சென்று சில நூல்களில் ஐயங்களை வினவித் தெரிந்ததுண்டு. தாம் நூல்கள் எழுதுவதில் கவனம் செலுத்தி இருக்கும் நேரத்திலும் தம்மிடம் இடையிடையே பல நூல்களில் ஐயங்களைக் கேட்பவர்களுக்கு இயன்றவரை விடைகூறி அவரைத் திருப்தி செய்வதும் இவர் இயல்பு.

சங்கரபண்டிதர், ஆறுமுகநாவலர், தென்கோவை அம்பலவாணபண்டிதர் என்பவரிடத்தும் இவர் சில நூல்களின் ஐயங்களை வினவித் தெளிந்துள்ளனர் என்பர்.

## சபாரத்தினமுதலியார்

இவர் கொக்குவிலிலே சைவாசாரம் வாய்ந்த வேளாண் குலத்திலே முல்லைத்தீவுக் கச்சேரியில் லிகித உத்தயோகத்தமர்ந்திருந்த சபாபதிப்பிள்ளை என்பவருக்குப் புதல்வராகக் கிறீஸ்தாப்தம் ௧அ௫அ-க்குச் சமமான காலயுத்தி வருடம் சித்திரைமாதம் ௩-ம் திகதி புதன்கிழமை பிறந்தார். பிறந்து வித்தியாரம்பஞ்செய்து சுயம்புநாதபிள்ளை என்பவரிடம் தமிழ் பயின்று பின், இக்காலத்திலே மத்திய கல்லூரி என வழங்கப்படும் (அப்போதைய) 'கொக்' பாடசாலையிலே ஆங்கிலங் கற்று வந்தார். வண்ணார்பண்ணையிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலே ஆறுமுகநாவலரிடம், த. கைலாச

பிள்ளையுடன் இவரும் ஒருங்கு கற்றனர் என்ப. நாவலரிடங் கற்றதனுற்போலும் இளமையிலே சமயப்பற்றும் சமயாபிமானமும் இவருக்கு உண்டாயிற்று. அதனுல் இவருஞ் சமயவிருத்தியின்பொருட்டுத் தமது கசு-ம் வயசிலேயே உழைக்கத்தலைப்பட்டனர். தலைப்பட்டு 'உதயபானு'ப் பத்திரிகையிலே நிரீச்சுர வாதத்தை மறுத்துப் பல கண்டனங்களெழுதியுள்ளார். சைவசித்தாந்த நூல்களும் நன்கு கற்றவர்.

இவர், கஅஎஅ-ம் ஆண்டிலே யாழ்ப்பாணக் கச்சேரியில் லிகித உத்தியோகம் பெற்று, சிலவாண்டு நடத்தியபின் முல்லைத்தீவு, கொழும்பு, கண்டி, காலி முதலிய இடங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள கச்சேரிகளில் அவ்வுத்தியோகத்தை நடத்தியபின், யாழ்ப்பாணக் கச்சேரியில் முதலியாருத்தியோகத் தமர்ந்தார். அமர்ந்து தமது கடமையைச் செவ்விதாகச் செய்து வந்தார்.

கசுoரு-ம் ஆண்டிலே முதலியார்ப் பட்டமு மிவருக்கு அளிக்கப்பட்டது. பின் கசுகஎ-ல் சமாதான நீதிபதியாயிருந்து கசுககூ-ல் இராசவாசல் முதலியாரென்னும் பட்டமும் பெற்று, கசுஉக-ல் தமது உத்தியோக கடமையினின்றும் நீங்கி ஆறுதலுற்றுர்.

இவர் உத்தியோகத்தமர்ந்த காலத்திலும், ஒழிந்திருந்த காலத்திலுமாகச் சமயச்சார்பாக 'இந்துசாதனம்' என்னும் பத்திரிகையில் பல அரிய விடயங்களெழுதியுள்ளார்.

இங்கு மிந்தியாவிலுமாகப் பலமுறை சித்தாந்தசபைகளில் அக்கிராசனத்தமர்ந்தவர். தாமும் அக்காலத்துச் சைவசமய மாண்புகளை விளக்கிப் பற்பல பிரசங்கங்கள் செய்தவர். சீவான்ம பேதம், ஈச்சுர நிச்சயம், பிரபஞ்ச விசாரம் என்னுஞ் சமய நூல்களை எழுதி வெளிப்படுத்

தினவர். தமிழ் நூல்களிற் சிலவற்றை ஆங்கிலத்தும் மொழிபெயர்த்தவர். காசி முதலிய தலங்களுக்கு யாத்திரை செய்தவர். நற்குணமும் நல்லொழுக்கமுமமைந்தவர். சிவபெருமான்மேலும், விநாயகப்பெருமான்மேலும் கந்தசுவாமிமேலும் பற்பல கவிகளுமியற்றியவர். கவிகள் அச்சிடப்படவில்லை.

இத்தகைய இவர் கசுஉஉ-ம் ஆண்டுக்குச் சமமான துந்துபி வருடம் ஐப்பசிமாதம் ௩௦-ம் திகதியிற் தேக வியோகமடைந்தார்.

இவருடைய ஏகபுத்திரராகிய நவரத்தினம்பிள்ளை என்பவர் யாழ்ப்பாணக் கச்சேரியில் உத்தியோகத்தமர்ந்து செவ்விதாக வாழ்கின்றனர். இவரின் மூத்த மகளான பரஞான அம்மையார் மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளையின் புதல்வரும் பிறக்ராருமாகிய மாணிக்கவாசகரால் விவாகஞ் செய்யப்பெற்று நல்வாழ்வுடன் இருக்கின்றனர்.

## தி. த. கனகசுந்தரம்பிள்ளை

இவர் திரிகோணமலையிலே வேளாளர் குலத்திலே சாலிவாகன சகாப்தம் கஎசுஅ-க்குந் கிறீஸ்தாப்தம் கஅசுஅ-க்குஞ் சமமான ருதிரோற்காரி வருடம் ஆவணி மாதம் உச-ந் தேதி தம்பிமுத்து என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். பிறந்து ஐந்துவயதானவுடன் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்றுக் கதிரைவேற்பிள்ளையிடமும், கணேசபண்டித ரென்பவரிடமும் தமிழிலக்கணவிலக்கியமு மாங்கிலமுங் கற்றுவந்தார். பதினான்காம் வயதளவில் திருவாதவூரடிகள் புராணம், மறைசையந்தாதி என்பவற்றிற்குப் பொருள் சொல்லு மாற்றலுடையராயிருந்தார். பின் கஅஅ௦-ம் ஆண்டிற் சென்னப்பட்டினஞ் சென்று, முதலிற் செல்வநாயக்கர் பாடசாலையிற் கல்வி

கற்று மத்திய பாடசாலைப் பரீட்சையிற் சித்தி எய்தி ஞர். பின் பச்சையப்பன் காலேஜில் எவ். ஏ. வகுப்பிலும், பிறசிடென்சிக் காலேஜில் பீ. ஏ. வகுப்பிலுஞ் சித்தியெய்தியமையோடு பீ. ஏ. வகுப்பில் தத்துவ சாத்திரத்திலும், தமிழிலும் விசேட சித்தியடைந்தமை காரணமாக மிகச்சிறந்த பரிசுகளும் பெற்றனர். அதன் பின் இவர் அரசாட்சியாரது வித்தியாவிருத்தி நிலையத்தில் உத்தியோகம் பெற்று, அதனை மிக்க திறமையோடு முறைவழாது நடத்தினர். சிலகாலஞ் சென்ற பின், இராசாங்க லேகக நிலையத்தி லுத்தியோக மாற்றம் பெற்று அந்நிலையத்திற்றனே வித்தியாவிருத்தி சம்பந்தமான காரியங்களுக்கு அத்தியட்சருமாயினர்.

இவர், தெல்லிப்பழை வாசரும் கிராமக்கோட்டு நீதிபதியுமாயிருந்த சிதம்பரநாத முதலியார் புதல்வி சுந்தரம் என்னும் பெண்மணியை விவாகஞ்செய்து, அறநெறி வழா தில்லறத்திலொழுகினர். இவருக்கு நான்கு புதல்வர்களும் ஒரு புதல்வியும் பிறந்தபின், மனைவியார் தமது ௨அ-ம் வயதிலே தேகவியோகமாயினர். இவர் தமது மனைவியாரிறந்தபின், மறுமணஞ் செய்யாது பிள்ளைகளிடத்திலேயே அன்புமிக்குக் கண்ணுங்கருத்துமாக அவர்களை வளர்த்தும், கல்வி கற்பித்தும் நன்னிலையில் வைக்க முயன்றுவந்தனர். இவர் புதல்வர் நால்வரும் பீ. ஏ. வகுப்பிற் சித்தி பெற்றுள்ளனர். அவர்களுள் இராராசன் என்பவர் சங்கீதத்திலும் வல்லராய்ப் பலர்க்கு மாசிரியராகி விளங்குகின்றனர். இராசசேகரன் என்பவர் எம். ஏ. பட்டதாரியாய்ச் சென்னைக் கிறிஸ்தியன் காலேஜில் ஆசிரியராயமர்ந்துள்ளனர். இராசேசுவரன் என்பவர் சென்னை நகரசங்கத்தில் இன்ஸ்பெக்றராயிருக்கின்றனர். இராசமார்த்தாண்டன் என்பவர் அரசினர் லெக்சிக்கன் ஆபிசில் லேககராக இருக்கின்றனர்.

இவர் தமது உத்தியோகக் கடமைகளைச் செய்யுங் காலமொழிய, மற்றைய காலங்களிலெல்லாம் பழந்தமிழ் நூல்களையும், வடமொழிநூல்களையும் ஆராய்தலையே பெருங்கடனாகக்கொண்டு காலங்கழித் துழைத்துவந் தனர். சென்னையிலிருந்த வித்துவான் இராசகோபால பிள்ளையின் உதவிகொண்டு, கம்பராமாயணத்திற் சில பாகங்களையும் வேறு சில நூல்களையும் நுண்ணிதாக ஆராய்ந்துகொண்டனர். ஏனைய நூல்களையுந் தாமாகவே கற்றுணர்ந்தனர். தொல்காப்பியத்தையுஞ் சங்கஇலக்கி யங்களையு மேட்டுப்பிரதிகள் பலவற்றோடு ஒப்புநோக்கி நுண்ணிதாக ஆராய்ந்தனர். இந்நூல்களிலுள்ள உண் மைப்பாடங்களும் நுண்பொருளுங் கண்டறிதலில் ஒப் புயர்வின்றி விளங்கினர். (இவரால் ஏட்டுப்பிரதிகள் பலகொண்டு ஆராய்ந்து சூத்திரங்கள்சில திருத்தப் பட்டும், படிப்போர்க் கெளிதிற்பயன்படும்வண்ணம் உரையிலுள்ள உதாரணங்களுக்கு இடங்காட்டப்பட்டு முள்ள தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினிய ருரையும், சொல்லதிகாரஞ் சேனாவரையருரையும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப் பட்டுள்ளன.)

இவர் கவியியற்றுவதிலும் வல்லுநர். அக் கவிக ளெல்லாஞ் சங்கச் செய்யுட்கள்போல ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் பெற்றுள்ளவையாகும். இவர், இந்தியாவிலுள்ள பெரிய வித்துவான்கள் இயற்றியவும், பதிப்பித்தவுமாகிய நூலுரைகட்கெல்லாம் அவ்வப்போது பேருதவி புரிந்தனர். (பின்னத்தூர் நாராயணசாமிஐயர் இயற்றிய நற்றிணையுரையை அவரிறந்தபின் இவரே பரிசோதித்து அச்சிட உதவிபுரிந்தனர்.) பொதுவாக் இவரை உசாத்துணையாகக் கொள்ளாத வித்துவான்கள் இந்தியாவி லிலரென்றே சொல்லலாம். இவர்காலத்தில்

சென்னையிலும் பிறஇடங்களிலுமிருந்த பண்டிதர்களெல்லாம் சலஞ்சலத்தைச்சூழும் வலம்புரிகள்போல அறிஞர்பெருந்தகையும் குணக்குன்றுமாகிய இவரைச் சூழ்வாராயினர். தமிழிலக்கணஇலக்கிய விஷயமாக எந்நேரத்தும் எவ்வகையான வினாக்களுக்குந் தடையின்றி விடையிறுக்கும் ஆற்றல்வாய்ந்த நுண்மாணுழைபுலமுடையார் இவர் என்பது மிகையாகாது. (புலோலி நா. கதிரைவேற்பிள்ளை இவரிடமே தொல்காப்பியமுஞ் சங்க நூல்களுங் கற்றுணர்ந்தனர் என்பர்.) (சென்னைப் பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப் பேராசிரியர் கந்தசாமிமுதலியார், தமிழ்ப்பண்டிதர் மணி. திருநாவுக்கரசுமுதலியார், கிறிஸ்தியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சுப்பிரமணியசிவா, துளுவவேளாளர் உயர்தரப்பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் எதிராஜலுநாயுடு முதலியோர் இவரிடங் கிரமமாக இலக்கணஇலக்கியங் கற்றோராவர்.)

(இவரது வடநூலுணர்ச்சி மாண்பையும், மொழிபெயர்க்குமாற்றலையும், தமிழ்ப்பண்டிதர் நடேசசாத்திரியாரவர்களுக்குப்பின் இவரால் மொழிபெயர்த்தியற்றப்பட்ட வான்மீகி ராமாயணத்துக் கிட்கிந்தாகாண்ட பாகமும், சுந்தரகாண்டமுங் காட்டும்.) இலக்கணஇலக்கிய நூலுணர்வின் வன்மையையும் ஆராய்ச்சி வன்மையையும் இவராலும், இவருதவிகொண்டு பிறராலும் வெளிப்பட்ட அரிய நூல்களும், யாப்பிலக்கணம், திருவள்ளுவர், இராமாயணம் முதலான மாசிக சஞ்சிகைகளிலும் பிற பத்திரிகைகளிலும் இவராலெழுதப்பட்ட விஷயங்களுங் காட்டும்.

இவர் நெடுங்காலமாகச் சென்னைச் சர்வகலாசாலைப் பரீட்சகராயிருந்தமையோடு நான்குவருடகாலம் பரீட்சா சங்கத் தலைவராயுமிருந்தனர். அன்றியும், மதுரைத்

தமிழ்ச்சங்கப் பரீட்சகர்களு ளொருவராயும், (கிறிஸ்தியன் காலேஜிலும், பச்சையப்பன் காலேஜிலும் தமிழ்த் தலைமைப் புலவராயும் இருந்தனர்.) (சான்ட்லர்துரை. என்பவரால், அரசின ராஞ்ஞைப்படி நடாத்தப்பட்டு வந்த மிகப் பெரிய தமிழகராதிக்கும் சிலகாலம் உதவிப் பதிப்பாசிரியராக இருந்தார்.) பின் ஏதோ ஒரு காரணத்தாற் றமே இவ்வேலையினின்றும் விலகினர். (பின் வடமொழி தென்மொழி வித்துவானாகிய சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரோடு நண்புடையராய், அவரோடு சேர்ந்து நம்பியகப்பொருளுக்கு ஓரரிய உரை எழுதி வெளியிட்டும், கம்பராமாயணத்தைக் கூடியமட்டில் எட்டுப்பிரதிகள் பலவற்றோடு ஒப்புநோக்கிச் சுத்தபாடங் கண்டு முழுவதையு மரும்பதவுரையோடு அச்சிடமுயன்று முதலிற் பாலகாண்டத்தை அவ்வாறு வெளியிட்டுமுள்ளார்.) அயோத்தியாகாண்டமு மவ்வாறே சோதித்துச் சுத்தபாடமாக்கப்பட்டும் அரும்பதவுரை பூர்த்தியாகமுன் இவ்விருவரு மொருவர்பின் னொருவராகத் தேகவியோக முற்றமையா லது கடைபோக முடிந்து அச்சுவாகன மேற முடியாதாயிற்று. இந்நூல் முழுவதும் இவ்வாறே இப்புலவர்திலகர்களாற் பரிசோதித்து முடிவுபெறாமை, கம்பநாடர் தவக்குறைவும், தமிழ்நாட்டார் தவக்குறைவு மெனலாம். (தமிழ்நாவலர்சரிதை என்னும் நூலும், வேறுசிலநூல்களும் இவரா லச்சிடப்பட்டன.) இத்தகைய புலவர்சிகாமணி தேகவியோகமான காலம், கிறீஸ்தாப்தம் ௧௯௨௨-க்குச் சமமான துந்துபிவருடம் ஆனி மாதமாகும்.

இவர் புலவர் பலர்க்கு மாதாரமா யிருந்தாரென்பதைத் தென்கோவை பண்டிதர் ச. கந்தையபிள்ளையவர்களியற்றிய கையறுநிலைச் செய்புளொன்று லறியத்தகும். அது வருமாறு :—

"செந்தமிழ்நூன் முற்றுமுணர் சீரார் புகழ்க்கனக
சுந்தரவேள் வாழ்க்கை துறந்ததனாற்—செந்தமிழாம்
மாதார நொந்து வருந்தினளே பாவலரு
மாதார மற்றனரே யாம்."

இவர்மீது யாமியற்றிய கையறுநிலைச் செய்யுள் களுள் இரண்டை இங்கே தருதும். அவை வருமாறு:—

"கோணமலை தனிற்பிறந்த கதிரெழுவெண் கொழுமுத்தே
கோதி லாயாழ்ப்
பாண மதின் மணக்குமொரு செழுங்கமலத் திருமலரோ
பரத மேய
மாணகராஞ் சென்னையிருந் தொளிவிடுநன் மணிவிளக்கே
வாது டுற்ற
தேனுறுநல் வளம்பெறவே லுனைக்கனக சுந்தரனென்
றியம்ப லென்னே."

"ஆங்கிலமுந் திராவிடமும் வடமொழியுங் கற்றறிஞ
ஞகி யார்க்கு
மோங்குமுப காரியென வாழ்கனக சுந்தரப்பே
ரோதும் வள்ளால்
தேங்குதமி ழாய்ந்துமிக வளர்ப்பவர்க டமினியுஞ்
சிறந்தோ யாத
ளுங்குமனத் தமிழ்நாடு நீசுவர்க்கம் புகுதுயாம்
தாங்கு மோதான்."

# காசிவாசி செந்திநாதையர்

இவர் ஏழாலையென்னுமூரிலே கிறீஸ்தாப்தம் 1848-க் குச் சமமான கீலக வருடம் ஐப்பசிமாதம் 2-ந் தேதி யில் சிங்கயஐயர் என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். பிறந்து ஐந்தாம் வயசிலே வித்தியாரம்பஞ் செய்யப் பெற்றுப் புன்னாலைக்கட்டுவனில் தமது மாமனாராய்

விளங்கிய கதிர்காமையர் என்பவரிடம் தமிழுஞ் சம்ஸ்கிருதமும் கற்றுவந்தார். இளமையிலேயே அன்பு, அருள், வாய்மை முதலிய நற்குணங்களெல்லாம் இவரிடத்து அமைந்து விளங்கின. இவர் தமது பத்தாம் வயதில் யாழ்ப்பாணத்து மத்திய கல்லூரியிலே சென்று சேர்ந்து ஆங்கிலக் கல்வி கற்றுவந்தனர். இருபதாம் வயசிலே ஆங்கிலங்கற்றலை விடுத்து நல்லூர்ச் சம்பந்தப்புலவரிடஞ் சென்று அவரிடந் தமிழ் இலக்கியஇலக்கணங்களைக் கற்று அவற்றில் வல்லவரானார். கி. பி. 1871-ம் ஆண்டிலே தந்தையாரோடு இந்தியாவுக்குச் சென்று சிதம்பரம் முதலிய தலங்களைத் தரிசித்து மீண்டனர். பின்னர் 1872-ம் ஆண்டிலே வண்ணார்பண்ணையில் ஆறுமுக நாவலரவர்களால் தாபிக்கப்பட்ட சைவ வித்தியாசாலையிலே ஆறு வருடமும், அவருடைய ஆங்கில வித்தியாசாலையில் ஒரு வருடமும் ஆசிரியராகவிருந்து கற்பித்தனர். அக்காலத்தில் நாவலருடைய சமயப் பிரசங்கங்களை இவர் தவறாது கேட்டுவந்தார். நாவலர் எழுதிய "விவிலிய குற்சிதம்" என்னும் நூலையும் இவரே யச்சிட்டு வெளிப்படுத்தினர்.

இவர் வண்ணார்பண்ணை வாசரும் சைவசித்தாந்தத் துறையில் வல்லுநருமாகிய விசுவநாதையர் என்பவருக்குப் புதல்வியும், சோதிட சாஸ்திர வல்லுநராகிய சபாபதி ஐயருக்குச் சகோதரியுமாகிய சிவகாமியம்மையாரை விவாகஞ்செய்து மீனாட்சியம்மை யென்னும் ஒரு புதல்வியைப் பெற்றார். சிலவாண்டு கழித்து இவருடைய மனைவியார் தேகவியோகமடைந்தனர். 1878-ம் வருடத்திலே இவர் நாவலர் வித்தியாசாலையை விடுத்து இந்தியாவுக்குச் சென்றார்.

இவர் இந்தியாவுக்குச்சென்று மலையாளத்தின் தலைநகராகிய திருவனந்தபுரத்திலே பிரதம நீதிஸ்தல நீதி

பதியாய் விளங்கிய ஸ்ரீமான் தா. செல்லப்பாபிள்ளை என்பவரது உதவியாலும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதி அனுப்பிய நன்னடக்கைப் பத்திர உதவியாலும், அங்குள்ள சுப்பாசாஸ்திரியாரிடத்தும், அரண்மனைச் சம்ஸ்கிருத பரீட்சாதிகாரிகளுள் ஒருவராகிய பிரஹ்மஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரியாரிடத்தும் காவியம் தர்க்கம் வியாகரணம் முதலிய வடமொழிக் கருவி நூல்களைக் கற்றுவந்தார். நாவலரெழுதிய நன்னடக்கைப் பத்திரம் வருமாறு :-

> மா-ா-ா ஸ்ரீ சி. செந்திநாதையரை யான் எழு வருடகாலம் அறிவேன். ஆறு வருடம் என்னுடைய தமிழ் வித்தியாசாலையிலும், ஒரு வருடம் என்னுடைய இங்கிலீஷ் வித்தியாசாலையிலும் உதவி உபாத்தியாயராக இருந்து தமது கடமையைச் ஜாக்கிரதையோடு பிறழாமல் நடத்திக்கொண்டு வந்தவர். ஒழிவுள்ள பிறநேரங்களிலே நான் பொதுநன்மையின் பொருட்டு எடுத்துக்கொண்ட பிற கருமங்களையும் நிறைவேற்றினவர்.
>
> இங்ஙனம்
>
> க. ஆறுமுகநாவலர்,
>
> யாழ்ப்பாணம்,
>
> 1879-ம் ஸூ புரட்டாதி மீ 19உ

இவர் திருவனந்தபுரத்திலே யிருந்து கற்றுவருங் காலத்திலே நாவலர் தேகவியோகமடைந்தார். அவர் பிரிவைக் குறித்து இவர் பல இரங்கற் பாக்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய பாக்களுட் சில பின்வருவன :

### வெண்பா

வன்றொண்டன் நாவலர்கோன் வாழ்வா வதுமாய
மென்றுரைத்த தேவாரத் தின்பொருளை — நன்றியுடன்
சிந்தைசெய்தேன் நாவலனே செத்தாய்நீ யென்பதனாற்
புந்திநொந்து போதமிக்க போது.

நன்னடக்கைப் பத்திரிகை நாவலனே நீயனுப்ப
என்னதவஞ் செய்தேனோ யானறியேன்—அன்னதனு
ளுள்ளசில வாசகங்க ளுற்றுணரும் போதெல்லாம்
வெள்ளம் பொழியும் விழி.

## கட்டளைக் கலித்துறை

தேவாரம் யான்சொலக் கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு புரிசிவ பூசைப் பொலிவழகும்
பாவாணர் மெச்சச் செயும்பிர சங்கமும் பார்த்தினிநான்
நாவார வாழ்த்திடு நாளுமுண் டோநல்லை நாவலனே.

பின்னர்த் தந்தையாரின் அழைப்புக்கிணங்கித் திருச்செந்தூர் பழனி ஆகிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்தார். பின்பு இவர் கொழும்பு ஸ்ரீமான். தம்பையாமுதலியாருடைய வேண்டுகோளுக்கிணங்கிக் கொழும்பு சென்று அவருடைய தருமசத்திரத்திலே 1880-ம் ஆண்டு தைமாதந் தொடக்கம் ஆறுமாசகாலம் வரையும் வைதிகசைவசித்தாந்த பரமாக உபந்நியாசங்கள் செய்துவந்தார். (பின்னர் அங்குநின்றுங் கதிர்காம யாத்திரை செய்தார். அங்கேயிருந்து உபவாசத்தோடு கந்தபுராணத்தைப் பன்னிருதினத்துட் படித்துமுடித்து யாழ்ப்பாணம் வந்தார்.) பின் 1882-ம் ஆண்டு மறுபடியும் இந்தியாவுக்குச் சென்று திருநெல்வேலியில் உள்ள சைவவித்தியாசாலை யொன்றில் ஆசிரியராய் அமர்ந்து சமயபாடத்தோடு இலக்கிய இலக்கண பாடங்களையுங் கற்பித்து வந்தார். 1883-ம் ஆண்டு திருநெல்வேலியிலுள்ள முனிசீப், திருவாளர் சுப்பிரமணியபிள்ளையால் நடத்தப் தப்பெற்றுவந்த "சுஜனமநோரஞ்சனி" என்னும் பத்திரிகைக்கு உதவிப் பத்திரிகாசிரியராகவிருந்து உதவி புரிந்துவந்தார். அக்காலத்தில் சாத்தூர் உதவிப் பதிவுக்காரியஸ்தராகிய சாமுவேல் சற்குணர் எனபவர், "சாணு

ரெல்லாஞ் க்ஷத்திரியர்" என்னுங் கருத்தினோடு ஒரு புத்தகத்தை யெழுதி யச்சிட்டு வெளியிட்டனர். அது கண்ட கிறிஸ்தவர்கள் இவரை அப்புத்தகத்திற்கு மறுப்பு எழுதித் தரும்படி வேண்ட இவர், "சாண் க்ஷத்திரியப் பிரசண்டமாருதம்" என்னும் புத்தகத்தை யெழுதிக் கொடுத்து வெளியிடுவித்தார். இதைக்கண்டு சற்குணரும் பிறரும் இவர்மீது "அவதூற்றுப்பத்திரிகை" ஒன்றை எழுதி வெளியிட்டார்கள். அதனைக் கண்ணுற்ற இவர் அந்தச் சாணார்கள்மீது வழக்குத்தொடுத்தார். விசாரணை யில் சாணார்கள் குற்றமுடையவராகக் காணப்பட்டுத் தண் டிக்கப்பட்டார்கள்.

இவர் ஒருமுறை திருநெல்வேலியிலுள்ள திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரது ஆலயத்திலே "ஞானத்தின் றிருவுருவை" என்னும் முதலையுடைய பெரியபுராணத் திருவிருத்தத்தைப் பீடிகையாகக்கொண்டு ஓர் உபந்நியா சஞ் செய்தார். அது "சுஜனமநோரஞ்சனி" என்னும் பத் திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. இதனைக்கண்டு மகிழ்ந்த கோயமுத்தூர்ச் சைவசித்தாந்தசபை அக்கிராசனராகிய திருச்சிற்றம்பலப்பிள்ளை என்பவர் இவரை ஆங்கு வரும் படி விரும்பிக் கேட்டார். இவரு மதற்கிசைந்து அவ் வாண்டு ஆவணிமாசத்திற் புறப்பட்டு மேலைச்சிதம்பரம் எனப்படுந் திருப்பேரூரை யடைந்து "உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்" என்று தொடங்கும் பெரியபுராணக் காப்புச் செய்யுளையும் "அளவாயளவதனளவாய்" என்று தொடங்கும் பேரூர்ப் புராணத் திருச்செய்யுளையும் பீடி கையாகக்கொண்டு பேரூரைச்சார்ந்த கோயமுத்தூர்ச் சைவசித்தாந்த சபையிலே ஓர் உபந்நியாசஞ் செய்தார். பின்னர் கலியாணசுந்தரம்பிள்ளை யென்பவரது அழைப் புக்கிணங்கி உடுமலைப்பேட்டைக்குச் சென்று அங்குச் சில வைதிகசைவ உபந்நியாசங்கள் செய்தார். அப்பாற்

காசிக்குச் சென்று சிவாலய தரிசனஞ் செய்துகொண்டு அணித்தாகவுள்ள "சிக்களூர்" என்னுமிடத்தையடைந்து அங்குள்ள ஐரோப்பியவைத்தியசாலையில் "பண்டிற்" என்னும் மாசிக சஞ்சிகையில் அச்சிடப்பெற்ற ஸ்ரீ நீலகண்ட பாஷியத்தைப் பெற்றுக்கொண்டு பின்னர்த் தமது ஜெனன நாடாகிய யாழ்ப்பாணத்துக்கு மீண்டனர்.

பின்பு 1886-ம் ஆண்டில் "கந்தபுராண நவநீதம்" என்னும் நூலை எழுதிமுடித்து, கொழும்பிலிருக்கும் சேர் அருணாசலந்துரை முதலிய பிரபுக்களின் பேருதவி பெற்றுச் சென்னைக்குச் சென்று அதனை அச்சிடுவித்துக்கொண்டு மீண்டார். (இக்காலந்தொடங்கி இவருடைய இளைய சகோதரராகிய சிவசம்புநாதையர் என்பவர் இவரோடு வசித்துவந்தார்.)

(1887-ம் ஆண்டிலே வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தில் வல்லுநராகிய இணுவில் பிரஹ்மஸ்ரீ நடராசையர் என்பவரிடத்திலே சென்று சிவஞானசித்தியாரை அதனுரைகளுளொன்றாகிய ஞானப்பிரகாச ருரையோடும் பாடங்கேட்டுவந்தார்.) கேட்டபின் மீளவுஞ் சென்னைக்குச் சென்று அங்கு வசித்தார். அங்கிருந்தபோது பெரியபுராணத்திலுள்ள "சிவனடியேசிந்திக்கும்" என்று தொடங்குஞ் செய்யுட்கு ஒருவர் கூறிய பொருளைக் கண்டித்து உண்மைப் பொருள் இதுவாமென்றுணர "ஞான போத விளக்கச் சூறாவளி" என்னும் நூலினை எழுதி வெளியிட்டார்.) (பின்னர்ச் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த திருப்பற்றூருக்குச் சென்று அங்கிருந்து "அமிர்த போதினி" எனப் பெயரிய வாரவெளியீடொன்றை 1888-ம் ஆண்டில் ஆரம்பித்துச் சிலகாலம் நடத்தி வந்தார். அக்காலத்திலே சென்னையிலுள்ள கிறிஸ்தவருட் சிலர் "சிவனுந் தேவனா" என்னுந் தலைநாமத்தைக்

கொண்ட துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டனர். இதனைக் கண்ணுற்ற, சென்னைக் காசிச்செட்டியாரது வீதியிலேயுள்ள 'இந்துலகுலேக' சங்கத்தின் தலைவராகிய சை. இரத்தினச்செட்டியார் என்பவர் இவரை ஒரு கண்டனம் எழுதித்தரும்படி கேட்டார். அதற்கிணங்கிச் "சிவனுந் தேவனு என்னுந் தீயநாவுக்கு ஆப்பு" எனப் பெயர்கொடுத்து ஒரு நூலை யெழுதிக்கொடுத்தார். இதுவும், "வஜ்ரடங்கம்" என்னும் வேறொரு நூலும் "கிறிஸ்துமத கானன குடாரி" என்னும் பெயரினோடு அச்சங்கத்தாரால் அச்சிடப்பெற்று வெளிவந்தன. பின் அச்சங்கத்தினர் இவரை யழைத்து ஓர் உபந்நியாசஞ் செய்வித்தனர். அப்பொழுது சிதம்பரம் "பிரஹ்ம வித்தியா" பத்திராதிபரும் பல பண்டிதர்களும் கூடியிருந்தனர். இவருக்கு அச்சங்கத்தின் உறுப்பினர் ஒருவரால் "கிறிஸ்துமத கானன குடாரி" என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. இன்னும் திருமங்கலக்குடிச் சூரியனார் கோயில் அதி வருணச்சிரம ஆசாரிய வரிய சைவசமய பரிபாலக ஸ்ரீ சிவாக்கிர யோகீந்திர ஞான சிவாசாரிய சுவாமிக ளாதீனத்து ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர் என்பவர் இவருக்கு எழுதி விடுத்த கடிதத்திற் கண்ட,

"நிறைகல்வி தவவொழுக்கஞ் சான்றாண்மை கண்ணோட்ட
 நெடுகு மன்பு
பொறைமேன்மைச் சிவஞான முதிர்ச்சியநு பூதிமுதற்
 குணங்க ளெல்லாம்
குறையாம னிறைசெந்தி நாதமறை யோய்நின்னைக்
 குறித்தியா மிட்ட
மறைவாய்மைச் சித்தாந்த சிகாமணியாம் பெயர்பிறர்க்கு
 வழங்க லாமோ."

என்னுஞ் செய்யுளால் இவருக்குச் "சித்தாந்த சிகாமணி" என்னும் பட்டத்தை முத்துக்குமார தேசிகர் என்பவர் அளித்துள்ளார் என்பது தெரிகிறது.

இன்னும் 1888-ம் ஆண்டில் "ஞானரத்திநவளி" என்னும் ஒரு நூலை எழுதி இவர் வெளியிட்டார். அக்காலத்துச் சந்நியாசி ஒருவர் சென்னைத் தங்கசாலைத் தெருவில் "சூதசம்ஹிதாப்" பிரசங்கஞ் செய்து வந்தார். அவர் பிரசங்கஞ் செய்யும்போது அறுபத்து மூன்று நாயன்மார்களுட் சிலரைத் தூஷித்து வந்தார். இதனை யறிந்த இவர் "வீரபத்திராஸ்திரம்" என்னும் ஒரு நூலை யெழுதி, அச் சந்நியாசியாரது போலி நியாயங்களைத் தகர்த்தார். பின் திருவாளர்கள்: கு. ஸ்ரீநிவாச சாஸ்திரியார், சை. இரத்தினச்செட்டியார், 'விஜயத்துவச' பத்திராதிபர் முதலிய பெரியார்களது கருத்துக்கிசைந்து "விவிலிய குற்சித கண்டன திக்காரம்" என்னும் நூலையெழுதி யச்சிட்டு வெளியிட்டார். இது ஆறுமுக நாவலர் எழுதிய விவிலிய குற்சிதத்துக்குக் கிறிஸ்தவரால் எழுதப்பெற்ற மறுப்புக்கு மறுப்பாக அமைந்தது.

இவர் 1888-ம் ஆண்டு தொடங்கி 1898-ம் ஆண்டு வரையும் காசியிலே வசித்து வந்தார். அதனால் இவர் காசிவாசி செந்திநாதையர் எனவும் அழைக்கப்படுவர். அங்கு வசிக்கும் காலத்திலே சிதம்பரம் "பிரஹ்ம வித்தியா" முதலிய பத்திரிகைகளிலே வைதிக சைவ சித்தாந்தத்துக்கு மாறாக வெளிப்போந்த பல விஷயங்களைக் கண்டித்து எழுதிய விஷயங்களை "இந்துசாதனம்", "விவேக திவாகரன்", "நாகை நீலலோசனி", "விஜயத்துவஜம்", "வெற்றிக்கொடியோன்" முதலிய பத்திரிகைகளிலே வெளிப்படுத்திவந்தார். இவர் 'இந்து சாதன'ப் பத்திரிகையில் வெளிப்படுத்திய வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயம் என்னும் விஷயத்தைக் குறித்த கட்டுரைகளைத் தொகுத்து யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ த. கைலாசபிள்ளை யவர்கள் செந்திநாதயோகிகளால் இயற்றப்பெற்றன என்னும்

முகவுரையோடு ஏவிளம்பி வருடம் சித்திரைமாசம் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்.)

1898-ம் ஆண்டிலே இவர் காசியை விட்டுச் சென்னைக்கு அணித்தாகவுள்ள திருவொற்றியூரை யடைந்து அங்குச் சிலகாலம் வசித்தபின் அங்குள்ள பழவேற்காடு என்னும் சிற்றூரிற்சென்று அங்குவசித்தனர். அப்போது திருவாளர் சோமசுந்தரநாயகர் என்பவரது விருப்பப்படி சென்னையிலுள்ள ஏகாம்பரேஸ்வரர் சன்னிதானத்திலே ஓர் உபந்நியாசம் செய்தார்.

மேலும், இவர் அங்கிருக்குங் காலத்திலே, சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள அறிஞர் சிலரால் கூட்டப்பெற்ற சபைக்கு இவர் அக்கிராசனராயும் யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை சிறந்த உபந்நியாசகராயும் இருந்தார்கள். ஒருநாள் மாயாவாதத்தை நிராகரித்து கதிரவேற்பிள்ளை அவர்கள் செய்த பிரசங்கத்தைக்கேட்ட சபையோர் அவருக்கு 'மாயாவாத துவம்ச கோளரி' என்னும் பட்டப்பெயரை இவரால் அளிப்பித்தார்கள்.

பின்னர் இவர் 1901-ம் ஆண்டு பாண்டிநாட்டிலுள்ள சிவஸ்தலங்களையும் குகஸ்தலங்களையும் தரிசித்துக்கொண்டு அமராவதி புத்தூரின்கண்ணே வசிப்பவரும் மதுரை மீனாட்சியம்மை கோயிலின் தேவஸ்தானசபை அங்கத்தவருள் ஒருவருமாகிய திருவாளர் வயி. நாக. ராம. இராமநாதச் செட்டியார் என்பவர் விரும்பிய பிரகாரம் மதுரையம்மை குருபூஜாமடத்திலே வசித்து வந்தார். அப்பொழுது மதுரையிலுள்ள "பிரஹ்ம ஞான சபா" மண்டபத்திலே திருவாளர் திரவியம் பிள்ளை என்பவர் வேண்டிக்கொண்டபடி ஓர் உபந்நியா

சம் செய்தார். (1902-ம் ஆண்டில் சுப்பிரமணியப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஸ்தலமாகிய திருப்பரங்குன்றத்துச் சந்நிதி வீதியிலுள்ள மயில் மண்டபத்துக்குக் கீழ்ப்புறத்திலே ஒரு வித்தியாசாலையைத் தாபித்து அதற்கு "வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த வித்தியாசாலை" எனப் பெயர்சூட்டி அதில் மாணாக்கர்களுக்கு சம்ஸ்கிருதந் தமிழ் ஆங்கிலம் ஆகிய பாஷைகளிலுள்ள நூல்களைக் கற்பித்துக்கொண்டு வந்தார்.)

(பாலவனத்தஞ் ஜமீந்தாரும் நான்காவது தமிழ்ச் சங்க ஸ்தாபகருமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் விரும்பிய வண்ணம் 'செந்தமிழ்' என்னும் பத்திரிகைக்குத் 'திருப்பாசுரம்', 'உள்ளது', 'திருச்சிற்றம்பலம்', 'கடவுள்' என்னும் தலையங்கங்களோடு கூடிய விஷயங்களை எழுதி உதவினார்.) (இவ்விஷயங்கள் 'செந்தமிழ்' முதலாம் தொகுதியிலும், இரண்டாந் தொகுதியிலும் வெளிவந்துள்ளன.) மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் "ஞானமிர்தம்" என்னு நூலைத்திருத்தி அச்சிட்டபோது இவரும் அவர்க்கு வேண்டிய உதவிபுரிந்தனர்.

வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் படம் எனப் பெயரிய பிரணவப் படமும் இவரால் 1904-ம் ஆண்டிலே அச்சிட்டு வெளியிடப்பட்டது. (கருங்குழி இராமலிங்கபிள்ளையின் பாடல்காரணமாகப் புலோலிக் கதிரவேற்பிள்ளைக்கும் அச்சென்னையிலுள்ளார் சிலருக்கும் சென்னைப் பிரதமநீதிஸ்தலத்தில் ஒரு வழக்கு நடைபெற்றது. அவ்வழக்கிற் சாட்சி பகர்ந்தவர்களில் இவரும் ஒருவர். வழக்கு முடிந்தபின்னர் பிள்ளையவர்கள் இவருக்கு எழுதி விடுத்த கடிதசாரமும் பாக்களும் வருமாறு:

நீதிபதிமுதற் பலரும் வியப்புறச் சுவாமிகள் எழுந்தருளித் திருவாய்மலர்ந்தருளிய வாக்கன்றோ ! எமக்கு இப் பெருஞ் செயத்தை உண்டாக்கிற்று. இஃது எல்லாரும் அறிந்ததொன்றே. சுவாமிகள் பரங்குன்று நோக்கி என்னைப் பார்த்து, (" நின் வழக்கு நினக்குச் செயமாகவே முடியும்; அங்ஙனமின்றி மாறுபட வரின் " நீறு கண்டிகை வேல்மயில் என்பவற்றை வேண்டிலன் " என அன்பால் நைந்து அருளிய ஆசிமந்திரம் என் மனத்தை விட்டகலாது.) இத்துணை அன்பும் ஆர்வமும் உளவேல் எமக்கு அபஜெயமும் எய்துவதாமோ ?

" செந்தூர்நங் குகக்கடவுள் போலெனக்குத் தலைக்கருணை
செய்வோய் நாளும்
நந்தாருங் காத்தார்க்கு மறிவரிய பரம்பரன்ற
னலத்த ஞானம்
வந்தாரு மெய்யுளத்த வடமொழியுந் தென்மொழியும்
வரம்பே கண்ட
நந்தோமின் மெய்ப்புலவ சித்தாந்த பாநுவென
நவில நின்றோய்.

அன்பதுவே யுறுப்பாக வருட்சூழாம் வடிவாக
வழகே வாய்ந்த
இன்பதுவே குணனாக வியைசிவமே யுணர்வாக
வெழிற்சித் தாந்தம்
என்பதுவே கலனாக விதைவிரித்த ரெழிலாக
விளங்குஞ் செந்தி
முன்பதுவா நாதப்பேர் நாவலசற் குருமணியே
முறையைக் கேட்டீ.

என்னுடலு முயிர்தானு நீயன்றோ வென்பொருளே
யெனக்கு வாய்ந்த
மன்னடலே பெரும்பேற்றுக் குணக்குன்றே யடிகளென
வாழ்த்த லன்றிப்

பின்னெனைதையா னின்றிறத்துச் செய்குவன்கா ணிவ்வுலகிற்
பிறந்தே கற்ற
அன்னபய னீயன்றோ வடைகின்றாய் புகழ்மிக்கோ
யையா வையா.

தம்மையே புகழ்ந்தென்னு முதலதுள திருவருட்பாத்
தன்னைக் கொண்டே
எம்மையோர் தம்மையும்நான் புகழ்ந்ததிலை யிதுகாறு
மின்பே யீது
மெய்ம்மையே நீயெனக்குச் சற்குருவாய் விளங்கலினின்
மீது பாட
அம்மையால் வந்ததென்றே நினக்கியான் கூறலிச்சை
யன்றான் மாதோ.''

என்பன முதலியன. பாக்களுட் சில விரிவஞ்சி விடப்பட்டன.

1906-ம் ஆண்டில் இவர் தேவகோட்டைச் சைவசீலராகிய திருவாளர்கள்: அரு. சோம. சோமசுந்தரச் செட்டியார், மெ. அரு. நா. இராமநாதச்செட்டியார் ஆகிய இருவருடைய பொருளுதவியைப் பெற்றுச் செந்திநாதையசுவாமி யந்திரசாலை என்னும் பெயரால் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவித் தாமெழுதிய நீலகண்டபாஷ்யத்தமிழ் மொழிபெயர்ப்பு, ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்ய மாட்சி, வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பட வினாவிடை, விவிலிய குற்சிதக் குறிப்பு முதலிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். கோட்டைபூரில் வசித்த சந்நியாசியார் ஒருவர் ஆதி சைவகுலத்தில் உதித்தவனது முகத்தைத் தகர்க்கும் கோல் எனப் பொருள் தரும், "ஆதி சைவ நாமக *குலீன: முகபங்க ‡முத்திர" என்னும் புத்தக வாயிலாகவும், "தாந்திக

* குலீன:=குலத்துதித்தவன்

‡ முத்திர=கோல்

துண்டகண்டனம்" என்னும் புத்தகவாயிலாகவும், சிவாகமங்களையும் ஆதி சைவர்களையும் கண்டித்தார். இவர் இவ்விரு நூல்களையும் முறையே, "வச்சிரதண்டம்", "தாந்திரிக துண்ட கண்டன கண்டனம்" என்னும் இரண்டு நூல்களை எழுதிக் கண்டித்தார். இவர் எழுதிய இவ்விரு நூல்களும் 1910-ம் ஆண்டிலே அச்சிடப்பட்டன. (இன்னும் இவரியற்றிய "மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம்" என்னும் நூல் சாம்பவ ஸ்ரீ சதாசிவபண்டித சிவாசாரியராலும், "சிவஞானபோதவசனாலங்காரதீபம்", "தேவாரம் வேதசாரம்" என்னும் நூல்கள் புரசைச் சுந்தர முதலியார் புதல்வர் ஏகாம்பரமுதலியாராலும், "தத்துவ விளக்கம் மூலமும் உரையும்" மதுரை ஜில்லாவைச் சேர்ந்த காரைக்குடி ஆ. வி. பழ. சிதம்பரச்செட்டியாராலும், "சைவவேதாந்தம்" என்னும் நூல் மேற்படியூர் முத்த. வெ. வெள்ளைச்செட்டியாராலும் அச்சிடுவிக்கப் பெற்று வெளிவந்தன.)

இவ்வாறு சைவத்தொண்டு புரிந்துவந்த இவர் சில நாட் சுரநோயாற் பீடிக்கப்பட்டிருந்து சென்ற இரத்தாட்சி௵ வைகாசி௴ உ-ங வ (15-5-1924) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சிவசிந்தையோடு தேகவியோகமடைந்தார்.

## வ. குமாரசுவாமிப்புலவர்

இவர் யாழ்ப்பாணத்துப் புலோலி என்னும் ஊரிலே சைவாசாரம் பூண்ட வேளாளர் குலத்திலே வல்லிபுரநாதபிள்ளைக்குப் புதல்வராகப் பிறந்தனர். இவர் இளம் வயதிலே தமது இளையசகோதரியாகிய பார்வதியம்மையாரோடும் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றூர். (இவருக்கு இளமை

தொட்டுத் தமிழிலுள்ள பஞ்ச இலக்கணங்களில் மனஞ் சென்றதாகலின் அவற்றை மேற்படி புலவரிடத்தும், வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளையவர்களிடத்தும் கற்று அவ்விலக்கணத்துறையிற் பெரும் பாண்டித்தியம் பெற்று விளங்கினர். (இவர் சிறுபிள்ளைகளோடும் கல்வியறிவற்ற சனங்களோடும் பேசுங்காலும் இலக்கண வழுவின்றியே பேசுவார்.) (இலக்கண வழுவுடைய தமிழ்ப் பிரயோகங்களைக் கேட்குந்தோறும் மிக மனம் வருந்துவதோடமையாது பேசுபவர்களையும் கண்டிக்குந் தன்மையுடையவர்.) அதனால் இவரை 'இலக்கணக்கொத்தர்' எனப் பலருங் கூறுவதுண்டு. 'இலக்கணக்கொத்து' என்பது ஒரு இலக்கண நூல்.

இவர் தமிழ்மொழிப் பயிற்சியிலன்றி வடமொழிப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினர். (வடமொழியை இவருக்குக் கற்பித்த புலவர் இவர் தமையனாராகிய பண்டிதர் கணபதிப்பிள்ளையாவர்.) இவர் வடமொழியினும் சாரஸ்வத வியாகரணத்திற் சிறந்த பாண்டித்திய முடையரென்ப. இவர் இலக்கணத்திலன்றித் தருக்க அறிவிலும் மிகச் சிறந்தவர். கவிபாடுந் திறமுமுடையவர். (இவர் தமது குருவாகிய சிவசம்புப் புலவரியற்றிய யாப்பருங்கலக்காரிகைக்குச் சிறப்புப் பாயிரமாகக் கொடுத்த செய்யுளை இங்கே காட்டுதும் :—

"தாரா யுரையொன்று காரிகைக் கிங்கெனத் தந்துபொருள்
பேரார் கலைவல்லோர் கேட்டிட வேற்கைப் பிரான்பத்திமைச்
சீரார்ந் திடுஞ்சிவ சம்புப் புலவன் றெரித்தவுரை
ஆராயு மைந்த ரகத்திரு ளோட்டிடு மாதித்தனே"

(இவர் தமிழிலக்கணத்திற் சிறந்த பாண்டித்திய முடையரென்பதை இவர் திருத்தி யச்சிட்ட நன்னூற் காண்டிகையுரையா னறியலாம்.) தமிழிலக்கியங்களுள்ளே

வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில் மிகுந்த பயிற்சியுடையவர். அதனை அவர் அப்பாரதத்துச் சூதுபோர்ச்சருக்க முதலிய சில சருக்கங்களுக்கு இயற்றிய உரையா லறியலாம். இவர் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலுள்ள இந்துக்கல்லூரியிற் சிலவருடம் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர். இவர் சாலிவாகனசகாப்தம் ஆயிரத்தெண்ணூற்று நாற்பத்தெட்டில் தேகவியோகமடைந்தனர். தமிழிரகுவம்சத்திற்கு யான் இயற்றிய உரைக்கும் சிறப்புப்பாயிர மளித்துள்ளார். அப்பாயிரச் செய்யுளு ளொன்றை இங்கே தருதும்:—

"பெரும்புகழ்பெற் றிட்டமகா கவிகாளி தாசன்வட
மொழியிற் பேசும்
அருங்கவியாம் ரகுவம்ச காவியத்தை யரசகே
சரியென் றோதும்
விரும்புசுடர்ப் பரிதிகுலத் தமிழரசன் யாழ்ப்பாண
மிசைநல் லூரான்
இருந்தமிழாற் பாடியமிழ் தெனவருந்த விருந்திட்டா
னெவர்க்கு மன்றே."

இவருடைய புதல்வர்களு ளொருவராகிய டக்றர் ஸ்ரீமாந். சிவப்பிரகாசம் என்பவர் திருநெல்வேலிப் பரமேசுவர பண்டித ஆசிரிய கலாசாலைக்கு அதிபராயிருக்கின்றனர்.

## அம்பலவாண நாவலர்

இவர் ஏறக்குறைய எண்பது வருடங்களுக்கு முன்னே வட்டுக்கோட்டை என்னுமூரிலே கார்காத்த வேளாளர் குலத்திலே (முடிதொட்ட வேளாளராகிய இராஜமழவர் குடியிலே) ஆறுமுகப்பிள்ளை என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். இவர் தாயார் பெயர் சுந்தரவல்லியம்மை.

இவருக்கு ஐந்துவயதானவுடன் தந்தையார், சங்கானை என்னுமூரிலிருந்த வேற்பிள்ளை என்னுமாசிரியரை அழைத்து அவரால் வித்தியாரம்பஞ் செய்வித்து, அவரிடத்திலே தமிழ்மொழியைக் கற்றுவரச் செய்தனர். அவரிடஞ் சிலவாண்டு கற்றபின், இவர் மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளைப் புலவரிடம் தமிழிலக்கண இலக்கியங்களையும், நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதரிடம் சம்ஸ்கிருத நூல்களையும் கற்றார். சுளிபுரத்திலிருந்த ஸ்ரீமான் கனகரத்தின முதலியார்பால் இவர் ஆங்கிலமுங் கற்றுவந்தார். (முப்பாஷையிலும் இவர் பாண்டித்திய மடைந்தபின், விளவேலியிலே தமது பரம்பரைக் குருவாயிருந்த வேதக்குட்டிக் குருக்களுடைய புத்திரர் அப்பாத்துரைக் குருக்களிடஞ் சென்று வழிபட்டு, அவர்பால் அவ்வக்காலங்களில் சமய விசேட நிருவாண தீக்ஷைகளும் பெற்றுச் சிவபூசையும் எழுந்தருளப்பண்ணுவித்துக் கொண்டார்.) பின், இவர் மதுரையிலுள்ள திருஞானசம்பந்தர் மடத்து மகா சந்நிதானத்திடத்து மந்திர காஷாயம் பெற்று நைஷ்டிகப் பிரமசரிய மாதுல்ய மாசந்நியாசியாய் விளங்கினர்.

இவர் தமது இளவயதிலேயே சமயாபிமானம்பூண்டு சைவப் பிள்ளைகள் வட்டுக்கோட்டையிலே பாதிரிமார்களால் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலைகளிற் சென்று கற்பதைத் தடுக்கும்படி, ஒரு சைவத் தமிழ் வித்தியாசாலையைத் தாபித்து, சைவமுந் தமிழுந் தழைக்குமாறு அவ்வித்தியாசாலையிலே தாமும் ஓராசிரியராகவிருந்து கற்பித்து வந்தார். வருநாளிலே யாழ்ப்பாணத்திலே சைவமுந் தமிழும் மேலோங்க அவதரித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய பிரசங்க வன்மையைக் கேள்வியுற்று அவற்றைக் கேட்க விரும்பி அவர் கிரமமாகப் பிரசங்கஞ் செய்துவரும் (வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியா

சாலையும், சிவன்கோயில் வசந்த மண்டபமுமாகிய) இடங்களில் தவறாது சென்று அவர் செய்யும் பிரசங்கங்களைக் கேட்டுவந்தார். வருங்காலத்திலே இவருக்கு அவர்பால் அன்பு பெருகிற்று. (அவ்வன்பின் முதிர்ச்சியினாலே அவரைத் தமக்குக் குருவாக மனத்திற் பாவித்துக்கொண்டனர்.) பின்பு சின்னாளில் அவரைப்போல ஒழுகவும் பிரசங்கஞ் செய்யவும் விரும்பினர். விரும்பித் தம்மாற் றாபிக்கப்பட்ட சைவ வித்தியாசாலையிலும் சித்தங்கேணிப் பிள்ளையார் கோவிலிலுமாகக் கிழமைதோறும் பிரசங்கஞ் செய்து வந்தனர். (ஆறுமுக நாவலரைக் குருவாக மனத்திற் பாவித்து வந்தமையாற்போலும் அவரைப்போலப் பிரசங்கஞ் செய்யுஞ் சாமர்த்தியத்தை இவரும் பெற்றனர்.)

அந்நாளிலே இவர் செய்யும் பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்ந்து புகழ்ந்து இவரை யுற்சாகப்படுத்திய பிரபுக்கள் பலராவர். அவர்களுள் வலிகாமம் மேற்கு மணியகாரனாக விளங்கியவரும் வட்டுக்கோட்டையைச் செனனத்தானமாகக் கொண்டவருமாகிய ஸ்ரீமான் இளந்தழையசிங்க மாப்பாண இரகுநாத முதலியாரவர்களே விசேடமானவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும் தம்மீது இவர் கொண்ட அன்பையும், இவர் சமயப் பிரசங்கங்கள் செய்வதையும் கேள்வியுற்று இவரை அழைத்து இளையராய் விளங்கிய இவர்மீது மிகுந்த அன்பு பாராட்டினர். அதனாலும் இவருக்கு நாவலரிடத்தில் அன்பு மிகப் பெருகிற்று. நாவலரவர்கள் தேகவியோக மடைந்தபின்பு அவர்மீது இவர் "சற்குருமணிமாலை" என ஒரு பிரபந்தம் பாடி அச்சிட்டுள்ளார். அவற்றுள் ஒரு செய்யுளை இங்கே காட்டுதும்:—

"திருவே யருட்செல்வ மேசிவ மேசிவ சிற்சுகமே
மருவே மருவின் மலரே மலர்க்கற் பகவனமே
கருவே யிரித்தெமை யாண்டிட நீயுருக் கண்டனையே
குருவேயெம் மாறு முகநா வலசற் குருமணியே."

அந்நாளில் யாழ்ப்பாணத்திலே வாணிகநோக்கமாக வந்திருந்த நாட்டுக்கோட்டைத் தனவைசியர்களுள்ளே வித்துவான்களாய் விளங்கிய பெரிய சொக்கலிங்கச்செட்டியார், சின்னச் சொக்கலிங்கச்செட்டியார் என்னும் இருவரும் இவருடைய பிரசங்க வன்மையையும், கல்வி வன்மையையுமறிந்து இவரிடத்திலே பேரபிமானங்கொண்டு, பிரசங்கங்கள் செய்விக்கும்படி இவரை இந்தியாவிலுள்ள திருநெல்வேலி என்னு மூருக்கு அழைத்துச் சென்று அங்குச் சௌகரியமாக வசித்தற்கேற்ற ஒரு இல்லத்தில் இவரை அமரச் செய்தனர்.

செய்தபின் மறுநாள், இவருடைய உடன்பாட்டோடும், அங்குள்ள ஸ்ரீ நெல்லையப்பர் காந்திமதி தேவஸ்தானத்திலே, அம்மை சந்நிதியிலே உள்ள காந்திமதி விலாச மண்டபத்திலே இவர் பிரசங்கஞ் செய்வதாக யாவர்க்கும் அறிவித்து, தாமும் அங்குள்ள பிரபுக்களுமாக அன்று மாலையிலே, குடை கொடி ஆலவட்டமாதிய வரிசைகளோடும் மேளவாச்சிய கோஷத்தோடும் இவரை அழைத்துச் சென்று பிரசங்க பீடத்திலே அமரச்செய்து, மாலையிட்டு உபசரித்தனர். அப்பொழுது இவராற் சமய விஷயமாய் ஒரு நீண்ட பிரசங்கஞ் செய்யப்பட்டது. அப்பிரசங்கம் சபையிலிருந்த யாவரையும் குதூகலிக்கச் செய்தது. பிரசங்க முடிவில் அங்குள்ள பிரபுக்களால் இவருக்கு ஆயிரம் (1000) ரூபா சன்மானஞ் செய்யப்பட்டது. அஃதன்றியும், இவர் அங்கிருந்து பிரசங்கஞ் செய்யுங் காலம்வரையும் தமது குறுக்குத்துறைச் சத்திரத்திலிருந்து மாதந்தோறும் இவர்செலவுக்குப் பணம்

கொடுக்கும்படி, இவரை அழைத்துச்சென்ற தனவைசியப் புலவர்க ளிருவரது முயற்சியாலும் அந்நகரத் தனவைசியப் பிரபுக்கள் கூடி நியமித்தனர்.

பின்பு இவர், மேற்குறித்த தேவஸ்தானத்திலே காந்திமதிவிலாச மண்டபத்திலே நாட்டுக்கோட்டைத் தனவைசியப் பிரபுக்களும் அவ்வூர்ப் பிரபுக்களும் விரும்பியவாறு, ஒருவருடகாலம் திருவாதவூரர்புராண விரிவுரைப் பிரசங்கஞ் செய்துவந்தார். [இவர் செய்துவந்த அப்பிரசங்கத்தைக் கேட்டுவந்த தனவைசியப்பிரபுக்களும் மற்றும் அவ்வூர் வேளாளப்பிரபுக்களும் மிக மகிழ்ந்து இவர்க்கு யாம் செய்யுங் கைமாறு யாதென ஆலோசிப்பாராயினர். அக்காலத்திலே இவர் திருநெல்வேலியிலே குறித்த தேவாலயத்தின் வீதியிலே திருஞானசம்பந்தசுவாமிகள்பேரினாலே ஒரு மடம் ஸ்தாபித்து ஆண்டுதோறும் குருபூசை செய்யவேண்டும் என்னும் வேணவாவினாலே உந்தப்பட்ட உள்ளமுடையவராகி, அக் கருத்தை அங்கிருக்கும் வேளாளப் பிரபுக்களுக்கும், நாட்டுக்கோட்டைத் தனவைசியப் பிரபுக்களுக்குந் தாமே குறிப்பாகத் தெரிவித்து வந்ததுமன்றித், தம் பிரசங்க நாட்களில் ஒருநாள் அங்கு அக்கிராசனத்தமர்ந்த இராமநாதபுரஞ் சேதுபதி மகாராசா அவர்களாலும் அச்சபையிலே தெரிவித்தனர். பின் இவர் கருத்தைத் தெரிந்த பிரபுக்கள் யாவரும் அக்கருத்தை நிறைவேற்ற விரும்பி ஒருங்குசேர்ந்து தாமே பணஞ்சேர்த்து அவ்வாலயத்தின் வீதியிலே ஒரு கட்டிடம் அமைத்துக் கொடுத்தனர். இவர் அக் கட்டிடத்திலே திருஞானசம்பந்தசுவாமிகள் திருவுருவைப் பிரதிட்டைசெய்வித்து, அப் பெருமானுக்கு நித்திய பூசையும் விசேஷ பூசைகளும் நடைபெறச் செய்து, அதற்குத் திருஞானசம்பந்த சுவாமி மடாலயம் எனப் பெயருமிட்டனர்.]

சிலகாலங் கழித்து அம்மடாலயத்திலே பிரதிட்டை செய்த திருஞானசம்பந்தசுவாமிகளுக்கு நித்திய பூசையும் விசேட பூசைகளும் நடத்துவதன் பொருட்டு நிபந்தமாக அந்தத் தலத்தின் கீழைவீதியிலே ஐந்துவீடுகளும் கல்லூர்க்கோடக நல்லூர் என்னுங் கிராமத்திலே நூற்று மூன்று குறுணிகொண்ட நெல்விளையத்தக்க வயல்களும் இவரால் வாங்கிவிடப்பட்டன. அம்மடாலயத்திலே நித்தியபூசைகள் முதலியன இன்றுந் தவறாது நடந்து வருகின்றன.

இன்னும் இவர் இந்தியாவிலுள்ள க்ஷேத்திரங்கள் பலவற்றையுந் தரிசிக்கச்சென்றபோது திருவாவடுதுறைக்குஞ் சென்றார் என்றும், சென்றபோது அங்குள்ள மடத்திற்கும்போய் அப்போது அங்கே மகா சந்நிதானமாயிருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரைச் சந்தித்தனர் என்றும், அவர் அப்போது இவர்பால் இலக்கண இலக்கியங்களிலும், சித்தாந்த சாஸ்திரங்களிலும் பல வினாக்கள் தொடுத்து இவர் கல்வியறிவைப் பரிசோதித்து, இவர்க்கு நாவலர் என்னும் பட்டப்பெயரும் பட்டுப் பீதாம்பரம் ஒன்றும் அளித்துப் பெருமதிப்புச் செய்தனர் என்றுங் கூறுப. இவர் தரிசிக்கச்சென்ற தலங்களிலெல்லாம் பற்பல பிரசங்கங்கள் செய்துள்ளார்.

கண்டனூர், காளையார்கோயில், காரைக்குடி, தேவகோட்டை, நாட்டுக்கோட்டை ஆதிய இடங்களிலுள்ள தனவைசியப் பிரபுக்களே இவரைப் பெரிதுஞ் சன்மானித்து வந்தனர்.

இவர் பெரியபுராணத்திலே அதிகம் பயிற்சியுடையர். தேவகோட்டையிலுள்ள தனவைசியப் பிரபுக்களின் வேண்டுகோட்படி அங்கே இரண்டுவருட காலம்

பெரியபுராணப் பிரசங்கஞ் செய்துள்ளார். பிரசங்க முடிபு தினத்தில் அங்குள்ள தனவைசியப் பிரபுக்களும் பிறரும் இவரை யானைமீதேற்றி, வாத்திய கோஷத்தோடும் சகலவரிசைகளோடும் ஊர்வலஞ்செய்வித்து அன்று பன்னீராயிரம் (௧௨௦௦௦) ரூபா சன்மானமாகக் கொடுத்தனர். இப் பிரசங்க சம்பவத்தின் விரிவு "பெரியபுராணப் பிரசங்க வைபவம்" என்னும் நூலிலே பரக்கக் கூறப்பட்டுள்ளது. ஆண்டுக் காண்க. (இவர் பிற்காலத்திலே சிதம்பரத்திலும் ஒரு மடங் கட்டுவித்து அதற்கு ஆறுமுகநாவல சந்தான ஞானசம்பந்த சுவாமி ஆதீனம் எனப் பெயரிட்டு, அதற்கும் வேண்டிய நிப்ந்தங்கள் செய்துள்ளார். பிற்காலத்திலே இவர் அங்கேயே வசித்திருந்தார்.)

யாழ்ப்பாணத்திலே வட்டுக்கோட்டையில் தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட சைவத்தமிழ்வித்தியாசாலையை ஆங்கில வித்தியாசாலையாக்கி, அதற்கோர் கட்டிடமும் மிகப் பெரிதாகப் பெரும்பொருள் செலவுசெய்து அமைத்துள்ளார். பிற்காலத்திலே அதற்கு முகாமைக்காரராக, இந்துக்கல்லூரிக்கு முகாமைக்காரராகவிருக்கும் இலங்கைப் பிரதிநிதித் தலைவர் ஸ்ரீமான் துரைசுவாமியவர்களையே நியமித்தனர்.

இவர் பரிசோதித்தும் இயற்றியும் அச்சிட்ட நூல்கள் வருமாறு :—

(௧) பௌஷ்கரசங்கிதாபாஷியம், (௨) அகோரசிவாசார்யார் பத்ததி (நிர்மலமணி வியாக்கியானம்), (௩) பிரம்தருக்கஸ்தவம், (௪) திருவாதிரைத்திருநாள்மகிமைப் பிரபாவம், (௫) சற்குருமணிமாலை, (௬) வேணுவனலிங்கோற்பவம், (௭) அருணைசலமான்மியம், (௮) சிவத்துரோக கண்டனம்.

அச்சேருத நூல்கள் :-

(க) பெரியபுராண பாடியம் (பாடியப் பிரகாசிகை யோடு), (உ) சித்தாந்தப் பிரபோதம், (ங) தக்ஷாதர்சம், (ச) சைவ சந்நியாச பத்ததி, (ரு) ஆரிய திராவிடப் பிர காசிகை.

இப்பெருமை வாய்ந்த நாவலர் சிதம்பரத்திலே சென்ற ஆங்கிரசஹு சித்திரைமீ 23-ந் திகதி வியா ழக்கிழமை தேகவியோகமடைந்தனர்.

## பேரம்பலப் புலவர்

இவர் வேலணையென்னு மூரிலே வேளாண்குலத் திலே கோணமலை என்பவரின் அருந்தவப் புதல்வ. ராகக் கிறீஸ்தாப்தம் 1859 - க்குச் சமமான இரௌத் திரி வருடம் தைமாதம் உக-ந் திகதி வெள்ளிக்கிழமை பிறந்தார். பிறந்து வித்தியாரம்பஞ் செய்தபின் அவ் வூரிலுள்ள அமெரிக்கன்மிஷன் பாடசாலையிற் சென்று கல்வி கற்று வந்தார். கற்று வரும்போதே இவருக்குக் கல்வியில் மிகுந்த ஆசையுளதாயிற்று. அதனுல் வகுப் புப் படிப்பு முடிந்தபின்னும் அவ் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் கனகசபைப்பிள்ளை என்பவரிடஞ் சென்று தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று வந் தார். கனகசபைப்பிள்ளை இலக்கண இலக்கியங்களிற் சிறந்த புலமையுள்ளவர். அவரிடம் இவர் கற்றுவருங் காலத்திலேயே ஒரு அகராதியைப் பெற விரும்பி தம் முடன் ஒரு வகுப்பிற் கற்றவரும் சோதிடநூலில் வல் லவருமாகிய ஸ்ரீ சாந்தலிங்கம்பிள்ளை என்பவருக்கு ஒரு வெண்பாப் பாடியனுப்பினுர். அதுவே இது.

சாந்தலிங்க மென்றிச் சகம்பழிச்ச வாழ்வுகூர்
சாந்தலிங்க சோதிடநற் சாகரமே—ஓர்ந்தும்
அகராதி தன்னை யனுப்புஞ் சிலசொற்
றகவாக நானுணரத் தான்.

கனகசபைப்பிள்ளையிடம் சிலஆண்டு கற்றபின் இவர், அவ்வூரிலே இலக்கிய இலக்கணங்களிற் பேரறிவு படைத்தவரும் சைவசித்தாந்த சாகரமுமாய் விளங்கிய கந்தப்பிள்ளை என்பவரிடஞ் சென்று, உயரிய இலக்கண இலக்கிய நூல்களும் சந்தான சைவசித்தாந்த நூல்களும் படித்துணர்ந்தார். அவ்வூரிலே சோதிடக் களஞ்சியமாய் விளங்கிய குமாரு என்பவரிடம் சோதிடமும் நன்கு கற்றறிந்தார்.

பின்னர் இவர் அவ்வூரிலேதானே நொத்தாரிசு முருகேசு என்பவருக்கு லிகிதராய் அமர்ந்திருந்தார். லிகிதராயிருந்த காலத்தில் பல தனிநிலைக் கவிகளும் கையறுநிலைச் செய்யுளும் பாடியுள்ளார். சிலவாண்டு கழித்து அந்த லிகிதர்த் தொழிலை விட்டுத் தமக்குரிய வேளாண்மைத் தொழிலையே செய்துகொண்டு வந்தார். தொழில் செய்யும் காலமொழிய மற்றைக் காலங்களில் மாணக்கர் சிலர்க்குப் படிப்பித்தும் நூல்களியற்றியும் வந்தார். இவரியற்றிய நூல்கள் வண்ணைச் சிலேடைவெண்பா, வேலணை இலந்தைக்காட்டுச் சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை, கடம்பராந்தாதி முதலியன.

இவற்றுள் முன்னுள்ள இரண்டு நூல்களும் இவர் சரிதமும் இவர் தேகவியோகமுற்றபின் இவர் தௌகித்திரரான பண்டிதர் பொ. இரத்தினம் என்பவரால் அச்சிடப்பட்டுப் 'பேரம்பலப் புலவர் நினைவுமலர்' என்னும் பெயரோடு இவரின் ஞாபகார்த்தமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. ஏனைய அச்சிடப்படவில்லை.

இவருக்கு புதல்வர்களிருவரும் புதல்வியர்கள் மூவருமுளர். (இவர் ஒருமுறை இப்போது தீவுப்பற்று மணியகாரனாயிருக்கும் ஸ்ரீமான் மு. சோமசுந்தரம்பிள்ளை J. P. அவர்களுக்கு ஒரு சீட்டுக்கவி பாடியனுப்பினர். பிள்ளையவர்கள் அதனை நோக்கிப் பெரிதுமகிழ்ந்து இவருக்குப் பொற்பரிசில் வழங்கினார்கள்.) இவரியற்றிய சித்திவிநாயகர் இரட்டைமணிமாலையையும் முதலில் மணியகாரனவர்களே பதிப்பித்தார்கள். அதனை,

நலஞ்சேரும் வேலணை யூர்முத்து மண்ய நரேந்திரன்சேய்
புலஞ்சேருங் கல்வி தனஞ்சீலம் யாவும் பொருந்துமண்ணல்
குலஞ்சேர் மணிய துரைசோம சுந்தரங் கூறமுன்னோன்
பொலஞ்சே ரிரட்டை மணிமாலை யச்சிற் பொலிந்ததுவே.

இவரிடங் கற்றுப் புலமையடைந்தோர் இவர் மருகர் வேலாயுதம்பிள்ளை, இவர் புதல்வர் கனகரத்தினம், இவருடைய தௌகித்திரர் பண்டிதர் பொ. இரத்தினம், ஆதியோர். இவரைச் சுன்னாகம் வித்துவசிரோமணி அ. குமாரசுவாமிப் புலவரும் 'கவிதை பாடும் புலவன்' என வியந்து பாராட்டியுள்ளார்.

இப்புலவர் 1835-ம் ஆண்டுக்குச் சமமான யுவ வருடம் புரட்டாதிமாதம் கஅ-ந் திகதி நவராத்திரி பூஜாரம்ப தினத்தில் தேகவியோகமடைந்தார்.

இவர் பாடிய வண்ணைச் சிலேடை வெண்பாவினுள்ளும், இலந்தைக்காட்டுச் சித்திவிநாயகர் இரட்டைமணிமாலையுள்ளும் பாடற்சுவையறிய ஒவ்வொரு செய்யுள் தருதும்.

## வண்ணைச் சிலேடை வெண்பா

செந்திருவாழ் வீதியினுஞ் செய்செபத்தோர் நாவினுஞ்சீர்
மந்திரங்க ளாருமெழில் வண்ணையே—சந்தமிகுஞ்

சார விருக்கார் தயையிலர்பா லெப்போதுஞ்
சார விருக்கார் தலம்.

### சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை

தேசம் பரவும் புகழா ரிலங்கைத் திருவனத்தில்
வாசஞ் செயுமொரு வன்கோட் டிருபத வாரணமே
நேசஞ்செ யன்பர்க் கியைபாச மோடெம னேர்ந்தெறியும்
பாசந் தனையு மறுத்தே யுயர்கதி பாலிக்குமே.

## முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்

இவர் பருத்தித்துறையைச் சேர்ந்த புலோலி என்னும் ஊரிலே ஸ்மார்த்தப் பிராமணகுலத்திலே சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்துக்கும் கிறிஸ்தாப்தம் 1853-க்கும் சமமான பிரமாதீச வருடம் ஆடிமாதம் ஐந்தாந்தேதி பிறந்தனர். இவர் தந்தையார் அக்காலத்திலே யாழ்ப்பாணத்தை யாண்ட பரராசசேகர மகாராசனுற் றமது அரசாங்க சோதிட கணிதராக இந்தியாவினின்றும் அழைக்கப்பட்டு வந்து குடியேறிய அந்தணரொருவரின் வம்ச பாரம்பரியத்தில் வந்தவராய் விளங்கிய சுப்பிரமணிய ஐயரின் முதற் புதல்வரும் தமிழ் சம்ஸ்கிருதமென்னும் இரு பாஷையினுஞ் சிறந்தவருமாகிய மகாதேவ ஐயர். மகாதேவ ஐயர் புள்ளிருக்கும் வேளூர் எனப்படும் வைத்தீஸ்வரன்கோயில் முத்துக்குமாரசுவாமியின் அநுக்கிரகத்தால் இவர் பிறந்தமையினாலே, அக்கடவுளின் பெயரையே இவருக்குப் பெயராக இட்டனர் என்ப. இவர் இளமைதொடங்கி நுண்ணறிவும் சாதுரிய புத்தியும் நற்குணமும் நல்லொழுக்கமுமுடையராய் விளங்கினர்.

இவருடைய பிதாவாகிய மகாதேவ ஐயர் உரிய காலத்தில் இவருக்குத் தாமே குருவாகவிருந்து வித்தி

யாரம்பஞ் செய்து தாங் கற்பிக்கக்கூடியவற்றை யெல்லாங் கற்பித்தபின் சம்ஸ்கிருதத்திலும் சிறந்த விற்பத்தி உடையவராக்கக் கருதி இவரை அழைத்துச் சென்று வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் அக்கிரகாரத்தில் இந்தியாவினின்றும் வந்திருந்தவருஞ் சிறந்த சம்ஸ்கிருத வித்துவானுமாகிய ஐயாத்துரை ஐயரிட மொப்பித்து இவருக்கு உயர்ந்த காவியங்களையும் வியாகரணம் முதலியவற்றையுங் கற்பிக்கும்படி வேண்டினர். அவருமதற்குடன்பட்டுச் சம்ஸ்கிருதத்திலுள்ள இரகுவம்சம், மாகம், குமாரசம்பவம் முதலிய காவியங்களையும், சித்தாந்தகௌமுதி முதலிய வியாகரணங்களையுங் கற்பித்து வந்ததுமன்றிப் பிராமணர்க்குரிய வைதிகக் கிரியைகளையுங் கற்பித்து வந்தனர். அவரிடம் இவற்றையெல்லாம் நுண்ணிதாகவும் விரைவாகவுங் கற்றுத்தேறிய இவருடைய சம்ஸ்கிருத விற்பத்தியை அறிந்த தந்தையார் தமிழிலுமிவரைச் சிறந்த விற்பத்தி உடையவராக்கக்கருதி, தமது ஊருக்கு ஆறுமைல் தூரத்திலுள்ள உடுப்பிட்டி என்னும் ஊரிலிருந்த சிவசம்புப் புலவரிட மிவரை அழைத்துச்சென்று தமிழில் இலக்கிய இலக்கணங்களைக் கற்பிக்கும்படி வேண்டினர். புலவரு மதற் குடன்பட்டனர். இவர் புலவரிடம் தமதூரினின்று மொவ்வொருநாளும் நடந்து சென்றே உயர்ந்த இலக்கிய இலக்கணங்களைக் கற்றுவந்தனர். இவர் தமக்கு மழையாலும் வெயிலாலும் வரும் வருத்தத்தைப் பொருட்படுத்தாது ஒவ்வொரு நாளுஞ் சோர்வின்றிப் பன்னிரண்டு மைல் நடந்து சென்று படித்தமையே இவருக்குக் கல்வியிலிருந்த ஆர்வத்தின்பெருமையைப் புலப்படுத்தும். இவர், சிவசம்புப் புலவரிடம் பஞ்சலக்கணங்களையும், கந்தபுராணம், பெரிய புராணம் முதலிய புராணங்களையும், அந்தாதி, கோவை, கலம்பகம் முதலியவற்றையுங் கற்று அவற்றினும் பெரும் பாண்டித்தியமுடையராய் விளங்கினர். நல்லூர் வித்

துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளையவர்களிடமு மிவர் சிலகாலஞ் சில நூல்களைக் கேட்டனர் என்ப. வேதாகமங்களிலு மிவர் சிறந்த பயிற்சியுடையவர். ஆரியம் திராவிடம் என்னும் இருமொழியிலும் வல்ல மகாபண்டிதராகி இவர் யாழ்ப்பாணத்தில் விளங்கினர்.

இவருக்குத் தந்தையார் பதினெட்டாம் வயதிலே விவாகஞ் செய்துவைத்தனர். பின் ஆசாரியாபிடேகமுஞ் செய்து வைத்தார். அதனுல் இவர் தாம் ஆசாரியராக விருந்து ஆலயக் கிரியை முதலியவற்றைச் செய்தற்கு வேண்டிய பத்ததிகளைத் தேடிப் படித்துக்கொண்டார். பத்ததிகளையேயன்றி ஆகமங்கள் சிலவற்றையுஞ் சந்தான சைவசித்தாந்த சாத்திரங்களையுந் தேடிப்பெற்று வல்லோரிடங் கேட்டுணர்ந்து அவற்றினுந் தேர்ச்சியுடையராய் விளங்கினர். இவர் தமது சீவியத்தின் பொருட்டுச் சில காலம் புலோலிப் பசுபதீசுரன் கோயிலுக்கு அருச்சகராகவும் ஆசாரியராகவு மிருந்தார்.

இவரது கல்வியின் மேன்மையையறிந்த அயலூரிலுள்ள பிராமணர்கள் தம் பிள்ளைகளை அழைத்துவந்து அவர்களுக்குச் சம்ஸ்கிருதமுந் தமிழும் கற்பிக்கும்படி இவரை வேண்டினர். இவர் உடன்பட்டு இருமொழியினுஞ் சிறந்த நூல்களைக் கற்பித்து வந்தனர். இவரிடங் கற்கும் மாணவர் இருமொழியினுஞ் சிறந்த அறிவுபெற்று வருதலைக்கண்ட தூரமான ஊரிலுள்ள பிராமணர்களும் தம்பிள்ளைகளை அழைத்துச்சென்று இவரிடமொப்பித்து அவர்களுக்குக் கல்வி கற்பிக்கும்படி வேண்டினர். அதனுலிவர் கோயிலருச்சகத்தொழிலை விட்டுக் கல்வி கற்பிக்குந் தொழிலையே மேற்கொண்டனர். மந்திரங்களின் பொருளை நன்குணர்ந்து கிரியைசெய்யும் மேன்மை பூண்டவரா யிருந்தமையினுற் றமது அருச்சகத் தொழிலை

விட்டாலும் ஆசாரியத்தொழிலை விட முடியாதவராயிருந்தார். இவரது கிரியா மேன்மையினையறிந்து தூரதேசத்தவர்களும் இவரை ஆலயக்கிரியை முதலியவற்றைச் செய்வித்தற்பொருட்டு அழைப்பாராயினர். இவர் கொழும்பு, மட்டக்களப்பு, திரிகோணமலை முதலிய இடங்களிற் சென்று அங்குள்ள சைவ ஆலயங்களிற் சம்புரோட்சணம் பிரதிட்டை மகோற்சவம் முதலியவற்றைச் சைவாகம முறை வழுவாது நடத்திப் பெரும்புகழ் பெற்றனர். சைவக் கிரியைகளையேயன்றி வைதீகக் கிரியைகளையும் பொருளுணர்ச்சியோடு செய்தலில் வல்லவராய் விளங்கினர். அதனாற் பிராமணர்க்குரிய கிரியைகளையும் அவர்களுக்கு உபாத்தியாயராயிருந்து செய்விப்பார்.

இவர் பசுபதீசுரன்மேல் ஓரந்தாதியும் சிவபெருமான் அலங்காரம் என்னும் ஒரு தோத்திரப் பாமாலையும் தனிச்செய்யுள் பலவும் பாடியுள்ளார். தென்கோவை பண்டிதர் ச. கந்தையபிள்ளை அவர்கள் நடாத்திய 'வித்தகம்' என்னும் பத்திரிகைக்கு வழங்கிய வாழ்த்துப்பா ஒன்றை இவர் பாடிய தனிச்செய்யுளுக்கு உதாரணமாக இங்கே தருதும். அது வருமாறு:

இத்தகைய வித்தகமாம் பத்திரிகை
இத்தலத்தே இனிதுவாழி
சித்தமகிழ் வுடனிதனை யாதரிப்போர்
சிவனருள்பெற் றினிதுவாழி
வித்தகனும் புதுவைநந்தி யுயரருளால்
விமலநெறி விளங்குசைவ
முத்திநிலை முறைவிளக்கு முதன்மைபெறு
மாசிரியர் வாழிவாழி.

என்பதாம்.

இவர் தேகவியோகமாவதற்கு நாற்பத்தெட்டு வருடங்களுக்குமுன் திருக்கணித பஞ்சாங்கம் ஆரம்பமான

காலத்திலே திருக்கணிதமோ வாக்கியமோ சுத்தமான கணிதமென நிச்சயிக்கும்படி கூட்டிய சபையில் வாக்கியமே சுத்தமான கணிதமென நியாயங்காட்டிப் பேசியவருள் இவரும் ஒருவர் என்பர். அதனால் இவர் தங் குருபரம்பரைக் கல்வியாயுள்ள சோதிட கணித சாத்திரத்திலும் வல்லவராயிருந்தா ரென்பது அறியத்தகும். ஆசௌசங்களிலும் விரதநிர்ணயங்களிலும் வேறு சாஸ்திர சம்பந்தமான எக்காரியங்களிலும் ஆசங்கைகள் எழுந்த காலத்தில் அவற்றைத் தீர்த்துக்கொள்ளும்படி தேர்ந்தெடுக்கப்படுஞ் சாத்திர விற்பன்னர்களுள் இவரே சிறந்தவராக விளங்கினர். ஆலய மடாலயங்களிற் புராண படனம் நடக்குங் காலங்களிலே விசேட படிப்புக்குப் பற்பல ஊரிலுள்ளோர் இவரை அழைத்துச் செல்வர். இவர் பொருள் சொல்லுங்காற் சபையிலிருந்து கேட்போர் இன்புறும்படி விரிவாகவுந் தெளிவாகவுஞ் சொல்வர். புராணபடன காலத்தே யாமும் விசேட படிப்புக்குச் செல்வது வழக்கம். ஒருமுறை மயிலிட்டியிலுள்ள கோயிலொன்றில் வள்ளியம்மை திருமணப் படலப் படிப்புக்கு யாஞ் சென்றிருந்தபோது இவரும் அங்கே அழைக்கப்பட்டு வந்திருந்தனர். அப்பொழுது இவர் சொல்லிய பொருளழகையுஞ் சொல்லழகையும் யாம் நேரே பார்த்து மகிழ்ந்துள்ளேம். அக்காலத்திலே சபையிலிருந்து கேட்போர் மகிழுமாறு பொருள் சொல்வதிலே மதிப்படைந்து விளங்கிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களுக்கு அடுத்தவராக இவர் மதிக்கப்பெற்று விளங்கினர். புராணங்களுக்குப் பொருள் சொல்லுவதன்றிப் பிரசங்கங்கள் செய்வதிலும் இவர் சிறந்தவராக விளங்கினர். பற்பல ஊரிலுள்ள வித்தியாசாலைகளிலும் திருமடங்களிலும் இவர் சென்று பிரசங்கஞ் செய்துள்ளனர். இவருக்கு இரு புத்திரிகள் பிறந்தபின், மனைவியாரிறக்கப் பின்னரும் ஒரு பெண்ணை

விவாகஞ் செய்தனர். முதன் மனைவியாரிடத்துப் பிறந்த புதல்வியருள் மூத்த புதல்வியைத் திருக்கோணமலை வாசரும் தமது மாணவருமாகிய இராமலிங்கக் குருக்களுக்கு விவாகஞ்செய்து கொடுத்தனர். இளைய புதல்வியைத் தமது சகோதரிபுதல்வரும், மாணாக்கரும், வாக்கிய பஞ்சாங்க கணிதரும், (கந்தபுராணத்தின் முதன் மூன்று காண்டங்களுக்கு உரை எழுதியவரும், வேறுஞ் சில நூல்களுக்கு ஆசிரியராக விளங்குபவருமாகிய சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு விவாகஞ் செய்து கொடுத்தனர்.)

இரண்டாவதாக விவாகஞ் செய்த மனைவியாரிடத்தில் இவருக்கு ஒரு புதல்வன் பிறந்தனன். பிறந்து சின்னாளில் அம்மனைவியாரும், புதல்வனும் ஒவ்வொருவராகத் தேக வியோகமெய்தினர். அதன்பின்னர் தமது மாணவருள் ஒருவராகிய காசிநாத சர்மாவைச் சுவீகார புத்திரராகக் கொண்டு தமதில்லத்திருத்திக் கற்பித்து அவருக்கு விவாகமுஞ் செய்துவைத்தனர்.

இவ்வாறாக வாழ்ந்து இவர் எண்பத்துமூன்றாவது வயசிலே கிறீஸ்தாப்தம் 1936-க்குச் சமமான யுவ வருடம் மாசிமாதம் இருபதாந்தேதி ஏகாதசித் திதியில் கற்றோரும் மற்றோரும் துயருற இவ்வுலக வாழ்வை யொருவினர். இவரியற்றிய சிவபெருமான்அலங்காரத்துள் ஒரு செய்யுள் காட்டுதும்:

'போங்காணு மிவ்வுயிர் போனபி னிந்தப் புலையுடலம்
வேங்காணுந் தீயினில் வெண்பலி யாக வெறும்பெரும்பொய்
யாங்காணு மிந்தப் புரைவாழ்வு போத வகமகிழ்ந்து
நாங்காணு நங்கள் பெருமானைப் பாடுது நாடுதுமே.'

பசுபதீசுரர் அந்தாதியுள்ளும் ஒரு செய்யுள் காட்டுதும்:

'என்னே யுரைப்ப தெழிலார் புலோலியி னெம்பெருமான்
பொன்னே ருருவப் பசுபதி யாரருள் போலுமிவ
டன்னேர் முகங்கண்டு தாமரை நாணித் தடம்புனல்சார்ந்
தெந்நேர முந்தவ மாற்றியு நேரெழி லேற்றிலதே.'

இன்னும் இவர் சாவகச்சேரி ச. பொன்னம்பல பிள்ளை அவர்களியற்றிய இராமநாத மான்மியத்துக் களித்த சிறப்புக்கவியுளொன்றையும் இங்கே தருதும்:

'கருதுபெருஞ் செல்வமின மாயுள்செயல்
கல்வியெனக் கழறு மைந்துட்
பொருவரிய வொவ்வொன்று மேலதிக
மதிப்பாகப் புகலு நூல்கள்
திருவளரு மிராமநா தக்குரிசிற்
கிவையைந்துஞ் சிறந்த வென்றால்
ஒருவரிவர்க் கிணையென்றிங் கோதரிதா
லுண்மைதெரிந் துணருங் காலே'

## சுவாமிநாத பண்டிதர்

இவர் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையைச்சார்ந்த கந்தர்மடமென்னுமூரிலே வேளாளர்குலத்திலே சின்னத்தம்பி என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். பிறந்து வளர்ந்துவருங் காலத்திலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று அவ்வூர் வித்தியாசாலை ஒன்றிலே தமிழ்க்கல்வி பயின்று வந்தார். வருங்காலத்திலே இலக்கண இலக்கியங் கற்க விரும்பி, வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை அவ்வூரிலுள்ள ஆறுமுகம் சிவகுருநாதபிள்ளைக்கு அவரில்லத்திலே வந்து இலக்கிய இலக்கணங்களைக் கற்பிப்பதை யறிந்து, இவரும் அங்குச்சென்று சிவகுருநாத பிள்ளை பாடங் கேட்கும்போது தாமுங் கூடவிருந்து கேட்டறிந்தனர். சிவகுருநாதபிள்ளையிலு மிவர் விவேகியாயிருந்தமையினால் இலக்கிய இலக்கணங்களில் அவரினுஞ் சிறந்த அறிவு பெற்றனர். இனிய கண்ட சாரீரமுடை

யவரா யிருந்தமையினாலே, பொன்னம்பலப்பிள்ளை தாம் புராணதிகளுக்குப் பொருள் சொல்லுமாறு ஆலய மடாலயங்களுக்குப் பிறரால் அழைக்கப்பட்டுச் செல்லுங்கால், அவற்றைப் படித்தற்பொருட்டுத் தம்முட னிவரையும் அழைத்துச்செல்வர். அப்பொழுது பொன்னம்பலப்பிள்ளை சொல்லும் சொன்னயம் பொருணயங்களையும் விரிவுரைகளையுங் கேட்டு அதனானும் மிகுந்த அறிவுபெற்றமையேயன்றி, அவர்போலத் தாமும் நயமுறப் புராணதிகளுக்குப் பொருள்சொல்லு மழகையும் பயிற்சியையும் பெற்றுக்கொண்டார். ஒருமுறை காலியிலிருந்து வியாபாரஞ்செய்த நாட்டுக்கோட்டைத் தனவைசியர்களுட் சிலர், அங்குள்ள சிவன்கோயிலிலே பெரியபுராண படனஞ் செய்தற்கு விரும்பி நல்லூருக்கு வந்து அக்கருத்தைப் பொன்னம்பலப்பிள்ளை அவர்களுக்குத் தெரிவித்து அவர்களை வரும்படி வேண்ட, அவர்கள் தமக்குச் சமயமில்லையென மறுத்துத் தமக்குப் பதிலாக இவரையே யனுப்பினார். இவர் அங்குச்சென்று அப்படனத்தைத் தனவைசியர்கள் மகிழுமாறு செய்து முடித்து அவர்கள் மதிப்பும் பொருளும் பெற்று மீண்டனர். பின்னர் இந்தியாவிலுள்ள தேவகோட்டை, நாட்டுக்கோட்டை முதலிய இடங்களுக்குச்சென்று அங்குள்ள தனவைசியர்கள் வேண்டுகோட்படி புராண படனதிகள் செய்து, அதனால் அங்குள்ள தனவைசியர்களோடு அதிக பரிசயமுடையராய் அவர்களுடைய மதிப்பையும் பொருளையும்பெற்று, அங்கிருந்து அத் தனவைசியர்களுடைய பிள்ளைகளுக்கும் பிறருக்கும் இலக்கிய இலக்கணங்களுஞ் சமயபாடங்களும் கற்பித்து வந்தார். அங்கிருந்தகாலத்திலே சென்னை, சிதம்பரம், திருச்செந்தூர் முதலிய ஊர்களுக்கெல்லாஞ் சென்று அவ்வவ்விடங்களிலுஞ் சிற்சிலகாலம் வசித்து அங்குள்ள வித்துவான்களோடு பரிசயமுடையராயினர். அன்றியும், திருவாவடுதுறை முதலிய ஆதீனங்களிலுஞ்

சென்று அங்குள்ள ஆதீனகர்த்தர்களோடும் பரிசய முடையராயும் விளங்கினர். இவருடைய அதிககால வாசம் இந்தியாவிலேயேயாயிற்று. இவர் சிதம்பரத்தி லிருக்குங் காலத்திலே சபாபதி நாவலரிடமிருந்த சிவ ஞானபாடியத்திற் சிலபாகங்களை ஒருவாறு பெற்று அப் பாகங்களை யச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். சென்னை யிலே ஒரு அச்சியந்திரசாலையுந் தாபித்துவைத்திருந் தார். அவ்வச்சியந்திரசாலையிலேயே அப்பாடியத்தை அச்சிட்டார். மூவர் தேவாரத்தையும் பல ஏட்டுப் பிர திகளோடு ஒப்புநோக்கிப் பரிசோதித்துச் சுத்த பாட மாக அச்சிட்டு வெளிப்படுத்தினர். திருக்கோவையா ருண்மை என்னும் அரியநூலும் இவராலேயே அச் சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. திருச்செந்தூரில் ஒரு வித்தியாசாலையையுந் தாமே தாபித்துச் சிலகாலம் நடத்திவந்தார். தென்னிந்தியாவிலேயுள்ள பல ஊர்களி லுஞ் சென்று சைவப் பிரசங்கங்களுஞ் செய்துவந்தனர். கவிகள் இயற்றவும்பயின்றுள்ளார். சைவசமயப்பற்று மிக வுடையவர். பகைவருக் கஞ்சா வியல்புடையவர். புலோ லிக் கதிரவேற்பிள்ளையோடும் மிகுந்த நண்புடையவர். அருட்பா மறுப்பு வழக்கு நடந்த காலத்திலே அவ ருக்கு மிகுந்த துணைவரா யிருந்தார். (வித்துவ சிரோமணி சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் மிகுந்த பற்றுடையவராக இருந்தார். அவர் துணையை மிகவும் பெற்றுள்ளவர்.) இத்தகைய இவர் கிறீஸ்தாப் தம் 1937-ல் தேகவியோகமாயினர். இவரியற்றிய சிறப் புக்கவியொன்றை இங்கே தருதும்:—

### திராவிடப்பிரகாசிகை

திராவிடநன் ஞான்மாண்பு தேரூருந் தேறத்
திராவிடப்ர காசிகையைச் செம்மை—விராவிடச்செய்
தீந்தான் சபாபதியென் றேயிசைக்கு நாவலன்றூன்
றீந்தேன் றமிழருமை தேர்ந்து.

# செவ்வந்திநாததேசிகர்

இவர் காரணவாய் என்னுமூரிலே பரம்பரையாக வந்த சைவகுருமரபிலே திருஞானசம்பந்த தேசிகருக்குப் புதல்வராகக் கிறீஸ்தாப்தம் 1907-க்குச் சமமான பிலவங்க வருடம் ஆனி மாதம் உகூ-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிறந்தார். இவர் பிறந்து இரண்டாமாண்டிலே தந்தையார் தேகவியோகமடைய, இவரது சிறியதந்தையாராகிய நமசிவாயதேசிகரே இவரையும் இவருடைய தமையனாராகிய கயிலாயநாததேசிகரையும் தமது இருகண்கள்போலக் கொண்டு வளர்த்துவந்தார். வளர்த்து வந்ததேயன்றி இருவருக்கும் சம்ஸ்கிருதந் தமிழ் என்னும் இருமொழிக் கல்வியையுந் தாமே கற்பித்தும் வந்தார். வருங்காலத்தே திரிபாஷா விற்பன்னரும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க ஸ்தாபகரும் வித்தியாதரிசியுமாகிய பிரமஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்களால் சுன்னாகத்திலே பிராசீனபாடசாலை தொடங்கப்பட்டு நடைபெறுவதையறிந்து, இவரையும் இவரது தமையனாரையும் அழைத்துக் கொண்டுவந்து அவ்வித்தியாசாலையிற் படிக்கும்படி சேர்த்து வேண்டிய பொருளுதவியையுந் தாமே செய்து வந்தார். இவரும் தமையனாரும் என்னிடத்தே தமிழும் வேதவிசாரதர் பிரமஸ்ரீ வி. சிதம்பரசாஸ்திரிகளிடத்திற் சம்ஸ்கிருதமும் முறையாகக் கற்றுப் பிரவேச பாலபண்டித பண்டித பரீக்ஷைகளிற் சித்திபெய்தினார்கள். சித்திபெய்தியதோடமையாது பின்னும் இவர் இருமொழியினும் பல நூல்களை ஆராய்ந்து கற்றுவந்தார். என்னிடஞ் சில சித்தாந்த நூல்களுங் கேட்டறிந்தார். இளமையிலேயே இவருக்குப் பாடுஞ்சக்தியு முண்டாயது.

இவர் வித்தியாசாலையைவிட்டு ஊரிலிருக்குங் காலத்தே மாவைக் கந்தசுவாமிபேரில் மும்மணிமாலைப் பிர

பந்தமொன்று இயற்றியுள்ளார். அஃது 1932-ல் அச்சிடப்பட்டுள்ளது. பின்னர், நல்லூர்க் கந்தசுவாமிபேரில் ஒரு கோவையும் பாடி முடித்துள்ளார். அஃது இன்னும் அச்சிடப்படவில்லை. அவ்விரு நூலுள்ளும் ஒவ்வொரு செய்யுள் காட்டுதும்:-

## மாவை மும்மணிமாலை

### வெண்பா

மட்டியலுங் கோகனத மாமலரோன் சென்னிமிசைக்
குட்டியநன் மாவையுறுங் கொற்றவனைச்—கட்டியவெம்
பாசவினை நீத்தவன்பொற் பாதமலர் சென்றுறுவா
னேசமுட னெஞ்சே நினை.

## நல்லைக்கோவை

### இயற்கைப்புணர்ச்சி

### இரந்து பின்னிற்றற்கெண்ணல்.

விடமன்ன நாட்டக் குறமகள் கேள்வன் விசும்புலவுந்
தடமன்ன வாறிரு தோணல்லை வாணன் றனிவரைவாய்ப்
படமன்ன வல்குற் றளவென்ன லாங்நகைப் பான்மொழிபொற்
குடமன்ன கொங்கைகண் மேவுது மம்ம குறையிரந்தே.

இன்னும் தம்மூரிலே தமிழ்விருத்தியின்பொருட்டு வித்தியாபிவிருத்திச் சங்கமென்னும் பெயரோடு ஒரு சங்க நிறீஇ அதன்மூலமாக ஒருவித்தியாசாலையைபுந் தாபித்து அதற்குத் தமது தமையனுரையே அதிபராக்கிச் சங்கத்தையும் வித்தியாசாலையையுந் தளர்வின்றி நடத்திவந்தார். வித்தியாசாலையை அரசினர் நன்கொடை பெறவு மாக்கினர். அவ்வித்தியாசாலையில் மாதந்தோறும் பிரசங்கங்களும் செய்துவந்தார். அவ்வூரிலும் பிறவூரிலுமாகப் பிறரால் அழைக்கப்பட்டுச் சென்று பிரசித்தமான

பெருஞ்சபைகளிலும் சமயவிஷயமாகவும் வேறுவிஷய மாகவும் பிரசங்கங்கள் செய்தார். தம்மூரிலே சில மாண வர்க்கு இலக்கண இலக்கியங்கள் கற்பித்துப் பண்டித பரீக்ஷையிலுஞ் சித்தியெய்த வைத்தார். தமிழ்மொழி யாராய்ச்சி என ஒரு நூலும் உரைநடையில் இயற்றினார். இளமைதொடங்கி அதி ஞாபகசக்தியும் விவேகமும் வாய்ந்தவர். இத்தகைய இவர் ஈசுர வருடம் ஆவணி மாதம் கா-ந் திகதி புதன்கிழமை இரவு தமது முப்பத் தொராம் வயசின் தொடக்கத்திலே கற்றோரும் மற்றோ ருந் துயருறத் தேகவியோகமடைந்தார். இவர் நீண்ட ஆயுளுக்கு இருக்கப்பெறின் தமிழ்த்தொண்டு செய்த புலவர்களுள் இவரும் ஒருவராவர் என்பதிற் சந்தேகமே யில்லை.

இவரேயன்றி இவருடைய தந்தையாரும், சிறிய தந்தையாராகிய நமசிவாயதேசிகரும் இருமொழியினும் வல்ல புலவர்களாயிருந்தார்கள். இருவரும் தமிழ் இலக் கண இலக்கியங்களைச் சிவசம்புப்புலவரிடங் கற்றவர்கள். கவிபாடும் வன்மையுமுடையவர்கள். இவருடைய தந்தை யார் வேதாரணியேசுவரர்மேல் ஒரு கோவைபாடத் தொ டங்கி அது முற்றமுன் தேகவியோகமடைந்தார். அதிற் செய்யுள்கள் அறுபதுவரையில் பாடப்பட்டுள்ளன. அவற் றுள்ளும் ஒன்று காட்டுதும்:—

இரந்து பின்னிற்றற்கெண்ணல்

விந்தம் பிலம்புக விட்டோன் வணங்க விரிகடுக்கைக்
கந்தம் பொலிசடை யானுறை யாரணக் கானனநேர்
சந்தம் பொலியணங் கிற்குரைத் தாசை தகமுயலி
னுந்தம் பொனூர்தரு சொற்கம் பெறுது முவகையொடே.

## த. கைலாசபிள்ளை

இவர் இற்றைக்கு எண்பத்தினான்கு ஆண்டுகளுக்கு முன்னே நல்லூரிலே கார்காத்த வேளாண்குலத்திலே ஞானப்பிரகாசர் மரபிலே தம்பு என்பவரின் அருந்தவப் புதல்வராகப் பிறந்தார். பிறந்து வித்தியாரம்பஞ் செய்த பின் தமக்கிளைய தந்தையாராக விளங்கிய ஆறுமுக நாவலரால் வண்ணார்பண்ணையிலே தாபிக்கப்பட்ட சைவப் பிரகாச வித்தியாசாலையிலே சென்று படித்தார். அப் போது அவ்வித்தியாசாலைக்கு ஆசிரியராயிருந்து கற்பித் தவர்களுட் செந்திநாதையருமொருவர். அவரிடத்திலே இவர் கற்றுவந்தார். செந்திநாதையர் வித்தியாசாலையை விட்டு இந்தியாவுக்குச் சென்றபின், இவர் மட்டுவில் உரையாசிரியர் க. வேற்பிள்ளையிடம் இலக்கண இலக்கி யங்களைக் கற்றுவந்தார். பின் ஆறுமுகநாவலரிடத்துங் கற்றூர். கற்றுவருங்காலத்தே சித்தாந்த சாத்திரங்களையு மவரிடங் கேட்டறிந்தார். தமிழேயன்றி ஆங்கிலமுஞ் சம்ஸ்கிருதமும் நன்கு கற்றறிந்தவர். ஆகமங்களுந் தெரிந்தவர். சில உபநிஷதங்களுந் தெரிந்தவர். நல் லொழுக்கமுஞ் சைவாசாரமும் சிவபத்தியுமுடையவர். சமய விசேட நிருவாண தீட்சைகளும் பெற்றுச் சிவ பூசையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டவர். சிவ பூசையை அதிக அன்போடுங் கிரமத்தோடுஞ் செய்து வந்தவர். சிதம்பரம் முதலிய பல தலங்களுக்குச் சென்று சிவதரிசனஞ் செய்தவர். பிதிரார்ச்சிதமான பொருளு முடையவர். பிரபு திலகராய் விளங்கிய பசுபதிச் செட் டியாருடைய தங்கையை விவாகஞ் செய்தவர்.

சைவபரிபாலன சபையாரால் நடாத்தப்பட்டுவரும் 'இந்துசாதன'ப் பத்திரிகைக்குத் தொடக்கத்திலே ஆசிரிய ராகவிருந்து சிலகாலம் நடாத்திவந்தவர். அப்போது

அப்பத்திரிகையிற் சைவசமய மாண்பும் பரசமய கண்டனமுமாகப் பல அரிய விஷயங்கள் எழுதினவர். (சிவஞானசித்தியார் என்னும் நூலின் சுபக்கத்தைப் பல ஏட்டுச்சுவடிகளோடு ஒப்புநோக்கி ஆராய்ந்து திருத்தி அச்சிட்டு வெளிப்படுத்தியவர்.) பாலர்கள் படித்தற்கேற்ற வாறு சில பாடபுத்தகங்களு மெழுதியவர். இவருடைய வசனநடை நாவலருடைய வசனநடையைப் படியெடுத்ததுபோல எளிதுந் தெளிவுமுடையதாயிருக்கும். வசனநடை எழுதுவோர்க்குதவியாக ஒரு வசன இலக்கண நூல் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியவர். பின்னால் விரிவாகவும் ஒரு வசன இலக்கண நூல் எழுதியதாகவுமறிகிறோம். அஃது அச்சிடப்பட்டு வெளிவரவில்லை.

இவரும் நாவலரைப்போலவே சைவாபிமானம் பூண்டு சைவசமயத்தை வளர்த்து வந்தவர். உலகிற்குப் பயன்படும்படி தெளிவான வசனநடையில் இலௌகீக சம்பந்தமாகவும் சமய சம்பந்தமாகவும் காலந்தோறும் விஷயங்களெழுதிச் சிறுச்சிறு சுவடிகளாக அச்சிட்டு வெளிப்படுத்தி வந்தவர். [வண்ணார்பண்ணையிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு வித்துவசிரோமணி ச. பொன்னம்பலப்பிள்ளைக்குப் பின்னே இவரே அதிபரானார். தாம் அதிபராயபின்பு அவ்வித்தியாசாலையின் பொருட்டுப் புதிதுஞ் சிறப்புமாக வேறொரு கட்டிடத்தை அமைத்துக் கற்போரை அதிற் பிரவேசிப்பித்துச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரை அதற்குத் தலைமை ஆசிரியராக வைத்து நடாத்தி அவ்வித்தியா சாலையை உன்னதநிலை பெறச்செய்தவர்.] மாணவர்களுக்குச் சம்ஸ்கிருதத்திலும், தமிழிலு முயர்ந்த நூல்களைக் கற்பித்தற்பொருட்டு, அவ்வித்தியாசாலையின் ஒரு பக்கத்திலே காவிய பாடசாலை ஒன்றைத் தாபித்து நடாத்தி அரசினருதவியும் பெறச்செய்தவர். [இன்னும் அவ்வித்

தியாசாலையையே இடமாகக் கொண்டு, தமிழ்ச் சங்க மொன்றையுந் தாபித்து நடத்திவந்தவர். அப்போது அதற்கு அங்கத்தவராயிருந்தவர்கள்: சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர், புலோலி வ. குமாரசுவாமிப்புலவர், மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, மாதகல் சு. ஏரம்பையர், மாதகல் அ. அருணசல ஐயர், நீர்வேலி ச. சிவப்பிரகாசபண்டிதர், ஊரெழு சு. சரவணமுத்துப் புலவர் முதலாயினோர். இச்சங்கம் இப்பொழுது மதுரையில் நடக்குஞ் சங்கத்துக்குமுன் தொடங்கப்பட்டு நடைபெற்றது. இவருக்குக் கடிதமொன்றெழுதி இச்சங்க முறையை அறிந்தே ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் அச்சங்க முறையை அமைத்தனர்.]

இன்னும் இவ்வித்தியாசாலையிலே சமய வளர்ச்சியின் பொருட்டுச் சித்தாந்த சபையொன்றையுந் தாபித்துக் காலந்தோறுஞ் சைவப் பிரசங்கங்கள் நடைபெறச் செய்தார். அப்போது அச்சபைக்குக் காரியதரிசியாயிருந்து நடத்திவந்தவர், தாவடி பண்டிதர் ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை என்பவர். வித்தியாசாலையின் பிற்பக்கமாக, அச்சியந்திரசாலை யொன்றையும் ஸ்தாபித்து வைத்திருந்தவர். இவர் நாவலரிடத்திலே மிகுந்த பக்தியு மபிமானமுமுடையவர். அவரையே குருவாகக் கொண்டு ஒழுகிவந்தார். (நாவலர் கலாசாலையின் பக்கத்தே ஒரு ஆலயங் கட்டுவித்து அதிலே சமய குரவர்களுடைய விக்கிரகங்களையும் சேக்கிழார் சுவாமி விக்கிரகத்தையும் பிரதிட்டை செய்ததுமன்றி, நாவலருருவச் சிலையையும் பிரதிட்டை செய்து நித்தியபூசை நடைபெறச் செய்து, நித்திய பூசையின்பொருட்டு நிபந்தங்களு மமைத்து வைத்தவர்.) யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர்வித்தியாவிருத்தித் தருமங்களை நன்கு பரிபாலனம் பண்ணினவர். தமது

இறுதிக்காலம்வரையும் கல்வி விருத்தியிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தவர்.

யாழ்ப்பாணத்திலே நாவலருக்குப்பின் தமிழ்க் கல்வியிலும், சைவசமயத்திலும் உண்மை யபிமானம் பூண்டு அவற்றின்பொருட்டுத் தமதாயுட்காலத்தை அர்ப்பணஞ் செய்தவரிவரே யென்பது ஒருபோதும் மிகையாகாது. (நாவலருக்குப்பின் மறைகணிந்தனை சைவ நிந்தனை ஏற்பட்டகாலந்தோறும் அவற்றைப் பொறுமனமுடையவராய் அந்நிந்தனைகளை மறுத்துப் பற்பல கண்டனங்களெழுதி எதிர்த்துப் போராடினவரு மிவரே.) உண்மைப் புலவர்களையன்றிப் போலிப் புலவர்களை முகநோக்கியு மறியாதவரு மிவரே. முகநோக்கிப் பொய்யான காரியங்களைச் செய்தற்கு உடன்படாதவரு மிவரே. காலந்தோறும் புதிது புதிதாகத் தோன்றும் நாகரீகங்களி லீடுபட்டு அவற்றின்பொருட்டுப் பழைய பழக்க வழக்கங்களைக் கைவிடாது ஒழுகினவரு மிவரே.

இத்தகைய இவர் வெகுதானிய வருடம் மாசிமாதம் கஉ-ந் திகதி கற்றோரும் மற்றோருந் துன்புறத் தமது உலகவாழ்வை ஒருவினர்.

# அனுபந்தம்

## ஞானப்பிரகாசர்

இவர் யாழ்ப்பாணத்தில் ஏறக்குறைய முந்நூற்றிருபது வருடங்களுக்கு முன்னே திருநெல்வேலி என்னுமூரிலே சைவாசாரம் பொருந்திய வேளாளர் குலத்திற் பிறந்தனர். (ஆறுமுகநாவலர் இவர் வழித்தோன்றல் ஆவர்.) இவர் சிவகாருண்ணியமும் தரும சிந்தையுமுள்ளவர். (குடிகளாகிய ஒவ்வொருவரும் முறை முறையாக ஒவ்வொரு பசு அரசாங்கத்துக்கு உணவின் பொருட்டுக் கொடுத்தல்வேண்டும் என்னும் பறங்கி யரசாங்கக்கட்டளைக்கு அஞ்சி, இந்தியாவிற்குச்சென்று, சிதம்பரத்திற்றங்கிச் சிவகாமசுந்தரியை உபாசனைசெய்து அநுக்கிரகம் பெற்றுக் கௌடதேசஞ் சென்றனர்.) [அங்கே ஓரிடத்திற் பிராமணசந்நியாசி ஒருவர் தருக்கம், வியாகரணம் முதலிய நூல்களைப் பிராமணப் பிள்ளைகளுக்குக் கற்பித்துவந்தனர். இவர் தினந்தோறும் அங்கேசென்று தூரத்து நின்று அவற்றினைக் கேட்டு மனத்தமைத்துக்கொண்டுவந்தார். சந்நியாசி பிராமணப் பிள்ளைகளைப் பரீட்சித்தபொழுது அவர்கள் தகுந்தவிடை அளியாமையினால், யாங் கற்பித்தவற்றைத் தூரத்து நின்று கவனமாகக் கேட்டவன் தகுந்தவிடை அளித்தல்கூடுமென்று நினைந்து இவரை அழைத்துப் பரீட்சிக்க இவர் அவற்றிற்கெல்லாம் தகுந்த விடை அளித்தனர். சந்நியாசி மகிழ்ந்து நீயே பிராமணன் என்று புகழ்ந்து இவருக்குத் தருக்கம், வியாகரணம் முதலியவற்றைக் கற்பித்து நீ தமிழ் நாட்டிற்குச் சென்று அங்குள்ளார்க்குப் பயன்படுவன புரிவாயாக என்று கட்டளை இட்டனர். இவர் அக்கட்டளையை மேற்கொண்டு திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து சந்நியாசம் பெற்று ஆகமங்களையும், சைவசித்தாந்த நூல்களையுங் கற்றனர்.]

இவர் சமஸ்கிருத பாஷையிற் சித்தாந்த சிகாமணி, பிரமாணதீபிகை, பிரசாததீபிகை, சிவயோகசாரம் என்னும் நூல்களுக்கு வியாக்கியானம் இயற்றியும், தமிழில் சிவஞானசித்தியாரின் சுபக்கத்துக்கு உரை இயற்றியும்உள்ளார். இவ்வுரை அரிதினுணரற்பாலது.

### சித்தியுரை வணக்கம்

சிவமுற நமக்கு முந்தித் தந்திவத் திரனைச் சிந்தித்
துவமையில் சிவனைப் பில்லா வுமைகுரு குலங்கண் மற்றென்
இவர்களை வணங்கி யின்பச் சிவஞான சித்திக் கேற்ப
நவமுறு முரையு ரைப்பா முன்னுரை நலங்கொ ளார்க்கே.

இவர் நடராச தரிசனம் செய்ய விரும்பித் திருவண்ணுமலையை நீங்கிச் சிதம்பரத்தையடைந்து ஞானப் பிரகாசம் என்னும் திருக்குளம் ஒன்றினை அமைத்துச் சிலகாலம் வதிந்து அங்கே தேகவியோகமாயினர்.

## விசுவநாத சாஸ்திரியார்

இவர் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றுமூன்று வருஷங்களுக்குமுன்னே அராலி என்னுமூரிலே வசித்தவர். நாராயணசாஸ்திரியாருக்கு மைந்தர். தமிழ் இலக்கிய இலக்கணங்களிற் சிறந்த புலவராயிருந்தமையேயன்றிச் சோதிட கணிதத்திலுஞ் சிறந்தவராய் இருந்தவர். அக்காலத்திலே இலங்கையிற் கணிக்கப்பட்ட பஞ்சாங்கங்களுக்குள்ளே இவருடைய பஞ்சாங்கத்துக்கே அதிக மதிப்புண்டு. இலங்கைக் கவர்ணரால் 'இராசாவின் கணிதர்' என்னும் பட்டமளிக்கப்பெற்றவர். இவர் கீர்த்தி பெற்ற பெரிய சோதிடகணிதராயிருந்தும், ௧அ௨அ-ம் ஆண்டு பங்குனிமாதம் ௨அ-ம் திகதி தோற்றிய சந்திர கிரகண கணிதமொன்றிற் சிறிது பிழையுற்றார் என்பர்.

இவர் இயற்றிய நூல்கள் வண்ணைக்குறவஞ்சி, நகுலமலைக்குறவஞ்சி முதலியன. கிரகணங் கணிக்கும் முறையை எவர்க்குந் தெரிக்குமாறு வாக்கிய கரண கிரகணம் என்னுமொரு நூலையும் இயற்றினவர். இது ஒயிசிங்தன் தேசிகர் செய்த சோதிசாத்திர நூலோடு சேர்த்து அச்சிடப்பெற்றுள்ளது. இவர் கவித்திறமுணர இவர் பாடிய வண்ணைக்குறவஞ்சியின் காப்புச் செய்யுளை இங்கே தருதும்:—

## வண்ணைக் குறவஞ்சி

சித்திர முளரிக் கண்ணர் சிறந்தவா மனத்த ராசை
வத்திர முடைய ரஞ்சக் கரத்தர்பொன் வனத்தா மத்தர்
இத்திற வயன்மா லீச னிவர்களி லிறைவ ரான
அத்தர்தாள் வணங்கி வண்ணைக் குறவஞ்சி யறைகு வேனே.

இக்கவியில் முன்னீரடியும் பிரமா, விட்டுணு, சிவன் என்னு மூவருக்குஞ் சிலேடை. அப்பொருளை மூவருக்கு மிலக்கமிட்டு முறையே எழுதுவாம். சித்திரம்—அழகு.

முளரிக்கண்ணர்,—

க. தாமரைப்பூவை யாசனமாக வுடையவர். முளரி—தாமரை. கண்—இடம்.

உ. தாமரை மலர்போலுங் கண்ணுடையவர்.

ங. அக்கினிக் கண்ணுடையவர். முளரி—அக்கினி.

சிறந்தவாமனத்தர்,—

க. சிறந்து அவாம் அன்னத்தர்—சிறப்புற்று விரும்பப்படுகின்ற அன்ன வாகனமுடையவர். அவாவும் என்பது அவாம் என நின்றது.

உ. சிறந்தவாமனத்தர்—சிறந்த குறளுருவங் கொண்டவர். வாமனம்—குறள்.

ங. சிறந்த ஆம் மனத்தர்—அன்பிற் சிறந்தனவாகிய மனங்களில் இருப்பவர்.

ஆசைவத்திரமுடையர்,—

க. திக்குமுகமுடையவர். ஆசை—திக்கு. வத்திரம்—முகம்.

உ. பொற்சீலையுடையவர். ஆசை—பொன். வத்திரம்—சீலை.

ந. திக்காகிய சீலையுடையவர். ஆசை—திக்கு.

அஞ்சக்கரத்தர்,—

க. அஞ்சம் கரத்தர்—அன்னக்கொடி தாங்கிய கையையுடையவர்.

உ. அம் சக்கரத்தர்—அழகிய சக்கராயுதமுடையவர்.

ந. அஞ்சு அக்கரத்தர்—ஐந்தெழுத்தாகிய மந்திரமுடையவர். அஞ்சு—ஐந்தின்போலி.

பொன்வனத்தாமத்தர்,—

க. பொன்வனம்தாமத்தர்—பொன்னிறமாகிய ஒளியுடையவர். தாமம்—ஒளி.

உ. ,, —அழகிய துளசி மாலையையுடையவர். வனம்—துளசி.

ந. ,, —பொன் போன்ற நிறத்தையுடைய கொன்றை மாலையையுடையவர். தாமம்-கொன்றை.

## கந்தப்பிள்ளை

இவர் நல்லூரிலே கிறீஸ்தாப்தம் 1766-ம் ஆண்டிலே பரமானந்தர் என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். பின் ஐந்தாம் வயதிலே வித்தியாரம்பஞ் செய்யப் பெற்றுச் சண்முகச் சட்டம்பியார் என்னும் ஒருவரிடங் கற்றுப் பின் வண்ணார்பண்ணையிற் சென்று கூழங்

கைத் தம்பிரானிடம் இலக்கண இலக்கியங்கள் கற்று வல்ல புலவராயினர். தமிழன்றி, ஆங்கிலம், போத்துக் கீஸ், ஒல்லாந்தம் முதலிய பாஷைகளும் நன்கு கற்றறிந் தவர். கஅ வருஷகாலம் அரசினரிடம் ஆராய்ச்சி உத்தி யோகத்திலிருந்தமையால் ஆராய்ச்சி கந்தர் என்றும் எவ ராலும் இவர் அழைக்கப்படுவர். இவர்க்கு ஆறு புத்திர ரும் ஆறுபுத்திரிகளுமுளர். இவருடைய கனிஷ்ட புத் திரரே ஆறுமுகநாவலர். வித்துவசிரோமணி பொன்னம் பலப்பிள்ளை இவருக்குத் தௌகித்திரர். த. கயிலாய பிள்ளை பௌத்திரர்.

இவர் புலவராய் விளங்கியதன்றிப் பிரசித்திபெற்ற வைத்தியராயும் விளங்கினர். அதனுனும் இவருக்கு ஊரில் அதிக மதிப்பு உண்டு. (இவர் பாடிய நாடகங்கள் இருபத்தொன்று.) இறுதியிற் பாடிய நாடகம் இரத்தின வல்லி நாடகம். அதனைப் பாடிக்கொண்டிருக்கும்போதே இவர் உயிர் நீத்தார் என்பர். இவர் தேகவியோகமடைந்த காலம் கஅசஉ-ம் ஆண்டு ஆடி மாதம் உ-ம் திகதி புதன்கிழமையாகும். அப்போது வயது எகூ.

இவர் தமது முற்றத்திலே நின்ற மாமரத்தின் காய் களை அரித்துக்கொண்டிருந்த ஓர் அணிலின் மீது அது விழுந்து இறக்கும்படி ஒரு செய்யுள் பாட உடனே அது விழுந்து இறந்தது என்பர்.

இவர் பாடற்றிறமறிய, இவர் பாடிய இராமவிலாசத் துள் ஒரு செய்யுள் காட்டுதும்:—

தருவளர் வனஞ்சூ ழயோத்தியம் பதியிற்
றசரத னருள்பெறு ராமன்
றருகவு சிகற்காய்த் தம்பிலட் சுமணன்
றன்னெடுந் தனிவனம் புகுந்து

செருவளர் படைகள் செலுத்துதா டகையைச்
சிதைத்துயா கமுநிறை வேற்றித்
திசழக விகைதன் சிலையுரு வகற்றிச்
சீதையைக் கண்டுவின் முரித்து
மருவளர் மிதிலே மணம்புரிந் தேதம்
வளநகர்க் கேகுமவ் வழியில்
வரும்பர சிராமன் வலியொடும் வில்லு
வாங்கியே சென்றுவாழ்ந் திருந்த
திருவளர் கதையை விலாசம தாகச்
செப்பினேன் பிழையிருந் தாலும்
செந்தமிழ்ப் புலவீ ரவைபொறுத் தருள்வீர்
தேவசா ரித்திர மெனவே.

இங்கு முன் கூறப்பட்ட புலவர்களன்றி இன்னும் பல புலவர்கள் யாழ்ப்பாணத்திலே அங்கங்கே இருந்தவர்களாக அறியப்படுகின்றார்கள். அவர்கள் சரித்திரங்கள் சரியாகப் புலப்படவில்லை. ஆயினுந் தெரிந்தவற்றை இங்கே காட்டுதும் :-

## அப்புக்குட்டி ஐயர்

இவர் நல்லூரிலே சாலிவாகன சகாப்தம் கஎ௯௬-க்குச் சமமான பிலவங்க வருடம் மாசிமாதம் உஅ-ந் திகதி சிகிவாகன ஐயர் என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். தமிழ், சம்ஸ்கிருதம் என்னுமிரு மொழியினும் வல்லுநர். ஞாபகசக்தியுடையவரென்று யாவராலும் பாராட்டப்பட்டவர். இவரியற்றிய நூல்கள் :- சூதபுராணம், நல்லூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் என்பன. தனிக்கவிகளும் பல பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்களுள் ஒன்றுங் கிடைத்திலது.

## அருணசலப்பிள்ளை

இவர் அராலியென்னுமூரிற் பிறந்தவர். மாதகல் சிற்றம்பலப் புலவரிட மிலக்கிய இலக்கணங் கற்றவர். காரிகை யென்னு மிலக்கண நூலிற் சிறந்த அறிவுடைய வர். சோதிட நூலினும் வல்லவர். பாக்களியற்றுவதினு மிகச் சிறந்தவரெனப் பலருஞ் சொல்வர். பாடல்களுள் ஒன்றும் கிடைத்திலது.

## இராமசாமிஐயர்

இவர் வட்டுக்கோட்டையைத் தமது ஜெனன ஊரா கக் கொண்டவர். (நாடகப் புலவர் எனப் பிரசித்தம் பெற்ற நாகேசையருக்குத் தந்தையார்.) (சுப்பிரமணிய ஐயருக்குப் புதல்வர்.) இவர் கதிரமலைக் கந்தசுவாமி பேரிற் பற்பல கீர்த்தனங்களும், விருத்தங்களும் பாடினு ரென்று அறிஞர்கள் சிலர் கூறுவர். அருச்சுனன் மனைவியாகிய அல்லியின் சரித்திரத்தை நாடகமாகப் பாடினவ ரென்றுங் கூறுப. இவரிற்றைக்கு நூற்றிருபத் தைந்து வருடங்களுக்கு முன் இருந்தவர் என்பர். பாடல்களுள் ஒன்றுங் கிடைத்திலது.

## இராமலிங்கையர்

இவர் நல்லூரிற் பிறந்த ஓர் அந்தணர். தந்தையார் சந்திரசேகர ஐயர். இவர் யாழ்ப்பாணத்தை அரசாண்ட கூழங்கைச் சக்கிரவர்த்தி தனக்குச் சோதிடராய்ச் சம்பு கேசுரத்திருந்தழைத்துவந்த சிரேட்டரொருவரின் வழித் தோன்றலென்ப. இவர் சந்தான தீபிகை என்னுமொரு சோதிட நூல் செய்துள்ளார்.

## இராமலிங்கப்பிள்ளை

இவர் சுதுமலையிலே மாப்பாண முதலியார் கோத்திரத்திலே வைரமுத்து உடையாருக்குப் புதல்வராகப் பிறந்தவர். நவாலியிலிருந்த கா. முத்துக்குமாரபிள்ளை என்பவரிடங் கற்றவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் வல்லுநர். சபாமத்தியிலே புராணங்களுக்குப் பொருள் சொல்லுவதிலும், இனிமையாக வாசிப்பதிலும் பேர் பெற்றவர். இனிய கண்டமுடையவர். பற்பல தனிப் பாடல்களுங் கீர்த்தனங்களும் பாடினவர். அன்றியுஞ் சங்கிலியந்தாதி, மாணிக்கவாசகர் விலாசம், நளச்சக்கரவர்த்தி விலாசம் என்னும் நூல்களையு மியற்றியவர். இவர் 1885-ம் வருஷம் மாசி மாதம் 16-ம் திகதி கொழும்பிலே தேகவியோகமடைந்தார். இவர் பாடற்றிறத்தை யறியும்பொருட்டு நளச்சக்கரவர்த்தி விலாசக் காப்புச் செய்யுளை இங்கே தருதும்:-

"பொன்னுலக மென்னப் பொலியுநிட தம்புரக்கு
மன்னனளச் சக்ரவர்த்தி மாகதையை—இந்நிலத்தே
சந்த விலாசத் தமிழா வியம்புதற்குத்
தந்தி முகன்றாள் சரண்."

## க. ஏகாம்பரம்

உடுப்பிட்டியைச் சார்ந்த வல்லுவெட்டியிலே, பரதவர் குலத்திலே பிறந்தவர். (இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் முதலிற் கற்றுப் பின் இந்தியாவிற்குச் சென்று, திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரிடங் கற்றவர் என்பர்.) மிஷனரிமார்க்கும் ஆங்கிலேய துரைமார்க்குந் தமிழ் கற்பித்தவர். (கந்தரந்தாதிக்கோருரையு மெழுதினா ரென்பர்) ஏறக்குறைய 50 வருடங்களுக்கு

முன்னிருந்தவர். பல தனிக்கவிகள் பாடினவர். இவர் பாடிய கையறுநிலைச் செய்யுளொன்றை இங்கே தருதும்:-

" சீரேறு பரிதாபி வருடமா டித்திங்கள்
சென்றபதி னைந்துதேதி
சித்திரை யுடுப்புதன் வாரபூ ருவமான
திதியாறு கும்பசென்மன்
பேரேறு வண்ணைநகர் திருமலைச் செட்டிபெறு
பேறுமா ணிக்கரத்தினம்
பிணியருக் கருமருந் துதவுத்த மன்கணித
பிரதானி சொல்வித்தகன்
தேரேறு வாதர்க்கொ ரிடியேறு சபையினடு
நீதிப்பிர சங்கசிங்கம்
நிகழைம்ப தொன்பதாம் வயதினன் குலதிலத
நிபுணனெனும் ராமசாமி
ஏரேறு வற்சர விரோதிகிரு தேறுமதி
யீரொன்ப தேற்றவெள்ளி
யெழிலுரோ கணியமை விருச்சிக விலக்கினத்
திறைவர்பத மெய்தினனே."

## நா. ஏகாம்பரம்

இவரூரும் வல்லுவெட்டித்துறையே. இவர் கிறீஸ்தாப்தம் 1844-க்குச் சமமான பிலவ ஹூ பங்குனிமீ 23உ பிறந்தவர். தமதூரிலுள்ள வித்தியாசாலையிலே தமிழ் பயின்று, பின் வட்டுக்கோட்டையிலுள்ள ஆங்கில வித்தியாசாலையிலே ஆங்கிலங் கற்றவர். பின் சென்னைக்குச் சென்று அங்கேயுள்ள கல்லூரி யொன்றிற் படித்துப் பிரவேச பரீட்சையிற் சித்தியெய்தினர். அதன்பின் ஆங்கிலங் கற்றலை விடுத்துத் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்க விரும்பி, (இந்தியாவிலே சிறந்த வித்துவான்களா யிருந்த மீனாட்சிசுந்தரம்

பிள்ளை, இராஜகோபாலபிள்ளை, இராமலிங்கபிள்ளை என்பவர்களிடஞ் சிலகாலங் கற்றனர் என்பர். இக் காலத்திலே இவர் அட்டாவதானமுஞ் செய்யப் பயின்றுகொண்டார். தம்மூரிலும், பிறவூரிலுமாகப் பலர் கூடிய சபையி லட்டாவதானஞ் செய்து காண்பித்துப் பரிசும் பெற்றவர். இலங்கையிலுங் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு முதலிய இடங்களிலு மட்டாவதானஞ் செய்து பரிசு பெற்றவர் என்பர். இவரே இலங்கையில் முதலில் அட்டாவதானஞ் செய்த பெரியார். இவர் தமது 33-ம் வயதிலே ஸ்ரீமுகவருஷ ஐப்பசிமீ 27உ தேகவியோகமாயினர். இவரட்டாவதானத்தி லன்றிப் பாடுவதிலும் வல்லுநர். இவர் தமது ஆசிரியராயிருந்த அ. சண்முகம்பிள்ளை என்பவரைக் காணும்பொருட்டு அச்சுவேலிக்குப் போனபொழுது ஒருவர், இவரை நோக்கி ஆகாரத்திற் றொடங்கி ஈகாரத்தில் முடியும்படி கந்தசுவாமி பேரில் ஒரு வெண்பாப் பாடுமென, இவர் உடனே யொரு வெண்பாப் பாடினுர் என்பர். அது வருமாறு:-

ஆத்தியணி யுஞ்சடையா னைமுகற்குப் புத்திரனே
ஏத்தும் பலர்க்குவர மீவோனே—கூத்தென்றே
காசினியில் வாழ்வெல்லாங் கட்டழிக்குங் காரணனே
ஏசிலளி நீயேசே யீ.

## கணபதிஐயர்

இவர் இந்தியாவிலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து வட்டுக்கோட்டையில் வந்து குடியேறியிருந்த பாலகிருஷ்ண ஐயரது புத்திரர். இவர் தஞ் சுற்றத்தாரைப் பிரிந்து இந்தியாவிற்குப் போய் அங்குள்ள திருவையாற்றிலே, வயிரவ கோயிற் சந்நிதி யொன்றிலே

இரவிற் பசியாலிளைப்புற்றுத் தூக்கமற்றிருந்தபொழுது தாமாகப் பாடுஞ் சக்தி உண்டாக, உடனே அவ்வயிரவர்மீது பதிகமொன்று பாடினரென்பர். அங்குள்ள தலங்களையெல்லாந் தரிசித்து மீண்டு ஊர்க்கு வந்தபின், தமது சுற்றத்தாருள் ஒருவராகிய சண்முகஐயர் என்பவரால் தொடங்கி நிறைவேற்றமுடியாது விட்டிருந்த சுந்தரி நாடகத்தை இவர், வாளபிமன் நாடகமென்று பெயர்மாற்றி எவரும் வியப்பப் பாடிமுடித்தார். அதன்பின் வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சி, மலையகந்தினி நாடகம், அலங்காரரூப நாடகம், அதிரூபவதி நாடகம் என்னும் நாடகங்களையும், வட்டுநகர் பிட்டிவயற் பத்திரகாளியம்மை பேரிற் பதிகமு மூஞ்சலும், பருத்தித்துறையிலுள்ள ஒரு விநாயகர்மேற் பாவிகற்பம் பெற்ற 100 கவிகளும் பாடினர். இத்தகைய இவர் இற்றைக்கு 150 வருடங்களுக்குமுன் தேகவியோகமாயினர். பாடல்களுள் ஒன்றுங் கிடைத்திலது.

## சின்னத்தம்பி

இவர் கிறீஸ்தாப்தம் 1830-க்குச் சமமான காஙூல சித்திரைமீ 4உ உடுப்பிட்டியென்னு மூரிலே வேளாளர் குலத்திலே தாமோதரம்பிள்ளைக்குப் புதல்வராகப் பிறந்தவர். தியாகராச பண்டிதரிட மிலக்கண இலக்கியங்கள் கற்றவர். கணித சோதிட சாத்திரங்களில் வல்லுநர். இவரியற்றிய நூல்கள் :- வீரபத்திரர் சதகம், மதனவல்லி விலாசம், நிலஅளவைச் சூத்திரம், சோதிடச் சுருக்கம் முதலியன. இவர் தமதூரிலே ஒரு தமிழ் வித்தியாசாலையைத் தாபித்து மரணபரியந்தம் அதிலாசிரியராக விருந்து அரசினர் உதவிப் பணம் பெறவிரும்பாது அதனைக் கிரமமாக நடாத்தியவர். சிவதர்மங்கள் பல செய்தவர். மரண பரியந்தம்

பிரமசாரியாகவே யிருந்தவர். கனதனப் பிரபு. இவர் கவித்திறனுணர வீரபத்திர சதகத்துள் ஒரு செய்யுள் தருதும்:-

ஏரேறு பரிதியுட னெழிலேறு மமரர்களு
மேழேறு முனிவருமலா
தியலேறு மதிமுதல விவரேறு துதிகள்செய
வினிதேறு கயிலைமலையில்
வாரேறு தனமதனின் மணியேறு பணியணியும்
வகையேறு மலைமகளுடன்
வயமேறு மூலகதனி னயமேறு முயிர்கணிதம்
வாழ்வேற வீற்றிருக்கும்
காரேறு கறுமிடறுெ டேறேறு கடவுளது
கண்ணேறி வந்தபுலவர்
கழலேறு பதமதெனு நிழலேறி யெனதுதுயர்
கரையேற வருடருகுவாய்
தாரேறு கன்னலொரு செந்நெல்விளை நெல்வயற்
றங்குடுப் பிட்டிநகரிற்
சந்திர குளத்திலம ரெந்தையே வந்துனரு
டருவீர பத்திரதேவே.

இத்தகைய இவர் தமது 45 ஆவது வயதிலே கிறீஸ்தாப்தம் 1878-ல் தேகவியோகமாயினர்.

## சந்திரசேகர பண்டிதர்

இவரே உவின்சிலோ எனப்படும் தமிழ் அகராதியை இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்தினவர். இவர் தமிழன்றி, ஆங்கிலமுஞ் சம்ஸ்கிருதமும் நன்கு பயின்றவர். உடுவில் என்னுமூரிலே இற்றைக்கு 135 வருஷங்களின் முன் வேளாளர் குலத்திற் பிறந்தவர். இவர் தந்தையார் அம்பலவாணர். இவரூர் வட்டுக்

கோட்டை. இவர் 1879-ம் ஆண்டில் தேகவியோக மடைந்தார். இவரது கவித்திறமுணர இவர் செய்த தமிழ் அகராதியிலுள்ள அவையடக்கச் செய்யுளை ஈண்டுத் தருதும்:-

உத்தமர்க ளெந்நூலு முற்ற வோர்ந்தே
 உறுகுறைகண் மறையவுண்மை யுகந்து கொள்வர்
மத்திமர்க ளவையிரண்டுஞ் சமமாய்க் கொள்வர்
 மற்றையரா மதமருண்மை வகுக்க மாட்டார்
இத்தகையா லாய்ந்துணர்ந்த நல்லார் கல்லா
 ணியற்றுமக ராதியென விகழா ரென்றே
சித்தமிசைக் கொண்டுதெளி வில்லாப் பேதைச்
 சிற்றறிவே னறிவளவிற் சேர்த்திட் டேனே.

# சின்னக்குட்டிப்புலவர்

இவர் தெல்லிப்பழையிலே கஉ௦ வருஷங்களுக்கு முன்னே இருந்தவர். இவர் மாதகல் சிற்றம்பலப் புலவரது மாணவர். இவர் செய்த நூல் கனகதண்டிகைக் கனகராயன் பள்ளு. அது தெல்லிப்பழையிலிருந்த கனக தண்டிகைக் கனகராய முதலியார் என்னும் பிரபுமேற் பாடப்பட்டது. இப்பள்ளினைத் தெல்லிப்பழை பிறக்றர் வ. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் தாமெழுதிய விளக்கக் குறிப்புக்களோடு 1932-ம் ஆண்டில் அச்சிற் பதிப்பித்தனர். அப் பள்ளுச்செய்யுளொன்று காட்டுதும்:-

பனக மாமணி பாவலர்க் கீந்தருள்
 பாரி வேரிப் பசுங்காவி மார்பன்
தினக ரோதயம் வள்ளொளி வீசிய
 செம்பொன் னூழிச் செழுமலர்க் கையான்
வினக மாமுலை யார்மத ராசன்
 விளங்கு செம்பொன்னின் மேழித் துவசன்
கனக ராயன் வழிவரு தண்டிகைக்
 கனக நாயகன் நாடெங்கள் நாடே.

## சண்முகச்சட்டம்பியார்

இவர் வடக்கராலியிலே வைசியர் குலத்திலே சுவாமிநாதர் என்பவருக்குப் புதல்வராக கிறீஸ்தாப்தம் 1794-ல் பிறந்தவர். தமது தந்தையாரிடத்தே இளமையிலே தமிழ் நெடுங்கணக்கு முதலிய பயின்று, பின் இருபாலைச் சேனாதிராய முதலியாரிடந் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கற்றவர். ஆங்கிலமுங் கற்றவர். இவர் வட்டுக்கோட்டைச் சாத்திரசாலை ஆசிரியராயிருந்ததுமன்றி, அநேக மிஷனரிமார்களுக்குங் கல்வி கற்பித்தவர். சைவசமயியாயிருந்து பின் கிறீஸ்தவரானவர். இவர் மரபினர் இப்பொழுது சைவசமயிகளாயிருக்கின்றனர். இவர் சைவராயிருந்தபோது சில்லாலையிலிருந்த வைத்தியருங் கிறீஸ்தவருமான சந்தியாப்பிள்ளை வேண்டுகோட் கிணங்கி கிறீஸ்துவின் தாயாரை வாழ்த்தி மூன்று செய்யுள் பாடிக் கொடுத்தனர் என்பர். அவற்றுள் ஒன்று காட்டுதும்:

நெல்லாலை போல்வளரு நீர்ப்பண்ணை சூழ்ந்திலங்கு
சில்லாலை யென்னுந் திருவூரில்—எல்லாரும்
போற்றுசரு வேசுரன்றாய் பொற்பாத தாமரையைப்
போற்று மனமே புகழ்ந்து.

## தொம்பிலிப்பு

இவர் தெல்லிப்பழையிலே வேளாண்குலத்தில் பிறந்தவர். கத்தோலிக்க கிறீஸ்தவர். இவர் தமது வேதக் கருத்தையமைத்து ஞானானந்த புராணம் என்னும் ஒரு காவியத்தைப் பாடியுள்ளார். இக் காவியம் மூன்று காண்டமாகப் பகுக்கப்பட்டுள்ளது. ௧௧௦௪ விருத்தப் பாக்களாலாயினது. இது சென்னையிலிருந்த சவரியப்ப முதலியார் குமாரர் ஜெகராவு முதலியார் என்பவரால் ௧௮௭௪-ம்

ஆண்டிலே பதிப்பிக்கப்பட்டது. விசாகப்பெருமாளையர் முதலிய சிறந்த வித்துவான்கள் இதற்குச் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார்கள் என்ப. இவர் செனன மரண காலமாதிய தெரிந்தில. இவர் பாடற்றிறமுணர அப்புராணத்துள் ஒரு செய்யுள் காட்டுதும்:

என்றினைய நிகழ்ந்தவண்ண மருளப்ப
 னன்னைதன்பா லிசைப்ப வெய்தி
பொன்னுடலம் வெயர்பொடிப்பப் பொருமியுள்ளம்
 பறையடிப்பப் புலன்வாய் விம்ம
நின்றனன்மெய் தள்ளாடி நெடுந்தாரை
 கண்பனிப்ப நிலத்தில் வீழ்ந்து
துன்றுமல ரடியிறைஞ்சித் தோன்றல்படுந்
 துயரமெலாஞ் சொல்ல லுற்றான்.

## நமச்சிவாயப் புலவர்

இவர் அச்சுவேலி தெற்கிலே வைசியர் குலத்திலே கிறீஸ்தாப்தம் 1749-ல் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் கணபதிப்பிள்ளைச் செட்டியார். இவருடைய ஆசிரியர் இவர் என்பது தெரியாதாயினும் இலக்கண இலக்கியங்களிற் சிறந்த பயிற்சியுடையவர் என்பது இவரது பாடலாலறியக்கிடக்கின்றது. வரணியிலுள்ள தல்வளை விநாயகர்பேரிற் பாடிய வெண்பா ஒன்றை இவர் பாடற்றிறமுணர ஈண்டுக் காட்டுதும்:

நல்வனமார் புன்னை நறுங்கொன்றை யத்திமுதற்
பல்வளனும் பந்தர்போற் பாங்குசூழ்—தல்வளையில்
அத்திமுக வத்திமத வத்திநிற நித்தசுத
சித்திமுத்தி தந்துநமைத் தேற்று.

## நாகேசஐயர்

இவர் இற்றைக்கு நாற்றுமுப்பது வருடங்களுக்கு முன்னே வட்டுக்கோட்டையிலே அந்தணர் குலத்திலே இராமசாமிஐயர் என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். இவர் ஆசிரியர் இவர் என்பது தெரிந்திலதாயினும் இலக்கண இலக்கியப் பயிற்சியுடையவர் என்பது இவர் பாடலால் அறியக்கிடக்கின்றது. இவர் பல நாடகங்களும் பல தனிக் கவிகளும் பாடினமையன்றி, தமதூரிலுள்ள அடைக்கலந் தோட்டத்துக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்குங் கந்தசுவாமிபேரில் 'நாணிக் கண்புதைத்தல்' என்னுந் துறைமேல் 100 செய்யுளும் பாடினவர். இன்னும் ஸ்தல யாத்திரை செய்த காலத்திலே இராமேசுரம் முதலிய தலங்களிலுள்ள அவ்வக்கடவுண் மேலும் கவிகள் பாடியுள்ளார் என அறிகின்றேம். 'அமுதநுணுக்கம்' எனப் பெயரிய ஒரு விஷவைத்திய நூலும் இவர் இயற்றியுள்ளார் எனவுமறிகின்றேம். இத்தகைய இவர் தமது சஅ-வது வயதிலே துன்மதி வருடம் தைமாசம் கஉ-ந் திகதியில் தேகவியோகமாயினர். இவர் பாடற்றிறமுணர அடைக்கலங் கோவையுள் ஒரு செய்யுள் காட்டுதும்:

பொன்பூத்த நாரணன் வேதன் முதலபுத் தேளிரெலாம்
தென்பூத்த வேத முறையா லருச்சனை செய்தமரும்
மின்பூத்த வேல னடைக்கலங் கோவை விளம்புதற்குக்
கொன்பூத்த குஞ்சரச் செஞ்சா ணெஞ்சினிற் கொள்ளுவனே.

# பிரான்சீஸ்பிள்ளை

இவர் மயிலிட்டியைச் சார்ந்த வயாவிளான் என்னு மூரிலே வேளாண் குலத்திலே, இற்றைக்கு 130 வருடங்களுக்கு முன்னே இருந்தவர். கத்தோலிக்க சமயத்தவர். இவரைப்பற்றிய வேறு சரிதங்கள் ஒன்றுந் தெரிந்திலவாயினும் இவர் இலக்கண இலக்கியங்களிற் பயின்று பாடுதற்றொழிலில் வல்லவராயிருந்தார் என்பது மாத்திரம், இவர் பாடிய நூல்களாலறியக்கிடக்கின்றது. இவர் பாடிய நூல்கள்: மூவிராசர் வாசகப்பா, தசவாக்கிய விளக்கப் பதிகம், இரட்சகப் பதிகம், திருவாசகம், பிள்ளைக்கவியாதிய. இவர் ஆயுள்வேத வைத்தியர் எனப் பட்டமும் பெற்று வைத்தியத் தொழிலிலுஞ் சிறந்து விளங்கினவர். இவர் பாடற்றிற முணர இவர் பாடிய பிள்ளைக் கவியுள் ஒரு செய்யுள் காட்டுதும்:

குவலயத் தவரன்பு கொண்டாட வண்டாடு
குளிர்மலர்ப் பொழில்க ளாட
கோலமயி லாடவய லீடுகுயி லாடநெற்
குலைகல கலென்று டிடக்
கவலையற் றிடுமாயர் களியாட விளவாழை
கனிநீடு தளிர்க ளாடக்
காராடு மொய்குழலி னாராட வழகனைய
கழுநீடு தளிர்க ளாடத்
தவில்முர சடித்தும்பர் சபையாட நவகோடி
சனமாட விளமைகொ ணிலத்
தண்ணிழல் பரந்தாட விண்மணி யொடுங்கிரண
தாரகை தயங்கி யாடத்
திவலையமு தைப்பருகு தெய்வீக பாலனே
செங்கீரை யாடி யருளே
திருமருவு பாமகனி மரியுதவு பாலனே
செங்கீரை யாடி யருளே.

# பூலோக சிங்க முதலியார்

இவர் தெல்லிப்பழையில் வசித்தவர். காரைதீவிற் பிறந்தவர். கத்தோலிக்க சமயத்தவர். சிறந்த புலவர்களில் இவருமொருவராவர். இவருடைய மறுநாமம் அருளப்பநாவலர் என்பதாகும். இவர் செய்த காப்பியம் திருச்செல்வராசர் காப்பியமாகும். இஃது இருபத்தைந்து படலமும் ஆயிரத்துத்தொளாயிரம் செய்யுளுங் கொண்டதுவாகும். இவர் பெயரூர் முதலியன இந்நூற் சிறப்புப் பாயிரச் செய்யுளால் அறியப்படும். ஆதலின் அதனை ஈண்டுத் தருதும்:

செல்வினுயிர் பெருகுதவச் செல்வரா
　　யன்கதையைத் தேர்ந்து நுண்ணூற்
றுல்லியமோர்ந் திடும்புலவர் மகிழுங்க
　　விருத்தத்தாற் சொற்றிட் டானல்
நல்லிசைநா டகமியலின் றமிழ்தெரிநா
　　வலன்சதுர நாக ரீகன்
தெல்லிநக ரருளப்ப னற்காரைப்
　　பூலோக சிங்கந் தானே.

இவர் கவித்திறமுணர அக் காப்பியத்துள் ஒரு செய்யுள் காட்டுதும்:

அயாவு யிர்த்திருந் தவ்விடத் தந்தநள் ளிரவின்
வயாவ ருத்தநோ மாசுசூ தகமுதன் மறுக்க
ளியாவு மின்றிவெண் படிகத்திற் காந்திபாய்ந் தென்னத்
தயாப ரன்றிருச் சுதனையத் தவக்கன்னி தந்தாள்.

இப் புலவருடைய செனன மரணகால முதலியவைகள் தெரிந்தில.

# மாப்பாணமுதலியார்

இவர் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த எழுது மட்டுவாள் என்னுங் கிராமத்திலே இற்றைக்கு ஏறக் குறைய 155 வருடங்களுக்கு முன்னே வைரவசந்தானக் குரு மரபிலே பிறந்தவர். இருமரபுந்துய்ய குலசேகரப் புதுநல்லமாப்பாண முதலியார் என்னுஞ் சிறப்புப் பெயரு மிவருக்குண்டு. இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலன்றிச் சைவசித்தாந்த நூல்களிலும் வல்ல வர். சம்ஸ்கிருதமும் நன்கு பயின்றவர். ஆகமங்களுந் தெரிந்தவர். ஆங்கிலமுங் கற்றவர். தென்மராட்சி மணிய கார உத்தியோகம்பூண்டு பலவாண்டு நடாத்தினவர். பாடற் றொழிலிலும் வல்லவர். இவர் சோமகேசரி நாடகம், பரிமளகாச நாடகம் என்னும் இரு நாடகங்களையும், குற வஞ்சியொன்றையும் பாடியதுமன்றி, விரதநிச்சயம், ஆசௌசவிதி என்னும் இருநூலையும் செய்தவரென்றும், திருச்செந்தூர்ப் புராணத்துக்கு ஒரு விரிவுரையு மியற் றினவர் என்றும், பலமுறைகளிலும் வண்ணார்பண்ணை யிலே வைத்திலிங்கச்செட்டியார் காலத்திலே கூடும் வித் தியாசங்கத்துக்கு வருபவர் என்றுங் கூறுவர். இத்தகைய இவர் தமது ருo-ம் வயதிலே கிறீஸ்தாப்தம் 1827-ல் தேகவியோகமடைந்தார். இவர்பாடல்களுள் ஒன்றேனுங் கிடைப்பதரிதாயிற்று.

# முத்துக்குமாரர்

இவர் வட்டுக்கோட்டையில் வேளாண் குலத்திற் பிறந்தவர். கஞ்சன் காவியம், வலைவீசு புராணம் என் னும் இருநூல்கள் இயற்றினவர். இவர் பாடற்றிற முணரக் கஞ்சன் காவியத்துள் ஒரு செய்யுள் காட்டுதும்;

வெயிலே ரிரத்ன மகுடம் புனைந்து வியன்மிக்க சென்னியழகார்
மயிலேறி யன்ப ரிதயத் துலாவி வருபத்ம பாதமறவேன்
குயிலேறு போகி தருமாதி னோடு குறமாது தோயும்புயத்
தயிலேறு செங்கை முருகாமு குந்தன் மருகா வான்புதல்வனே.

இவரிடஞ் சேனாதிராய முதலியார் கம்பராமாயணத்துக்குப் பாடங் கேட்டவர் என்று பழைய சரித்திரமொன்றிற் கூறப்படலால் இவர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய 160 வருடங்களுக்கு முன்னென்று கூறலாம்.

## முருகேசையர்

இவர் காரைதீவிலே அந்தணர்குலத்திலே ஏறக்குறைய 165 வருடங்களுக்குமுன் கார்த்திகேசையருக்குப் புதல்வராகப் பிறந்தவர். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் வல்லவர். இவர் பாடிய நூல்கள் தன்னை யமகவந்தாதி, தன்னை நாயகரூஞ்சல், குருக்ஷேத்திரநாடகம் என்பன. இவர் பாடலில் ஒன்றேனும் கிடைப்பதரிதாயிற்று. இப்புலவர் கிறீஸ்தாப்தம் 1830-ல் தேகவியோகமடைந்தார். இவர் மகன் கார்த்திகேசையரே விதானமாலை யென்னுஞ் சோதிடநூலை யச்சிட்டவர்.

## வெற்றிவேலர்

இவர் சாவகச்சேரியைச் சார்ந்த மீசாலை வடக்குப் பகுதியிலிருந்தவர். மாப்பாணமுதலியார் என்பவருக்குப் புத்திரர். இருபாலை நெல்லைநாதமுதலியாருக்கு நண்பர். இலக்கண இலக்கியங்களில் மிக வல்லுநர். பாடுந் திறமும் வாய்ந்தவர். இவரால் இரு குறவஞ்சிகள் பாடப்பட்டன என்றும் ஒன்று மல்விற்கோவின் மேலதென்றும்

மற்றையது வன்னியிலுள்ள ஒரு தனவான்மேலது என்றும், தனவான் தன்மேற் பாடிய குறவஞ்சியின் பொருட்டு 100 பசுக்கள் இவருக்குப் பரிசாகக்கொடுத்தான் என்றும் கூறுப. இவர் காலம் முற்கூறிய நெல்லைநாத முதலியார் காலமே. இவர் எண்பதாவது வயதில் தேக வியோகமடைந்தார்.

## வைத்தியநாதச் செட்டியார்

இவர் அச்சுவேலி தெற்கிலே வைசியர் குலத்தில் கிறீஸ்தாப்தம் 1753 லே அரிகரபுத்திரச் செட்டியாருக்கு மைந்தராகப் பிறந்தவர். இவர் இலக்கிய இலக்கணங்களில் மிகப் பயின்று பாடற்ரொழிலிலும் வல்லவரானுர். தம்மாற் பூசிக்கப்பட்ட நெல்லியோடைத் தேவிமீது பல தனிப்பாக்களும் பிள்ளைக்கவி என்னும் ஒரு பிரபந்தமும் இவர் இயற்றினவர். இவர் பாடற்றிறமுணரப் பிள்ளைக்கவியுளொன்றை இங்கே காட்டுதும்.

பவளத் தியற்றுங் கலசமிசைப் பன்னீ ரதனு லலைவார்த்துப்
பதுமராக வடுப்பில் வைத்துப் பகருங் கனகத் தழல்கொழுத்தித்
திவளும் வைர விறகடுக்கிச் சிறந்த தவள வரிசிபெய்து
சேர வடித்து நீறணிந்து செவ்வே யிறக்கிப் பசுங்கிரணம்
தவழும் பச்சை யிலைமீது தயங்கப் படைத்துச் சராசரங்கள்
தழைக்கவளர்க்குமருட்கௌரி தகைசேர்நெல்லியவோடைவளர்
குவளை விழிச்சி மெய்ஞ்ஞானக் கொழுந்தே சிற்றில் சிதையேலே
குன்ற முலைச்சி மாரியம்மாள் கோதாய் சிற்றில் சிதையேலே.

இத்தகைய புலவர் கிறீஸ்தாப்தம் 1844-ல் தேக வியோக மடைந்தனர்.

## வைத்தியநாத தம்பிரான்

இவர் அளவெட்டியிலே பிறந்தவர். திருநெல்வேலி ஞானப்பிரகாசசுவாமி காலத்தவர். வடமொழி தென் மொழியென்னும் இரு பாஷைகளிலும் வல்லவர். தமக்குப் பங்கான நிலமுதலியவற்றைத் தனது சகோதரியும் மைத்துனனும் அபகரித்துக்கொண்டமை காரணமாக அவர்மீது வெறுப்புக்கொண்டு அவ்வூரைவிட்டுக் கண்டிக்குச் சென்று அங்கே அரசுசெய்துகொண்டிருந்த முத்துச்சுவாமி மகாராசாவின்மேல் ஒரு பிரபந்தம் பாடி விருதும் பரிசிலும் பெற்று அங்குச் சிலகாலம் வசித்துப் பின் சிதம்பரஞ் சென்று வாழ்ந்தார் என்றும் அங்கிருந்த காலத்திலே சம்ஸ்கிருத நூல்களை நன்கு பயின்று அம்மொழியிலுள்ள வியாக்கிரபாதமுனிவர் சரிதத்தைப் பெயர்த்துப் புராணமாக இவர் பாடினர் என்றுங் கூறுப.

## சுப்பையர்

இவர் இந்தியாவிலே உள்ள கோதாவரிநதி தீரத்திலே வசித்த வைதிகப் பிராமணர்களுள் ஒருவரான மேருகிரி ஐயரின் புதல்வர். மேருகிரி ஐயர் தமதூரில் நிகழ்ந்த ஒரு கலகங்காரணமாக அவ்வூரைவிடுத்து நாகபட்டணம் வந்து தோணியேறிக் கோவளக்கரையில் வந்து இறங்கிக் காரைதீவையடைந்து அங்குள்ள பிராமணரொருவரின் புதல்வியை விவாகஞ் செய்தவர். அவரின் மூத்த புத்திரரே இவர். இவர் தன் பிதாவினிடத்திலே ஆரியம், தெலுங்கு, தமிழ் என்னும் முப் பாஷையையுங் கற்று வல்லரானர். சங்கீத சாஸ்திரத்திலும் பாண்டித்தியம் உடையவர் என்ப. இவர் பாடியன நல்லைநாயக நான்மணிமாலை, காரைக்குறவஞ்சி என்

பன. பாடல்களுள் ஒன்றுங் கிடைத்திலது. இவர் காலம் கிறீஸ்தாப்தம் ௧௭௬௫.

பின்வரும் புலவர்கள் எமது காலத்தவராயினும் அவர் சரிதத்துட் காட்டப்பட்டனவொழிய மற்றைய வொன்றும் புலப்படவில்லை. பெரிது முயன்றும் அவை கிடைத்தில.

## சதாசிவம்பிள்ளை

இவர் மானிப்பாயிலே வேளாளர் குலத்திலே பிறந்தவர். ஆங்கிலந் தமிழ் என்னுமிரு மொழிகளையும் நன்கு கற்றவர். "உதயதாரகைப்" பத்திரிகைக்குத் தலைவராயிருந்தவர். பாவலர் சரித்திர தீபகம், வெல்லையந்தாதி, திருச்சதகம், நன்னெறிக் கதாசங்கிரக முதலிய நூல்கள் செய்தவர். இவர் பாடற்றிறமுணர வெல்லையந்தாதியுள் ஒரு செய்யுள் காட்டுதும்:

காத்தவ னேயிந்தக் காசினி தன்னைநற் காதலொடு
பூத்தவ னேயருள் பூப்பவ னேவெல்லைப் பொற்புரியிற்
சாத்திரி மார்வந்து சாட்டாங்க தண்டஞ்செய் தற்பரனே
போத்துறை வாருளம் போகா வடியனைப் போற்றுவையே.

இவர் பாவலர் சரித்திர தீபகம் பதிப்பித்த காலம் 1886-ம் ஆண்டாகும். இவர் தேகவியோகமாகி ஏறக்குறைய 38 வருஷங்களாகின்றன. இவர் சமயம் கிறீஸ்து சமயம்.

## பூபாலபிள்ளை

இவர் மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவிலே வேளாண் குலத்திலே ஏறக்குறைய 75 வருடங்களுக்கு முன்னே

சதாசிவப்பிள்ளை என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்றவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தும் ஓரங்கத்தவராயிருந்தவர். பாடுஞ் சாமர்த்திய மும் வாய்ந்தவர். (சீமந்தனிபுராணம், விநாயகமான்மியம், தமிழ்வரலாறு முதலிய நூல்கள் செய்தவர்.) இவர் கவித்திற முணர விநாயக மான்மியத்து அவையடக்கச் செய்யுளை ஈண்டுக் காட்டுதும்:

### அகவல்

“ ஆதியென் றேத்து மம்மையு மப்பனுங்
காதலி னினைந்தவை கைகூ டற்கு
தந்திமா முகனையே தவத்திடை நோற்றால்
அந்தமா கடவுட் காரிணை யெனலாம்
மற்றவன் புகழ்சேர் மான்மிய சரிதம்
கற்றவர் முன்னே கழறப் புகுதல்
விண்வளர் மேனிலை மாட கூடத்தை
மண்விளை யாட்டிற் சிறுமிகள் வகுத்துப்
பாரெனக் காட்டும் பரிசே யாயினும்
சீருடைப் பெரியோர் சேற்றெழு மலரையும்
மணத்தாற் கொள்ளு மரபிலிந் நூலைக்
குணத்தாற் கொள்வர் குறைதவிர்த் தன்றே.”

## ஆறுமுகத்தம்பிரான்

இவர் இந்தியாவிலுள்ள திருவண்ணாமலையிற்சென்று அங்குள்ள ஆதீனத்தை யடைந்து சைவசித்தாந்த நூல் களைக் கற்றவர். (பெரியபுராணத்துக்கு ஒரு சிறந்த உரை எழுதினவர்.) (இதுவே அதற்கு முதல் எழுதப்பட்ட உரையாகும்.) இவரைப்பற்றிய சரிதங்கள் முழுவதுந்

தெரியாதாயினும், இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடங் கற்றவரென்றும், அவரால் வண்ணார்பண்ணையிற் றாபிக் கப்பட்ட வித்தியாசாலையிலே சிலவாண்டு ஆசிரியராக அமர்ந்து கற்பித்தவரென்றும், அவரோடு யாதோ ஒரு காரணத்தான் முரணி அவ்வித்தியாசாலையை விட்டுத் திருவண்ணாமலை சென்றார் என்றும் அறிஞர் சிலர் கூறக் கேட்டுள்ளாம். இவர் கலியாப்தம் 4993 வரையி லிருந் தவர்.

## அருணாசல ஐயர்

இவர் மாதகல் என்னுமூரிலே ஏறக்குறைய எண் பது வருடங்களுக்கு முன்னே அந்தணர்குலத்திலே அப் பாசாமி ஐயர் என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். இவர் சம்ஸ்கிருதமுந் தமிழும் நன்கு கற்றவர். நல்லூர் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளையிடத்திலுங் கற்றவர். கவி பாடும் வன்மை வாய்ந்தவர். வடமொழி நூல்கள் சிலவற்றிற்குத் தமிழுரை செய்தவர்.

## தாமோதரம்பிள்ளை

இவர் வதிரி என்னுமூரிலே இற்றைக்கு ஏறக்குறைய எண்பது வருடங்களுக்கு முன்னே பிறந்தவர். இந்தி யாவை யடைந்து சாஸ்திரியா ரொருவரிடம் வேதாந்த சித்தாந்த நூல்கள் கேட்டறிந்தவர். இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் சைவசித்தாந்தப் பிரசங்கங்கள் பல செய்தவர். "ஞானசித்தி" என்னும் ஒரு பத்திரிகையை நடாத்தி அதுவாயிலாகச் சைவசித்தாந்த உணர்ச்சியைப் பலரு மறியச் செய்தவர்.

## பொன்னுத்துரைஐயர்

இவர் வண்ணார்பண்ணையி லிருந்தவர். அந்தணர் குலத்தவர். ஆறுமுகநாவலரிடத்தும், வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளையிடத்தும் தமிழ் இலக்கண இலக்கியங்கள் நன்கு கற்றவர். இலக்கியங்களுள்ளும் கோவை யந்தாதி, உலா முதலிய பிரபந்தங்களிலும் புராணேதிகாசங்களிலும் மிக்க பயிற்சியுடையவர். பாடுஞ் சக்தியு மமைந்தவர். இவர் நல்லை நிரோட்டக யமக அந்தாதி எனப் பெயரிய ஒரு அந்தாதி பாடினவர் எனவு மறிகின்றேம். இவருடைய ஏனைச் சரிதங்கள் தெரிந்தில. இவர் தேகவியோகமாகி ஏறக்குறைய 10ஆண்டுகள் ஆகின்றன.

## சதாசிவபண்டிதர்

இவர் இற்றைக்கு ஏறக்குறைய முப்பது வருடங்களுக்கு முன்னே வண்ணார்பண்ணையைச்சார்ந்த நாச்சிமார் கோவில் எனப் பெயரிய கிராமத்திலே பொன்விளைஞர் குலத்திலே பிறந்தவர். இவர் தந்தையர் பெயர் நமசிவாயம். இவர் பாடலால் தமிழ் இலக்கண இலக்கியங் கற்றவர் என்பது அறியக்கிடக்கின்றது. இவர் செய்த நூல், வண்ணையந்தாதி, வண்ணைநகரூஞ்சல், சிங்கைநகரந்தாதி என்பன. பல சித்திரகவிகளும் பாடியிருக்கின்றனர். மேற்காட்டிய நூல்கள் 1887-ல் பதிப்பிக்கப்பெற்றன. பாக்கள் மிகச் சுவையமைந்தன. சில காட்டுதும்:-

### வண்ணைநகரந்தாதி

#### வெண்பா

அறிவுக் கறிவாகி யாருயிருக் குள்ளே
செறியுஞ் சிவகாமித் தேவி—நெறியுடனே
மாலயனைப் பெற்றருள்வாள் வண்ணைநகர்க் காமாட்சி
யாலயமென் னகமே யாம்.

### சிங்கைநகரந்தாதி

### கலித்துறை

குதிக்கின்ற வாணவக் கூத்துங் குலநலக் கொள்கைகளு
மதிக்கின்ற மாடமு மாளிகைத் தோப்பு மனைவிமக்கள்
விதிக்கின்ற கட்டளைப் பட்டங்கள் யாவும் விழலெனயான்
மதிக்கின்ற நெஞ்சைத் தருவாய் பழஞ்சிங்கைப் பண்ணவனே.

இவரைப்பற்றிய பிற சரித்திரங்களொன்றுந் தெரிய வில்லை.

## சோமாஸ்கந்த பண்டிதர்

இவர் தாவடியில் பிறந்தவர். வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளையிடங் கற்றவர். இந்துக்கல்லூரி யிற் பலவர்ண்டு தமிழ்ப் பண்டிதராயிருந்தவர். யாழ்ப் பாணத்துச் சித்தாந்தசபைக் காரியதரிசியாயிருந்தவர். சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குச் சென்றவர். இராமாயண முதலிய காவி யங்களுந் தெரிந்தவர். மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்குப் போயபோது பாண்டித்துரை கேட்ட இராமாயணப் பாட்டுக்களுக்குப் பொருளுஞ் சொன்னவர். கவிபாடும் வன்மையுடையவர். எம்மோடுங் கூடக் கற்றவர். இவர் எமது இரகுவம்ச உரைக்களித்த சிறப்புக் கவியொன்று காட்டுதும் :—

மதுரையில் வந்த சங்க மாசிக பத்தி ரத்திற்
சதுரனுய்த் தமிழி ராம வவதார மாதி தர்க்க
முதிர்வினுன் முறையே தீட்டு மூதறி வுடைய மேலோன்
மதியினி னுண்மை வாய்ந்தோன் மரபுளி நூல்க ளாய்ந்தோன்.

இவர் தேகவியோகமடைந்து மூன்று வருடங்க ளாகின்றன.

# நாகமணிப்புலவர்

இவர் நயினுதீவிலே சாலிவாகன சகாப்தம் கஅகரு-க்கும் கிறீஸ்தாப்தம் கஅகூக-க்குஞ் சரியான விக்கிரம வருடம் மார்கழி மாதம் க௦-ந் தேதியிற் பிறந்தார். ஐந்து வயதாகி வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று வீரகத்திப் பிள்ளை ஆசிரியரால் நடத்தப்பட்ட திண்ணைப் பள்ளிக்கூடத்திற் சென்று அவரிடங் கற்றுவந்தனர். அக்காலத்தில் தில்லையம்பல வித்தியாசாலை என்னும் சைவ வித்தியாசாலை ஆரம்பமாகி நடத்தப்பட அவ்வித்தியாசாலையிற் சென்று அங்கிருந்த ஆசிரியருளொருவராகிய சோமசுந்தர ஐயரிடஞ் சில இலக்கண இலக்கியங்களைக் கற்றுவந்தார். பின் யாழ்ப்பாணத்திலே வணிகர்களுக்குக் கணக்கெழுதுந் தொழிலி லமர்ந்தார். பின் அத்தொழிலை விடுத்துத் தமது ஊராகிய நயினுதீவிலே ஐந்துவருடங் கிராமசங்கத் தலைவராக இருந்து அவ்வுத்தியோகத்தை நடத்திவந்தார். இக்காலத்திலேயே நயினை நிரோட்டக யகமவந்தாதியும், நயினை மான்மியமு மிவராலியற்றப்பட்டன. அந்தாதி ககூ௩௦-ம் ஆண்டு அச்சிடப்பட்டது. மான்மியம் திருத்தி அச்சிடமுன் கிறீஸ்தாப்தம் ககூ௩௩-க்குச் சமமான ஸ்ரீமுக வருடம் ஆடி மாதம் உ௦-ந் திகதி தேகவியோகமாயினர். இலக்கண இலக்கியங்களில் அதிகம் பயிற்சியில்லாதொழியினும் இளமைதொட்டுப் பாடுஞ் சக்தி இவருக்குத் தானேயுண்டானமையால் இவரை வரகவியென்று அழைப்பர்.

### நயினைமான்மியம்

முச்சகமுந் தனியளிக்கு மருண்மழைதோய்ந் தனகுழலு
முதுநீர்க் கஞ்சத்
தச்சனைய திருமுகமுங் கருவிழியும் வெண்ணகையு
மாம்பல் வாயுங்
கச்சணியு மிளமுலையு மலர்க்கரமுஞ் சிற்றிடையுங்
கனகத் தாளும்
பச்சுருவுந் திகழமணி யரங்கில்வளர் சுந்தரியைப்
பணிதல் செய்வாம்.

# மயில்வாகனப் புலவர்

இவர் தெல்லிப்பழையைச் சார்ந்த வறுத்தலை விளான் என்னுமூரிலே சைவாசாரமுடைய வேளாண் குலத்திலே இலங்கைநாயக முதலியார் மரபிலே கண பதிப்பிள்ளை ஆசிரியருக்குப் புதல்வராக 1875-ம் ஆண் டிலே பிறந்தார். பிறந்து வித்தியாரம்பஞ் செய்தபின் அவ்வூரிலுள்ள அமெரிக்க மிஷன் தமிழ்ப்பாடசாலையில் சென்று கற்றுவந்தார். 12-ம் வயதிலே தமிழ் கற்பதை விடுத்துத் தெல்லிப்பழையிலுள்ள அமெரிக்க மிஷன் ஆங்கில வித்தியாசாலையிற் சென்று ஆங்கிலம் கற்றுவந் தார். பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்கல்லூரி யிற் சென்று சர்வகலாசாலைப் பிரவேச வகுப்பிற் கற்று வந்தார். கற்று வருங்காலத்திலே அதற்குரிய பாடங்களைப் படிக்குநேரமொழிந்த மற்றைநேரங்களிலே தமிழிலுள்ள இலக்கண இலக்கியங்கள் சிலவற்றையுந் தாமே படித்து நேர்ந்தஐயங்களை அப்போது அக்கல்லூரியில் தமிழ்ப்பண் டிதராயிருந்த ஆ. சோமாஸ்கந்தபிள்ளையிடத்திற் கேட்டு வந்தார். கல்லூரி விடுதலை நாட்களில் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவரிடத்துஞ் சென்று தமக்கு வந்த ஐயங்களைக் கேட்பார். இந்துக்கல்லூரியில் ஆங்கிலம் கற்பதை விடுத்தபின் மேற்கூறிய புலவரிடஞ்சென்று இலக்கண இலக்கியங்கள் சில கற்றுவந்தார்.

1897-ம் ஆண்டிலே ஆலயதரிசனத்தின் பொருட்டு இந்தியாவுக்குச் சென்றபோது இராமநாதபுரத்திலே யாழ்ப்பாணம் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவரிருப்பதை யறிந்து அங்கே சென்று அவரைக் கண்டு கலந்து பேசிய பின் அவரோடு சென்று சேதுபதி மகாராஜாவைத் தரிசித்தனர் என்றும், அப்போது ராஜா இவரையும் புலவரென வறிந்து ஒரு கவி பாடச்சொல்ல இவர் பாடி

அம்மகாராஜாவின் வியப்பைப்பெற்று மீண்டனர் என்றும் கூறுப. அப்போது இவர் வயது இருபத்திரண்டு.

அதன்பின் 1898-ம் ஆண்டு தொடங்கி 1901-ம் ஆண்டுவரையும் தெல்லிப்பழை ஆங்கில வித்தியாசாலையிலே மூன்றும், மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையிலே பின்னும் ஆசிரியராக விருந்து ஆங்கிலம் கற்பித்து வந்தார். மல்லாகத்திற் படிப்பித்த காலத்தில் நொத்தாரிசுமாருக்குரிய பிரவேசபரீக்ஷையிற் சித்திபெய்தினர். அதன் பின் கற்பிப்பதைவிடுத்து யாழ்ப்பாணத்திற் சென்று அங்கே பிறக்றர் ஸ்ரீ. வி. காசிப்பிள்ளையிடம் நொத்தாரிசுமாருக்குரிய பிரமாணங்கள் முதலாயவற்றைக் கற்று இறுதிப் பரீக்ஷையிலுஞ் சித்திபெய்தினர். சித்திபெய்தியபின் நொத்தாரிசு உத்தியோகத்தில் நியமனம் பெறும்வரையும் காங்கேயன்துறையிலுள்ள ஆங்கில வித்தியாசாலையிற் கற்பித்துவந்தார்.

இவர் நொத்தாரிசு உத்தியோகத்திற் பிரவேசித்தற்கு முன்னும் பின்னுமாக மயிலை மும்மணிமாலை, விநாயகரகவல், மயிலைச் சுப்பிரமணியர் விருத்தம், ஊஞ்சல், வைரவர் தோத்திரம், மாவைப்பதிகம், இணுவைப் பதிகம் முதலிய நூல்களைப் பாடியுள்ளார்.

1908-ம் ஆண்டிலே வட்டுக்கோட்டைப்பகுதி நொத்தாரிசுவாக நியமனம் பெற்று அங்கே சென்றிருந்து அவ்வுத்தியோகத்தை நடாத்தி வந்தார். வருங்காலத்திலே துணைவைப்பதிக முதலியவற்றைப் பாடினர். பின், கீரிமலையிலுள்ள நகுலேசுவரர் மீது வினோதவிசித்திரகவிப்பூங்கொத்து எனப்பெயரிய ஒரு நூலியற்றி, அக்காலத்திலே சாசன அத்தியக்ஷராகக் கொழும்பிலிருந்த சேர். அருணசலந்துரைக்கு அந்நூலை அர்ப்ப

ணஞ் செய்து அச்சிட்டு வெளிப்படுத்தினர். இதிற் பெரிதுஞ் சித்திரங்களமைந்துள்ளன. இதற்கு யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலுமுள்ள பெரும் புலவர்கள் சிலர் சிறப்புக்கவிகள் அளித்துள்ளார்கள்.

இவர் 1908-ம் ஆண்டில் விவாகஞ் செய்தனர். இவருக்கு நான்கு புத்திரிகளுளர். 1908-ம் ஆண்டிலே தமது உத்தியோகத்தில் இடமாற்றம் பெற்று மயிலிட்டிப் பகுதிக்கு நொத்தாரிசுவாகி அங்கே வந்திருந்து அவ்வுத்தியோகத்தை நடாத்தி வந்தார். அப்போது மயிலிட்டிதெற்கில் இந்து பரிபாலன சபை என ஒரு சபையைத் தாபித்து அதற்குத் தானே அக்கிராசனராக விருந்து நடாத்திப் பிரசங்கங்கள் செய்தும் செய்வித்தும் வந்தார். திருநீலகண்டநாயனர் சரித்திரத்தை நாடகமாக இயற்றி அந்நாடகத்தை நடிக்கச் செய்தார். இக்காலத்திலேயே இணுவைப் பதிற்றுப்பத்தந்தாதியும் இவராற் பாடப்பெற்றது.

இத்தகைய புலவர் தமக்குண்டான சுரநோய் காரணமாக 1918-ம் ஆண்டிலே தேகவியோகமானர். இவர் பாடற்றிறமுணர ஒரு செய்யுள் இணுவைப் பதிற்றுப் பத்தந்தாதியுட் காட்டுதும்:

## ஆசிரியவிருத்தம்

அறமே புரிந்து மறமே தவிர்ந்து மழகோ டிருந்து நிதமு
நிறமே பொலிந்த மயிலே றுகந்த நிமலா சிறந்த விணுவைக்
குறமாது மும்பல் வளர்மாது மன்பு குறையாதி ருந்த புடையோய்
புறமீது முள்ளு நினையானி னைந்து புகழாவ ணங்க வருளே.

# எமது பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| நாட்டுச்சீவன சாஸ்திரம் | 2 - 00 |
| நளவெண்பாச் சுருக்கம் | 1 - 00 |
| திருமாவளவன் | 50 |
| தமிழ் இலக்கியத்திரட்டு | 60 |
| தமிழ் மஞ்சரி 1-ம் பாகம் | 50 |
| ,, ,, 2-ம் பாகம் | 65 |
| கிராதார்ச்சுனீயம் | 60 |
| சிசுபால சரிதம் | 60 |
| இரகுவமிச சரிதாமிர்தம் | 50 |
| குசேலர் சரிதம் | 40 |
| பூமிசாஸ்திரக் கதைகள் | |
| இரண்டாம் தரம் | 30 |
| மூன்றும் தரம் | 35 |
| நான்காம் தரம் | 40 |
| ஐந்தாம் தரம் | 50 |
| சரித்திர கதாவாசகம் | |
| இரண்டாம் தரம் | 25 |
| மூன்றும் தரம் | 30 |
| நான்காம் தரம் | 40 |
| ஐந்தாம் தரம் | 50 |
| உலகசரித்திர வினுவிடை | 50 |
| சரித்திரக் குறிப்பு | |
| பிரித்தானியாவும்அதன்அயல்நாடுகளும் | 60 |
| சைவவினுவிடை | 10 |
| ஆத்திசூடியுரை | 05 |
| கொன்றைவேந்தன் | 05 |
| வாக்குண்டாம் | 05 |
| வெற்றிவேற்கை | 05 |
| நல்வழியுரை | 05 |
| நன்னெறியுரை | 05 |

**தனலக்குமி புத்தகசாலை**

சுன்னுகம்

# தொல்காப்பியம்

[உரைவிளக்கக் குறிப்புகளுடன்]

(கணேசையர் பதிப்பு)

## எழுத்ததிகாரம்

நச்சினார்க்கினியருரை ரூபா 4-00

## சொல்லதிகாரம்

சேனாவரையருரை ரூபா 5-00

## பொருளதிகாரம் (அச்சில்)

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னாகம்